






# உன்னோடு ஒரு நாள்

## 1

வண்ண விளக்குகளால் குரோட்டன்ஸ் செடிகள் மின்னிக் கொண்டிருந்தன. வட்ட வடிவமான மேஜைகளும் அதைச் சுற்றி நான்கு சேர்களுமாய் தோட்டம் முழுவதும் போடப்பட்டிருந்தது. தோட்டத்தின் முகப்பில் அகன்றிருந்த போர்டிகோ முழுவதும் கார்கள் வந்து நிற்க ஆரம்பித்தன. மெல்ல... மெல்ல விருந்தினரின் வருகையால் தோட்டம் முழுவதும் நிரம்பி விட்டது.

வந்திருந்த விருந்தினரை வரவேற்றுக் கொண்டிருந்த ராமநாதன் கிரீம் கலரில் கோட்டும், சூட்டும் அணிந்திருந்

தார். தலையில் முன் பக்கமும், காதோரமும் நரை தெரிந்தது. அவர் பக்கத்தில் நின்று கொண்டிருந்த சுகன்யா கூந்தலை நாகரிகமாய் கொண்டையிட்டிருந்தாள். கொண்டையில் அலங்காரமாய் ஆங்காங்கே வெண் முத்துக்கள் செருகப்பட்டிருந்தன. வெளிர் நீலத்தில் பிரிண்டட் புடவை உடுத்தியிருந்தாள். சேலையிலேயே வெட்டி மிக நவீனமாய் தைக்கப்பட்டிருந்த ஜாக்கெட் அணிந்திருந்தாள். உள்ளங் கழுத்தில் வட்டமாய்... மூன்று வரிசைகள் சேர்ந்து கோர்த்தது போலிருந்த வைரமாலை. காதுகளில் அதற்கு இணையாக வட்ட வடிவாய் கீழ்புறம் மட்டும் வரிசை கட்டப்பட்டிருந்த வைரக்கற்கள் பதிக்கப் பட்ட தோடுகள். வலது கையில் வைரமும், பிளாட்டின மும் சேர்ந்த வளையல்கள். இடதுகையில் ராமநாதனுடன் சென்ற மாதம் ஸ்விட்சர்லாந்த் போயிருந்தபோது வாங்கி வந்திருந்த வைரக்கற்களே முற்களாகவும், மணிகாட்டும் எண்களாகவும் பதிக்கப்பட்ட தங்க செயின் போட்ட கைக்கடிகாரம். அவளின் ஒவ்வொரு அசைவிலும் வைரக் கற்கள் ஒளியை அள்ளித் தெளித்தன.

ராமநாதனின் கையைக் குளுக்கிக் கொண்டிருந்த சம்பந்தம் ''என்ன மிஸ்டர் ராமநாதன்.. உங்களுக்குத்தான் வயது ஏறுகிறது. ஆனால் உங்கள் வொய்பிற்கு வயது குறைந்து கொண்டே போவது போலிருக்கிறதே... எப்படி?'' என்றார்.

அவர் அருகில் நின்று கொண்டிருந்த அவர் மனைவி அவரை முறைத்தாள். அதைக் கவனிக்காதது போல் நாசுக்காய் சிரித்த சுகன்யா,

''தேங்க்ஸ் பார் யுவர் காம்ப்ளிமெண்ட்...'' என்று சம் பந்தத்திடம் கூறினாள்.



'பக்கத்தில் நின்று கொண்டிருக்கிற என்னைப் பார்த்து ஒரு வார்த்தை பேசுகிறாளா பார்..' பொறுமிக் கொண் டாள் சம்பந்தத்தின் மனைவி.

அவர்கள் இருவரும் நகர்ந்ததும்,

''எல்லோரும் உன் மேல் கண் போடுகிறார்கள் பார்...'' என்றபடி மனைவியின் தோளைச் சுற்றிக் கை போட்டுக் கொண்டார் ராமநாதன்.

''என்ன மாதிரியான வார்த்தைகள்... இது... ஐ டோண்ட் லைக் திஸ்...'' சுகன்யா முகம் சுளித்தாள்.

''ஸாரி... ஸாரி... எல்லோருக்கும் என்மேல் பொறாமை.. என் மேல் கண் போடுகிறார்கள்.. போதுமா..'' ராமநாதன் சிரித்தார்.

''உங்கள் மேல் பொறாமைப்படாமல் என்ன செய் வார்கள்... பெரிய பிஸினெஸ்மேன்... தொட்டதெல்லாம் சக்ஸஸ் ஆகிறது. மற்றவர்கள் உங்களைப் பார்த்துப் பொறாமைப்படுவதில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது?'' சுகன்யா பெருமையுடன் கணவனைப் பார்த்தாள்.

''அதற்கு மட்டும் பொறாமைப்பட்டால் பரவாயில்லையே.. பெண்டாட்டி, பிள்ளையைப் பார்த்தும் பொறா மைப் படுகிறார்களே..'' ராமநாதன் கண் சிமிட்டினார்.

''போதுமே.. என்னைக் கிண்டல் பண்ணுவதென்றால் உங்களுக்கு அல்வா சாப்பிட்டது மாதிரியாயிற்றே..'' சுகன்யா சிணுங்கினாள்.

''உன்னைப் பற்றிப் பேசுவதென்றால் எனக்கு அல்வா சாப்பிட்டது மாதிரிதான்... ஆனால் கிண்டல் பண்ணு கிறேன்னு மட்டும் சொல்லாதே... இந்த வயதிலும் இவ்வளவு அழகாய் நீ இருக்கிறதைப் பார்த்து எனக்கு



எவ்வளவு பெருமை தெரியுமா? உன்னையும் ஹரியையும் பார்ப்பவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?''

''என்ன சொல்கிறார்களாம்?''

''அக்கா, தம்பியென்று சொல்கிறார்களாம்...''

''என் பிள்ளை.. என் பிள்ளை தான்.. நான் அவனுக்கு அம்மாவாக இருப்பதில்தான் எனக்குப் பொருமை.. அக்காவென்று விளையாட்டுக்குக் கூட சொல்லாதீர்கள்..''

சுகன்யாவின் முகம் கோபத்தில் சிவந்தது. அப்போது வந்து ராமநாதனுடன் கை குலுக்கிய அவரது நண்பர் ஒருவர்,

''என்ன மிஸஸ் ராமநாதன்... கோபமாய் இருக்கிறீர்கள் போல. பட்... கோபத்திலும் நீங்கள் அழகுதான். வயது குறையும் வரம் வாங்கி வந்திருக்கிறீர்களா? யு ஆர் ஸோ லக்கி ராமநாதன்.'' என்று கூறிவிட்டுப் போக ராமநாதன் நமுட்டுச் சிரிப்புடன் மனைவியைப் பார்த்தார். செய்வ தறியாது அவள் முகம் திருப்பிக் கொண்டாள்.

மேடை நாகரிகம் என்பதைப் போல இந்த மாதிரியான அசட்டுப் பாராட்டுக்களை கண்டு கொள்ளாமல் சிரிக்க வேண்டியது 'பார்ட்டி நாகரிகம்'. மேல்தட்டு மக்களின் பார்ட்டிகளில் இதுபோன்ற பாராட்டுகள் சகஜம். அதை பெரிது பண்ணாமல் சிரித்துக் கொண்டே போய்விட வேண்டும்.

சுகன்யா மற்ற நாள்களாய் இருந்தால் அப்படிப் போயிருப்பாள் தான். ஆனால் இன்று அவள் வாழ்க்கையிலேயே அதிமுக்கியமான நாள். அவர்களது ஒரே மகன் ஹரிஹரனின் திருமண நிச்சதார்த்த விழா நடக்கப் போகும்நாள். மும்பையைச் சேர்ந்த தொழிலதிபரான



கனகசபாரத்தினத்தின் ஒரே மகள் தீபாவை ஹரிஹரனுக்கு மணம் செய்விக்கப் போவதை உறவினர், நண்பர்கள் வட்டாரத்தில் அறிவிக்கப் போகும் நாள்.

திருமண நிச்சயதார்த்தத்தை ஒவ்வொருவரும் அவரவர் வழக்கப்படியும், முறைப்படியும் செய்வார்கள். பாண் டிச்சேரியில் ராம் கிரானைட் எக்ஸ்போர்ட் கம்பெனியும் சென்னையில் ஹரி இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்ட் கம் பெனியும் வைத்திருக்கும்... பாண்டிச்சேரியில் மிகப் பெரிய மாளிகையை கடலோரமாய் கட்டி வசிக்கும் ராம நாதனது குடும்பம் நிச்சயம் செய்யும் முறை வேறானது.

எல்லோரையும் விருந்துக்கு அழைத்து தோட்டத்து மூலையில் சிறு மேடை போட்டு... அதில் மைக்கில் விவரம் சொல்லி.. ஹரிஹரன் தீபாவின் கையில் வைர மோதிரம் போட வேண்டும். அதற்காகத்தான் விருந் தினர் வந்து கொண்டிருக்கிறார்கள். ராமநாதனும், சுகன் யாவும் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய நன்னாளின் போது அவர்களது மகன், வருங்கால மருமகளின் அழகைப் புகழ்வதைவிட்டு விட்டு சுகன்யாவின் அழகைப் புகழ்ந்தால் அவளுக்கு கோபம் வராமல் என்ன செய்யும்?

''ஈஸி டார்லிங்... இன்றைக்கு நம் பிள்ளையின் மேரேஜ் என்கேன்ஜ்மென்ட். இன்றைக்கு போய் முகம் வாடி நிற்க லாமா? சிரித்த முகமாய் இரு.. பெண்களின் அழகைப் புகழ்ந்தால் அவர்கள் சந்தோசம் தானே பட வேண்டும்? முகத்தை ஏன் தூக்கி வைத்துக் கொள்ள வேண்டும்?'' ராமநாதன் மனைவியை சமாதானம் செய்ய முயன்றார்.

''ச்சு.. இந்த டெக்னிக்கையே இன்னும் எத்தனை நாள் பாலோ பண்ணப் போகிறீர்கள்? பெண்களெல்லாம்

ஆண் குலத்திடம் வந்து எங்கள் அழகைப் புகழுங்களென்று கேட்டோமா? அது என்ன சொல்லி வைத்தது போல் எல்லோரும் என் வயதைக் குறைத்தே சொல்கிறீர்கள்? வயது ஆனால் என்ன? கிழவியாக வேண்டி வந்தால் ஆகிவிட வேண்டியதுதானே. அதனால் எங்களுக்கு என்ன குறை வந்து விடப்போகிறது? நூறு வயதானாலும் மனதில் இளமையுணர்வுடன் ஆண்களால் இருக்க முடிகின்றபோது பெண்களால் முடியாதா? அந்தந்த வயதுக்கேற்ற முறையில் பாராட்டக் கற்றுக் கொள்ளுங்கள். இந்த வயதிலும் எவ்வளவு ஆக்டிவாக இருக்கிறீர்கள் என்று பாராட்டினால் ஏற்றுக் கொள்ளலாம். ஐம்பது வயதுப் பெண்ணிடம் போய் நீங்கள் பதினாறு வயது பெண்போல் இருக்கிறீர்கள் என்று சொன்னால் அவள் மகிழ்ந்து விடுவாள் என்று எந்தக் கணக்கில் சொல்கிறீர்கள்..? ஐ டோன்ட் லைக் இட்..."

"ஓ.கே... ஓ.கே.. ஐ அக்ரி வித் யுவர் வெர்ட்ஸ். நம் வருங்கால மருமகளும் அவளுடைய பேரன்ட்ஸும் வந்து விட்டார்கள் பார்... வா..அவர்களை ரிஸீவ் பண்ணப் போகலாம்."

மிக விலையுயர்ந்த வெளிநாட்டுக் கார் ஒன்று வழுக்கிக் கொண்டு வந்து நின்றது. அதன் கதவு திறந்து ராமநாதனின் வயதுடைய மனிதரும்.. அவருடைய மனைவியும்.. இறங்கினார்கள்.

"வெல்கம் மிஸ்டர் சபாரத்தினம் அன்ட் மிஸஸ் சபாரத்தினம்.. வேர் இஸ் அவர் டாட்டர் இன்லா..?"

இறங்கிய கனகசபாரத்தினத்தின் இரு கரங்களையும் பிடித்து வரவேற்ற ராமநாதன் வினவினார்.



சுகன்யா மரியாதையோடு கனக சபாரத்தினத்தின் மனைவி மேகலாவை கரம் பிடித்து வரவேற்றாள்.

கார் கதவு திறந்தது. ஒய்யாரமாய் ஓர் முறை எல்லோரின் மீதும் பார்வையை சுழல விட்டபடி ஏதோ தேசத்தின் இளவரசி போல் தீபா இறங்கினாள்.

கனகசபாரத்தினம் வெந்நிறத்தில் கோட் சூட் அணிந்திருக்க மேகலா காஞ்சிபுரம் பட்டுப் புடவையில் வைரங்களோடு ஒளிர்ந்தாள்.

அன்றைய விழாவின் கதாநாயகியான தீபா பொந்நிறம் கலந்த உடைத்த பாசிப்பருப்பின் வண்ணத்தில் பொடியாய் வெள்ளைக் கற்கள் வைத்துத் தைக்கப்பட்டிருந்த சல்வாரில் இருந்தாள்.

கூந்தலை இன்றைய நாகரிகப்படி விரித்து விட்டிந்தாள். கழுத்தில் ஒளிர்ந்த பட்டையான வைர நெக்லஸின் ஒளி கண்களைக் கவர்ந்தது. கைகளில் வைரங்களும், பிளாட்டினமும் கலந்த வளையல்கள். பார்வைக்கு இந்திப்பட ஹீரோயின் காத்ரீனா கைப்பைப் போல் ஜாடையில் இளமையாக அழகாக இருந்தாள். அவள் கண்களில் ஓர் கர்வம் பிரதிபலித்தது. அது கடலளவு சொத்துக்களையுடைய கனகசபாரத்தினத்தின் ஒரே வாரிசு என்பதால் இருக்கலாம்... அவளது அழகால் இருக்கலாம்... எதுவாக இருந்தாலும் அவளது நடையுடை பாவனைகள் அனைத்திலும் ஓர் அலட்சியம் தென்பட்டது. எவரையும் பொருட்டாக நினைக்காத மனோபாவம் வெளிப்பட்டது.

"ஹாய் தீபா..." என்று இருகரம் விரித்த சுகன்யாவிடமிருந்து நாசுக்காய் விலகி விருந்தினர் கூட்டத்தை நோக்கி நடந்தாள் அவள்.



சுகன்யாவின் முகம் அடிபட்டது போல் கன்றிவிட்டது. உயிருக்குயிரான ஒரே மகனின் வருங்கால மனைவி... அவளது வருங்கால மருமகள்.. என்ற பாசத்துடன் மகளில்லாத குறையைத் தீர்க்க வந்திருக்கும் மருமகள் என்று ஆசையுடன் அழைத்தால் அவள் இப்படி விலகிப் போகிறாளே.

கலக்கத்துடன் கணவனை ஏறிட்டுப் பார்த்தாள். இமைகளை மூடித் திறந்து சங்கேதமாய் மனைவியை அமைதிப்படுத்தினார் ராமநாதன்.

மகளின் செயலைக் கவனிக்காதவர்கள் போல் கனகசபாரத்தினம் தம்பதிகள் ராமநாதனுடனும், மேகலாவுடனும் பேச ஆரம்பித்தனர். வேறு வழியின்றி நாகரீகம் கருதி அவர்களுடன் பேசியபடி அவர்களை அழைத்துச் சென்று அமர வைத்தனர் ராமநாதன் தம்பதிகள்.

"டாட்... வேர் இஸ் ஹரி..?" தீபா கனகசபாரத்தினத்திடம் வினவினாள்.

"யெஸ்... நானே கேட்க வேண்டுமென்று நினைத்தேன். வேர் இஸ் யுவர் சன்.." கனகசபாரத்தினம் ராமநாதனிடம் வினவினார்.

"ஹி வில் கம்.." ராமநாதன் சங்கடத்துடன் பங்களா வாசலைப் பார்த்தபடி சொன்னார்.

"ம்ம்... திஸ் இஸ் ஹிஸ் மேரேஜ் எங்கேஜ்மென்ட் பங்சன்.. இதற்கு வராமல் இதை விட அப்படியென்ன முக்கிய வேலையில் இருக்கிறார்..?" கனகசபாரத்தினத்தின் குத்தலான கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் ராமநாதன் கைக்கடிகாரத்தைப் பார்த்தார்.

'இதை விட வேறென்ன முக்கிய வேலை?'



எங்கேயென்று வினவப்பட்ட ஹரிஹரன் அப்போது பாண்டிச்சேரியின் அழகிய கடற்கரையோரம் உயரமாய் போடப்பட்டிருந்த கற்களின் மேல் நின்று கொண்டு கடலை வெறித்துக் கொண்டிருந்தான்.

அவனது செல்போன் ஒலித்தது. எடுத்துப் பார்த்தான். ராமநாதனின் எண் ஒளிர்ந்தது. பேசினான்.

"யெஸ் டாட்.."

"வேர் ஆர் யு?"

"இன் திஸ் வெர்ல்டு..."

"ச்சு.. அபத்தமாய் பேசாதே ஹரி. இன்றைக்கு என்ன நாள் என்பது தெரியுமா? உன் மேரேஜ் என்கேஜ்மென்ட் நடக்கப் போகும் நாள்.."

"ஸோ... வாட்..?"

"என்னடா ஹரி இப்படிக் கேட்கிறாய்? இங்கே உன்னைக் காணோமென்று கேள்வி கேட்பவர்களுக்குப் பதில் சொல்லி முடியவில்லை. உன் அம்மா கவலைப்படுகிறாள்... ப்ளீஸ் கம் இம்மீடியட்லி மைடியர் சன்.."

"எதற்காக வர வேண்டும்?"

"உன் திருமணத்தை நிச்சயம் செய்ய..."

"அதற்கு நான் எதற்கு? நீங்களும் பெண்ணைப் பெற்றவர்களும் தானே மேரேஜை முடிவு பண்ணினீர்கள்..? நிச்சயத்தையும் நீங்களே பண்ணி முடியுங்கள். என்னை ஏன் கூப்பிடுகிறீர்கள்? எனக்கு இன்ட்ரெஸ்ட் இல்லை. வர முடியாது."

"டோன்ட் டாக் ரப்பிஷ் ஹரி... சபாரத்தினம் மும்பையில் கொடிகட்டிப் பறக்கிற பிஸினெஸ் மேன். உன்

பாரின் எக்ஸ்போர்ட் பிஸினெஸிற்கு இந்தக் கல்யாணம் மிக உதவி செய்யும்...''

''ஸோ.. நீங்கள் கல்யாணம் பேசி முடிக்கவில்லை, பிஸினெஸ் பேசி முடித்திருக்கிறீர்கள்.''

''எதுவாக இருந்தாலும் இப்போது நீ இங்கே வர வேண்டியது மிகவும் முக்கியம் ஹரி.. எங்களின் மரியாதை இப்போது உன் கையில்தான் இருக்கிறது...''

தொடர்ந்து அவர் பேச முடியாமல் தன் செல்போனை அணைத்தான் ஹரிஹரன்.

கரையேறத் துடித்து ஓடி வந்து கரை கடக்க முடியாமல் கற்களில் மோதிச் சிதறித் திரும்பும் அலைகளையே பார்த்தான். மீண்டும் போன் ஒலிக்க செல்போனை ஸ்விட்ச் ஆப் பண்ணி பாக்கெட்டில் போட்டவன் கரையோரக் கற்களின் மீது வேகமாய் கோபத்தோடு பூட்ஸ் காலால் உதைத்தான்.

## 2



ஒரு மாதத்திற்கு முன் மும்பையில் பிஸினெஸ் விசயமாய் ஒரு வாடிக்கையாளரை சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த போது இப்போது போல் அப்போதும் ஹரிஹரனை செல்போனில் அழைத்தார் ராமநாதன்.

''யெஸ் டாட்...''

''ஹரி ஈவினிங் ஆறுமணிக்கு உன்னைப் பார்க்க கனக சபாரத்தினம்ன்னு ஒருவர் வருவார். அவரை மீட் பண்ண மறந்துவிடாதே..''



''ஹு இஸ் ஹி டாட்?''

''ஐ ஷல் டெல் இட் லேட்டர்...''

அன்று மாலை ஆறு மணிக்கு ஹரிஹரனை சந்திக்க அவன் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்கு வந்தார் கனக சபாரத்தினம். பரஸ்பரம் அறிமுகத்திற்குப் பின்னர் பேச்சு நீண்டது. விடைபெற்றுக் கொண்டு அவர் போய் விட்டார்.

இரவு உணவை முடித்துக் கொண்டு அவன் படுக்கலாம் என்று கண்களை மூட முயன்றபோது மீண்டும் செல்போன் ஒலித்தது.. அழைத்தது ராமநாதனேதான்.

''ஹரி... நாளைக்கு நீ திரும்பி வருவதாய் இருக்கிறாய் இல்லையா?''

''யெஸ் டாட்... ஈவினிங் நான்கு மணிக்கு பிளைட்...''

''ப்ளைட் டிக்கெட்டை கேன்சல் பண்ணு.. நீ நாளை மாலை கனகசபாரத்தினத்தின் வீட்டிற்கு டின்னருக்குப் போக வேண்டும்.''

''ஆர் யு பிளேயிங் வித் மி? அவர் யார்? அவர் வீட்டிற்கு நான் ஏன் டின்னருக்குப் போக வேண்டும்?''

''ஹரி... பாண்டிச்சேரியில் கிரானைட் பிஸினெஸ்ஸில் கொடி கட்டிப் பறக்கிறேன். இந்த அளவிற்கு பெயரையும் புகழையும் வாங்க நான் எத்தனை வருடம் பாடுபட்டிருப்பேன் தெரியுமா? பட்...என்னுடைய மகனான நீ இருபத்தி இரண்டு வயதில் உன் ஹரி இம்போர்ட் அண்டு எக்ஸ்போர்டு கம்பெனியை ஆரம்பித்தாய்.. இப்போது உனக்கு இருபத்தி எட்டு வயது. பிஸினெஸ் ஆரம்பித்த இந்த ஆறு வருடத்தில் நீ உன் தொழிலில் நம்பர் ஒன் ஆகியிருக்கிறாய்.. இது எவ்வளவு



பெரிய சாதனை தெரியுமா? நீ இன்னும் அதிக உயரங்களைத் தொட வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன் ஹரி.. நீ நாளைக்கு அட்டெண்ட் பண்ணப் போகும் டின்னர் உன் வளர்ச்சிக்கு பெரும் உதவியாய் இருக்கும். அப்பா சொல்வது உன் நன்மைக்குத்தான். நீ நாளை மறுநாள் திரும்பி வா.. நாளைக்கு அவர் வீட்டிற்கு டின்னருக்குப் போ...''

மறுநாளைய விமான டிக்கெட்டை ரத்து செய்துவிட்டு மாலை ஆறு மணிக்கு கனகசபாரத்தினத்தின் காரில் ஏறி அவர் வீட்டிற்கு இரவு உணவிற்கு சென்றான் ஹ்ரிஹரன்.

மும்பையின் பெரும் பணக்காரர்கள் வாழும் பகுதியில் அழ்கிய பெரிய பங்களாவில் நுழைந்தது சபாரத்தினத்தின் கார்.

'மும்பையில் ஒரு அபார்ட்மென்ட் சொந்தமாய் வாங்க வேண்டுமென்றாலும் கோடிக் கணக்கில் ஆகும். இந்த ஏரியாவில் இவ்வளவு பெரிய வீடென்றால் இவர் டாடி சொல்வது போல் பெரும் பணக்காரராய்த்தான் இருக்க வேண்டும். இவருடனான என் அறிமுகம் எப்படி எனக்கு உபயோகமாக இருக்க முடியும்?'

சிந்தனையுடன் வீட்டிற்குள் சென்ற ஹரிஹரனிடம் ''மீட் மை வொய்ப் மேகலா..'' என்று ஐம்பது வயதைத் தொட்டுக் கொண்டிருந்த பெண்மணி ஒருத்தியை அறிமுகம் செய்து வைத்தார் சபாரத்தினம்.

மரியாதையுடன் கரம் குவித்தான் ஹரிஹரன். மும்பையில் வசித்தாலும் தமிழ் பண்பாட்டுடன் தலையை கொண்டையிட்டு அதைச் சுற்றி வளையமாய் மலர் சரம் வைத்து பட்டுப்புடவையுடுத்தி களையோடு காட்சியளித்தாள் மேகலா. உடலெல்லாம் வைர நகைகள் மின்னின.



''என் மனைவி கும்பகோணம் பக்கம் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள். மும்பையில் இத்தனை வருசமாய் குப்பை கொட்டியும் அவள் மாறவில்லை. அதே பழைய பட்டிக்காடாய் இருக்கிறாள்.''

ஏதோ பண்பாட்டுடன் அவள் தோற்றமளிப்பது மிகப் பெரிய குற்றம் போல விளக்கமளித்தார் சபாரத்தினம்.

''வொய்..? பண்பாட்டுடன் கல்ச்சர் மாறாமல் இருந்தால் அது தவறா? பட்டிக்காடென்றால் மட்டமா?''

ஹரிஹரனின் இந்தக் கேள்வியில் மேகலாவின் முகம் மலர்ந்து விட்டது. சபாரத்தினம் விசித்திரமாய் ஹரிஹரனைப் பார்த்தார்.

''நீங்க பாரினில் படிச்சவராச்சே...''

''யெஸ். அங்கிள்.''

''இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்டில் கொடிகட்டிப் பறக்கிறவராச்சே..''

''யெஸ் அங்கிள்...''

''வருடத்தில் பாதி நாள் பாரினில் இருக்கிறவராச்சே...''

''யெஸ் அங்கிள்...''

''அப்புறம் எப்படி இப்படி ஒரு கொஸ்டின் கேட்கறீங்க...''

''படித்தது.. பிஸினெஸ் செய்வது பாரினில்.. ஆனால் பிறந்தது இந்தியாவில்தானே அங்கிள். இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் வாழ்கிறதுன்னு மகாத்மா காந்தி சொல்லியிருக்கிறார். தெரியுமா?''

''ஈஸிட்? ஐடோன்ட் நோ... பை தி வே மிஸ்டர் ஹரிஹரன் இவள்தான் என் ஒன்லி ஒன் டாட்டர் தீபா! உங்களைப் போல் பாரினில் படித்தவள். லாஸ்ட் வீக்தான்

திரும்பி வந்தாள். தீபா! மீட் மிஸ்டர் ஹரிஹரன்.. எம் டி ஆப் ஹரி இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்ட் கம்பெனி...''

''ஓ..!'' என்று உதட்டைக் குவித்த தீபா உதடுகளுக்கு அடிக்கும் வண்ணத்தில் சாயமிட்டிருந்தாள். முடியை இன்றைய நாகரிகப்படி வெட்டிவிட்டிருந்தாள். கையில்லாத சிகப்புக்கலர் டாப்ஸ் அணிந்து ஜீன்ஸ் அணிந்திருந்தாள்.

அவளை முதலில் பார்த்தபோது அபாயகரமான இறக்கத்துடன் அவள் போட்டிருந்த ஜீன்ஸ்தான் அவன் கவனத்தை ஈர்த்தது. அது அவளது இடுப்பை விட்டு இறங்காமலிருக்க வேண்டுமே என்று வீணாய் கவலைப்பட்டான்.

எப்படி இப்படி ஓர் இடைஞ்சலான உடையை அவள் அணிகிறாள் என்ற ஆச்சர்யத்துடன் அவன் அவளைப் பார்த்தபோது.. அவளும் அவனையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தான். அவளது கூர் விழிகள் தன்னை ஆராய்வதை உணர்ந்தவன் அதை விரும்பவில்லை.

''ஸோ. யு ஆர் ஹரிஹரன்..'' அவள் கரத்தை நீட்டினாள்.

அவன் அவள் கரம் பற்றுவதைத் தவிர்த்தான். மேகலாவை நோக்கி

''ஆன்ட்டி.. உங்கள் வீட்டில் பூஜையறை இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''அவங்க அங்கே தானே குடியிருப்பாங்க..'' அலட்சியமாய் பதில் கொடுத்த தீபா அவன் பற்ற மறுத்த கரத்தை ஜீன்ஸ் பாக்கெட்டில் விட்டபடி அலட்சியமாய் தாயை நோக்கினாள்.

''மிஸ்டர்.. ஹரிஹரன் எங்கள் வீட்டுத் தோட்டத்தில் ஸ்விம்மிங் பூல் முன்பாக டின்னருக்கு அரேன்ஜ்



பண்ணியிருக்கிறேன்.. நீங்கள் வீட்டைச் சுற்றிப் பார்த்து விட்டு வருகிறீர்களா?'' கனகசபாரத்தினம் வினவினார்.

''நோ.. தேங்க்ஸ் அங்கிள். ஐ ஹேவ் சம் அர்ஜண்ட் வொர்க். ஸோ... டின்னரை முடித்துவிட்டு நான் உடனே கிளம்ப வேண்டும்.''

இவர்களுடனான சந்திப்பு எந்த வகையில் அவனது தொழிலிற்கு உதவியாக இருக்கும் என்று தந்தையை எண்ணி பல்லைக் கடித்துக் கொண்டவன்...'விட்டால் போதும்' என்ற உணர்வுடன் தோட்டத்தின் ஓரமாக இருந்த நீச்சல் குளத்திற்கு அருகே சென்றான்.

அழகாக ஒவல் வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்த நீச்சல் குளத்தைச் சுற்றி அலங்கார விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. தோட்டத்தில் சீராக வெட்டப்பட்டிருந்த புல் தரையில் வட்ட வடிவத்தில் டேபிள் போடப்பட்டு சுற்றிலும் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. புல்தரையில் நான்கைந்து வெந்நிற முயல்கள் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன.

இதமான அந்தச் சூழ்நிலை ஹரிஹரனின் மனதைக் கவர்ந்தது.

''பெண்டாஸ்டிக்... இங்கே டின்னர் வைத்துக் கொள்ளலாம் என்று எப்படி உங்களுக்குத் தோன்றியது அங்கிள்...''

''சரியாப் போச்சு போங்க. உங்களுக்கும் இந்த மாதிரி இன்ட்ரஸ்ட் உண்டா? எனக்கும் தீபாவிற்கும் இங்கே உட்காருவதே பிடிக்காது. புல்லில் கால் பட்டாலே தீபாவுக்கு அலர்ஜி ஆகிவிடும். அதுவும் இந்த நைட் நேரத்தில் வெளியே வர அவளுக்குப் பிடிக்காது.. டிஸ்கொதே அது இதென்று ஸ்டார் ஹோட்டல்களுக்குப் போய்விடுவாள்...''



''வெரிகுட்... நைட் நேரத்தில் தோட்டத்துக்கு கூ வரமாட்டாங்களான்னு ஆச்சரியப்பட்டேன். பட் ஸ்ட ஹோட்டல்களுக்குப் போற அளவுக்கு தைரியசாலிதா உங்க பெண்.. ஐ அப்ரிஸியேட் ஹெர்...''

என்ன குடும்பம்டா? இரவு நேரத்தில் தோட்டத்து பக்கம் வரக்கூடாதாம்.. டிஸ்கொதே போகலாமா அதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார் இந்த தகப்பன். இப்படி ஒரு குடும்பத்தை அறிமுகப்படுத்தி கொண்டு அவன் எதைச் சாதிக்கப் போகிறான்?

''அப்புறம் இங்கே டின்னர் வைத்துக் கொள்ளு ஐடியா உங்களில் யாருக்குத்தான் தோன்றியது?''

ஹரிஹரன் நீச்சல் குளத்தில் மிதந்து கொண்டிருந்த செயற்கை அன்னங்களைப் பார்த்தபடி கேட்டான்.

''இந்த மாதிரியான பைத்தியக்காரத்தனமான ஐடியா இந்த வீட்டில் வேறு யாருக்குத் தோன்றும். என் மம்மிக்கு தான்..'' தீபா அலட்சியமாய் தன் தாயைப் பார்த்தாள்.

வேலைக்காரர்கள் கொண்டு வந்த பாத்திரங்களை வாங்கி வைத்துக் கொண்டிருந்த மேலகா ஹரிஹரனைப் பார்த்துப் புன்னகைத்தாள். ஹரிஹரனுக்கு மேகலாவைப் பார்க்கையில் ஆச்சர்யமாக இருந்தது. இப்படிப்பட்ட குணாதிசயங்கள் கொண்ட கணவனுடனும் மகளுடனும் இருந்து கொண்டு எப்படி இவளால் தன்னிலை மாறாமல் இருக்க முடிகின்றது?

''சாப்பிட உட்காருங்க தம்பி..''

''தேங்க் யு ஆன்ட்டி.. ஐ லைக் யு வெரிமச்..''

தீபா அவளுடைய தாயை குரோதமாகப் பார்த்தாள். சேரை இழுத்து போட்டுக் கொண்டு அவள் அமர்ந்த



வேகத்தில் முயல்களில் ஒன்று ஓடிப்போய் குரோட்டன்ஸ் புதரில் பதுங்கியது.

''பாவம்...'' என்று பரிதாபப்பட்டான் ஹரிஹரன்.

''வாட்...'' தீபா முறைத்தாள்.

''அந்த முயலைச் சொன்னேன்.''

''எனக்கு முயல்களைக் கண்டாலே பிடிக்காது...''

''அப்புறம் யார் இவற்றை வளர்ப்பது..''

''வேறு யார்..?''

அவள் அலட்சியமாய் கேட்ட விதத்தில் புரிந்து போக.

''ஓ.. ஆன்ட்டியா? ஆன்ட்டி ஐ அப்ரிஸியேட் யு..'' என்றான் ஹரிஹரன்.

அதற்கும் ஒன்றும் பேசாமல் புன்னகைத்தபடி எல்லோரின் முன்னாலும் தட்டுகளை வைத்துப் பரிமாற ஆரம்பித்தாள் மேகலா.

''வாவ்... எல்லா அயிட்டமும் சூப்பர் ஆன்ட்டி.''

''எல்லாமே இன்டியன் புட் ஐட்டம்தானா? வாட் இஸ் திஸ் மம்மி?''

''நம் சமையலுக்கு ஈடு உலகிலேயே இல்லை தெரியுமா?''

ஹரிஹரன் ரசித்துச் சாப்பிட்டவாறு கூற தீபா அவனை ஒரு வித யோசனையுடன் பார்த்தாள். அவள் பார்வையைச் சந்தித்த ஹரிஹரன் புருவத்தை கேள்வியாய் உணர்த்தினான்.

''ஆர் யு பாரின் ரிடர்ன்?''

''ஸோ... வாட்..''

"பக்கா இண்டியனாய் இருக்கிறீங்க.."

"நாம் இண்டியன்தானே..?"

"இன்னும் கொஞ்சம் மாடர்னாய் நீங்கள் இருப்பீர்கள் என்று நினைத்தேன். ரியலி ஐ டிஸ்அப்பாயிண்ட் பை யு."

"வொய்..? நான் நானாக இருக்கிறேன் மிஸ் தீபா. பாரினுக்கு நான் போனது படிக்க.. தொழிலைப் பார்க்க. பிஸி படித்து முடித்து விட்டு இந்தியா வந்துவிட்டேன். பிஸினெஸ் விசயமாய் போனால் அதையும் பார்த்துவிட்டு இந்தியா வந்து விடுவேன். வெளிநாட்டிற்குப் போனால் நாம் அவர்களைப் போலவே மாற வேண்டுமா? அமெரிக்காவுக்குப் போன மடிசார் மாமிகள் நிறையபேர்.. மடிசார் கட்டோடுதான் அங்கே இருக்கிறாங்க... பிட்ஸ்பர்க்கில் வெங்கடாஜலபதி கோவிலைக் கட்டி நம் இந்தியாவை அங்கே உணர்த்தினார்கள்... கண்டி கதிர்காமத்தில் முருகன் கோவிலை பிரமாண்டமாய் கட்டி தமிழ் கடவுளின் பெருமையை அங்கே கொண்டு போனார்கள்... எங்கே நாம் போனாலும் நம் ஊரின் பெருமையை அங்கே சொல்ல வேண்டும்.. அந்த ஊரின் பெருமையை நம் ஊரில் பேசிக் கொண்டு இருக்கக் கூடாது."

"ஸ்ஸ்... ஐ டோன்ட் லைக் திஸ் டிஸ்கஷன் ஹரி.. வேறு பேசலாமே."

"என்ன பேச?"

"உங்களுக்குப் பிடித்ததைச் சொல்லிட்டீங்க... எனக்கு பிடித்ததை நான் சொல்ல வேண்டாமா?"

"என்னைச் சொல்லப் போகிறீங்க மிஸ் தீபா.. உங்களுக்கு டிஸ்கொதே பிடிக்கும்.. வேகமா கார் ஓட்டப் பிடிக்கும்..



பியூட்டி பார்லர் போகப் பிடிக்கும்.... பார்ட்டிகளில் கலந்து கொள்ளப் பிடிக்கும்."

"ஹையோ.. யு ஆர் கரெக்ட் ஹரி.. எப்படி இவ்வளவு சரியாகச் சொல்கிறீர்கள்.."

"எனக்கு ஆஸ்ட்ராலஜி கொஞ்சம் தெரியும்.."

ஹரிஹரனுக்குச் சிரிப்பு வந்தது. அன்று இரவு ஹோட்டல் அறையில் படுக்கையில் விழுந்து கண் மூடும்போது ராமநாதன் மேல் கோபம் வந்தது.

## 3



இதமான கடற்காற்று உடலை வருட டேப்ரிகார்டரில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.

"கரிகாலன் காலைப் போல
கருத்திருக்கு குழலு
குழலில்லே குழலில்லே தாஜ்மகால் நிழலு."

என்ன மாதிரியான பாடல் இது? ஹரிஹரனின் உதடுகளில் புன்னகை அரும்பியது. ஆனால் மற்றைய பாடல்களுக்கு இது கொஞ்சம் தேவலாம். அவன் கார் சென்று கொண்டிருந்த கிழக்குக் கடற்கரைச் சாலையில் சென்னை நகரின் எல்லை முடிந்து பாண்டிச்சேரியின் எல்லை ஆரம்பமாகியிருந்தது.

ஹரிஹரனுக்கு கிழக்கு கடற்கரைச் சாலையில் கார் ஓட்ட மிகவும் பிடிக்கும். கடலோரம் நடந்து போவதைப்



போல காரில் போவதும் தனி சுகம்தான். பாண்டிச்சேரியின் பணக்கார ஏரியாவான 'வொயிட் ஹவுஸ்' பகுதிக்குள் காரைத் திருப்பியவன் தங்கள் பங்களாவிற்குள் காரைச் செலுத்தினான்.

அலைகள் தாலாட்டும் தூரத்தில் கரையோடு மோதி இசை பாடிச் சென்றிருக்க கடலோரம் அமைந்த மாளிகைதான் அவன் வீடு. வீட்டிற்குள் சென்றபோது ராமநாதனும் சுகன்யாவும் மும்முரமாய் விவாதித்துக் கொண்டிருந்தனர். அலுப்புடன் சோபாவில் விழுந்த ஹரிஹரன் சுகன்யாவை நோக்கி.

"அம்மா... ஒரு கப் காபி.." என்றான்.

"ஜஸ்ட் ஒன் மினிட்.." சுகன்யா உள்ளே விரைந்தாள்.

"என்ன டாட்.. அம்மாவுடன் சட்டசபை கூட்டத் தொடரில் காரசாரமாய் விவாதம் நடத்துவது போல நடத்திக் கொண்டிருந்தீர்கள்.. வாட் இஸ் தி மேட்டர்?"

ராமநாதன் பதிலளிக்க வாய் திறந்தபோது வீட்டின் உள்ளேயிருந்து காபிக் கப்புடன் வந்த சுகன்யா விழிகளால் அவரை எச்சரித்தாள். மனைவியின் விழி உணர்த்திய குறிப்பை உணர்ந்தவராய் அவர் மௌனமானார். சுகன்யா மகனைப் பார்த்துச் சிரித்தாள்.

"பர்ஸ்ட் நீ காபியைக் குடி ஹரி. டயர்டாக இருக்கிறாய். பாண்டிச்சேரி வரை காரை டிரைவ் பண்ணிக் கொண்டு வந்திருக்கிறாய்.. அலுப்பாய் இருக்கும்."

"ஜஸ்ட் எ டு அன்ட் ஹாப்னவர் ஜர்னி.. இது பெரிய விசயமா? ஆக்சுவலாய் ஈஸிஆர் ரோட்டில் கடலோரமாய் காரை டிரைவ் பண்ணுவது எனக்கு ரொம்பப் பிடிக்கும்மா.. டோன்ட் ஒர்ரி..."



காபியை ரசித்து குடித்து முடித்துவிட்டு டீப்பாயின் மேல் வைத்தவன் எழுந்து தன் அறைக்குச் செல்ல மாடிப் படியில் கால் வைத்தான். ராமநாதனின் கண்களும் சுகன்யாவின் கண்களும் பேசிக் கொண்டன. ராமநாதன் மகனை அழைத்தார்.

"ஒன்மினிட் ஹரி.. நாங்கள் உன்னுடன் பேச வேண்டுமே."

"நாங்கள்ன்னா யார்.. யார்?"

"நானும்.. உன் அம்மாவும்.."

"அதற்கு என்னிடம் பெர்மிசன் கேட்க வேண்டுமா?"

ஹரிஹரன் திரும்பி வந்து சோபாவில் அமர்ந்து அவர்கள் இருவரையும் பார்த்தான். சுகன்யாவின் முகத்தில் தர்ம சங்கடம் நிலவியது. ராமநாதனின் முகத்தில் தீர்மானம் தெரிந்தது.

"வாட் இஸ் தி மேட்டர் டாட்?"

"ஹரி... மும்பையில் கனகசபாரத்தினத்தின் வீட்டிற்கு டின்னர் சாப்பிடப் போனாயே.. அதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

"என் டைம் வேஸ்ட்டாகி விட்டதுன்னு நினைக்கிறேன்."

ஹரிஹரன் பட்டென்று பதில் கூறினான். ராமநாதன் முகத்தில் ஈயாடவில்லை. சுகன்யாவின் விழிகள் அவரிடம்.

'பார்த்தாயா?' என்று வினவின.

"ஏன் அப்படி நினைக்கிறாய் ஹரி. ஹி இஸ் எ பிக் பிஸினெஸ் மேன்."

"ஸோ வாட்? நான் மட்டும் ரோட்டில் நின்று கொண்டிருப்பவனா? ஐ ஆம் ஆல்ஸோ எ பிக் பிஸினெஸ்

மேன். எனக்கும் என் நேரம் மிகவும் முக்கியம். ஒரு நாளை அவர் வீட்டில் போய் டின்னர் சாப்பிடச் செலவளிக்கும் அளவுக்கு நான் வெட்டி ஆளில்லை."

"ரிலாக்ஸ்.. ரிலாக்ஸ்.. ஏனிவ்வளவு கோபம் ஹரி, அப்பா எது செய்தாலும் உன் நன்மைக்குத்தான் செய்வேன்.."

"ஐ ஆம் ஸாரி டு ஸே திஸ் டாட். நான் என்ன இன்னும் சின்னக் குழந்தையா? பீடிங் பாட்டில் கையில் வைத்துக் கொண்டிருக்கிறனா? எனக்கு எது நன்மை.. எது தீமையென்பதை நான் டிசைட் செய்து கொள்கிறேன். நீங்கள் தலையிடாதீர்கள்."

ராமநாதன் முகம் சுருங்க ஏதோ பேச முயன்றார். சுகன்யா கண்களால் அவரை அடக்கினாள். மகனிடம் திரும்பிக் கனிவுடன்,

"நீ போய் ரெஸ்ட் எடு ஹரி. அப்புறமாய் பேசலாம்.." என்றாள்.

"எப்போது பேசுவதாக இருந்தாலும் இது போன்ற அபத்தமான விசயங்களை விட்டுவிட்டு மற்றதை பேசுங்களம்மா..."

ஹரிஹரன் எரிச்சலுடன் மாடிப்படிகளில் தாவி ஏறினான். தன் அறைக்குப் போய் கதவு திறந்து உடை மாற்றி குளியலறைக்குள் புகுந்தான். புத்துணர்ச்சியுடன் அறையின் பால்கனிக்கு வந்து நின்று கொண்டான். கண்ணுக்கு முன்னால் நீண்ட கடல் தெரிந்தது. அலையலையாய் வெள்ளை நுரைகள் வளைந்து செல்லும் நீலக்கடல்.. இதமாக வீசும் கடல்காற்று... பால்கனியிலிருந்த மூங்கில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து எதிரேயிருந்த வட்ட வடிவ



மான மூங்கில் மோடாவின் மேல் காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டான். அவன் மனதின் சஞ்சலங்கள் மறைந்து அமைதி அவனை ஆட்கொண்டது.

அறைக் கதவு தட்டப்பட்டது. சாய்ந்த வாக்கிலேயே திரும்பி "கமின்..." என்றான்.

அறைக் கதவைத் திறந்து கொண்டு சுகன்யா உள்ளே பிரவேசித்தாள்.

"ஹாய் மாம்... சிட்டவுன்..." ஹரிஹரன் எதிரேயிருந்த மற்றொரு மூங்கில் நாற்காலியைக் காண்பித்தான். கூடை போன்ற அமைப்புடைய அந்த நாற்காலியில் அமர்ந்த சுகன்யா மகனின் முகத்தைப் பார்த்தாள்.

"வாட் மாம்..."

"அப்பா ஒரு விசயம் கேட்கச் சொல்கிறார் ஹரி.."

"ஏன் அவர் கேட்க மாட்டாராமா?"

"நீ எரிந்து விழுவாய்ன்னு பயம்"

"நான் எரிந்து விழுவதைப் போன்ற கேள்விகளை ஏன் கேட்க வேண்டும்? அவாய்ட் பண்ணி விடலாமே? ஒருவருக்கு பிடிக்காத விசயத்தை அவர் மேல் திணிக்க முயல்வது சரியா?"

"சரியில்லைதான். அவர் நிலைமை அப்படி."

"எப்படி?"

"அவருடைய தொழில் வட்டாரத்தில் கனகசபாரத்தினத்தின் மேல் உயர்ந்த அபிப்ராயமாம். அப்படி ஒரு மனிதரின் சொந்தம் கிடைத்து விட்டால் நம் மதிப்பு இன்னும் அதிகம் கூடும் என்கிறார். நீ அவர் பக்கமும் கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டும் ஹரி."



"அம்மா! இதில் நான் நினைத்துப் பார்க்க என்ன இருக்கிறது? மும்பைக்கு என் பிஸினெஸ் விசயமாய் போயிருந்தேன். ஒரு நாள் வேலையை விட்டுவிட்டு அவர் வீட்டுக்கு டின்னருக்கு போகச் சொன்னார். போய் வந்தாகி விட்டது. இன்னும் என்ன வேண்டுமாம்?"

"ஹரி. உன் வேலையைக் கெடுத்துக் கொண்டு அவர் வீட்டுக்கு ஏன் டின்னருக்குப் போகச் சொன்னார் தெரியுமா?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை. ஒரு நாளின் மாலைப் பொழுது முழுவதும் வீணாகிப் போனது."

"கனகசபாரத்தினத்தின் மகள் தீபாவைப் பார்த்தாயா?"

"பார்த்தேன்.. பார்த்தேன்... ஹவ் ரிடிகுலஸ்?"

"அழகாய் இருக்கிறாளா?"

"அழகாய் தெரிகிறாள்."

அவளது ஆடையலங்காரத்தை நினைத்து முகம் சுளித்தவாறு பதில் சொன்னான் ஹரிஹரன்.

"அவளும் பாரினில் படித்தவள்தான்."

"சொன்னாள்... சொன்னாள். மூச்சுக்கு முந்நூறு தடவை பாரினில் இப்படி.. பாரினில் அப்படின்னு ஒரே பாரின் புராணம்தான்."

"தீபா... சபாரத்தினத்தின் ஒரே மகள்..."

"ஓஹோ... பட் ஸோ வாட் பார் இட்?"

"அப்பா தீபாவை உனக்கு மணம் முடிக்க விரும்புகிறார்."

"வாட்..?"

சுகன்யா அச்சத்துடன் மகனைப் பார்த்தாள். ஹரிஹரனின் விழிகள் கோபத்தில் சிவந்து விட்டன.



"கொஞ்ச நேரம் அவளுடன் பேசியதில் என் மூச்சு முட்டிவிட்டது. எப்போதடா அவளிடமிருந்து கழண்டு கொள்ளலாம் என்று தவித்துப் போனேன். வாழ்நாள் பூராவும் அவளைச் சகித்துக் கொள்வதென்றால்..? அவ்வளவுதான் அம்மா. நான் தொலைந்தே போவேன். அவளைப் போய் நான் திருமணம் செய்து கொள்வதா?"

"ஹரி... யோசித்து பொறுமையாய் முடிவெடு."

"இதில் யோசிக்க என்னம்மா இருக்கிறது? அவளை மேரேஜ் பண்ணிக் கொண்டு அவளது ஜீன்ஸ் இடுப்பிலிருந்து நழுவாமல் நிற்க வேண்டுமே என்று கடவுளைப் பிரார்த்தனை பண்ணிக் கொண்டிருப்பதெல்லாம் என்னால் முடியாத விசயம். டோன்ட் கம்பெல் மி."

ஹரிஹரன் முடிவாய் கூறிவிட்டான்.

## 4



ஹரிஹரன் தாய் தந்தையை மதிக்கும் மகன்தான். ஆனால் திருமணம் என்பது அவனது தனிப்பட்ட விசயமல்லவா? வெளிநாட்டில் படித்தவன் வெளிநாட்டு நாகரீகத்தை விரும்புவான் என்று அவனது தந்தை தப்புக் கணக்குப் போட்டார். ஆனால் நீரிலிருந்து பாலை பிரித்துப் பருகும் அன்னப்பறவை போல வெளிநாட்டவரின் சில நாசூக்கான நாகரிகப் பழக்கங்களை தன் வசம் எடுத்துக் கொண்ட ஹரிஹரன் அவர்களது உடை அணியும் பழக்கம், குடும்ப வாழ்க்கை முதலியவற்றை ஒதுக்கித் தள்ளினான்.

தனி மனித விருப்பம், மற்றவர்களின் சொந்த வாழ்க்கையில் தலையிடாமல் விலகுதல் போன்ற குணங்களைக் கொண்ட ஹரிஹரனின் திருமணத்தை அவனைக் கலந்து ஆலோசிக்காமல் அவனது தந்தை முடிவு செய்தால் அவனுக்கு கோபம் வராமல் என்ன செய்யும்?

சுகன்யா தன் விதியை நொந்து கொண்டாள்.

'என் திருமணத்தை நான் முடிவு செய்து கொள்வேன். மனதுக்குப் பிடிக்காத பெண்ணை மணக்க மாட்டேன்' என்று கூறும் மகன் ஒரு பக்கம்,

'மும்பையில் பெரிய செல்வந்தரின் ஒரே மகள். அவளை மகனுக்குத் திருமணம் செய்து வைத்தால் அவனது தொழிலும் எதிர்காலமும் இன்னும் பிரகாசமாக, வளமாக அமையும். தொழில் வட்டாரத்தில் அவனுடைய புகழ் உயரும்' என்று கணக்குப்போடும் கணவன் ஒரு பக்கம்.

அவள் யார் பக்கம் தான் நிற்பாள்? இருவர் தரப்பிலும் நியாயம் உள்ளதே.

பிடிக்காத பெண்ணுடன் வாழ்நாள் முழுவதும் வாழ்வது நரகம் அல்லவா? ஹரிஹரன் கூறுவது சரிதானே.

அதே சமயம் அவனது தொழில் சாம்ராஜ்யத்தை விஸ்தீரிக்க அவனது வளமான எதிர்காலம் இன்னும் ஒளிர்விட அவனது திருமணம் உதவுகிறது என்றால் அதை தவிர்ப்பது முட்டாள்தனம் என்று கணவர் பதறுவதும் சரிதானே.

''ஹரி. எனக்கு நீ சொல்வதும் சரியென்று தோன்றுகிறது. அப்பா சொல்வதும் சரியென்று தோன்றுகிறது. நான் என்னடா செய்ய?''



''ஒன்றும் செய்ய வேண்டாம். ஹரிக்கு இந்த திருமணத்தில் விருப்பம் இல்லையென்று டாடியிடம் சொல்லி விடுங்கள்.''

அது அத்தனை எளிதான விசயமில்லையே. சுகன்யா பெருமூச்சுடன் எழுந்து போய் விட்டாள்.

ஹரிஹரன் இரவு உணவுக்கு கீழே வந்த போது ராமநாதன் முகம் கருத்து சாப்பிட வந்து உட்கார்ந்தார்.

'அம்மா சொல்லியிருப்பார்கள்...'

ஹரிஹரன் அவரது முகமாற்றத்தைக் கவனிக்காதவன் போல் தன் போக்கில் சாப்பிட ஆரம்பித்தான்.

''யோகானந்தை தெரியுமில்லையா ஹரி?'' ராமநாதன் கேட்டார்.

''தெரியாமலென்ன டாடி. உங்கள் தொழில் எதிரி...''

''அவனுடைய மகன் கௌரிசங்கருக்கு தீபாவைப் பெண் கேட்டானாம்.''

''தீபாவா? யார் அது?''

ராமநாதனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. மனைவியை முறைத்தார். சுகன்யா உதவிக்கு வந்தாள்.

''நீ மும்பையில் டின்னர் சாப்பிடப் போனாயே.. அந்த வீட்டுப் பெண்தான் தீபா. கனகசபாரத்தினத்தின் மகள்.''

''ப்ளடி டின்னர்... அதையே எத்தனை முறை சொல்வீர்கள். டின்னருக்கு டாடி போகச் சொன்னார். போனேன். அது தவறென்று இப்போதல்லவா தெரிகின்றது. முடியாதென்று அப்போதே மறுத்திருக்க வேண்டும். அந்தப் பெண்ணின் பெயர் மறந்து போய் விட்டது அம்மா.''

''இப்போதுதானே அம்மா உன்னிடம் சொன்னாளாம்.''



''சொன்னாங்க. எனக்கு இன்ட்ரஸ்ட் இல்லைன்னு அப்போதே சொல்லிவிட்டேனில்ல. அப்புறம் எப்படி அவள் பெயர் நினைவில் நிற்கும்? அவள் பெயரே நினைவில் நிற்க மாட்டேன் என்கிறது. இதில் அவள் நினைவு எப்படி என் மனதில் நிலைத்து நிற்கும்?''

''வேண்டும் என்று நினைத்தால்தானே நினைவில் நிற்கும். நீதான் பிடிவாதமாய் வேண்டாம் என்கிறாயே...''

''ஸ்ஸ். இப்போது உங்கள் பிரச்சனைதான் என்ன டாட்?''

''யோகானந்தின் மகனுக்கு பெண் கொடுக்க சபாரத்தினம் மறுத்து விட்டாராம்...''

''அது அவர்கள் குடும்ப விசயம். நமக்கு என்ன வந்தது டாட்?''

''அவனுக்கு பெண் கொடுக்க மாட்டேனென்று சொல்லிவிட்ட கனகசபாரத்தினம் உனக்குப் பெண் கொடுக்க மிகவும் விரும்புகிறார். போன் மேல் போன் போடுகிறார்.''

''என் மகனுக்கு விருப்பமில்லைன்னு சொல்லி விடுங்கள்.''

நிர்தாட்சண்யமாய் கூறினான் ஹரிஹரன். அவன் பதிலைக் கேட்ட ராமநாதன் ஆத்திரம் கொண்டார். அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் பேசினார்.

''ஹரி அவசரப்படாதே. அந்தப் பெண் தீபா உன்னை மணக்க விரும்புகிறாளாம். அவளுக்கு உன்னைப் பார்த்ததும் பிடித்து விட்டதாம்.''

''எனக்கு அவளைப் பார்த்ததுமே பிடிக்காமல் போய் விட்டதே டாடி.''



''திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர்.''

''அதை என்னிடம் ஏன் சொல்லுகிறீர்கள்?''

''அந்தக் காலத்தில் ராஜாக்கள் எல்லாம் தங்கள் ராஜ்யத்திற்கு நன்மை தரும் இளவரசிகளை மட்டுமே திருமணம் செய்து கொள்வார்கள்.''

''ஸோ..?''

''நீயும் ஒரு ராஜாதான். உன் தொழிலுக்கு ராஜா...''

''நான் அடுத்தவர் தயவில் ராஜாதி ராஜாவாக விரும்பவில்லை.''

''நான் விரும்புகிறேனே. நம் தொழில் வட்டாரத்திலும் அறிந்தவர் தெரிந்தவர் வட்டாரத்திலும் நீ கனகசபாரத்தினத்தின் மகளை மணக்கப் போகிறாய் என்று சொல்லிவிட்டேனே.''

''யாரைக் கேட்டுச் சொன்னீர்கள்?''

''என் மகனின் திருமணத்தை முடிவு செய்ய நான் யாரைக் கேட்க வேண்டும்?''

''என்னைக் கேட்டிருக்க வேண்டும்.''

''நான்தான் கேட்டேனே.. அம்மா சொல்லியிருப்பாளே.''

''நான்தான் முடியாதென்று சொல்லி விட்டேனே. அதையும் அம்மா சொல்லியிருப்பார்களே..''

''சில விசயங்களில் நான் தடாலடியாய் முடிவு செய்துதான் ஆக வேண்டும். உன் திருமணமும் அதில் ஒன்று.''

''என் திருமணத்தை நான்தான் முடிவு செய்ய வேண்டும்.''

''எங்களுக்கும் சில எதிர்பார்ப்புகள் உண்டு...''

"உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற பணம் வேண்டுமா? சம்பாதித்துக் கொடுக்கிறேன். என் வாழ்க்கையை விட்டுத் தர முடியாது..."

"ஹரி.. நான் சொல்வதைக் கேள்."

"ஸாரி டாட்.. எனக்குத் தூக்கம் வருகிறது. குட்நைட்."

ஹரிஹரன் எழுந்து போய்விட்டான். ராமநாதன் சுகன்யாவிடம் முறையிட்டார். அவள் செய்வதறியாது தவித்தாள். ஹரிஹரன் அதற்கடுத்து அவர்களிடம் நின்று பேசவில்லை. வேலை அதிகமென்று அடுத்த வாரம் முழுவதும் சென்னையிலேயே இருந்த அவர்களது இன்னொரு வீட்டில் தங்கிவிட்டான். மறுவாரம் பாண்டிச்சேரி வீட்டிற்குச் சென்றபோது வீடு விழாக்கோலம் பூண்டிருந்தது.

"என்னம்மா விசேஷம்?"

"அப்பாவைக் கேளுடா."

"ஏன் நீங்கள் சொல்ல மாட்டீர்களா?"

"இது உன் அப்பா முடிவு பண்ணி நடத்தும் பங்ஷன். அவரிடமே போய் கேள். நானென்ன உனக்கும் அவருக்கும் மீடியேட்டரா? இரண்டு பக்கமும் தூது சொல்ல? நீயே சொல்லு."

ஹரிஹரனின் மனதில் மணியடித்தது. எதுவோ சரியில்லை. என்ன அது?

"உன் மேரேஜ் என்கேன்ஜ்மெண்ட் பங்சன்தாண்டா அது" என்றார் ராமநாதன்.

"வாட்? யாருடைய மேரேஜ் என்கேன்ஜ்மென்டுன்னு சொன்னீர்கள்?"

"உன்னுடையதுதான்..."



"யாரோடு..?"

"கனகசபாரத்தினத்தின் மகள் தீபாவோடு.."

"எப்போது?"

"இன்னும் ஒரு மணி நேரத்தில்..."

ஹரிஹரன் கோபத்துடன் காரில் ஏறிக் கிளம்பிச் சென்றுவிட்டான். அலைகள் கொஞ்சும் பாண்டிச்சேரி கடற்கரையில் அமைதியை நாடி அவன் நிற்கும்போது அவனை அழைத்து போன் மேல் போன் வர போனை ஸ்விட்ச் ஆப் பண்ணி பாக்கெட்டில் போட்டான். கடற்கரையோரமிருந்த சிமிண்ட் பெஞ்சில் அமர்ந்து தலைக்கு கையை அணைவாய் கொடுத்து கடலைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

## 5



ராமநாதன் கைகளைப் பிசைந்தார். சுகன்யா கணவரின் அருகில் வந்து அமர்ந்தாள். அவர் முகம் பார்த்தாள்.

"என்ன செய்யப் போறீங்க?"

"சமாளிக்கப் போகிறேன்."

"எப்படி..."

"ஏதாவது வழியைக் கண்டுபிடிக்கணும்."

"நான் அப்போதே சொன்னேன். கேட்டீர்களா?"

"நீ வேறு சொல்லிக் காட்டாதே சுகன்யா. நோ அதர் வேன்னு நெருக்கடியை உண்டு பண்ணினால் அவன்



மறுத்துப் பேச முடியாதுன்னு தப்புக் கணக்கு போட்டு விட்டேன். இப்படி பங்சனுக்கே வர முடியாது என்று சொல்லிவிடுவான்னு கனவிலும் நினைக்கவில்லை."

"நினைத்துப் பார்த்திருக்க வேண்டும். கோடி கோடியாய் கொட்டிக் கொடுத்தாலும் மனதுக்குப் பிடிக்காததை செய்ய மாட்டான் நம்ம ஹரி."

மனைவியின் பேச்சில் இருந்த உண்மை ராமநாதனைச் சுட்டது. பதில் சொல்ல முடியாமல் அவர் திணறிக் கொண்டிருந்தபோது கனகசபாரத்தினத்தின் மனைவி மேகலா அவர்கள் அருகில் வந்தாள்.

"என்னாச்சு சுகன்யா? மாப்பிள்ளை இன்னும் வரவில்லையே..."

சுகன்யா சுதாரித்துக் கொண்டு மேகலாவைப் பார்த்துப் புன்னகை செய்தாள். நிலைமையை சமாளிக்க வேண்டுமே..

"ஹரிக்கு ஏதோ முக்கியமான வேலையாம். இங்கே வர முடியாத நிலைமையில் இருக்கிறான்" பாதி உண்மையாகவும், பாதிப் பொய்யாகவும் கூறினாள் சுகன்யா.

"அப்படியா..? இப்போது என்ன செய்வது?" மேகலா கவலையுடன் கணவனை நோக்கிப் போனாள்.

"என்ன சுகன்யா இப்படிச் சொல்லிவிட்டாய்?"

"வேறு எப்படிச் சொல்வது? சமாளிக்கிறேன் பேர் வழின்னு கையைப் பிசைந்துகிட்டு உட்கார்ந்து இருக்கறீங்களே தவிர உருப்படியாய் எதையும் செய்ய மாட்டேன் என்கிறீர்களே."

மேகலா பொய் சொன்னதும் கனகசபாரத்தினம் ராமநாதனைத் தேடி வந்தார்.



"வாட் இஸ் திஸ் ராமநாதன்? வேர் இஸ் யுவர் சன்?" அவரது குரலில் கண்டிப்புத் தொனித்தது.

ராமநாதன் நிதானத்தை வரவழைத்துக் கொண்டார்.

"கனடாவிலிருந்து கிளையன்ட்ஸ் வந்திருக்காங்க சபாரத்தினம். முக்கியமான மீட்டிங்கில் இருக்கிறான். முடியவில்லை."

"கெஸ்ட் எல்லோரும் வந்து விட்டாங்க. இப்ப என்ன பண்ணுவது."

"எனக்கும் ஒன்றும் புரியவில்லை."

"நோ பிராப்ளம் டாடி. நான் வழி சொல்கிறேன்." தீபாவின் குரல் கேட்டுத் திரும்பினர்.

"ஐ ஆம் ஸாரி தீபா. ஹரிஹரன் இம்பார்டன்ட் மீட்டிங்கில் இருக்கிறான். வர முடியாத சிச்சுவேஷன்" ராமநாதன் அவசரமாய் விளக்கம் அளித்தார்.

"இட்ஸ ஆல்ரைட் அங்கிள். ஐ கேன் அன்டர்ஸ்டான்ட் நான்தான் நோ பிராப்ளம்ன்னு சொல்லிவிட்டேனே..."

"யு ஆர் கிரேட் தீபா. இப்போது என்ன செய்யலாம்."

"மேரேஜ் நியூஸை இந்த பங்ஷனில் அனௌன்ஸ் பண்ணி விடுங்கள். அதில் மாற்றம் வேண்டாம்."

"ஹரிஹரன் இல்லையே..." சுகன்யா ஆட்சேபித்தாள்.

"ஸோ வாட்? திருமணத்திற்குத்தான் அவர் தாலி கட்ட இருக்க வேண்டும். திருமணத்தை அறிவிப்பதற்கு இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லையே."

"இருந்தாலும்."

"சுகன்யா கொஞ்சம் பேசாமலிருக்கிறாயா? கெஸ்ட் வந்து விட்டார்கள். நிலைமையை சமாளிப்பது பற்றி யோசிப்போம்."

ராமநாதன் கடுமையாக மனைவி மீது எரிந்து விழுந்தார். தீபா உதட்டோரம் லேசாய் சுளித்து ஒருவித அலட்சியத்துடன் சுகன்யாவைப் பார்த்தாள். சுகன்யாவிற்கு அவளின் அந்தப் பார்வை பிடிக்காமல் போனது. மௌனமாக கணவரை முறைத்தாள்.

ராமநாதன் தோட்டத்தின் ஓரமாய் அமைக்கப்பட்டிருந்த மேடையை நோக்கிப் போனார். மைக்கில் பேச ஆரம்பித்தார்.

''ஹலோ பிரண்ட்ஸ்! இந்த பங்ஷனில் ஒரு முக்கியமான நபரை அறிமுகப்படுத்தவே உங்களை எல்லாம் அழைத்தேன். அது வேறு யாருமல்ல. என் வருங்கால மருமகள் தீபாவைத்தான். தீபா கமான்.''

தீபா ஒயிலாக மேடை மீது ஏறினாள். விருந்தினர்கள் மேல் அலட்சியமாய் ஒரு பார்வையை வீசினாள். புன்னகையை ஒளிர விட்டபடி ஏதோ பேஷன் ஷோவில் நிற்பது போல் நின்றாள்.

''இதுதான் மிஸ் தீபா... தீபா கனகசபாரத்தினம். இன்னும் சிறிது நாளில் மிஸஸ். தீபா ஹரிஹரன் ஆகப் போகிறவள். இந்த திருமணத்தை அறிவிக்கத்தான் உங்களை அழைத்தேன்.''

மும்பையின் மிகப் பெரிய செல்வந்தரும் பிஸினெஸ் மேனும் ஆன கனக சபாரத்தினத்தின் ஒரே மகள் தீபாவை ராமநாதனின் மகன் ஹரிஹரனுக்கு திருமணம் செய்து கொடுக்கப் போகிறார்களா?

பொறாமையில் வெந்து போயினர் ராமநாதனது தொழில் எதிரிகளும், சகாக்களும், கூடிக் கூடி ராமநாதனது அதிர்ஷ்டத்தைப் பற்றிப் பேசி வியந்தனர்.



ராமநாதனுக்கு அதுதானே வேண்டும். அவர் வெகு திருப்தியாக விருந்து கொடுக்க ஆரம்பித்தார்.

பஃபே வகையில் உணவுகளை தட்டுகளில் எடுத்துக் கொண்டு எல்லோரும் கும்பல் கும்பலாக ஒதுங்கி நின்று பேசிக் கொண்டே சாப்பிட்டனர்.

கனகசபாரத்தினம் தீபாவை அணுகினார். மேகலாவும் தொடர்ந்தாள். ''ஏன் தீபா மேரேஜை அனௌன்ஸ் பண்ணச் சொன்னாய்? ஹரிஹரன் இல்லாமல் இதை அறிவித்ததில் எனக்கு உடன்பாடில்லை.''

''ஐ நோ இட் வெரி வெல் டாடி. பட் இதில் நம் கௌரவம் அடங்கி இருக்கிறது. ஹரிஹரனுக்கு ஒருவேளை இந்த மேரேஜில் விருப்பம் இல்லாமல் இருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.''

''எனக்கும் அதே சந்தேகம்தான். அப்புறம் எதற்கு நாமே முந்திக் கொண்டு திருமணத்தை அறிவிக்கச் சொல்ல வேண்டும். அந்த ஹரிஹரன் என்ன அவ்வளவு பெரிய ஆளா?''

''அவன் பெரிய ஆளாகி விடக்கூடாது என்றுதான்.''

''எனக்குப் புரியவில்லை தீபா.''

''டாட். இப்போது திருமணத்தை அறிவித்தாகி விட்டது. நாளைக்கு அது நின்று போனால் ராமநாதனுக்குத்தான் சங்கடம். நமக்கு என்ன வந்தது? அவர்தானே திருமணத்தை அறிவித்தார். நடந்தால் அவரால் திருமணம் நடந்தது என்று ஆகும். நின்று போனால் நாம் நிறுத்தியதாக ஆகிவிடும். யு நோ ஒன்திங் டாட். இது அவருடைய ஊர். நம் ஊரல்ல.''

கனகசபாரத்தினம் யோசித்தார். மும்பையில் நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் நின்று போவது மிகவும்



சகஜம். அதுவே பாண்டிச்சேரியில் நிற்பது என்றால் அது ராமநாதனுக்கு ஓர் இறக்கத்தை உண்டு பண்ணும் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை.

மகளின் புத்திசாலித்தனத்தை மெச்சிய ஓர் முறுவல் அவரது உதடுகளில் உற்பத்தி ஆனது.

''அது மட்டுமில்லை டாடி. இந்தத் திருமணத்தில் ஹரிஹரனுக்கு விருப்பமில்லையெனும்போது அவன் இல்லாமல் அவன் விரும்பாமல் இந்தத் திருமண எங்கேஜ்மெண்டை நடத்தியதற்காக ராமநாதனுடன் சண்டை போடுவான். தகப்பன், மகனுக்குள் மனவேற்றுமை வரும். ஏன்? பிரிவு கூட உண்டாகலாம்...''

''தட்ஸ் கரெக்ட்... தட்ஸ் கரெக்ட்... ஐ ஆம் பிரௌவுட் ஆப் யு தீபா... என்ன மாதிரி திட்டம் போட்டு செயல்படுத்தி விட்டாய்...''

''நான் திட்டமே போடவில்லை டாடி. ஜஸ்ட் ஒன் திங்கிங்தான். நான் திட்டம் போட்டு செயல்படுத்தினால் இந்த ராமநாதனின் வீடு தூள் தூளாகி விடும். போகட்டும் என்று இத்துடன் விட்டு விட்டேன்.''

'நல்லவேளை.. இவள் ராமநாதனின் மருமகள் ஆகவில்லை' என்று மேகலா நிம்மதியுடன் நினைத்துக் கொண்டாள்.

''அந்தப் பையன் ஹரிஹரனைப் பார்த்தால் நல்ல குணமுள்ள பையனாகத் தெரிகிறது. நாளுக்கொரு பாய்பிரண்டும்.. பொழுதுக்கொரு மது பாட்டிலுமாக அலையும் இந்த தீபா அவனுக்கு பொருத்தமான மனைவியாக ஒரு போதும் வாழ மாட்டாள். இவளைத் திருமணம் முடித்தால் அவன் வாழ்க்கை நரகம்தான். நல்ல வேளை.



அவன் தப்பித்தான். அவன் எப்படி தீபாவை மணம் செய்து கொள்ள ஒத்துக் கொண்டான் என்று நினைத்தேனே. எல்லாம் இந்த ராமநாதனின் ஏற்பாடு போல் தெரிகிறது. மகனின் திருமணத்தை வியாபாரம் ஆக்கியிருக்கிறார் அந்த மனிதர். மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்ற பழமொழியை அவர் அறிய மாட்டார் போலும். பெற்ற தாயும், தகப்பனும் ஒற்றுமையாய் பேசினாலே தீபா சகித்துக் கொள்ள மாட்டாள். வெட்டிவிட்டு விடுவாள். ராமநாதனும், சுகன்யாவும் சந்தோசமாய் வாழ்வதை எப்படிப் பொறுப்பாள்? ஹரிஹரனை மகன் என்று உரிமை கொண்டாடுவதை எப்படி அனுமதிப்பாள்? ஹரிஹரன் நல்ல முடிவு எடுத்து குடும்பத்தைக் காப்பாற்றி விட்டான்...''

மேகலா நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

## 6



அகண்டு நீண்டு சென்ற அந்த நான்கு வழிச் சாலையில் ஹரிஹரனின் கார் ஓடிக் கொண்டிருந்தது. பேய் பிடித்தவன் போல் காரை அதி விரைவாய் அவன் செலுத்திக் கொண்டிருந்தான்.

'சற்று முன் கிடைத்த தகவல்படி' என்று சொல்வார்கள். அது போல் சற்று முன் அவன் செல்போனை ஆன் செய்தபோது போன் ஒளிர்ந்தது. சுகன்யாவின் எண்கள் தெரிந்தன.

"என்னம்மா...?"

"ஹரி.. நைட் ஒரு மணியாகப் போகிறது. வீட்டிற்கு வா."

"அந்தக் கும்பல்.. வந்த கும்பல். எல்லாமும் போயாச் விட்டதா?"

மறுமுனையில் மௌனம் நிலவியது. சற்று நேரம் கழித்து.

"ஹரி.. பங்ஷன் முடிந்து எல்லோரும் போய் விட்டார்கள்.." என்றாள் சுகன்யா.

"வாட்...?"

"யெஸ் ஹரி... உன் அப்பா விருந்தில் உன் திருமணத்தை அறிவித்து விட்டார்."

'நான் இல்லாமலா? என் சம்மதம் இல்லாமலா?'

"நீங்கள் தடுக்கவில்லையா?"

"தடுத்தேன். அவர் கேட்கவில்லை."

"எப்படி இப்படி ஓர் யோசனை அவருக்கு வந்தது?"

"அவருக்கு வரவில்லை... அவளுக்கு வந்தது."

"யாருக்கு...?"

"தீபாவிற்கு... அதுதான் அந்த கனகசபாரத்தினத்தின் மகள்."

"ஓ...!"

கடைசியில் அந்தப் பெண் அவனிடம் சவால் விடுகிறாளா? பார்ப்போம்.

"அம்மா.. நான் சொல்வதைக் கவனமாய் கேளுங்கள்."

"சொல் ஹரி..."

"நான் கொஞ்ச நாள் வெளியூருக்குப் போகிறேன்."



"எங்கே?"

"அது உங்களுக்குக் கூடத் தெரிய வேண்டாம்."

"ஏன் ஹரி?"

"நீங்கள் அப்பா கேட்டால் சொல்லி விடுவீர்கள்."

சுகன்யா உதடு கடித்துக் கொண்டாள். மகன் எப்படிச் சரியாக கணித்து வைத்திருக்கிறான்!

"நீ எங்கேயிருக்கிறாய்ன்னு தெரியாமல் எனக்குக் கவலையாய் இருக்கும். நான் எப்படி இங்கே நிம்மதியாய் இருக்க முடியும்ன்னு சொல்ல."

"முடியாதுதான். ஆனால் இப்போது எனக்கு நிம்மதி வேண்டுமா? வேண்டாமா? அதற்கு முதலில் பதில் சொல்லுங்கள்."

"வேண்டும்டா ராஜா.. நிச்சயம் வேண்டும்."

"அப்போது அமைதியாய் இருங்கள். நான் பாரினுக்கு படிக்கப் போனபோது அமைதியாய் எனக்காகக் காத்திருந்தீர்களே. அதுபோல் இன்றும் காத்திருங்கள். நான் வந்து விடுவேன்..."

"எப்போது?"

"என் மனம் அமைதியான உடனே."

"செல்போனில் பேசுவாயா?"

"மாட்டேன். செல்லை ஸ்விட்ச் ஆப் பண்ணி விடுவேன். அது நான் எங்கே இருக்கிறேன் என்பதைக் காட்டிக் கொடுத்து விடும்."

"ஹரி..."

"குட்பை மாம். திரும்பவும்... நான் திரும்பியதும் சந்திக்கலாம்."



ஹரி போனை அணைத்து விட்டு தன் ஜெனரல் மேனேஜரும் தன் நண்பனுமான அர்ஜுனனை அழைத்தான்.

"யெஸ் சார்..." என்றது மறுமுனை.

"அர்ஜுன்.. நான் இப்போது உன் எம்.டி.யாக மட்டுமில்லை. உன் பிரண்டாகவும் பேசுகிறேன். உன் உதவி எனக்கு இப்போது தேவை."

"உதவின்னு சொல்லாதே ஹரி... ஆணையிடு செய்கிறேன்."

"டாடி என்னுடன் விளையாடிப் பார்க்கிறார் அர்ஜுன். எனக்குப் பிடிக்காத திருமணத்தில் என்னைக் கட்டிப் போட நானில்லாமல் நான் விரும்பாத திருமண நிச்சயதார்த்தத்தை நடத்தியிருக்கிறார். நான் அவருக்குப் பாடம் கற்பிக்க விரும்புகிறேன். அத்தோடு ஐ நீட் பீஸ் ஆப் மைன்ட் நௌ."

"நான் என்ன செய்ய வேண்டும் ஹரி..."

"நானில்லாத குறை தெரியாமல் கம்பெனியை ரன் பண்ணு. நான் என் செல்போனில் சிம் கார்டு மாற்றி விடுகிறேன். நீ அந்த நம்பரை யாருக்கும் முக்கியமாக டாடியிடம் கொடுத்து விடாதே. ஏதாவது அர்ஜண்ட் மேட்டரென்றால் கால் பண்ணி என் ஒபினியனைக் கேட்டுக் கொள்."

"ஒகே ஹரி.. பட் வேர் ஆர் யு கோயிங்?"

"பாரினில் என்னுடன் படித்த நண்பன் ஒருவனின் எஸ்டேட் மூணாறில் இருக்கிறது. அங்கே போகப் போகிறேன். அவனுடைய அட்ரஸ் என் டாடிக்குத் தெரியாது. ஏன் அப்படியொரு நண்பன் எனக்கு இருப்பதே டாடிக்குத் தெரியாது.



மும்பை, பாரின் நண்பர்கள் பற்றித்தான் இன்ட்ரெஸ்ட் காண்பிப்பார். தென் தமிழக எல்லையைத் தாண்டியிருக்கும் மலை மீதான எஸ்டேட்டில் வசிக்கும் நண்பனைப் பற்றி நான் பேச முயன்றாலும் காதில் வாங்கிக் கொள்ள மாட்டார். அது இப்போது எனக்கு எவ்வளவு வசதியாகப் போய் விட்டது பார்த்தாயா?"

"ஹரி... என் மனம் மிகவும் கஷ்டப்படுகிறது. அமைதியைத் தேடி நீ எங்கோ மலையில் வசிக்கும் நண்பனைத் தேடிச் செல்ல வேண்டுமா?"

"போகத்தான் வேண்டும் அர்ஜுன். இந்த மூச்சு முட்டும் சூழ்நிலையில் இருந்து நான் விலகியிருக்க வேண்டும்."

"இவ்வளவு தூரம் நீ பீல் பண்ண வேண்டுமென்றால் உன் மனம் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கும் என்பதை என்னால் உணர முடிகின்றது. போய் வா. நான் கம்பெனியைப் பார்த்துக் கொள்கிறேன். கவலை வேண்டாம். எந்த இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்ட்டும் தடைபடாமல் வந்து போகும். அதற்கு நான் உத்தரவாதம் அளிக்கிறேன்."

"தேங்க் யூ அர்ஜுன்... தேங்க் யு வெரிமச்..."

"இட் இஸ் மை டியூட்டி ஹரி. யு ஆர் மை பிரண்ட் ஆல்ஸோ. நான் உன்னைத் தாங்கி நிற்க கடமைப்பட்டவன்."

"ஐநோ.. ஐ நோ.. குட்பை அர்ஜுன்."

ஹரிஹரன் மனநிம்மதியுடன் காரைக் கிளப்பினான். வழியில் ஏ.டி.எம். கார்டில் பணம் எடுத்துக் கொண்டான். காரில் பெட்ரோலை நிரப்பிக் காண்டான். ஓர் ஹோட்ட

லில் வயிரை நிரப்பிக் கொண்டான். மன அமைதியைத் தேடி மூணாறு செல்லக் காரைச் செலுத்த ஆரம்பித்தான்.

பாண்டிச்சேரியில் ராமநாதனின் வீட்டில் புயல் அடிக்க ஆரம்பித்தது. மகன் வீடு வந்து சேராததைக் கண்டு ராமநாதன் பதட்டம் கொள்ள ஆரம்பித்தார். மகனின் செல் போனிற்கு தொடர்பு கொள்ள முயன்றார். போன் 'ஸ்விட்ச் ஆப்' செய்யப்பட்டிருந்தது.

''நீ ஹரியிடம் பேசினாயா சுகன்யா?''

''இல்லை...'' வேறு வழியில்லாமல் பொய் சொன்னாள் அந்தத் தாய்.

''இன்னும் வீட்டுக்கு வரவில்லையே.''

''பொய் சொல்லாதீர்கள்... ஈவினிங் வந்தவனைத் தான் நீங்கள் துரத்தி விட்டீர்களே...'' சுகன்யா கண் ணீருடன் கணவனை முறைத்தாள்.

அவள் துயர் அவளுக்கு. பிடிவாதம் பிடித்து மகனுக்கு விரும்பாத திருமணத்தை செய்ய முயன்றதால்தானே அவன் அமைதியைத் தேடி வேறு எங்கோ செல்கிறான். பெற்றவர்களின் நிழல் தராத அமைதியை மற்றவர் களின் நிழலில் தேடும் துர்பாக்கியத்தை அவனுக்கு உண்டு பண்ணியது இந்த மனிதர்தானே? இவரை என்ன செய்தால் தகும்?

ஆனால் அவரைத் தன்னால் எதுவும் செய்ய இயலாது என்பதையும் அவள் நன்கு அறிவாள். ராமநாதன் அவளைக் காதலித்து கரம் பிடித்தவர். சுகன்யாவும் அப்படியே. இதுவரை அவர்களுக்குள் அபிப்ராய பேதமே வந்தது இல்லை. அவரும் மனைவி, மகனின் மனம் நோக இதுவரை நடந்து கொண்டவரும் இல்லை.



இயல்பான அந்தஸ்து மோகம் ராமநாதனுக்கு உண்டு. இயல்பாய் அந்தஸ்து வித்தியாசம் பார்க்காமல் பழகும் குணம் ஹரிஹரனுக்கு உண்டு. அதில் மட்டும்தான் இருவரும் வேறு பட்டார்கள். இன்று திருமண விஷயத் தில் இருவருமே எதிரும் புதிருமாய் நிற்கும் நிலை உருவாகி விட்டது.

''என்ன சுகன்யா. நீயும் என்னைப் புரிந்து கொள்ளாமல் குற்றம் சாட்டுகிறாய்? நான் அவனுக்கு நன்மைதானே செய்தேன்?''

''நல்லது கெட்டதை தீர்மானிக்கும் வயதும் தகுதியும் அவனுக்கு உண்டு. அதை நீங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறீர்கள்?''

''சுகன்யா.. கனகசபாரத்தினம் இஸ் எ வெரி பிக் மேன்...''

''இதையே எத்தனை தரம் சொல்வீர்கள். நம் மகன் தான் நமக்கு பெரிய மனிதன். உயர்ந்த மனிதன். அவனுக்கு அடுத்துத்தான் மற்றவர்கள். இதை எப்போதுதான் உணரப் போகிறீர்களோ.''

''அவனைப் பற்றிய கனவு எனக்கு இருக்கக் கூடாதா?''

''அவனுடைய திருமணத்தைப் பற்றிய கனவு அவனுக் கும் இருக்குமில்லையா? வரப் போகும் மனைவியைப் பற்றி அவனுக்கும் எதிர்பார்ப்புகள் இருக்குமில்லையா?''

ராமநாதன் வாயடைத்துப் போனார். சுகன்யா அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியேறி விட்டாள். முதன் முதலாய் மனைவி காட்டிய கோபமும் மகன் காட்டிய எதிர்ப்பும் அவரை சஞ்சலத்திற்கு உள்ளாக் கியது.



# 7



''ஏண்டி சுமித்ரா எங்கேடி போய் தொலைஞ்சே'' கனகவள்ளி ராகம் போட்டுக் காட்டுக் கத்தலாய் க ளாள்.

மொட்டை மாடியில் காய வைத்திருந்த துணிக எடுத்துக் கொண்டிருந்த சுமித்ராவிற்கு வெட்கம் பிடு தின்றது.

'இந்த அம்மா ஏன் இப்படிக் கத்துகிறாள்..?'

அவசரமாய் படிகளை நான்கு நான்காய் குதித் கடந்து அன்னையின் எதிரே வந்து நின்றவளுக்கு மூ வாங்கியது.

''என்னம்மா...?'' மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங் கேட்டாள் சுமித்ரா.

''அதுக்கு ஏண்டி இந்த மூச்சு வாங்கறே...?'' கனகவ மகளைக் கடிந்து கொண்டாள்.

''நீ கூப்பிடவும் ஓடி வந்தேன்ம்மா.''

''எங்கே போயிருந்த?''

''மொட்டை மாடியில் காய வைத்த துணிகளை எ துக் கொண்டு இருந்தேன். நீ கூப்பிடவும் ஓடி வந்தேன்

''ஏண்டி அறிவு கெட்டவளே.. மெதுவாத்தா இறங்கி வர்றது? இப்ப என்ன கொள்ளை போயி



சுன்னு இந்த ஓட்டம் ஓடியாற? மாடிப்படியில் கால் தடுக்கி விழுந்து கால், கை சேதாரம் ஆகியிருந்தா என்ன செய்யறது? இந்த லட்சணத்தில் உனக்குக் கல்யாணம் பேசுறாரு உங்க அப்பன். நீ இப்படி கூறு கெட்ட குப் பாயியா இருக்கிற?''

''இப்ப என்ன நான் கூறில்லாமல் போயிட்டேன். மதுரை மீனாட்சி காலேஜில் பி.எஸ்ஸி மூணாவது வருஷம் படிச்சுக்கிட்டு இருக்கேனாக்கும். நீ கூப்பிடவும் அவசரமாய் இறங்கி வந்தேன். லேட்டா வந்தா நீ என்ன சொல்வேன்னு எனக்குத் தெரியாதா?''

''என்னடி சொல்லுவேன்?''

''உடம்பில் பயம் துளிர் விட்டுப் போச்சுடி. நான் இந்தக் கூப்பாடு போடறேன். நீ யாருக்கோ வந்த விருந்துன்னு ஆடி அசைஞ்சுக்கிட்டு வந்து சேருற. அம்மாங்கிற பயம் உனக்கு இல்லாமப் போச்சு. உன்னைச் சொல்லிக் குத்தமில்லடி. எல்லாம் உன் அப்பன் கொடுக்கிற இடம். ஜில்லா விட்டு ஜில்லா படிக்க அனுப்பி வைச்சா இப் படித்தான் பயம் பத்தில்லாமப் போகும். வரட்டும் அந்த மனுசன் இன்னைக்கு ரெண்டில ஒண்ணு கேட்கறேன்னு சொல்லியிருப்ப...''

தன்னைப் போலவே மகள் பேசிக் காட்டியதும் கனக வள்ளிக்குச் சிரிப்பு வந்து விட்டது.

'முளைச்சு மூணு இலை விடலை. இதுக்கு வாயைப் பாரு. அப்படியே அப்பன் மாதிரி அகட விகடம் சுத்து வைச்சிருக்கு' என்று இதற்கும் கணவனை செல்லமாகக் கடிந்து கொண்ட கனகவள்ளி சிரிப்பை அடக்கிக் கொண்டு மகளை முறைத்தாள்.

"இந்த வாய்கொன்னும் குறைச்சலில்லை. வேறு ஒ கூறும் இல்லாட்டியும் வாய் மட்டும் எட்டு ஊருக்கு கிழியுது."

"சரி விடு அம்மா. உன் மகள் உன்னில் பாதியாவது இருக்கணுமில்ல. இல்லாட்டி ஊர் என்ன சொல்லும்?"

"வாடி என் புருசன் மகளே. வார்த்தைக்கு வார்த்தை என் கூட மல்லுக்கு நிக்கணும்னு வரம் வாங்கி பிறந்திருக்கயா?"

"நீ சொன்னாலும் சொல்லாட்டியும் நீ வரம் கேட்டு நான் பிறந்தவள்தான். இல்லைன்னு சொல்லு பார்க்கலாம்."

இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்ற பின் மூன்றாவதாய் பெண் குழந்தை பிறந்ததும் அதைச் செல்லமாய் சீராட்டி பாராட்டி வளர்த்த போது அடிக்கடி கன வள்ளியின் கணவர் வீராச்சாமி,

"நான் வரம் வாங்கி பிறந்த பெண் தெய்வம்டி இது இது கண்ணில் ஒரு சொட்டு கண்ணீர் வந்துச்சு. நான் நான இருக்க மாட்டேன்" என்று மனைவியிடம் கூறுவார்.

அதைத்தான் இப்போது சுமித்ரா கூறுகிறாள்.

"நானாடி வரம் கேட்டேன்னு சொன்னேன். உங்க அப்ப னில்ல அப்படிச் சொல்லி சொல்லி தானும் ஆட்டம் போட்டு உன்னையும் ஆட்டம் போட வைக்கிறாரு. எல் லாம் அவரைச் சொல்லணும். வரட்டும் அந்த மனுசன்."

"ஐயே... அப்படியே அப்பன் வந்தால் அவர்கூட சண்டை கட்டி உண்டு இல்லைன்னு ஆக்கி விடுவ பாரு. உன் குணம் எனக்குத் தெரியாதா?" சுமித்ரா சிரிப்பை அடக்க வாயைப் பொத்திக் கொண்டாள்.



"என் குணத்துக்கென்னடி தாயி? அது பத்தரை மாத்துத் தங்கம். இல்லாட்டி உன் அப்பன் கூடக் குப்பைக் கொட்டி இத்தனை வருசமா பொழப்பு நடத்தியிருக்க முடியுமா? உன்னையும் உன் அண்ணன்களையும் பெத்து வளத்து பேரு வச்சிருக்க முடியுமா?"

"அம்மா! சரியாச் சொல்லு. பெத்தவுடனே பேரு வச்சிட்டு வளர்த்தயா... இல்லை வளர்த்துவிட்டு பேரு வச்சயா?"

"இந்த சவடாலுக்கு ஒன்னும் குறைச்சலில்லை. படிக்க டவுனுக்கு அனுப்பினால் நீ வாய் பேச படிச்சுக்கிட்டு வந்து நிற்கிறாயாக்கும். மதுரைக்காரங்க வாய் பந்தலை என்கிட்ட போட்டுக் காட்டறயாக்கும்."

"யம்மோவ். படிக்கப் போனதுதான் மதுரை மண்ணு. பிறந்து வளர்ந்தது இந்த சுப்புலாபுரம் மண்ணு. வாய் பேசறதெல்லாம் பரம்பரையா வாழையடி வாழையாய் வர்ற வம்சப் பெருமையில்ல?"

"யாரு நீ? உன் பேரு என்ன?"

"அதையும் நீயே சொல்லு கேப்போம்."

"வீராச்சாமி பெத்த சுமித்திரைதானே.. அதுதான் இந்த சித்ராங்கித்தனம் பண்ணுற... சுமித்திரைன்னு பேரு வச்சா இப்படித்தான்..."

அம்மா சலிப்புடன் கூறுவது போல் பெருமையாய் கூறுவது சுமித்ராவிற்கு புரிந்தது. சிரிப்பும் வந்தது.

கனகவள்ளிக்கு மகள் மேல் கொள்ளைப் பிரியம். அதைப் போல் கணவன் மேல் காதலோ காதல். இரண்டையும் அவள் வெளிப்படுத்தும் விதமே தனியாயிருக்கும்.



ஒற்றை மகளென்று செல்லம் கொடுக்கக் கூடாதாம். அதனால் கடிந்து கொள்வது போல் அன்பைப் பொழிந்து மகளை சிலாகிப்பாள்.

மகன்கள் வெள்ளைச்சாமிக்கும், ராமசாமிக்கும் திருமணம் முடிந்து வீட்டுக்கு மருமகள்கள் வந்து பேரன், பேத்தி எடுத்து விட்டாளாம். அதனால் கணவன் மேலேயிருக்கும் காதலை வெளிக்காட்டிக் கொள்ளக் கூடாதாம்.

அதனால் மூச்சுக்கு முந்நூறு தடவை 'அந்த மனுசன் வரட்டும்' என்று அவர் மேலிருக்கும் அவளது நினைவை வெளிப்படுத்திக் கொள்வாள்.

கிராமங்களில் எல்லாம் இப்படித்தான். கணவன், மனைவி அந்நியோன்யத்தை வெளிப்படையாய் காண்பித்துக் கொள்வது கடினம். ஆனால் அவர்கள் பல் விழுந்து நரை விழுந்து கிழப்பருவம் எய்தி நூறு வயது ஆன போதும் ஒருவருக்கொருவர் காண்பித்துக் கொள்ளும் அன்பும் அக்கறையும் அலாதியாய் இருக்கும்.

கண்களின் மேல் கையை வைத்துக் கொண்டு கால்களை நீட்டி வெற்றிலை பாக்கை சின்னக் கைக்கு அடக்கமான கல்லுரலில் இடித்துக் கொண்டு "யாரு அது விருமாண்டியா.. என் வூட்டு ஆளைப் பார்த்தியா..." என்று கிழவி வினவும்.

வேட்டியை தார் பாய்ச்சிக் கட்டிக் கொண்டு அந்த வயதிலும் ஒரு மாட்டைக் கையில் பிடித்துக் கொண்டு 'தத்தக்கா, புத்தக்கா' என்று நடந்து வரும் கிழவரிடம்,

"என் அப்பு.. எதுக்கு இந்த அவசரம்? கொஞ்சம் மெல்லமாத்தான் போறது. வீட்டில் போய் எதுவும் வெட்டிச் சாய்க்கப் போறீரோ" என்று கேட்டால்,



"அடப்போடா போக்கத்தவனே.. என் வூட்டுப் பொம்பளை என்னைத் தேடிக்கிட்டு வாரவன், போறவனையெல்லாம் விசாரிச்சுக்கிட்டு இருக்கும். காலாகாலத்தில் அது கண்ணுக்கு முன்னாடி போய் நின்னுட்டா கழுத பேசாமல் நொடக்கும்ல.." என்று கூறுவார்.

வயதானாலும் குறையாத அக்மார்க் முத்திரைக் காதல் இவர்களுடையது. கனகவள்ளி இந்த வழியில் வந்தவள் தான்.

"சுமித்திராங்கிற பேரை சுமித்திரைன்னு சொல்றதில் ஒன்னும் குறைச்சல் இல்ல. என் பேருக்கென்ன குறையாம். அதையும் சொல்லிப்புடு. இல்லைன்னா எனக்கு ராத் தூக்கமே வராது..." சிணுங்கினாள் சுமித்ரா.

"ஏன் உனக்குத் தெரியாதாக்கும்? அதான் பிறந்ததில் இருந்து உன் அப்பன பீத்திக்கிறாரே... அது உன் காதில் விழுகலியாக்கும்."

"உனக்கு வாய்க்கு வாய் என் அப்பனை வம்புக்கு இழுத்துப் பேசனும். அதுக்கு என் மேல் எதுக்கு பழி போடறே? எனக்கு ஒன்னும் தெரியாது. நீயே சொல்லு."

அப்போது வாசல் பக்கமிருந்து குரல் கேட்டது.

"என்னத்தைம்மா உங்க ஆத்தாவைச் சொல்லச் சொல்லுற? அவளுக்கு என்ன தெரியும்? ஒரு மண்ணும் தெரியாது."

தகப்பனின் குரல் கேட்டதும் தாயின் முகம் மலர்வதை ரசித்தாள் சுமித்ரா. வாழ்ந்தால் இவர்களைப் போல் வாழ வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது.

"ஆமாம். எனக்கு ஒரு மண்ணும் தெரியாது. உங்க அப்பனுக்குத்தான் அம்புட்டு ராமாயணமும் தெரியும்.

நீ அவர்கிட்டயே கேளு...'' கழுத்தை வெட்டிக் கொண்ட மனைவியை காதலாய் பார்த்தபடி உள்ளே வந்த வீராச்சாமி,

''மெல்லடி.. கழுத்து சுளுக்கிக்கப் போகுது. பார்த்து... என் கழுத்தை இந்த வெட்டு வெட்டுறவ..? போடி போய் ஒரு வாய் காபித் தண்ணியக் கொண்டு வா..'' என்றபடி அங்கிருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து கொண்டு மகளைப் பார்த்து வாத்சல்யத்துடன் புன்னகைத்தார்.

கழுத்தை நொடித்துக் கொண்ட கனகவள்ளி காபி போட உள்ளே போனாள்.

# 8



கிராமத்துப் பெரிய மனிதர்களின் வீடுகள் நான்கு புறமும் அறைகளோடு நடுவில் தொட்டி முற்றம் எனப்படும் வெட்டவெளி முற்றத்தோடு அமைந்திருக்கும். தொட்டி முற்றத்தின் முன்புறம் வாயில்புறம். பின்புறம் சமையலறைப் பகுதிக்கும் வீட்டின் பின் பக்கமும் போகும். இரண்டு பக்கமும் தூண்களுடன் நீண்ட வராண்டாக்கள் இருக்கும். தொட்டி முற்றத்தின் நான்கு பக்கம் சரிவாய் இறங்கும் தகரக் கூறைகள்.

பொதுவாகவே கிராமத்தில் பெண்கள் வெளியே அதிகமாய் போக மாட்டார்கள். பெரிய



காற்றோட்டமும் இயற்கையாய் கிடைக்கட்டும் என்று பெரிய மனது பண்ணி ஆண்கள் இந்த முறையில் வீடு கட்டினார்கள் போல என்று சுமித்ராவுக்கு அடிக்கடி தோன்றும். இல்லாவிட்டால் கொட்டும் மழையை வீட்டுக்குள்ளேயே நின்று ரசிப்பது எப்படி? மழை தண்ணீரும், மற்ற கை, கால், முகம் கழுவும் தண்ணீரும் கண்ணுக்குத் தெரியாமல் உடனே ஓடி மறையும் வகையில் தண்ணீர் கடத்தும் குழாய்கள் தரையோடு பதிக்கப்பட்டுக் கட்டப்பட்டவைகள் இந்த வீடுகள்.

வீட்டுக்கு முன்புறம் இரு பக்கமும் பெரிய திண்ணைகள். சாதாரணமாய் பேசக்கூடியவர்களை திண்ணையிலேயே அமர வைத்து பேசி அனுப்பி விடுவார்கள். அதற்கு அடுத்து 'நடை வராண்டா' எனப்படும் நீண்ட வராண்டா. கொஞ்சம் முக்கியமானவர்களை அங்கே சந்தித்துப் பேசுவார்கள்.

உறவினர்கள் வந்து அமரும் இடம்தான் அந்த தொட்டி முற்றத்தை ஒட்டிய வராண்டாக்கள். அங்கு போடப்பட்டிருக்கும் நாற்காலிகளில் அமரும் உரிமை மிக நெருங்கியவர்களுக்கும் உறவினர்களுக்கும் மட்டுமே உண்டு.

இவ்வாறு வடிகட்டி வீட்டுக்குள் அயலாரை அனுமதிக்கும் கிராமத்தில் பிறந்து வளர்ந்த சுமித்ரா தந்தையிடம் செல்லம் கொஞ்சினாள்.

''பாருங்கப்பா... இந்த அம்மாவை...''

''ஆமாம்... அவரு பார்க்காமத்தான் என் கழுத்தில தாலியைக் கட்டினாரு... நீ வந்து எடுத்துச் சொல்லு...'' காபியை ஆற்றியபடி வந்தார் கனகவள்ளி.



''என்னத்தைடி சரியா பார்த்தேன். பொண்ணைச் சரியாக் கண்ணில் காட்டாம என் தலையில் கட்டி விட்டானுங்க உன் அண்ணன் தம்பிக... கல்யாணம் ஆன பின்னால புதுசா பார்த்து என்னத்தை ஆகப் போகுது.. கழுதையை விட்டுத் தள்ளுன்னு குடும்பம் நடத்திக்கிட்டு இருக்கேன்... இதில இவ மூஞ்சியைப் பார்த்துத்தான் கல்யாணம் கட்டிக்கிட்டேனாம். பீத்திக்கிறா பீத்தி..'' மனைவியிடம் விகடம் பேசியவாறு காபியை வாங்கிக் குடித்தார் வீராச்சாமி. அவர் கண்கள் மனைவியிடம் கேலி பேசி வம்புக்கு இழுத்தது.

கணவனை செல்லக் கோபத்துடன் முறைத்த கனகவள்ளி மகளிடம் ''கேளுடி இந்தக் கதய. பத்து வண்டி கட்டிக்கிட்டு சட்டமாய் வந்து பொண்ணுப் பார்க்கிறேன்னு கருப்பட்டிக் காபியையும், காராச் சேவையும் காலி பண்ணின ஆம்பளை சிங்கம் என்னைப் பார்க்கலியாம். குனிஞ்ச தலை நிமிராம சபையில் ஓரமா வந்து நின்னுட்டுப் போன நாங்க மட்டும் இவரு மூஞ்சியைப் பார்த்தோமாம். இவருக்காவது பொண்ணு எப்படின்னு தோராயமா ஒரு நினைப்பு இருந்திருக்கும். எங்களுக்கு அதுவும் இல்லை. நாங்களும் கழுத்தில விழுந்த தாலிக் கயிறுக்கு கட்டுப்பட்டு குடும்பம் நடத்தறவங்கதான்.. உங்க அப்பன்கிட்ட சொல்லு..'' என்றாள்.

''அப்பா என்ன ஆயிரம் மைல் தூரத்திலயா இருக்கார்? உன் முன்னாடிதானே உட்கார்ந்திருக்கார். நீயே சொல்லு..'' என்றாள் சுமித்ரா.

''அவ கிடக்கறாம்மா கிறுக்குப் பயபுள்ள.''

''பாருடி.. எது பேசினாலும் என்னத்தான் பேசணும். எங்க அப்பனை இழுக்கக் கூடாது. இவருக்கு பொண்ணு



கொடுத்தாரில்ல அவருக்கு கிறுக்குப் பட்டம் தேவை தான்.''

''அதைவிடச் சொல்லும்மா.. இந்நேரம் வரைக்கும் எங்கள பொண்ணு பார்த்தாரு. நாங்களும் கழுத்தை நீட்டினோம்னாளே... இவ ஒருத்திக்கு மட்டும்தானே தாலி கட்டினேன்... மத்த பொம்பளைக எங்கே போனாக...''

''அட.. இப்படி ஒரு நினைப்பு கூட உங்கப்பனுக்கு இருக்குதாக்கும். இவருக்கு நான் ஒருத்தி வந்து மாட்டினதே அதிகம். இதில ரவுண்டு கட்டி அடிக்க கிளம்பறாராக்கும்.''

மகளை மையமாய் வைத்துக் கொண்டு கணவன் மனைவி இருவரும் பகடி பேசிக் கொண்டு இருந்தபோது அவர்களது மூத்த மகன் வெள்ளைச்சாமியைத் திருமணம் செய்து கொண்டிருந்த மூத்த மருமகள் மல்லிகா தண்ணீர் குடத்தை இடுப்பில் சுமந்து கொண்டு வீட்டிற்குள் வந்தாள்.

மருமகளைக் கண்டதும் கணவன் மனைவி இருவரும் பேச்சை நிறுத்திக் கொண்டு விறைப்பாய் முகத்தை வைத்துக் கொண்டனர்.

''என்னம்மா வெள்ளைச்சாமி எங்கே போயிருக்கான்? வயலுப் பக்கம் காணோமே'' என்று விசாரித்தார் வீராச்சாமி.

மாமனார் கேட்கவும் மரியாதை நிமித்தம் நின்று தரையைப் பார்த்த மல்லிகா.

''சந்தைக்கு வண்டியைக் கூட்டிக்கிட்டு போனாக மாமா'' என்று பதில் கூறினாள்.

''ஓஹோ... சரி நீ போம்மா...''

மாமனார் கூறியதும் மல்லிகா சமையலறைக்கு விரைந்துவிட்டாள்.

"அது சரிம்மா சுமித்ரா. நான் வரும்போது ஒன் அம்மாகிட்ட எதையோ கேட்டுக்கிட்டு இருந்தயே... என்ன அது?"

சுமித்ரா தந்தையின் அருகே உட்கார்ந்து கொண்டாள். காலை ஆட்டிக் கொண்டே கூறினாள்.

"அதுவாப்பா... 'உனக்கு சுமித்திரைன்னு பேரு வச்சது சரியாத்தாண்டி இருக்கு. நீ பெரிய சீமை சித்ராங்கிடி'ன்னு அம்மா வாய்க்கு வாய் என்னைத் திட்டித் தள்ளுதுப்பா..."

மனைவியிடம் பேசச் சந்தர்ப்பம் கிடைத்த உற்சாகத்தில் வீராச்சாமி மீசையை முறுக்கிக் கொண்டே மனைவியைப் பார்த்தார்.

"ஏண்டி என் மகளை வையறே?"

"ஆமாம். நாங்க பெத்துக் கொடுக்காம மக வந்துட்டாளாக்கும்."

"திரும்பவும் நாங்கங்கிறா பாரு. மத்த பொம்பளைக எங்கேன்னு கேட்டா சண்டைக்கு வருவா. சரிம்மா சுமித்ரா. இப்ப உனக்கு என்ன தெரியணும்?"

"என் பெயரில் அப்படியென்னப்பா இருக்கு?"

"அப்படியே அப்பனுக்கு ஏத்த பொண்ணு. ஒண்ணுமே தெரியாதது போல் முகத்தை வச்சுக்கிட்டு செல்லம் கொஞ்சுறதைப் பாரேன்."

"உனக்கு எதுக்குடி ஆத்தா இம்புட்டுப் பொறாமை. நீயும் போய் ஒன் அப்பன்கிட்ட செல்லம் கொஞ்சு. யாரு வேணாம்கிறாங்க. இப்ப என்னம்மா சுமித்ரா. ஒன்



பேரைப் பத்தி ஒனக்குத் தெரியணும் அம்புட்டுத்தானே. அப்பாகிட்ட கேளு நான் சொல்றேன். உங்க அம்மாவுக்கு என்ன தெரியும். அவ ஒண்ணும் தெரியாத கூதரை."

"சும்மாவே அப்பன், மகள் ரெண்டு பேருக்கும் தலைகால் புரியாது. இதில் ரெண்டு பேரும் ஒன்னு சேர்ந்திட்டிங்களா... பூமியே தாங்காது. இந்த கனகவள்ளி எங்கே தாங்கப் போறேன்?"

"ஹாஹா..." என்று மீசையை முறுக்கிக் கொண்டு மனைவியின் பேச்சை ரசித்துச் சிரித்த வீராச்சாமி மகளிடம் பேச ஆரம்பித்தார்.

"அம்மாடி.. ராமாயணக் கதை தெரியுமில்ல?"

"அதான் பெரிய படிப்பு படிக்கிறாள்ல... தெரியாம இருக்குமா?"

"குறுக்கப் பேசாதடி. அதில தசரத மகாராஜாவுக்கு மூன்று பெண்டாட்டி.."

"அதில ஒங்க அப்பனுக்கு எவ்வளவு பொறாமை பாரேன்."

"எதுக்குடி பொறாமைப் படப் போறேன்? என் புள்ளைகளை காட்டுக்கு அனுப்புற இரண்டாம் தாரமில்லைன்னு சந்தோசம் தான் படுவேன். நீ கேளும்மா. தசரத மகாராஜாவோட மூன்று பெண்டாட்டிகளுக்கும் கௌசல்யா, சுமித்ரா, கைகேயின்னு பேரு."

"கௌசல்யாவுக்கு பிறந்தது ராமன், சுமத்திரைக்கு பிறந்தது லட்சுமணன், சத்ருக்கனன்... கைகேயிக்கு பிறந்தது பரதன்.. இல்லையாப்பா."

"என் பொண்ணுக்குத் தெரியாத ராமாயணமா... கண்ணு.."



"எனக்கொரு சந்தேகம்பா."

"என்னம்மா..."

"ராமனோட அம்மா கௌசல்யாதானே உயர்த்தி.. அவங்க பெயரை விட்டுவிட்டு சுமித்ரான்னு ஏன் பெயர் வைத்தீங்க."

"இதில உசத்தி, தாழ்த்தின்னு ஒன்னும் இல்லைம்மா. கைகேயி மட்டும் தாழ்த்தியா? அது சூது வாதில்லாத பொம்பளையாத்தான் இருந்துச்சு. ராமனை தன் மகனாத்தான் நினைச்சுருக்கு.. சொல்வார் பேச்சைக் கேட்டு நடந்தா மனுசப்பய பேரு எப்படிக் கேட்டுப் போகும் கிறதுக்கு இந்தம்மா கதை தான் உதாரணம் தாயி. மத்தபடி ஆத்தா பண்ணின தப்பை அண்ணன்காரன் செருப்பை தலையில் சுமந்து வந்து அரியாசனத்தில் வச்சு அதில உட்காராமலே பதினாலு வருசம் அந்தச் செருப்புக்கு பிரதிநிதிதான் நான்னு சொல்லி நாடாளாமலே நாடாண்டானே பரதன். அவன் துடைச்சுட்டான் தாயி. ஆத்தா பண்ணின தப்பை அவ பெத்த புள்ள நேர் பண்ணிட்டான். இன்னைக்கும் அண்ணன் தம்பிமார் ஒத்துமைக்கு ராமாயணமும், மகாபாரதமும்தானே வழிகாட்டுது."

"உங்க அப்பனை பேசவிட்டா போதுமே.. விடிய விடிய ராமாயணக் கதயச் சொல்லுவாரே... சொல்ல வேண்டியதைச் சொல்லச் சொல்லு. மத்த வேலை வெட்டிய பார்க்கனும்ல்ல..."

"ஆமாம்பா. எதுக்கு எனக்கு சுமித்ரான்னு பேரு வைச்சீங்க?"

வீராச்சாமி மீசையைத் தடவியபடி ராமாயணத்தைச் சொல்லி 'சுமித்திரா' என்ற பெயரை மகளுக்கு ஏன் வைத்தார் என்றும் சொல்ல ஆரம்பித்தார்.



# 9



"கௌசல்யா பட்டத்து ராணி. ராமனைப் பெற்ற தாய். மூத்த மகாராணி. மகா பொறுமைசாலி. கடைசி ராணி கைகேயி அழகான பொம்பளை. இரண்டாவது ராணி சுமித்திரை இருக்கே. இந்த மூன்று ராணியில் புத்திசாலி இந்தம்மாதான். ராமனின் நிழலாய் இருந்த லட்சுமணனைப் பெற்ற புண்ணியவதி. இந்தம்மா பெற்ற இரண்டு மகனும் மற்ற ரெண்டு பேருக்கு நிழலாய் பிரிஞ்சாங்க. ராமன், லட்சுமணன் எப்படி இணை பிரியாமல் இருந்தாங்களோ.. அப்படி பரதன் சத்ருக்கனனும் இணை பிரியாமல் இருந்தாங்க. ராமனுக்கு குறையாத புகழுடனும் வீரத்தோடும் லட்சுமணன் இருந்த மாதிரி பரதனுக்கு குறையாத தியாகத்தோடயும் அண்ணன்மார்களின் மேல் பக்தியோடும் சத்ருக்கனன் இருந்தாரு. 'ஒரு பாட்டுடையான்'னு இவருக்கு பேரு.."

"ஒரு பாட்டுடையானா?"

"ஆமாம்மா.. கம்ப ராமாயணத்தில் மத்தவங்களுக்கு எல்லாம் நிறைய பாட்டு இருக்கும். சத்ருக்கனனைப் பத்தி ஒரே பாட்டில் தான் வரும். அதனால இவருக்கு ஒரு பாட்டுடையான்னு பேரு."

"அதில என்னப்பா வரும்?"

"ராமன் காட்டுக்குப் போயிருவாரும்மா. லட்சுமணனும், பின்னாடியே போயிருவார். பரதன் சத்ருக்கனனைக்

கூப்பிட்டு நானெப்படிப்பா ராஜ்யத்தை ஆள முடியும். நீ ராஜாவா இரும்பார். அதுக்கு மனசு குமுறி சத்ருக்கனன் மாட்டேன்னு சொல்லி புலம்புறதுதான் அந்த ஒரு பாட்டு.''

''இராமாயணத்தில் எவ்வளவு இருக்குப்பா...''

''ஆமாம்மா... மத்தவங்க உணர்ச்சிப் பிழம்பா இருக் கிற எல்லாச் சமயத்திலும் நிதானமா புத்தி கூர்மையா இருக்கிற ஒரே ஆள் சுமித்திரைதான். நீயும் அந்தம்மாவைப் போல எந்தச் சமயத்திலயும் நிலை குலையாம நிதானமா புத்தியா இருக்கனும். அந்த ஆசையிலதான் ஒனக்கு அந்தப் பேரை வைச்சேன்.''

மகளின் தலையைப் பாசத்துடன் தடவிக் கூறிய அந்த கிராமத்துத் தந்தை அறிவாரா? வாழ்க்கையில் நிறைய சோதனைகளை சந்திக்க வேண்டிய நிர்பந்தம் மகளுக்குக் கூடிய சீக்கிரமே வரப் போகிறது என்பதை.

கனகவள்ளியின் இரண்டாவது மருமகள் செல்வி வந்து நின்றாள்.

''என்ன செல்வி..?'' என்று கனகவள்ளி கேட்டாள்.

''எங்க பெரியப்பன் மகன் இன்னைக்கு வீட்டுக்கு என்னைப் பார்க்க வருது அத்தை. விருந்து ஆக்கனும்.''

''யாரு..? போலீஸ் இன்ஸ்பெக்டரா இருக்கே அந்தப் புள்ளயா? இது என்ன புள்ள இப்ப வந்து சொல்ற. காலை யில கோழிகளத் திறந்து விடறப்பவே சொல்லியிருந்தா ரெண்டு வெடக் கோழிகள பிடிச்சு வச்சுருப்பனில்ல...'' கனகவள்ளி குறைபட்டுக் கொண்டாள்.

''அதெல்லாம் வெடக்கோழிக ரெண்டைப் பிடிச்சு வச்சிட்டேன் அத்தை. தகவல் சொல்லலாமுன்னுதான் வந்தேன்.'' அவள் உள்ளே போனாள்.



''அதுதான் எல்லாத்தையும் அவளே செஞ்சிட்டாள்ல. அப்புறம் எதுக்கு உனக்கென்ன கணக்குன்னு எங்கிட்ட யும் சொல்ல வர்றா?'' முகவாயைத் தோள் பட்டையில் இடித்தபடி கணவரைப் பார்த்தாள்.

''சரிதான் விடுடி. அதுக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான்.''

''தெரியாதது வேற ஒங்க சின்ன மருமகளுக்கு இருக்கா?''

''இதையெல்லாம் கண்டும் காணாம போயிறனும்டி கனகம். மூணு பிள்ளை பெத்து பேரு வச்சு வளத்தேன்னு தான் சொல்லிக்கிற. இதக்கூட நான் சொல்லித்தான் நீ தெரிஞ்சுக்கனுமா?''

''அப்பா பார்த்தியாம்மா கரெக்டா பெற்று பெயர் வைத்துன்னு சொல்றார். நீதான் பெற்று வளர்த்து பெயர் வைத்தேன்னு மாற்றிச் சொல்கிற?''

''ஆமாடி.. இப்ப இதுதான் பிரச்னை. இவ வேற ஊடே வர்றா பாரு.''

மீண்டும் நிழலாட நிமிர்ந்து பார்த்தாள் கனகவள்ளி. மூத்த மருமகள் மல்லிகா நின்று கொண்டிருந்தாள்.

''நீ என்னம்மா சொல்லப் போற?''

''என் சித்தப்பன் மகன் என்னைப் பார்த்துட்டுப் போக இன்னைக்கு வருது அத்தை.''

''யாரு.. என்ஜினியரா இருக்கே அந்தப் புள்ளயா? வரட் டும்... அதுதான் செல்வியோட பெரியப்பன் மகன் வர்ற துக்கு வீட்டுல கோழிக் குழம்பு வைக்கப் போறோம்ல்ல...''

''அவளோட பெரியப்பன் மகனுக்கு வைக்கிற கோழிக் குழம்பு ஒன்னும் என் சித்தப்பன் மகனுக்கு வேண்டிய



தில்லை. என் மச்சான் சந்தைக்கு வண்டி கட்டிக்கிட்டு போயிருக்கார்.''

''யாரைம்மா சொல்றே. என் பெரிய மகனையா?''

''வேறு யாரை என் மச்சான்னு சொல்லுவேன்.''

''வேறு யாரை என் மச்சான்னு சொல்லுவேன்.'' என்று மனைவியை

வீராச்சாமி 'இது தேவையா?' என்று மனைவியை விழிகளால் கேட்டார்.

''அது சரி.. உன் மச்சான்தான் என் மகன்னு ஞாபகம் இருக்கே அந்த மட்டிலும் பிழைச்சேன்...''

மனைவி காரணத்தோடுதான் கேள்வி கேட்டிருக் கிறாள் என்பது புரிய சுமித்ராவைப் பார்த்து 'பார்த்தாயா?' என்று ஜாடை காட்டி பெருமையாய் மீசையைத் தடவிக் கொண்டார் வீராச்சாமி.

''சரிம்மா... மல்லிகா வெள்ளைச்சாமி என்ன விஷய மாய் சந்தைக்குப் போயிருக்கிறான்னு சொன்னே?''

''இன்னும் சொல்லலை மாமா.''

''இப்பச் சொல்லும்மா.''

''விறால் மீன் வாங்கிட்டு வரச் சொல்லி நான்தான் அனுப்பினேன்.''

''நான்கூட பருத்தி கிருத்தியை போட்டுட்டு சாமான் சட்டு வாங்கிட்டு வரப் போனானோன்னு நினைச்சிட்டேன்.''

''இதுவும் சாமான்தான் மாமா.''

''எதும்மா.. விறால்மீனா? ஹாஹா...''

மல்லிகா உள்ளே போய் விட்டாள். சற்று நேரத்தில் வெள்ளைச்சாமி இரண்டு கையிலும் இரண்டு மீனைப் பிடித்துக் கொண்டு உள்ளே வந்தான்.



''என்னடா வெள்ளைச்சாமி.. எங்கே போயிட்டு வார வன்?''

''அதுவாப்பா?''

அவன் பதில் சொல்ல திணறிக் கொண்டிருந்தபோது உள்ளேயிருந்து வந்த மல்லிகா அவன் கையிலிருந்த மீனைப் பிடுங்கிக் கொண்டே,

''நான்தான் சொன்னேனே மாமா...'' என்றாள்.

''நீ சொன்னம்மா.. உன் புருசன் சொல்லலையே..''

''இந்தா இருக்கிற சந்தைக்கு போயிட்டு வர்றதுக்கு இம்புட்டுக்கேள்வியா'' முணுமுணுத்துக் கொண்டே மல்லிகா உள்ளே போய் விட்டாள்.

வெள்ளைச்சாமி கையிலிருந்த சாட்டைக் கம்பை முற்றத்தில் சாய்வாக இருந்த தகரக் கூரையின் அடியில் செருகி வைத்தான். முற்றத்திலிருந்த மேடான திண்ணை யில் அமர்ந்து கொண்டு தகப்பனின் முகம் பார்த்தான்.

''என்னப்பு என்ன சமாச்சாரம்? எதையோ சொல்ல நினைக்கிறது போல இருக்கு. வாயைத் திறந்து சொல்லு'' வீராச்சாமி வினவினார்.

''இல்லப்பா... மல்லிகா என்ன சொல்றான்னா... அவளோட சித்தப்பன் மகனுக்கு நம்ம சுமித்ராவை பிடிச்சிருக்காம். பெண் கேட்டு வரலாமான்னு அவளோட சித்தப்பன் கேட்டு விட்டாராம். அதுதான் உங்க காதில் போட்டு வைக்கிறேன்...'' வெள்ளைச்சாமி மென்று விழுங் கினான்.

''இதை எங்காதில் போட்டு வைக்கிற.. சரி.. ஆனா பொண்ணு கட்டுற நோக்கத்தில் இருக்கிறவன் இன்னைக்கு வீட்டில் விருந்து சாப்பிட வர்றானே. அதை ஏன் என்

காதில் முன்னக்கூடியே போட்டு வைக்கலே?'' வீராச்
சாமியின் குரலில் கண்டிப்பு இருந்தது.

''அது அவன் சும்மா அவனோட தங்கச்சியைப் பார்த்
துட்டுப் போகலாமுன்னு வர்றான்ப்பா.''

''இதைக் காதில் பூச்சொருகியிருக்கவன் எவன்
கிட்டயாவது போய் சொல்லு. வெள்ளைச்சாமி. நீ விவர
மானவன்னு தெரியும். இவ்வளவு விவரமானவன்னு
இப்பத்தான் தெரியுது... ஏண்டா இந்த வீட்டில் வாரவ
னோட தங்கச்சி மட்டுமா இருக்கா? ஒன் தங்கச்சியும்
இருக்காள்ல? கல்யாண வயசில் பொண்ணு இருக்கிற
வீட்டுக்குக் கண்டவனும் வரலாமா?''

''அவரு ஒன்னும் கண்டவனில்லை. என் சித்தப்பன்
மகன். என்னோட அண்ணன்காரன், வாக்கப்பட்டு வந்
திட்ட தங்கச்சியைப் பார்க்க வர்றாரு.''

மல்லிகா சமையலறையை விட்டு வெளியே வந்து
கூறினாள். அவள் தோற்றம் அவள் சண்டைக்கு தயாராக
இருப்பதைத் தெரிவித்தது. அப்போது சுமித்ராவின்
இரண்டாவது அண்ணன் ராமசாமி உள்ளே வந்தான்.
அவன் கையில் உரித்த கோழி இருந்தது.

''ம்கும்.. என்னடா மகனே. காடு கரையில் வெள்
ளாமைப் பார்க்கப் போக வேண்டிய பய வீட்டில உட்
கார்ந்து கோழியை உரிச்சுக்கிட்டு இருக்க? இப்படி
இருந்தா வெள்ளாமை விளங்கிப் போகும்.''

''அப்பா... செல்வியோட பெரியப்பா மகன் வருகிறானாம்.''

''அதுக்கு.. அண்ணன்காரன் மீனைப் பிடிச்சுக்கிட்டு
வர்றான். தம்பிகாரன் கோழியை உரிச்சுக்கிட்டு அலை
றான். வீராச்சாமி பெத்த மகன்கள் வெள்ளாமைப் பார்



கிற லட்சணத்தைப் பார்த்து ஊரு சிரிச்சிடப் போகுது.
இதையெல்லாம் வீட்டில் இருக்கிற பொம்பளைக
பார்த்துக்குவாங்க. நீ நடையைக் கட்டு.''

மல்லிகா கணவனுக்கு ஜாடை காட்டிவிட்டு உள்ளே
செல்ல வெள்ளைச்சாமி பின் தொடரப் போனான்.

''நீ எங்கேடா போற? இவனுக்கு சொன்னதுதானே
உனக்கும்?''

''காபித் தண்ணியக் குடிச்சுட்டு வந்திர்ரேன்ப்பா.''

வெள்ளைச்சாமி உள்ளே மறைய ராமசாமி தகப்
பனைப் பார்த்து தொண்டையைக் கனைத்தான்.

அவன் எதையோ சொல்ல முஸ்தீபு செய்வது புரிய
வீராச்சாமி துண்டை எடுத்து அதில் முகம் துடைத்த
வாறு மனைவியைப் பார்த்தார். அவள் 'என்னவாக
இருக்கும்?' என்று ஜாடையில் கேட்டாள்.

'பொறு' என்று பதில் ஜாடை செய்து விட்டு மகனைப்
பார்த்தார் வீராச்சாமி.

## 10



''அப்பா நம்ம செல்வியோட பெரியப்பன் மகனுக்கு
நம்ம சுமித்ராவை பொண்ணு கேட்க வரப் போகிறதா
அவளோட பெரியப்பன் சொன்னாராம்.''

வீராச்சாமியின் முகம் கடுமையானது. துண்டை உத
றித் தோளில் போட்டுக் கொண்டு எழுந்தார். மகனைப்
பார்த்து முறைத்தார்.



''எழுந்திருடா.. அட எழுந்திருன்னு சொல்றேனில்ல.''

ராமசாமி தடாபுடாவென்று எழுந்து நின்று கட்டி
யிருந்த வேட்டியை சரியாகக் கட்டிக் கொண்டான்.

''என் பொண்ணு என்ன ஆயி அப்பனில்லாம அநா
தையா நிக்கிறாளா? மதினிகாரிக ரெண்டு பேரும்
அவளுக சித்தப்பன் வீட்டிலயும், பெரியப்பன் வீட்டில
யும் தாட்டிவிட? சிங்கம் போல் நான் உசிரோடு இருக்
கேன். என் பொஞ்சாதி இருக்கா... நீங்க இரண்டு பேரும்
யாருடா அவளுக்கு மாப்பிள்ளை பார்க்க? வயசுப்
பொண்ணு இருக்கிற வீட்டில் வெடக்கோழி அடிச்சு
வறுத்து வைச்சு விருந்துக்கு கூப்பிடுற பழக்கம் வீராச்
சாமி வம்சத்தில இல்லடா. உனக்கு எங்கேயிருந்து
வந்துச்சு இந்தப் பழக்கம்? என் பொண்ண எப்ப யாருக்கு
கட்டிக் கொடுக்கணும்னு எனக்குத் தெரியும். நீங்க
ரெண்டு பேரும் அவங்கவங்க சோலிக் கழுதய பார்த்துக்
கிட்டுப் போங்கடா. வயலில நடவு நடக்கிறத பார்க்க
ஒரு நாதியில்ல இந்த வீட்டில, ஒத்துமையா இருக்கிற
வீட்டில் ரெண்டு விருந்துச் சோறு ரெடியாகுது... என்ன
கூத்துப் பண்ண அலையறீங்க ரெண்டு பேரும்.''

வீராச்சாமி மகன்களை ஒரு பிடி பிடித்தார். உள்ளே
மல்லிகாவின் ஆலோசனையைக் கேட்டுக் கொண்
டிருந்த வெள்ளைச்சாமி வெளியே வந்தால் தந்தை
கொத்துப் புரோட்டா போட்டு விடுவார் எனப் பயந்து
உள்ளேயே பதுங்கினான். அந்த நேரம் பார்த்து வாசலில்
புல்லட் சத்தம் கேட்டது.

வீராச்சாமி சிவந்திருந்த விழிகளைத் திருப்பிப் பார்த்
தார். ஒட்ட வெட்டப்பட்ட தலையுடன் வாட்டசாட்ட
மான ஆண் ஒருவன் உள்ளே வந்து கொண்டிருந்தான்.



''வா பரந்தாமா... செல்வி யாரு வந்திருக்கான்னு
பாரு.'' புல்லட் சத்தம் கேட்டு மனைவி உந்தித் தள்ள
வெளியே வந்த ராமசாமி வந்தவனை வரவேற்றான்.

''வாண்ணே.. பெரியப்பனும், பெரியம்மாவும் நல்லா
யிருக்காங்களா. உள்ளே வா, ஈரக் கைகளை முந்தானை
யில் துடைத்துக் கொண்டே வந்த செல்வி வரவேற்றாள்.

உள்ளே வந்த அந்த பரந்தாமனை ஏற இறங்கப்
பார்த்தார் வீராச்சாமி. வெள்ளை நிற முழுக்கை சட்டை
கருப்பு பேண்டில் இன் பண்ணியிருந்தான். கூலிங்
கிளாஸ் போட்டிருந்தான். உடலில் சென்ட் மணம்
கமழ்ந்தது.

''மாமா... இதுதான் எங்க அண்ணன். செக்கானூரணி
ஸ்டேஷனில் எஸ்.ஐ.ஆ இருக்கு'' செல்வி அறிமுகப்
படுத்தினாள்.

''வாங்க தம்பி. நல்லாயிருக்கீங்களா'' என்று வீராச்சாமி
கேட்க,

''வீட்டில் அப்பன், ஆத்தா சுகமா?'' என்று கனக
வள்ளி நலம் விசாரித்தாள்.

''எல்லோரும் சௌக்கியம் தான் அத்தை..'' என்று
அவளுக்குப் பதில் சொல்லியபடி சுமித்ராவை பார்வை
யிட்டான் பரந்தாமன்.

சுமித்ராவின் முகம் வெட்கத்தில் சிவந்தது. வீராச்சாமி
யின் முகம் கோபத்தில் சிவந்தது. சின்ன மகனை
முறைத்தபடி,

''நீ உள்ளே போம்மா...'' என்றார் மகளிடம்.

சுமித்ரா நீண்ட பின்னலாட உள்ளே ஓடி மறைந்தாள்.
அவள் பின்னோடு பரந்தாமனின் விழிகளும் தொடர்ந்தன.

என்ன அழகு! அவன் பிரமித்தான். செல்வி சொன்னது உண்மைதான். பொய்யில்லை.

''இந்தா பாரு அண்ணே. சும்மா ஊர் ஊரா பொண்ணைப் போய் பார்த்துட்டு இதுக்கு மூக்கு சரியில்லை.. இதுக்கு முகரை சரியில்லைன்னு நொட்டை சொல்லிக்கிட்டு அலையாத. என் நாத்தனார் காலேஜு வரைக்கும் போய் உன்னளவு படிச்சிருக்கா. ஆளு ரதியாட்டம் செக்கச் செவேல்னு மூக்கும் முழியுமா இருப்பா. முடியை அவிழ்த்து விட்டா காலைத் தொடும். என் அத்தைகாரி அவ சிறுவாட்டுக் காசில இருநூறு பவுன் நகை செஞ்சு வச்சிருக்கான்னு ஊருக்குள்ள பேசிக்கிறாங்க. மகராசி ஒரு நாள் ஒரு பொழுது கூட அதை எங்கண்ணில காட்டினது இல்லை. என் மாமன்காரன் பேங்கில எம்புட்டு பணம் ரொக்கமா போட்டு வச்சிருக்கார்னு தெரியலை. நீ கேட்க கேட்க கொடுத்துக்கிட்டே இருப்பாரு.. வா.. வந்து பாரு. புடிச்சிருந்தா பொண்ணு கேளு. கொடுக்காம எங்கே போகப் போறாங்க. உனக்கென்ன? ஆளு கன்னங்கரேல்னு இருந்தாலும் கவர்ன்மெண்ட் உத்தியோகம் பார்க்கிற. உனக்கு பொண்ணு கொடுக்க அதுகளுக்கு கசக்குதா?''

பிறந்த வீட்டுக்கு போயிருந்தபோது பெரியப்பன் வீட்டிற்கு சீராடப் போன செல்வி தன் நாத்தனாரைக் கவர்ந்து செல்ல பெரியப்பன் மகனை முடுக்கி விட்டு வந்திருந்தாள்.

வீராச்சாமி வேண்டா வெறுப்பாய் வந்தவனை அளவெடுத்தார். சிகரெட் அளவுக்கு அதிகமாகப் பிடித்ததால் நிக்கோடின் கறை படிந்த உதடுகள்... கண்கள் சிவந்திருந்தன. மதுபான பழக்கம் உண்டு போலும். தாய், தகப்பனின் முன்னாலேயே பருவப் பெண்ணை பருகி விடுவது போல் பார்க்கும் வழக்கம் அவனது குணத்தை உணர்த்தியது.

''உட்காருங்க...'' வீராச்சாமி வராண்டாவில் கிடந்த நாற்காலியைக் காட்டினார்.

அவன் உட்கார்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டான். கனகவள்ளியின் முகம் சுருங்கியது.

'என்ன தைரியம் இவனுக்கு. தெனாவட்டாய் எம் புருசன் முன்னாலே கால் மேல் கால் போட்டுக்கிறான் பாரு இந்தக் கருவாயன்.. எல்லாம் என் வீட்டுக்கு வாழ வந்த சின்னச் சிறுக்கியைச் சொல்லனும்.'

மனதுக்குள் கருவியவள் உள்ளே போய் விடத் தீர்மானித்து திரும்பியபோது வாசலில் கார் சத்தம் கேட்டது.

மல்லிகா துள்ளிக் குதித்து வாசலுக்கு ஓடினாள். கார் கதவைத் திறந்து கொண்டு மாநிறத்தில் ஓர் வாலிபன் இறங்கினான்.

''அண்ணே... வந்துட்டியா... ஊரில சித்தப்பனும், சின்னம்மாவும் சௌக்கியமா? வெளியவே ஏண்ணே நின்னுக்கிட்டு இருக்க? நீயென்ன அந்நியமா.. அசலா? உடந்தைப் பட்டவன் போல உள்ள வாண்ணே'' முப்பத்திரண்டு பல்லையும் காட்டி மல்லிகா வரவேற்றாள்.

வந்தவன் பந்தாவாக உள்ளே வந்தான்.

''வாங்க மச்சான்... அப்பா... இதுதான் நம்ம மல்லிகாவோட சித்தப்பன் மகன் கார்வண்ணன். பெங்களூரில பெரிய என்ஜினியரா இருக்காப்புல...'' வெள்ளைச்சாமி விளக்கம் சொன்னான்.



''ஓஹோ...'' என்று இழுத்த வீராச்சாமி அவனை மேலும் கீழுமாய் பார்வையிட்டார்.

குட்டையாக மாநிறத்துடன் இருந்த கார்வண்ணனின் கண்கள் ஓர் இடத்தில் நிற்காமல் அலை பாய்ந்தன. வீராச்சாமியின் கண்களை நேருக்கு நேர் பார்ப்பதைத் தவிர்த்தான். முன்புறமாய் நெற்றியில் லேசாய் வழுக்கை விழுந்திருந்ததை மறைக்க முடியை இறக்கி வாரியிருந்தான்.

''ஆமாம்... உங்களுக்குத்தான பெங்களூரிலேயே கல்யாணம் முடிஞ்சிருச்சுன்னு சொன்னாங்க...'' வீராச்சாமி முகவாயைத் தடவிக் கொண்டே விசாரித்தார்.

எதிரே நின்றவனின் கண்களில் கணநேரம் ஒரு தடுமாற்றம் வந்து மறைந்தது. அவசரமாய் அவனுக்கு பதில் மல்லிகா பதில் சொன்னாள்.

''அண்ணன்கூட வேலை பார்க்கிற பொண்ணு அண்ணன் மேல ஆசைப்பட்டுச்சாம். அது கதை திரிச்சு விட்டிருக்கு மாமா...''

''கதை திரிச்சு விட்ட பொண்ணு தாய் தகப்பனோட நியாயம் கேட்டு உன் சித்தப்பன் வீட்டுக்கே வந்துச்சாமே.''

''எங்க அண்ணன் காரும், பவுசுமா நல்லா இருக்காருன்னு வயித்தெரிச்சலில் நாலு பேரு நாலு விதமா பேசுறதுதான் மாமா.''

''நாலு பேர் நாலு விதமாய் பேசினா... அதில் ஒரு விதமாவது உண்மையிருக்காம போகாதும்மா. அதை விடு... அதைப் பத்தி நமக்கென்ன.. உன்னைப் பார்க்க உன் சித்தப்பன் மகன் வருவாரு... போவாரு. அவர் எப்படிப்பட்ட ஆளாயிருந்தால் நமக்கென்ன.. போய் வேலையைப்பாரு.''



மல்லிகாவின் கண்கள் சுமித்ராவைத் தேடின.

'எங்கே போய் விட்டாள் இவள். சின்னவளோட பெரியப்பன் மகன் வந்தப்ப எதித்தாப்புல நின்னுக்கிட்டு இருந்தா. இப்ப உள்ள போயி பதுங்கிக்கிட்டா போல... இப்ப எப்படி அவள வெளிய வர வைக்கிறது. இந்த மாமன் வேற ஆயிரம் கேள்வி கேட்டு ஆளைக் கொல்லுறாரு.'

மல்லிகாவின் மனதில் யோசனை உதயமாகி விட்டது.

''உட்காருண்ணே. இந்த டி.வி.யை பார்த்துக்கிட்டு இரு. கொஞ்ச நேரத்தில் சாப்பாடு ஆக்கி விடுவேன். மீனைப் பொறிச்சதும் சாப்பிட்டுறலாம்'' என்றபடி டி.வி.யின் அருகே சென்று ரிமோட்டை கண் சிமிட்டும் நேரத்தில் முந்தானையில் மறைத்துக் கொண்டாள்.

''அடடா... இங்கே வச்சிருந்த ரிமோட்டு எங்கே... சுமித்ரா... சுமித்ரா...'' என்று அழைத்தாள்.

''என்ன மதினி...'' என்றபடி சுமித்ரா வெளியே வந்தாள். கார்மேகவண்ணனின் கண்கள் மின்னின. வேட்டை நாயின் ஆர்வம் அவன் முகத்தில் தெரிந்தது. பரந்தாமனோ பறந்து அவளைக் கொய்து போய் விடுபவன் மேல் பரபரப்புடன் இடத்தை விட்டு எழுந்து கொண்டான்.

வீராச்சாமியின் கூர்மையான கண்கள் நடப்பவற்றைக் கவனித்துக் கொண்டு இருந்தன.

அவர் முன்னாலேயே இவ்வளவு நாடகம் ஆடினால் பிறந்த வீட்டில் போய் என்னவெல்லாம் சொல்லி இந்த சித்தப்பன் மகனை இங்கே இழுத்து வந்திருப்பாள்

அவரது பெரிய மருமகள் என்று அவரது சிந்தனை ஓடியது. அவரது அனுமானம் சரிதான்.



# 11

மல்லிகா சித்தப்பனுடைய வீட்டிற்குப் போனபோது அங்கே பெரிய பஞ்சாயத்தே நடந்து கொண்டிருந்தது.

''ஏண்டா... உன்னை பெரிய என்ஜினியர்ன்னு நான் பீத்திக்கிட்டு உட்கார்ந்திருக்கேன். நீ எவகூடயோ குடும்பம் நடத்திக்கிட்டு இருந்திருக்க. நான் ஊரு பூரா வும் ஒனக்கு பொண்ணு தேடிக்கிட்டு இருந்திருக்கேன். என்னை என்ன கேணப்பயன்னு நினைச்சியா'' மல்லி காவின் சித்தப்பன் தாம் தூமென்று கத்திக் கொண்டிருந் தார்.

''இப்ப என்ன நடந்து போச்சுன்னு இந்தக் குதி குதிக்கிறீங்க? பார்த்தேன் பழகினேன். பெங்களூரில் தனி வீடு கிடைக்காததால் அவள் வீட்டில் பேயிங் கெஸ்டா இருந்தேன். இதெல்லாம் அங்கே சகஜம்'' கார்மேகவண் ணன் கதை பிணைந்து கொண்டிருந்தான்.

''ஏண்டா அவ இந்த ஊருக்கே ஒன்னத் தேடி வந் துட்டா. இனி உள்ளூரிலும் அக்கம் பக்கத்து ஊரிலும் எவன்டா ஒனக்குப் பொண்ணு கொடுப்பான்? உன் வகிசி எல்லாத்துக்கும் தெரிஞ்சு போச்சே...''

''கொடுக்காட்டிப் போறான். நான் இப்படியே இருந் துட்டுப் போறேன்.''



''உனக்கென்னடா நீ கண்டவ கூட கூத்தடிச்சுகிட்டு நீ பாட்டுக்கு இருப்ப. நான் இந்த ஊருல மானம் மரு வாதியோடு நடக்க வேணாம்?''

''உங்க மானம் மரியாதைக்கு எந்த பங்கமும் வராது சித்தப்பா. அண்ணனுக்கு பொண்ணுக்கு நானாச்சு'' என்றாள் மல்லிகா அங்கே கிடந்த உரலின் மேல் உட் கார்ந்தவாறு.

''என்ன மல்லிகா இப்படிச் சொல்ற? இவன் பொழப்பு தெரிஞ்ச பின்னால் யாரு பொண்ணு கொடுப்பாங்க?''

''நான் கொடுக்கிறேன்.''

''நீ கொடுக்கிறாயா? யாரை?''

''என் நாத்தனாரை...''

''யாரு.. வீராச்சாமி மகளையா சொல்ற? ஆத்தி... அவரு எப்படி நம்ம பயலுக்கு பொண்ணு கொடுப்பாரு. அந்தப் பொண்ணோட அழகுக்கும் படிப்புக்கும் இந்த கேடு கெட்ட பய கிட்டப் போய் நிற்க முடியுமா?''

''நான் கட்டி வைக்கிறேன் சித்தப்பு. நீங்க அண் ணனை வரச் சொல்லுங்க.''

''ஏன் மல்லிகா... உண்மையிலேயே உன் நாத்தனார் அழகாயிருப்பாளா?''

''பெங்களூர் தக்காளி மாதிரி இருப்பா அண்ணே... நீ வந்து பாரேன்.''

அவனும் வந்து பார்த்துவிட்டான். அவன் விட்ட ஜொள் ளில் வராண்டாவை கழுவி விடலாம் போல ஆகிவிட்டது.

வீராச்சாமி மகளை உள்ளே போகச் சொல்லி கண் ஜாடை காட்டினார். அவள் உள்ளே போய் விட்டாள்.



அப்போது மல்லிகாவின் முந்தானை மறைவிலிருந்து ரிமோட் கீழே நழுவி விழுக,

''அட இந்தா இருக்கு ரிமோட்டு'' என்று அப்போது தான் அதைப் பார்த்தவள் போல் மல்லிகா எடுத்துக் கொடுத்தாள்.

மகள் இருந்த அறைக்கு வெளியே கயிற்றுக் கட் டிலைத் தூக்கிப் போட்டுக் கொண்ட வீராச்சாமி அதில் அமர்ந்து மீசையை தடவிக் கொண்டார்.

அதன் பின்னால் இரண்டு அண்ணனின் மனைவி களும் மாற்றி மாற்றி நாத்தனாரை அழைக்க வந்து மாம னாரைக் கண்டதும் பின் வாங்கிச் சென்று விட்டார்கள்.

விருந்து முடிந்து பரந்தாமனும், கார்மேகவண்ணனும் எதிர்கட்சித் தலைவர்கள் போல் எதிரெதிரே அமர்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டு வெற்றிலை பாக்கு போட ஆரம்பித்தார்கள்.

அப்போது அவர்கள் மத்தியில் ஓர் பெரிய அரிவாள் வந்து விழுந்தது. இருவரும் பதறி எழுந்தனர். மல்லிகா வும், செல்வியும் அவரவர் வீட்டு சித்தப்பன் மகன் பக்க மும் பெரியப்பன் மகன் பக்கமும் வந்து நின்று கொண் டார்கள். ராமசாமியும், வெள்ளைச்சாமியும் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு,

''எவன்டா அது...'' என்று உருமினார்கள்.

''நான்தாண்டா...'' என்றபடி வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு எதிரே வந்து நின்றான், பரமன், வீராச்சாமியின் அக்காள் மகன், உள்ளூர் பெரிய மனிதன்.

அவனைக் கண்டதும் ராமசாமியும், வெள்ளைச்சாமி யும் வெலவெலத்துப் போனார்கள். ஆனால் வெளியே



காட்டிக் கொள்ளாமல் அவனை முறைப்பது போல் நின் றார்கள்.

''என்ன பரமா.. என்ன விஷயம்?'' வெள்ளைச்சாமி வினவினான்.

''இங்கே என்ன விஷயம் நடக்குது. வாசலில் புல்லட் டும், காரும் போட்டி போட்டுக்கிட்டு வந்து நிற்குது'' பரமன் எகத்தாளமாய் கேட்டான்.

''வீட்டுக்கு விருந்தாளிக வந்திருக்காங்க...'' ராமசாமி கூறினான்.

''எதுக்கு... அவனுக வீட்டில் சோறில்லையா?''

''ஏய்ய்...!'' சுட்டு விரலை நீட்டியவாறு பரந்தாமன் எழுந்திருக்க கார்மேகவண்ணன் யோசிக்காமல் பரமனின் சட்டை மேல் கை வைத்தான்.

ஒரே தட்டில் அவனை மூலைக்கு தள்ளி விட்ட பரமன் சட்டையை தூசு தட்டிக் கொண்டு பரந்தாமனிடம்,

''ஏய்.. அடங்குடா...'' என்று அலட்சியமாய் கூறினான்.

''நீ யாருடா இங்கே வந்து நாட்டாண்மை பண்ண?'' எதற்கும், இருக்கட்டுமென்று தள்ளி நின்று கொண்டு ராமசாமி வினவினான்.

''நான் யாரா? ஏன் உன் மச்சான்னு உனக்குத் தெரி யாதா? நான் கட்டிக்கப் போற என் தாய் மாமன் மகள்... என் முறைப் பொண்ணு இந்த வீட்டில் இருக்கு. கண்ட நாதாரியும் உறவு கொண்டாடிக்கிட்டு நடு வீட்டில் வந்து உட்கார்ந்து வாலாட்டறதை நான் சகிச்சுக்க மாட்டேன்'' பரமன் பரந்தாமனையும், கார்மேகவண்ணனையும் 'வெட்டவா கொல்லவா' என்று ஓர் பார்வை பார்த்தான்.

''என் தங்கச்சிக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை பா கணும்னு எங்களுக்குத் தெரியும் மச்சான். என் தங்கச் படிச்சவ'' என்றான் ராமசாமி.

''எது பி.வாசு டைரக்ட் பண்ணின படம்தானே. ரொம் பழைய படமாச்சே. நம்ம டெண்டு கொட்டகையி ஓடிக்கிட்டிருக்கே.'' பரமன் கையை அசட்டையா கட்டிக் கொண்டான்.

''கிண்டலா..? மச்சான் என் தங்கச்சியை கட்டிக்கி வன் பெரிய ஆபிசரா இருக்கணும். இல்ல என்ஜினியா இருக்கணும். ஒன்ன மாதிரி படிக்காத பொறம் போக்கா இருக்கக்கூடாது...'' வெள்ளைச்சாமி வார்த்தை விட்டான்.

''பொறம்போக்குன்னு சொன்ன.. பல்லை உடைச் கையில கொடுத்திருவேன். படவா.. யாருகிட்ட வம் வளர்க்கிற? யாருடா பொறம் போக்கு? உள்ளூரில் ரை மில், டெண்டு கொட்டகை, நூறு ஏக்கர் நிலம்னு கொடிகட்டிப் பறக்கிறவன்டா இந்த பரமன். இதோ மூ நேரமும் மூச்சு முட்ட குடிச்சிட்டு கூத்தியாள் வீட்டி குடித்தனம் பண்ற இந்த கபோதிப் பயலுகளை மாதி என்னை நினைச்சியா? இவனுகளை மாதிரி படிச்ச னுக்கு என் தாய் மாமன் மகளை விட்டுக் கொடுக்க இந் பரமன் சேலை கட்டி வளையல் போட்டுக்கலடா.. வரட்டும். என்னைவிட சொத்து சுகம் அதிகமிருக்கிறவ வரட்டும்.. சீமையில படிச்சவன் ஒருத்தன் வரட்டும். குணத்தில் தங்கமாய்.. ஒழுக்கத்தில் கோபுரமாய் ஒரு தன் வரட்டும். என் மாமன் மகளை கட்டிய சேலையோட அவ குணத்திற்காகவும், அறிவிற்காகவும், கட்டிக்க ஒருத்தன் வரட்டும். அவன்தான் இ...



மிஞ்சினவன்டா. அவனுக்கு நான் என் மாமன் மகளை விட்டுக் கொடுக்கிறேன். அப்படியில்லாம... உங்கள மாதிரி எலும்புத் துண்டைத் தேடும் நாய்க் கூட்டத்தில் எவனாவது ஒருத்தன் கட்டனுமின்னு நினைச்சீங்க... தலையைச் சீவிடுவேன் சீவி.. என்ன மாமா! என் ஆத்தா கூடப் பொறந்த ஒத்த உடன் பிறப்பே..! உன் மகன் களுக்கு சொன்னதுதான் உனக்கும்.. முடிஞ்சால் என்னை விட மிஞ்சின ஆளாய் என்னை ஜெயிக்கிறவனாய் பார்த்து உன் பொண்ணைக் கொடு... இல்லை.. மரி யாதையாய் என் கையில் பிடிச்சுக் கொடு. அதை விட் டுட்டு வாரவன். போறவனுக்கெல்லாம் இந்த மாதிரி விருந்து ஆக்கிப் போட்டுக்கிட்ட இருந்த... பார்த்துக்க... உன் அக்காள் மகன் பரமனைப் பத்தி உனக்குத் தெரியும். டேய் வெளியே போங்கடா.''

'எதற்கு வம்பு?' என்று பரந்தாமன் புல்லட்டில் பாய அவனுக்கு முந்தியே கார்மேகவண்ணனின் கார் பறந்து விட்டது.

வெள்ளைச்சாமியும், ராமசாமியும் அவரவர் மனைவி களின் அவசர அழைப்பிற்கு இணங்கி மந்திர ஆலோசனைக் குப் போய்விட அங்கு நடந்து கொண்டிருந்த களேபரம் எதையும் கவனிக்காதது போல் கோழி இறகால் காதைக் குடைந்து கொண்டு அமர்ந்திருந்த வீராச்சாமியிடம் கனகவள்ளி முறையிட்டாள்.

''வீட்டுக்குள்ள இம்புட்டு கூத்து நடக்குது. எதுக்கும் அசைஞ்சு கொடுக்காம பிடிச்சு வச்ச பிள்ளையார் மாதிரி இப்படி உட்கார்ந்திருந்தா என்ன அர்த்தம்? என் புருசன் பெரிய வீரபாண்டிய கட்டபொம்மன்னு பெருமை பீத்திக்கிட்டு இருந்தேன். இப்ப அக்கா மகன் ஆட்டம்



போட்டுட்டுப் போறான். நீங்க வேடிக்கை பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருக்கீங்க. உங்களுக்கே இது நல்லா இருக்கா?

அறைக்குள் அமர்ந்து எப்.எம்மில் பாட்டுக் கேட்டு கொண்டே நாவல் ஒன்றை படித்துக் கொண்டிருந்த சுமித்ராவிற்கும் அந்த எண்ணம் இருந்தது.

வீராச்சாமி கோபக்காரர். ஆயிரம் பேர் வந்தாலு எதிர்த்து நிற்கும் தைரியசாலி. அவர் வீட்டில் வந்து அவரது அக்காள் மகன் அவ்வளவு சத்தம் போட்டு விட்டுப் போகிறான். வீட்டிற்கு வந்த விருந்தாளிகள் பயந்து ஓடுகிறார்கள். அவர் அசையாமல் அமைதியா இருக்கிறார். ஏன்?

வீராச்சாமி வாய் திறந்தார்.

12



''கனகம்.. இப்ப என்ன நடந்திருச்சுன்னு இப்படி புலம்புறவ? பரமன் கேட்கிறதில் நாயம் இருக்குதா, இல்லையா? காலம் காலமாய் முறைப் பொண்ணு மேல் உரிமை கொண்டாடுறது நம்ம நாட்டு வழக்கம் தானேடி? அவன் புதுசா எதையாவது சொல்றானா? அவன்தான் தேங்காய் ஒடைச்சது போல் வெட்டு ஒன்னு துண்டு ரெண்டுன்னு விளக்கமா சொல்லிட்டானே. என்னை மிஞ்சுறவன் எவனாவது வரட்டும் பொண்ணை விட்டுக் குடுக்கறேன்னு அதுக்கு மேல என்னடி? இப்ப வீட்டுக்கு வந்தான்களே ரெண்டு திருவாத்தான்...



என்னன்னு உனக்குத் தெரியுமா? ரெண்டு பேருமே ஆட்டம் போடறதில் ஒருத்தனுக்கு ஒருத்தனை மிஞ்சின வங்கடி. ரெண்டும் ரெண்டு அகப்பை. ரெண்டுமே கழண்ட அகப்பைடி. ரெண்டு தடியன்களுமே மொடாக் குடியன்கள். எல்லோரும் ஊருக்கு ஒரு கூத்தியா வச் சிருக்கான்னு தானே ஒழுக்கம் கெட்டவன்களை சொல்லு வாங்க? இவனுக தெருவுக்கு ரெண்டு கூத்தியா வச்சிருக் கிற பயலுகடி. வீராச்சாமிக்கு உள்ளூர் நடப்பில்ல, உலக நடப்பே தெரியும். வீராச்சாமி மகளை நினைச்சுப் பார்க்கவே ஒரு யோக்கியதை வேணும். இதில இவனுக பொண்ணு கேட்டே வீட்டு வாசப்படியை மிதிச்சுட்டா னுக... இது யாரு கொடுத்த தைரியத்தில...? சொல்லு யாரு கொடுத்த தைரியத்திலங்கிறேன். உன் மருமகனுக கொடுத்த தைரியத்தில் வீட்டுப் படியேறி வந்து விருந்து சாப்பிடவே உட்கார்ந்திட்டானுக... உன் மருமகள்களுக்கு எங்கேயிருந்து இம்புட்டுத் தைரியம் வந்துச்சு... உன் மகன்க கொடுக்கிற இடம். புருசன்காரனை கைக்குள் போட்டுக்கிட்டு அவகவக பொழப்பை மட்டும் ஒழுங்காய் நடத்தியிருக்கணும். புருசன்காரன் தங்கச்சிய ஏலம் போட நினைச்சாளுக இல்ல. இப்ப அனுபவிக்கட்டும். வீரச்சாமி வேணும்னா மகனுகளை தூக்கிப் போட்டு மிதிக்கறது எப்படின்னு யோசிப்பான். வீராச்சாமியோட அக்கா மகன் பரமன் யோசிக்க மாட்டான். இப்ப சொல் லிட்டுப் போனது போல எல்லாப் பயலுகளையும் சீவி விடுவான் சீவி.. போ... போய் வேலையப் பாரு. நியா யம் நடக்கிற இடத்தில் நானென்ன வாயைத் திறக்கிற துன்னு தான் காது குடையற வேலையை உருப்படியாச் செஞ்சேன். இனி உன் மருமகள் எவளாவது எவனுக் ...விருந்து ஆக்கிப் போடறேன்னு வீட்டுக்குள்ள

ஆட்டம் போடுவாளுகளா? ஆட்டம் போட்டா என்ன
ஆகும்ன்னு முறை மாப்பிள்ளை சொல்லிட்டுப் போயி
டான். புரியுதில்ல?''

கனகவள்ளிக்கும் புரிந்தது. அறைக்குள் ரேடியோ
சத்தத்தைக் குறைத்துவிட்டுத் தகப்பன் பேச்சைக் கேட்டு
கொண்டிருந்த சுமித்ராவுக்கும் புரிந்தது. முள்ளை, மு
ளால்தான் எடுக்க வேண்டும். மனதை புண்படுத்து
முறை தவறிய செயல்களும் கூட ஒரு வகையில் வன்
முறைதான். அதே போன்ற குடும்பம் சார்ந்த உறவுக
எதிர்த்துச் செயல்படுவது இன்னொரு வகை வன்முறை
இது போன்ற வன்முறையையும் வன்முறையால் தா
எதிர்க்க வேண்டும்.

வீராச்சாமி கண்டிப்பானவர். இது போன்ற அத்து மீறு
செயல்கள் இதற்கு முன்பு அவர் குடும்பத்தில் நடந்து
இல்லை. இதுவரை சுமித்ரா படித்துக் கொண்டிருந்தா
இது கடைசி வருடம். கடைசி செமஸ்டருக்கான பரீட்
சைக்கான லீவில் ஊருக்கு வந்திருந்தாள். இன்னும் ஒரு
மாதத்தில் படிப்பை முடித்து விடுவாள். அவள் படிப்பை
முடித்ததும் வீராச்சாமி நிச்சயம் அவளை உயர்ந்
இடத்தில் தான் திருமணம் செய்து கொடுப்பார். அதைப்
பொறுக்காத அவரது மருமகள்கள் ஆளுக்கொரு மாப்
பிள்ளையை அவர்களது சொந்தங்களிலிருந்து பொறுக்
கிக் கொண்டு வரப் பார்த்தார்கள். அவர்கள் பொறுக்கிக்
கொண்டு வந்த மாப்பிள்ளைகள் உருப்படியாய் இல்
லாமல் 'பொறுக்கி'களாக இருந்ததுதான் கொடுமை.
எதையுமே முளையிலேயே கிள்ளி எறிந்து விடும்
வழக்கம் கொண்ட வீராச்சாமி. இதையும் அவ்வாறே
செய்தார்.



அவருக்குத் தெரியும். மண்ணையும், பெண்ணையும்
காரணமில்லாமல் அடுத்தவனுக்கு விட்டுக் கொடுக்காத
பரம்பரைப் பழக்கம் கொண்ட வர்க்கம் அவரது வர்க்கம்.
வெள்ளையும் சொள்ளையுமாய் ஒரு வேற்று மனிதன்
நடந்து வந்தாலே கிராமத்தில் உள்ள சிறிசு முதல் பெரிசு
வரை அனைவருக்கும் தெரிந்து விடும்.

ஊருக்குள் புல்லட்டும், காரும் போட்டி போட்டுக்
கொண்டு வந்து நின்றால் பரமனுக்குத் தெரியாமல்
போய் விடுமா?

'வரட்டும் அக்காள் மகன்' என்றுதான் அவரும் வயண
மாய் கயிற்றுக் கட்டிலில் காத்துக் கிடந்தார். அவனும்
வந்தான். அரிவாளை வீசி நியாயம் பேசிவிட்டுச் சென்று
விட்டான்.

இனி ஒருவரும் பெண் கேட்டு இந்த வீட்டு வாசல்
படி மிதிக்கப் பயப்படுவார்கள். வீராச்சாமிக்கு அதுதான்
வேண்டும்.

அவளுக்கு அவர் மகள்தான் உயிர். உயர்த்தி, பரமன்
சொல்வது போல் சீமையில் படித்தவன் அவளைத் தேடி
வரத்தான் போகிறான். அவரும் பெண் கொடுக்கத்தான்
போகிறார். போக்கத்த பயல்கள் யாரும் பெண் கேட்டு
அவர் வீட்டு வாசல்படி மிதிக்கக் கூடாது.

''கனகம் எழுந்திருடி. மனுசனுக்கு பசிக்காதா? போ..
ஊரு பயலுக கொட்டிக்கிட்டது போக மீதி கோழி
வறுவலும், மீன் பொரியலும் மிஞ்சியிருக்கான்னு பாரு.
நானும், என் மகளும் சாப்பிடணும்.''

''ஏன்.. எனக்கு வயிறு இல்லையா?'' அதுக்குப்



''அப்ப மூணு தட்டிலயும் போடுடி, அறிவு கெட்ட
வளே... உன்னை யாரு சாப்பிட வேணாம்னு சொன்
னது? இந்த ஒரு சாண் வயித்துக்குதானடி இந்தப் பா
ஆம்பளைக்குத்தான் பசிக்கும். பொம்பளைக்கு பசிக்காது
எல்லோருக்கும் பசி வந்தால் சிறு குடலை பெருங்குடல்
தின்னும்.''

கனகவள்ளி கணவரின் விகடப் பேச்சை ரசித்து
கொண்டே எழுந்து சமையல்கட்டிற்குச் சென்றாள். தட்டு
களைப் போட்டு கிண்ணங்களை ஊடே பரப்பிவிட்டு
தண்ணீர் எடுத்து வைத்தாள்.

''அப்பனும், மகளும் சாப்பிட வர்றீங்களா? இல்ல
அதுக்கும் வெத்தல பாக்கு வெச்சு அழைக்கணுமா?''

''நீ வெத்தல பாக்கு வச்சு அழச்சுட்டாலும் கழுதை
நாடு விளங்கிரும்டி. உனக்கு அந்த வளமையெல்லாம்
சொல்லி உன் வீட்டில் வளர்த்திருக்காங்களா?''

மகளுடன் தட்டு முன்னால் அமர்ந்தபடி வீராச்சாமி
மனைவியை வம்புக்கு இழுத்தார்.

மூன்று தட்டுக்களிலும் வறுத்த மீன் துண்டங்களை
எடுத்து வைத்தபடி கனகவள்ளி பதில் சொன்னாள்.

''பதினாறு வயசிலயே கட்டிக் குடுத்துட்டாங்க. கத்து
வைச்ச வளமையெல்லாம் இத்தனை வருசத்தில் மற
கடிச்ச வீடுல்ல நான் வாக்கப்பட்டு வந்த வீடு?''

பேசிக்கொண்டே கோழி வறுவலை அடுத்து அவ
பரிமாற ஆரம்பிக்க வீராச்சாமி ஓங்கிச் சிரித்தார்.

''அப்படிப் போடுடி அறுவாளை. வார்த்தைக்கு
வார்த்தை யோசிக்காம எப்படி இப்படி



''இத மட்டும் இந்த வீட்டில வந்துதான் கத்துக்கிட்
டேன். உங்க ஆத்தாளும் அக்காளும் அடிமுதல் நுனி
வரைக்கும் சொல்லிக் கொடுத்திருக்காங்க. இப்ப
தட்டைப் பார்த்து சோத்தைச் சாப்பிடுங்க.''

''அம்மா... கோழி வறுவல் சூப்பர்.. மீன் பொரியல்
சூப்பரோ சூப்பர்.. அசைவம் சமைக்கிறதுல என் மதினி
கள் இரண்டு பேருமே உனக்கு சளைச்சவங்க இல்
லைம்மா. என்ன டேஸ்ட். என்ன டேஸ்ட்.''

சுமித்ரா நாக்கை சப்புக் கொட்டிக் கொண்டாள்.

சமையலறைக்கு முன்னாலிருந்த வராண்டாவில்
அமர்ந்து அவர்கள் சாப்பிட்டுக் கொண்டே பேசிக்
கொண்டிருப்பதை எதிரும், புதிருமாய் இருந்த அறைகளுக்
குள் தங்கள் கணவன்களுடன் அடைக்கலமாகியிருந்த
மல்லிகாவும், செல்வியும் கேட்டு வயிறு எரிந்தனர்.

''பார்த்தீங்களா? சந்தைக்கு போனயே... சாமான்
எங்கேனு உங்களை அந்தப் போடு போட்டாரே உங்க
அப்பன். இப்ப ஆக்கி வச்ச மீன் வறுவலை பொண்
டாட்டி, மகள் கூட போட்டி போட்டுக்கிட்டு நமக்கு இல்
லாம காலி பண்ணுறாரே. இது எந்த ஊரு நியாயம்?''
என்று வெள்ளைச்சாமியை வறுத்து எடுத்தாள் மல்லிகா.

''எங்க ஊரு நியாயம் இதுதாண்டி. இப்ப என்னங்கிற?
உன் சித்தப்பன் மகன் கொட்டிக்கிட்டு போனதெல்லாம்
உன் கண்ணுக்குத் தெரியலையா? எங்க அப்பனும்,
ஆத்தாளும், தங்கச்சியும் சாப்பிடறதைப் பார்த்துப்
பொறுமுற. போடி.. நீ இன்னைக்கு இழுத்து வச்சிருக்கிற
வினைக்கு உன்னை வெட்டிப் பொலிப் போட்டிரு

"நான் என்ன வினை இழுத்து வைச்சேன்?"

"என்னைப் பார்த்தால் பாசமா 'மச்சான்'னு கூப்பிடு என் அத்தை மகன் இன்னைக்கு நாக்கு மேல பல்லை போட்டு நாலு வார்த்தை பேசிப்புட்டான்னா... அ யாரால... உன்னால... வாயைத் திறக்காதே.. திறந்தே வாயிலயே போட்டிருவேன்."

ராமசாமியின் நிலையும் வெள்ளைச்சாமியின் நிலை போலதான் "கோழியை உறிச்சது நீங்க... வறுத்தது நானு.. கொட்டிக்கிறது உங்க குடும்பமா? வயலில் வெள் ளாமை பார்க்காமல் வீட்டில கோழியை உறிக்கறியே வெட்கமில்லையான்னு கேட்டுப்புட்டு இப்ப நான் வைச்ச குழம்பையும், வறுவலையும் இந்த வெட்டு வெட்டுறாரே உங்க அப்பா. இது மட்டும் சரியாக்கும்" என்று கேட்ட செல்வி கன்னத்தில் அறை வாங்கினாள்.

"என் வீட்டுக் கோழியை என் வீட்டு சாமான்களை வைச்சு ஆக்கி வறுத்து விட்டு எங்க வீட்டு ஆளுக சாப் பிடறதையே வருப்பம் செப்பறியாடி... உன் பெரியப்பன் மகனுக்கு ஆக்கிப் போடத்தான் நாங்க கோழி வளர்க் கிறோம் பாரு. நானும் என் அத்தை மகனும் பிச்சாக்கூட பிய்க்க முடியாத சிநேகிதப் பசங்களா இருந்தோம். மாப்பிள்ளைன்னு நீ ஒரு எடுபட்ட நாயைக் கொண்டு வந்து நடு வீட்டில் உட்கார வைச்சே. உன்னால நாங்க ரெண்டுபட்டுப் போனோம். பத்தாததுக்கு என் அப்பன் ஆயி சாப்பிடறதைப் பார்த்து ஜாடை பேசறே... வாயை மூடிக்கிட்டு இருக்கிறதானா இரு. இல்லாட்டி உன் அப்பன் வீட்டுக்கு நடையைக் கட்டு..." ராமசாமி சீறினான்.



# 13



வீராச்சாமி பெற்ற இரு மகன்களும் வீரத்திருமகன்கள் தான். என்ன... அவ்வப்போது மனைவிமார்களின் காதல் பார்வையில் சிக்கிக் கொள்வார்கள். மரத்தில் சிக்கிய காற்றாடி காற்று வேகமாய் அடித்ததும் பறந்து விடுகிறது போல வீராச்சாமி சத்தம் போட்டதும் சரியாகி விடு வார்கள்.

மகளைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளைகளின் விஷயத்தில் வீராச்சாமி மௌனமாய் பல் கடிக்க பரமன் வந்து மந்திரித்து விட்டுப் போனதும் மயக்கம் தெளிந்து மனைவிமார்களை தாளித்து விட்டார்கள். மல்லிகாவும், செல்வியும் கணவன்களுக்கு அடங்குவது போல் பாவ்லா காட்டிக் கொண்டாலும் பரமனிடமிருந்து தப்பித்துப் போன சித்தப்பன் மகனும், பெரியப்பன் மகனும் செல் போனில் தொடர்பு கொண்டபோது திட்டம் வகுத்துக் கொடுத்து விட்டார்கள்.

"அண்ணே... உனக்கு ஒரு கூறும் இல்லை. அதுதான் பெண்ணைக் காட்டி விட்டேனில்ல.. இனி என்ன செய்யறதுன்னு நீ முடிவு பண்ணு... என்ன... நான் என்ன செய்யறதுன்னு நீ முடிவு பண்ணு... என்ன... நான் என்னத்தைச் சொல்ல? வேறு சொல்லவா? நான் என்னத்தைச் சொல்ல? வேறு பொண்ணைப் பாருன்னு வேணும்னா சொல்லலாம்.. நீ பண்ணி என்னது.. ஏனா? ஏன் சொல்ல மாட்டே. நீ பண்ணி திருவிளையாடல் புராணம் தான் எட்டு



ஊரைத் தாண்டி இந்த ஊருக்கு வந்து தொலைச்சிருக்கே. அப்புறம் எப்படி என் அத்தையும், மாமனும் உனக்குப் பொண்ணு கொடுப்பாங்க. என்ன கட்டினா இவளைத்தான் கட்டுவயா? அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்ற? நீ தூக்கிட்டுப் போய் தாலி கட்டினால்தான் உண்டு. என்னது இந்த பரமன் பயல் விட மாட்டானா? உன்னை யாரு இந்த ஊரில் வந்து தூக்கிட்டுப் போகச் சொன்னது... என் நாத்தனா வார புதன்கிழமை மதுரைக்கு காலேஜுக் குப் பரிட்சை எழுதப் போறா. அங்கே போய் காலேஜு ஹாஸ்டலில் தூக்கப் போறயா? உன்னை சும்மா விடு வாங்களா? அடிச்சே கொன்னுருவாங்க. அந்த வேலையை வழியில் வைச்சுக்க. வேறு எங்கேயா? ம்ம்... அவ பஸ்ஸில்தான் போவா.. எப்பவும் என் புருசன்தான் கொண்டு போய் விட்டுவிட்டு வருவார். முடிஞ்சா நடத்து..." மல்லிகா தன் சித்தப்பன் மகன் கார்மேக வண்ணனுக்கு வழிகாட்டினாள்.

செல்வியோ ஒரு படி மேலே போய் தன் பெரியப்பன் மகனைச் சாடினாள்.

"ஏண்ணே... சும்மா போன் மேல போன் எனக்குப் போட்டு என்ன பிரயோஜனம். நான் ஒத்தப் பொம்பள உனக்கு உதவியா என்னால் என்ன செய்ய முடியும்? என் புருசனா...? அடப்போண்ணே அப்பன் பின்னாலேயே அலைஞ்ச மனுசனை அடிச்சுப் பிடிச்சு ஒரு வழியாய் என் வழிக்குக் கொண்டு வந்து வச்சிருந்தேன். நீ வந்து அதையும் கெடுத்து விட்டுப் போயிட்டே. உன் பேச்சை எடுத்தா என்னையே என் அப்பன் வீட்டுக்கு துரத்தி விட்டுடுவாரு இந்த மனுசன்.



நினைச்சேன். இடையில் பரமன் பயல் வந்து காரி யத்தைக் கெடுத்து விட்டானே.. நீ வேற தைரியம் பத்தாத ஆம்பளையா இருந்து தொலைக்கிற.. என்ன நீ பெரிய சிங்கமா? இந்த வாய் சவடாலுக்கு ஒன்னும் குறைச்சலில்ல. நீ பெரிய வீரனா இருந்தா என் நாத்த னாவ தூக்கிட்டுப் போய் தாலிகட்டு... என்ன பரமன் வருவானா? அவன் என்ன எல்லா இடத்துக்குமா வரப் போறான்? வார புதன்கிழமை என் நாத்தனா காலேஜுக் குப் போக மதுரைக்கு பஸ் ஏறுகிறா. கூட யாரு போறதா? எல்லாம் என் புருசனோட அண்ணன்தான் வழக்கமா போவாப்பில. எப்படித் தூக்கிப் போகிறதா? என்னைக் கேட்டா எனக்கென்ன தெரியும்? நீ ஆள் படை அம்புன்னு இருக்கிற ஆளு... பஸ் போற வழியில கலாட்டா நடக்க ஏற்பாடு பண்ண உனக்கா தெரியாது? கலாட்டாவில பஸ்ஸை மறிச்சு நிப்பாட்ட உன்னால முடியாது? பத்துப் பேரு அரிவாளும் கம்புமா அடிச்சுக்கிட்டு நிக்கறப்போ பயந்து போய் நிற்கிற பெண்ணை எம்.ஜி.ஆர். மாதிரி காப்பாத்திட்டுப் போக உனக்கா சொல்லித் தரணும்? உன்னை என்னண்ணே இந்தச் சிரிப்பு சிரிக்கிற? உன்னை எம்.ஜி.ஆர். மாதிரி இருக்கச் சொன்னா. நம்பியார் மாதிரி சிரித்துத் தொலைக்கிற... எக்கேடா கெட்டுப் போ.. இனி உன்பாடு.. என் நாத்தி பாடு.. என்னை ஆளை விடு சாமி."

செல்வி படித்தது வெறும் எட்டாம் வகுப்பு வரைதான் என்றால் யாராலும் நம்ப முடியாது. அரசியல் சாணக் கியத்தனம் அத்தனையும் நிறைந்தவள் அவள். நாத்த னாரை பெரியப்பன் மகனுக்கு திருமணம் முடித்து வைத்தால் காலமெல்லாம் மாமியாரின் குடுமி அவள் ... இருக்கும்

ஒன்றுவிட்ட அண்ணனின் ஆதரவும் கடைசி வரைக்கும் அவளுக்கு இருக்கும். அதற்காக சாம, தான, பேத, தண்டத்தில்.. கடைசிப் படியான தண்டத்தை கையில் எடுத்து விட்டாள் அவள்.

செவ்வாய்கிழமை இரவே தேனியிலிருந்து மதுரை செல்லும் மெயின் ரோட்டில் வழியில் ஏதாவது ஒரு ஊரில் கலவரம் உண்டாக்க யோசனை செய்து கொண்டிருந்த பரந்தாமனுக்கு அந்த சிரமத்தைக் கொடுக்காமல் கருமாத்தூர் அருகே ஒரு அரசியல் தலைவரின் சிலை மிக லேசாக உடைந்து போயிருப்பதைக் கண்டு, அது அருகிலிருந்த மரத்தின் கிளை மறிந்து விழுந்ததால் உண்டான சிதைவு என்பதை அறியாமல் மாற்றுக் கட்சியினரின் திட்டமிட்ட சதிச் செயல் என்று அந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் கொதித்து எழுந்தனர்.

தன் அதிர்ஷ்டத்தை தானே மெச்சிக் கொண்ட பரந்தாமன் செல்விக்கு செல்போனில் தகவல் சொன்னான். அவள் சுமித்ரா ஏறி வரும் பஸ்ஸின் பெயர் முதற்கொண்டு கிளம்பி கருமாத்தூர் வந்து சேரும் நேரம் வரை சொன்னாள்.

கலவரம் அடக்கப் போகிறவன் போல் போய் கலவரத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டே அந்த பஸ்ஸிற்காக காத்து நிற்க ஆரம்பித்தான் பரந்தாமன்.

கார்மேகவண்ணனோ... சுமித்ரா ஏறும் ஸ்டாப்பிற்கு அடுத்த கிராமத்தில் அதே பஸ்ஸில் ஏறிக் கொண்டு வழியில் ஏதாவது 'வழி' கண்டுபிடிக்கும் திட்டத்தோடு காத்திருந்தான்.

இது எதையும் அறியாத சுமித்ரா புதன்கிழமை கல்லூரிக்குச் செல்லக் கிளம்பினாள்.



''ஏன் தாயி... வார திங்கள்கிழமைதானே பரிட்சை? இப்பவே போகாட்டி என்ன? இன்னும் ரெண்டு நாள் இருந்திட்டுப் போகலாமில்ல'' வீராச்சாமி மகளின் தலையைக் கோதினார்.

''இல்லப்பா... ஹாஸ்டலில் போயிருந்தா மத்த பிள்ளைகளோட சேர்ந்து படிக்கலாம். பரிட்சைக்கு இன்னும் நாலு நாள் தானே ஊடே இருக்கு. பரிட்சை முடிஞ்ச பின்னால இங்கதானே இருக்கப் போகிறேன் போய் விட்டு வரேன்ப்பா.''

''அதுவும் சரிதான். உன் அம்மாகாரி எதுக்கு இப்ப கண்ணைக் கசக்குறா? இருக்கிறப்போ என் மகளை வைஞ்சுக்கிட்டே இருக்கிறது. கிளம்பிட்டா. முந்தானைச் சீலையில மூக்கைச் சிந்தறது. இதுவே இவ பொழைப்பா போயிருச்சு. ஏய்.. ஏண்டி இப்ப அழுகிறவ? புள்ள பரிட்சை எழுதத்தானே போகுது.. கண்ணை மூடி கண்ணைத் திறக்கிறதுக்குள்ள பதினைஞ்சு நாள் ஓடியே போயிரும். புள்ள நம்மகிட்ட திரும்பி வந்துரும். இதப் புரியாம புள்ள மனசைப் பதறடிக்கிறா பாரு..'' வீராச்சாமி மனைவியை கடிந்து கொண்டார்.

''ஆமா... நான் என் புள்ளைய வைததை இவருகிட்ட நின்னு பார்த்தாரு. நாளைக்கு வாழப்போற இடத்தில ஏதாவது குத்தம் கண்டா ஆத்தாக்காரி என்னத்த புள்ளைய வளர்த்தான்னு என்னையத்தான் சொல்லுவாக... உங்களை யாரு சொல்லப் போறா? அதுக்கு ஒரு நாலு நல்லது கெட்டதைச் சொன்னா... என் புள்ளைய வையறேனாம்'' கனகவள்ளி கண் கலங்கினாள்.

சுமித்ரா தாயின் கழுத்தை கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டாள். ''அம்மா.. நீ எப்படித் திட்டுவேன்னு



எனக்குத் தெரியாதா? அப்பாவுக்கு என்ன தெரியும்? நான் பதினைந்து நாளில் பரிட்சை எழுதிட்டு ஓடியே வந்திடுவேன். சரியா? போய்ட்டு வரட்டுமா? சிரிச்சுக்கிட்டே போய்ட்டு வான்னு சொல்லும்மா.''

கனகவள்ளியை சமாதானப்படுத்திவிட்டுக் கிளம்பும் போது வீராச்சாமி சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினார். வெள்ளைச்சாமி திகைத்துப் போனான். மல்லிகாவும், செல்வியும் மனதுக்குள் பதைத்தார்கள்.

''என்னப்பா... நீங்க கிளம்பறீங்க?''

''எனக்கு மனசு சரியில்லைடா. நீ வயலுக்குப் போ. நான் போய் என் மகளை விட்டுட்டு வாரேன்.''

''ஏம்பா.. இத்தனை நாள் சரியாயிருந்த மனசு இப்ப ஏன் சரியில்லாம போச்சுன்னு எனக்குத் தெரியாதா? என்னவோ.. என்ஜினியர் படிப்பு படிச்சிருக்கான். காருபங்களான்னு இருக்கிறான். நம்ம தங்கச்சியை கண்கலங்காம வச்சிக்குவான்னு நினைச்சேன். உள்ள இவ்வளவு சூது இருக்குன்னு கண்டேனா? நீங்க பெரியவங்களா இருந்து கண்டுபிடிச்சு சொல்லிட்டிங்க... உங்க பேச்சை மீறி வாயைத் திறந்திருப்பேனா? என் தங்கச்சியை என்னை நம்பி அனுப்ப நீங்க யோசிக்கிறாப்புலயா நான் இருக்கேன்? அப்படியாப்பா நீங்க என்ன வளர்த்திருக்கீங்க?'' வெள்ளைச்சாமி நாத்தழுதழுத்தான்.

வீராச்சாமி போட்ட சட்டையை அவிழ்த்து ஆணியில் மாட்டினார்.

''சரிடா.. நீயே போயிட்டு வா. உன்னை இப்ப என்ன குத்தம் சொன்னேன்னு இப்படிக் கண்ணு கலங்கிறவன்? சொல் புத்தி கேட்காம சுய புத்தியோட இருந்தா சரிதான்.''



மாமனார் போகவில்லையென்று அறிந்ததும் நிம்மதிப் பெருமூச்சு விட்ட மருமகள்கள் இருவரும் அவரின் வார்த்தைகளைக் கேட்டுப் பல்லைக் கடித்துக் கொண்டனர்.

'கிழவா.. உன் மகன்களுக்கு வேணும்னா நீ சொல்லிக் கொடுக்கலாம். என் அண்ணனுக்கு நான் சொல்லிக் கொடுப்பதுதான்...'

## 14



ஜன்னலோரம் காற்று சிலுசிலுவென்று வந்தது. தோளில் மாட்டும் பேக்கை இழுத்து காலுக்குக் கீழ் சரியாக வைத்துக் கொண்டாள் சுமித்ரா. குளிர்வது போல் தோள்ற தாவணியை சரியாக இழுத்து விட்டுக் கொண்டாள். அவள் அருகே அமர்ந்திருந்த பெண்மணி.

''படிக்கிற புள்ளையாம்மா?'' என்றாள்.

''ம்.ம்.'' என்று லேசாகத் திரும்பிக் கூறினாள் சுமித்ரா.

''எந்த ஊரில படிக்கிற? என்ன படிக்கிற?''

அந்தப் பெண்மணியின் பேச்சு காதில் விழுகாதது போல் தலையைத் திருப்பிக் கொண்டு ஜன்னல் வழி வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள் சுமித்ரா.

பேருந்திலோ அல்லது பொது இடங்களிலோ சொந்த விவரங்களைக் கூறுவதும் பேசுவதும் அவளுக்குப் பிடிக்காது. அதைக் கண்ட அந்தப் பெண்மணி முகத்தைத் திருப்பிக் கொண்டு அடுத்து அமர்ந்திருந்தவளிடம் சத்தமாய் கூறினாள்.

''இந்தக் காலத்து படிச்ச புள்ளைக மண்டைக்கனம் பிடிச்சு அலையுதுக. என்னமோ காணாததைக் கண்டது மாதிரி தஸ்ஸு புஸ்ஸுன்னு இங்கிலீஷ் பேசிக்கிட்டு செல்லுபோனாம்... அதைக் காதில வெச்சுக்கிட்டு.. என்ன கெரகத்துக்கு இந்த ஆட்டம் போடுதுகளோ...''

'பேசாமல் இந்த அண்ணன் பக்கத்திலேயே உட்கார்ந்திருக்கலாம்' அலுப்புடன் நினைத்துக் கொண்டாள் சுமித்ரா.

வெள்ளைச்சாமியும் சரி. ராமசாமியும் சரி. தங்கையை தொட்டுப் பேசவோ.. பக்கத்தில் அமரவோ மாட்டார்கள். அவர்கள் பழக்கம் அப்படி. அதனால் சுமித்ராவை அமர வைத்து விட்டு வெள்ளைச்சாமி அவளுக்கு நேர் பின் சீட்டில் அமர்ந்திருந்தான்.

பஸ் அடுத்த கிராமத்தில் நின்றது. காத்திருந்த கார்மேகவண்ணன் ஜன்னலோரம் அமர்ந்திருந்த சுமித்ராவைப் பார்த்து விட்டான். வெகு ஸ்டைலாய் பஸ்ஸில் ஏறி அவளுக்கு நேர் பின் சீட்டில் அமர்ந்தான். மெலிதாய் விசிலடித்து அவள் கவனத்தைக் கவர முயற்சி செய்தபோது,

''என்ன மச்சான் எங்கே இவ்வளவு தூரம்?'' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தவன் அரண்டு போனான்.

அவனைப் பல்லைக் கடித்தவாறு பார்வையால் எரித்துக் கொண்டு வெள்ளைச்சாமி அமர்ந்திருந்தான்.

'அடக்கடவுளே... ஒளியத் தெரியாதவன் தலையாரி வீட்டில் ஒளிந்த கதையாய் தங்கச்சியைக் கடத்தத் திட்டம் போட்டுக்கிட்டு அண்ணன்காரன் பக்கத்தில் உட்கார்ந்து தொலைத்து விட்டோமே... இவன் இப்படி



பின்னால் உட்கார்ந்திருப்பான்னு தெரியாமல் போய் விட்டதே.'

தன் விதியை தானே நொந்து கொண்டு வெள்ளைச்சாமியைப் பார்த்து சகிக்க மாட்டாமல் ஓர் சிரிப்பு சிரித்து வைத்தான் கார்மேகவண்ணன்.

''சும்மா.. மதுரையில் ஒரு வேலை. அதுதான்.''

''ஓஹோ.. அதுக்கு உங்க ஊர்ல இருந்து பஸ் போகுமே.. எங்க ஊருக்கு அடுத்தாப்புல கிராமத்தில வந்து ஒளிஞ்சு மறைஞ்சு ஏறி வர்றதைப் பார்த்தால் வேலை மதுரையில் இருக்காப்புல தோணலியே... என்ன விஷயம்?''

''இல்லை மச்சான் இங்கே ஒரு வேலையாய் வந்தேன்.''

''ஆக மொத்தம்... வேலை பெங்களூர்ல இல்ல. என் வீட்டைச் சுத்தி இருக்கு. வேண்டாம் மச்சான். நான் அவ்வளவு நல்லவனில்ல. உங்க பெரியப்பன் மகளைக் கட்டிக்கிட்டதால என்னை என்னமோன்னு நினைச்சிறாதீங்க. அடிச்சே ஆறு கொலை பண்ணிடுவேன். பார்த்து இருந்துக்கங்க. விசிலெல்லாம் தூள் பறக்குது. அடங்கி உட்காருங்க.''

கார்மேகவண்ணன் பல்லைக் கடித்துக் கொண்டான்.

'இவனெல்லாம் அழகான தங்கைக்கு அண்ணனாய் பிறந்து தொலைத்து விட்டதால் இவன்கிட்டயெல்லாம் பயப்பட வேண்டியிருக்கிறது!

பஸ் கருமாத்துருக்கு முதல் கிராமத்தில் நின்றது. கீழே நின்று கொண்டிருந்தவன் டிரைவரைப் பார்த்துக் கூறினான்.

''கருமாத்தூரில் கலாட்டா நடக்குது. பஸ்ஸையெல்லாம் அடிச்சு நொறுக்கிறதா பேசிக்கிறாங்க. பார்த்துப் போங்க.''



''என்னவாம்?''

''அந்தக் கட்சிக்காரன் நம்ம தலைவரோட சிலையை உடைச்சிட்டானாம். ஒரே தகராறா கிடக்குது.''

டிரைவர் நடத்துனரை திரும்பிப் பார்த்துக் கூறினான்.

''என்னண்ணே.. என்ன செய்யலாம்?''

''வேற என்ன செய்யறது? பஸ்ஸை ஓட்டித்தான் ஆகணும். பஸ் பூரா பேசன்ஜர்ஸ். ஊடே நிப்பாட்ட முடியாது.''

''கலவரம் நடக்குதப்பா.''

''இங்க நடக்கலியே.''

''அப்ப நீ என்னதான்ப்பா சொல்லுற?''

''பஸ்ஸைக் கிளப்புப்பா... கலவரம் நடந்தா பஸ்ஸை தள்ளி நிறுத்துவோம். கிட்டப் போனாத்தான் பிரச்னை. இந்த ரூட்டில் வழியெல்லாம் தகராறை பார்த்துக்கிட்டுப் போறதுதானே வழக்கம். இன்னைக்கு என்ன புதுசா பயப்படறே?''

''ஏம்ப்பா சொல்லமாட்ட? பஸ்ஸை ஓட்டினாலும் என்னைத்தான் திட்டுவாங்க ஓட்டலைன்னாலும் என்னைத் தான் திட்டப் போறாங்க. மாத்து வாங்கிக் கொடுக்கனும்னு முடிவு பண்ணிட்ட. உன் ஆசையை கெடுப்பானேன். பஸ்ஸைக் கிளப்பித் தொலைக்கிறேன்.''

பஸ் கிளம்பியது. கார்மேகவண்ணன் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டே வெள்ளைச்சாமியை முறைத்துக் கொண்டு வந்தான். முன் பக்கம் சுமித்ராவின் பக்கமாய் பார்வையைச் செலுத்தினால் பக்கத்திலிருந்த வெள்ளைச்சாமி முறைத்தான்.



லிருக்க கார்மேகவண்ணனால் முடியவில்லை. திருதிருவென விழித்துக் கொண்டு அவன் வந்தபோது ரோட்டின் மத்தியில் வரிசையாய் வாகனங்கள் நிற்பது தெரிந்தது.

''நல்லவேளைப்பா.. நம்ம பஸ் மட்டும் தனியா மாட்டிக்கலை. முன்னால் நிறைய பஸ் நிற்குது..'' கண்டக்டர் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

''உன் இஷ்டம் போல கலவர பூமியில் வந்து நின்னுட்டோம்பா. இப்ப உனக்கு நிம்மதியா?'' டிரைவர் தன் ஆசனத்தை விட்டு எழுந்து பஸ்ஸை விட்டு இறங்கிச் சென்றான்.

''என்னவாம்?'' கார்மேகவண்ணன் வெள்ளைசாமியிடம் கேட்டான்.

''நானும் உங்ககூடத்தானே வந்துக்கிட்டு இருக்கேன். எனக்கு மட்டும் எப்படித் தெரியும்?'' வெள்ளைசாமி ஏளனமாய் கேட்டான்.

''இறங்கி விசாரிச்சாத் தெரியும்...''

''நானா...?'' சுமித்ராவை ஏக்கமாய்ப் பார்த்தான் கார்மேகவண்ணன்.

''பின்ன... நானா?'' வெள்ளைசாமி மேலும் கீழும் அவனைப் பார்த்தான். 'அதுக்கு வேற ஆளைப் பாருடா.. ஆளும்.. மூஞ்சியும்.. உன் ஐடியா என்னன்னு எனக்குத் தெரியாத அளவுக்கு நான் மாங்கா மடையனாடா.. இந்த வீராச்சாமியின் மகன் வெள்ளைச்சாமியை என்ன இளிச்சவாயன் கேணைக் கிறுக்கன்னு நினைச்சியா? மவனே.. உன்னை வெட்டி பொலி போட்டிருவேண்டா.'

வெள்ளைச்சாமி மனதில் நினைத்தது அவன் முகத்தில்

இறங்கினான். அவனைப் போலவே மற்ற ஆண்களும்
பஸ்ஸை விட்டு இறங்க வெள்ளைச்சாமி மட்டும் அசை
யாமல் பஸ்ஸில் அமர்ந்திருந்தான். சுமித்ரா தலையைத்
திருப்பி - அண்ணனைப் பார்த்தாள்.

''என்னண்ணே..?''

''ஒன்னுமில்லம்மா.. ஏதோ கலாட்டாவாம். நீ பேசா
மல் உட்காரு.''

'மாலை நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறதே.
இருட்டுவதற்குள் எப்போதும் மதுரைக்குப் போய் சேர்ந்து
விடுவோம். இன்னைக்கு இப்படி ஆகிவிட்டதே. எல்லாம்
இந்த அம்மாவைச் சொல்லனும். மதியம் கறிக்குழம்பு
வைத்தால் என்ன? சாப்பிட்டு விட்டுக் கிளம்பட்டும்னு
அடம் பிடித்ததால் லேட்டாகி விட்டது. இந்நேரம் பாதித்
தூரம் போயிருக்கலாம். ஆஸ்டலில் விட்டு விட்டு
அண்ணன் வேறு திரும்பி ஊர் வந்து சேரனுமே.'

சுமித்ரா மனதிற்குள் கவலைப்பட்டவாறு சீட்டில்
சாய்ந்து கொண்டாள். அவள் பக்கத்தில் அமர்ந்திருந்த
பெண்மணி சலித்துக் கொண்டாள்.

''இவங்களுக்கு இதே வேலையாப் போச்சு. எதுக்
கெடுத்தாலும் அடிதடி. காலாகாலத்தில் வீட்டுக்குப்
போய் சேர்ந்தாத்தானே கஞ்சித் தண்ணியை காய்ச்சி
குடிக்க முடியும்? இப்படி நடு ரோட்டில பஸ்ஸை மறிச்சுப்
போட்டா வேலை வெட்டி இருக்கிற ஜனம் என்ன
செய்யும்?''

நின்று கொண்டிருந்த பஸ்களைத் தாண்டி சுமித்ரா
அமர்ந்திருந்த பஸ்ஸை குறி வைத்து வந்து கொண்
டிருந்த பரந்தாமன் தூரத்திலேயே கார்மேகவண்



ணனைப் பார்த்து விட்டான். அவன் அழைத்து வந்
திருந்த ஆண்களில் ஒருவனை அழைத்து அவன்
காதோடு கட்டளையிட அவன் தலையாட்டிவிட்டு மற்ற
ஆண்களை அழைத்துக் கொண்டு அந்த பஸ்ஸருகே
சென்றான்.

திடீரென்று பத்து ஆள்கள் ஒருவரோடு ஒருவர்
சண்டை போட்டுக் கொண்டே சுமித்ரா அமர்ந்திருந்த
பஸ் அருகே வந்தார்கள். ஸ்டைலாய் சிகரெட் பிடித்துக்
கொண்டிருந்த கார்மேகவண்ணனின் தலை மேல் ஓர்
உருட்டுக் கட்டை ஓங்கி இறங்கியது. பொங்கி வரும்
ரத்தத்தைக் கையில் பிடித்துத் தடுக்க முயன்றபடி,

''ஐயோ...'' என்று அலறிய கார்மேகவண்ணன்
மயங்கிச் சரிந்தான்.

பஸ்ஸின் மேல் கற்கள் சரமாரியாய் வந்து விழுந்தன.
டிரைவரும் கண்டக்டரும் இறங்கி ஓடிவிட பஸ்ஸில்
இருந்தவர்கள் பஸ்ஸை விட்டு இறங்கி ஓட ஆரம்பித்
தனர்.

''சுமித்ரா எழுந்திரும்மா'' வெள்ளைச்சாமி வேட்டியை
மடித்துக் கட்டியபடி பதற்றமாய் எழுந்தான்.

காலுக்குக் கீழிருந்த டிராவல் பேக்கை எடுத்துத்
தோளில் மாட்டிக் கொண்ட சுமித்ராவின் கையைப்
பிடித்துக் கொண்டு வெள்ளைச்சாமி பஸ்ஸை விட்டு
இறங்கி பாதையில் ஓடினான். அதற்காகவே காத்திருந்தது
போல் அவனை ஆள்கள் சூழ்ந்து கொள்ள ஒரு கையால்
தங்கையை பிடித்துக் கொண்டு மறு கையால் சண்டை
யிட்டான். பத்து ஆள் சுற்றி நின்று தாக்கும்போது
ஒற்றை ஆள் ஒற்றைக் கையுடன் எவ்வளவு நேரம்தான்



வெள்ளைச்சாமி ரத்தக் காயங்களுடன் நினைவிழந்து
விழுந்தான்.

## 15



வெள்ளைச்சாமி பிறந்தது முதல் முரட்டுத்தனமான
மனிதர்கள் மத்தியில் முரட்டுத்தனமான குணங்களுடன்
வளர்ந்தவன். முன்னே அத்தனை பஸ்கள் நிற்க தங்களது
பஸ்ஸின் அருகே திடீரென்று கலவரம் முளைத்ததன்
பின்னணி என்னவாயிருக்கும் என்பதை அறிந்துகொள்ள
அவனுக்கு அதிக நேரமாகவில்லை. கார்மேகவண்ணன்
மட்டும் குறி வைத்துத் தாக்கப்பட்டதும் அவனுக்கு
காரணம் புரிந்து விட்டது. தங்கையின் கையை இறுக்கிப்
பிடித்துக் கொண்டு அவன் அந்த இடத்தை விட்டு ஓட
முயன்றதும் அவனைக் கூட்டம் சூழ்ந்து கொள்ளுமென்
பதை எதிர்பார்த்தே இருந்தான். வலுவுள்ளவரை
போராடியவன் தன்னால் போராட இயலாது என்ற நிலை
வரும்போது தங்கையிடம் கத்தினான்.

''சுமித்ரா.. ஓடிவிடு. இது பரந்தாமனின் வேலை.
உன்னைத் தூக்கிப் போக பார்க்கிறான். அவனிடம்
மாட்டிக் கொள்ளாதே ஓடிவிடு.''

அதற்குள் அவன் தலையில் ஒருவன் கட்டையால்
அடிக்க அவன் தடுமாறி அவள் கையை விட்டுத் தள்
ளாடினான்.

''ஐயோ.. அண்ணே...'' சுமித்ரா கதறினாள்.



''என்னைப் பற்றிக் கவலைப்படாதே. நீ பரந்தாம
னிடம் மாட்டிக் கொள்ளாதே... என் மேல் ஆணை.. ஓடு.
உன்னை என்கூட அனுப்ப அப்பா ஆயிரம் யோசனை
பண்ணினார். அவர் பயந்தது போலவே நடக்குது... என்
மேல் பழி வராமலிருக்கனும்னா.. உனக்கு உண்மை
யாவே இந்த அண்ணன் மேல பாசமிருந்தால்.. அவன்
கிட்ட அகப்பட்டுக்காதே.. உன்னைக் காப்பாற்றிக்க..
ஓடிவிடு.''

வெள்ளைச்சாமி மயங்கிச் சரிந்தான். சுமித்ரா ஒரு
விநாடித் தயங்கினாள். அடுத்த கணம் தோளில் போட்
டிருந்த பையை இறுக்கிப் பிடித்து ஓர் சுழற்று சுழற்றி
அடித்தாள். அவர்களைச் சுற்றி வளைத்திருந்தவர்கள்
உடைந்து சிதறினார்கள். சுமித்ரா நிற்காமல் பையை
தோளில் மாட்டிக் கொண்டு ஓட ஆரம்பித்தாள். ஒதுங்
கின ஆள்கள் அவளைத் துரத்த ஆரம்பித்தார்கள். அவளது
செல்போன் நழுவி கீழே விழுந்தது. சுமித்ராவின் உடல்
மெலிவானதாக இருந்ததால் அவளது ஓட்டத்தின்
வேகம் அதிகமாக இருந்தது. மெல்ல, மெல்ல அவளுக்
கும் துரத்தி வந்தவர்களும் இடையில் இருந்த இடை
வெளி அதிகமானது. அந்தப் பாதை வளைவில் திரும்
பியதும் கரும்புத் தோட்டம் ஒன்று இருக்க சுமித்ரா
அதற்குள் புகுந்து கொண்டாள்.

துரத்தி வந்தவர்கள் சற்று தூரம் ஓடியதும் ஓய்ந்து
போய் நின்றார்கள். அவர்களில் ஒருவன் செல்போனை
எடுத்துப் பேசினான்.

''அண்ணே.. குட்டி தப்பிச்சு ஓடிருச்சுண்ணே.''

''குட்டி கிட்டின்னே படவா பல்லைப் பேத்துடுவேன்.
அவ நான் கட்டிக்கப் போற பொண்ணு. மரியாதையாய்
பேசு'' பரந்தாமன் போனில் சீறினான்.

''சரிங்கண்ணே. இப்ப என்ன செய்ய?''

''அங்கேயே நில்லு. நான் வண்டியை கிளப்பிக் கிட்டு வர்றேன்.''

போனை அணைத்தவன்,

''என்ன சொல்றாரு?'' என்று வினவிய மற்றவனிடம்

''வண்டியை எடுத்துக்கிட்டு வர்றாராம். இந்த ஆளே பொண்ணைக் கடத்திட்டுப் போய் தாலி கட்டனுமின்னு வில்லன் கணக்கா பொண்ணைத் துரத்தறான். அதில நானு மரியாதையாய் அந்தப் பொண்ணை 'அண்ணி'ன்னு கூப்பிடனுமாம். பாருங்கடா'' என்றான்.

''விட்டுத்தள்ளு. இவன்ககிட்ட வேலை பார்த்தா இதையும் கேட்கணும் இதுக்கு மேலயும் கேட்கணும்.''

பரந்தாமன் டாடா சுமோவில் வந்து,

''ஏறுங்கடா...'' என்றான். எல்லோரும் ஏறிக் கொண் டார்கள்.

சாலையில் நெடுந்தொலைவு சென்று தேடியும் அவள் கண்ணில் சிக்கவில்லை. யோசனையுடன் வண் டியைத் திருப்பச் சொன்ன பரந்தாமன் அந்தக் கரும்புத் தோட்டத்தின் அருகே வண்டியை நிறுத்தச் சொன்னான். இறங்கிப் பார்த்தான்.

உள்ளே ஒளிந்து கொண்டிருந்த சுமத்ராவிற்கு அவன் நிற்பது நன்றாகத் தெரிந்தது. பேசுவது நன்றாகக் கேட்டது.

''ஏய்... அவள் ரோட்டு வழியா ஓடியிருக்க சான்ஸ் இல் லைடா. இங்கதான் எங்காவது ஒளிஞ்சிருக்கனும். ரோட் டில் ஓடியிருந்தால் இந்நேரம் நம்ம கண்ணில் சிக்கி யிருப்பா. கரும்புக் காட்டுக்குள்ள இறங்கித் தேடுங்கடா.''



சுமித்ராவின் உடல் பயத்தில் ஜில்லிட்டது.

'அண்ணன் சொன்னது சரிதான். இவன் அவளைக் குறி வைத்துத்தான் வந்திருக்கிறான். ஐயோ அண்ணா...! என்னால் அடிபட்டு விழுந்தாயே உனக்கு என்ன ஆச்சோ தெரியலையே... இந்தப் பாவிகிட்ட மாட்டாதேன்னு சொன்னாயே இவனிடம் மாட்டி விடுவேன் போல இருக்கிறதே. செல்போன் எங்கே போச்சுன்னு தெரிய லையே. அப்பாவுக்கு தகவல் சொல்ல முடியலையே.'

சுமித்ரா மெதுவாக நகர்ந்து கரும்புத் தோட்டத்தின் ஊடே செல்ல ஆரம்பித்தாள். பரந்தாமனின் ஆள்கள் கரும்புத் தோட்டத்திற்குள் இறங்கித் தேட ஆரம்பித்தார் கள். இருள் கவிய ஆரம்பித்தது. அந்த இருளில் கரும்புத் தோட்டத்தில் நின்று கொண்டிருந்த சுமத்ராவிற்கு பயத்தில் உடல் நடுங்கியது. செல்போன் இல்லாத கொடுமை இப்போதுதான் அவளுக்குப் புரிந்தது.

இப்படி நடுக்காட்டில் இருட்டில் கரும்புத் தோட்டத் திற்குள் பதுங்கிச் செல்லும் நிலைமை சுமித்ராவிற்கு நேர்ந்திருப்பது மட்டும் வீராச்சாமிக்கு தெரிய வந்தால் அவர் பரந்தாமனை உயிரோடு எரித்து விடுவார். ஆனால் இந்த ஆபத்திலிருந்து மீண்டு தாய், தகப்பனின் முகத்தைக் காண முடியுமா என்றிருந்தது சுமித்ராவிற்கு.

'அம்மா..! எனக்குப் பயமாய் இருக்கிறதே..' சுமித்ரா வின் கண்கள் கலங்கின. அந்தக் குரல் மட்டும் கனக வள்ளியை எட்டியிருந்தால் அவள் முறத்தையும் வீடு கூட்டும் துடைப்பத்தையும் எடுத்துக் கொண்டு மகளைக் காக்க ஓடி வந்திருப்பாள். என்ன செய்வாள் சுமித்ரா! கண்ணுக்குள் வைத்துக் காத்த பெற்றவர்களின், கூடப்



பிறந்தவர்களின் துணையின்றி தனியே திக்கற்று நின்றாள்.

கரும்புத் தோட்டத்தின் ஓரமாய் வந்து ரோட்டில் ஏற முயன்றாள். 'இருட்டி விட்டதே.. இனி ரோட்டில் ஓட ஆரம்பித்தாலென்ன..'

பரந்தாமன் வண்டியின் விளக்குகளை போட்டு விட்டிருந்தான். அவள் வெளியே வந்தால் வெளிச் சத்தில் மாட்டிக் கொள்வாள். அவள் திகைத்துக் கொண் டிருந்தபோது கார் ஒன்று வந்து கரும்புத் தோட்டத்தின் அருகே நின்றது. அதிலிருந்தவன் இறங்கி பரந்தாமனிடம் சென்றான். பரந்தாமனின் கவனம் அவன் பக்கம் திரும் பியது. அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட சுமித்ரா காரின் பின் கதவைத் திறந்து உள்ளே ஏறி ஒளிந்து கொண்டாள்.

தன் அருகே வந்தவனைக் கண்டதும் 'என்ன' என்பது போல் ஓர் பார்வை பார்த்தான் பரந்தாமன்.

''இது தேனிக்குப் போகும் ரோடுதானே...?''

''அது தெரியாமலா இவ்வளவு தூரம் வந்தீர்கள்?''

பரந்தாமன் கேள்வி கேட்டவனை ஏற இறங்கப் பார்த்தான். முதல் பார்வையிலேயே அவனிடம் தெரிந்த கவர்ச்சியும் அதி நாகரிகமான தோற்றமும் அவனுக்கு வெறுப்பைக் கிளப்பியது. கேள்வி கேட்டவன் உயர்தர ஜீன்ஸ் பேன்ட் அணிந்திருந்தான். ஆஷ் கலரில் டி.சர்ட் போட்டிருந்தான். அலையலையாய் கேசத்துடன் வெகு இளமையாய் அழகாய் இருந்தான். இது எல்லாவற் றையும் விட சிவந்த அவன் நிறம் தான் பரந்தாமனைப் பல்லைக் கடிக்க வைத்தது.



''வழி தெரியும் சார்... ஆனால் ஏதோ கலவரம்ன்னு ரோட்டில் டிராபிக் ஜாம் ஆகியிருந்ததே. அதனால் சுற்று வழியில் வந்தேன்.''

''நீங்க எந்த வழியில் வந்தால் எனக்கென்ன? இப்ப வந்த வழியைப் பார்த்துக்கிட்டுப் போறீங்களா? எனக்கு வேலை நிறைய இருக்க.''

''இங்கே நடுக்காட்டில் என்ன வேலை?'' அவன் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே கேட்டான்.

பரந்தாமனுக்கு கோபம் வந்தது.

''யோவ்... உன் வேலைக் கழுதையைப் பார்த்துக் கிட்டுப் போக மாட்ட? ஒரு தடவை சொன்னால் தெரி யாதா? இங்கே நாங்க என்ன வேலை பார்த்தால் உனக் கென்ன வந்தது? சுத்த சாவுக்கிராக்கி.''

''கூல்டவுன்... கூல் டவுன்... எதுக்கு சார் இவ்வளவு கோபப்படறீங்க? நீங்க யாரையோ தேடுவது போல் தெரிகிறது. நான் வேண்டுமானால் உங்களுக்கு ஹெல்ப் பண்ணட்டுமா?''

''எனக்கு... நீ ஹெல்ப் பண்ணப் போறியா? பாருடா... நான் யாருன்னு உனக்குத் தெரியுமா?''

''நீங்க யாருன்னு எனக்குத் தெரியாது சார். பட் போலீஸ் டி.ஐ.ஜி.யை எனக்கு நல்லாத் தெரியும். என் அங்கிள்தான் அவர். அவருக்கு ஒரு போன் போட் டோன்னு வைங்க. ஒரு போலீஸ் படையே கிளம்பி உங்க உதவிக்கு வரும். போடவா?''

''ஐயையோ...'' என்று அலறி விட்டான் பரந்தாமன்.

''ஏன் சார்? என்ன ஆச்சு?''

''உங்க உதவிக்கு ரொம்ப நன்றி சார். தயவு செய்து இடத்தைக் காலி பண்ணுங்க. நாங்க மனுசரைத் தேடலை.''

''வேற.. பேய் பிசாசை தேடுகிறீர்களா? ஏன் கேட்கிறேன்னா... இந்த நடுக்காட்டில் இரவு நேரத்தில் கரும்புக் காட்டில் மனிதர் இருக்க முடியாது. நான் சொன்னவைதான் இருக்கும்.''

''நாங்க பார்க்காத பேய், பிசாசா சார்? இப்ப உங்களைப் பார்த்தால் தான் பயமாயிருக்கு. போயிட்டு வாங்க சார்.''

''என்ன சார் இது. பேய்க்கு பயப்படாதவர் என்னைப் பார்த்து பயப்படுறீங்க. நானென்ன பேய் பிசாசை விட பயங்கரமானவனா? எனிவே.. குட்பை. காலா காலத்தில் வீடு போய்ச் சேருங்க.''

''நீங்களும் ஊரு போய் சேருங்க.''

''ஓ.கே.''

அவன் திரும்பி நடந்து காரில் ஏறிக் காரைக் கிளப்பினான். பின் சீட்டின் கீழே சுமித்ரா பதுங்கியிருக்க கார் கிளம்பிப் பறந்தது.

## 16



கார் வளைந்து வளைந்து மலைப் பாதையில் ஏறிக் கொண்டிருந்தது. ஒரு பக்கம் பசுமையான மரங்கள், மறு



பக்கம் கிடுகிடு பள்ளத்தாக்கு. தெரியும் வீடுகள். பின்னல் கோலம் போல வாய்க்கால்கள். அதிகாலை நேரத்தில் அந்தச் சூழல் மனதில் உற்சாகத்தைக் கிளப்ப சன்னமாய் விசிலடித்தபடி காரை ஓட்டிக் கொண்டிருந்தான் ஹரிஹரன். எங்கிருந்தோ ஓர் இனம் புரியாத உல்லாசம் அவன் மனதில் வந்து புகுந்து கொண்டிருந்தது. கட்டவிழ்த்த கன்று போல உள்ளம் துள்ளிக் குதித்தது. பொறுப்புக்கள் இல்லாத ஓர் விடுதலை உணர்வுடன் விடியலை அவன் வரவேற்றான்.

செவ்வாய்க்கிழமை நள்ளிரவிற்கு மேல் காரை பாண்டிச்சேரியை விட்டு வெளியே செலுத்தியவன் திண்டுக்கல்லை புதன்கிழமை காலை எட்டு மணி அளவில் அடைந்தான். அதிகமான மன உளைச்சலாலும் ஓய்வே இல்லாததாலும் மனமும், உடலும் சோர்ந்து இருந்தது. 'பார்ஷன்' ஹோட்டலுக்குள் காரை விட்டான்.

இறங்கி ரிசப்ஷனை அணுகி ரூம் போட்டவன்... குளித்து ரூம் சர்வீஸை அழைத்து டிபன் கொண்டு வரச் சொல்லி சாப்பிட்டு விட்டு உறங்கி விட்டான். மதியம் ஒரு மணி அளவில் எழுந்தவன் முகம் கழுவி காரை எடுத்துக் கொண்டு 'கைலாஷ்' ரெடிமேட்டிற்கு சென்றான். ஆண்களுக்கு மட்டுமான அந்தக் கடையில் சில உடைகள் வாங்கினான். மேலும் சில காஸ்மெடிக் அயிட்டங்களை வாங்கிக் கொண்டு ஹோட்டலுக்குத் திரும்பினான். மதிய உணவை வரவழைத்துச் சாப்பிட்டு விட்டு மீண்டும் படுத்து விட்டான்.

மூன்று மணியளவில் எழுந்து குளித்து புதிய உடைக்கு மாறியவன், புதிதாய் வாங்கியிருந்த டிராவல்



பேக்கில் வாங்கியிருந்த உடைகளையும் மற்ற பொருள்களையும் வைத்து பேக் பண்ணி கையில் எடுத்துக் கொண்டு ரிசப்ஷனில் ரூம் சாவியைக் கொடுத்து கணக்கை சரி பார்த்து முன் பணத்தை பெற்றுக் கொண்டு காரின் பின் சீட்டில் பேக்கை போட்டு விட்டு காரைக் கிளப்பினான்.

வத்தலக் குண்டைக் கடந்து, கருமாத்தூர் அருகே செல்லும் போது சாலையின் குறுக்கே கார்களும், பஸ்களும் அணிவகுத்து நிற்க டிராபிக் ஜாம் ஆகியிருந்தது.

''என்ன விஷயம்?'' அருகே நின்ற காரில் இருந்தவரிடம் விசாரித்தான்.

''கட்சித் தகராறு.. இப்போதைக்கு முடியாது போல இருக்கு.''

டேப் ரிகார்டரில் பாட்டை போட்டு விட்டு சாய்ந்து அமர்ந்தான். பாட்டின் ஒலிக்கு ஏற்ப கை விரல்கள் ஸ்டியரிங்கில் தாளமிட கண்மூடி சற்று நேரம் அமர்ந்திருந்தான். சுற்றிலும் இருள் பரவ ஆரம்பித்தது. பக்கத்திலிருந்த கார் கிளம்பிக் கொண்டிருந்தது. சத்தம் கேட்டு கண் விழித்தவன்,

''ரோடு கிளியர் ஆயிருச்சா?'' என்று கேட்டான்.

''எங்கே... இப்போதைக்கு கிளியர் ஆகும் போலத் தெரியவில்லை.''

''அப்போ.. நீங்க எப்படிப் போவீங்க...''

''எனக்குப் பக்கத்து கிராமம்தான் போகனுங்க. குறுக்கு வழியில் போகப் போகிறேன்.''

''ஓ.. அப்படி ஒன்று இருக்குதா? நானும் வரவா?''



'வாங்க.. வழி சொல்கிறேன்.''

அவரது காரைப் பின் தொடர்ந்து 'வண்டிப் பாதை' எனப்படும் மண் சாலையில் காடுகளுக்கு ஊடே தார் சாலையை விட்டு விலகி காரைச் செலுத்தினான் ஹரிஹரன்.

''இதுதான் எங்க கிராமம். வீட்டுக்கு வந்து காபித் தண்ணி குடிச்சுட்டுப் போங்கப்பு...''

முன்பின் தெரியாதவர்களையும் உபசரிக்கும் தென் தமிழக மண்ணின் பண்பைக் கண்டு வியந்தவன்,

''இருக்கட்டும் சார். நோ தேங்க்ஸ். எனக்கு வழி சொன்னால் போதும். எனக்கு நேரமாகி விட்டது'' என்று கூறினான்.

''இப்படியே நேராப் போயி சோத்துக் கை பக்கம் திரும்பினா மெயின் ரோடு வந்திடும். அது அப்படியே தேனிக்குப் போகுது.''

அவர் சொன்ன வழியிலேயே மெயின் ரோட்டிற்கு வந்து காரைத் திருப்பி ஓட்டியவனுக்கு இது தேனி போகும் ரோடுதானா?' என்று சந்தேகம் வந்து விட்டது.

யாரையாவது கேட்கலாமென்றால் ரோட்டில் ஒரு ஈ குஞ்சு காக்காய் கூட இல்லை. யோசனையுடன் காரை ஓட்டியபோது தூரத்தில் வெளிச்ச வெள்ளம் தெரிந்தது. அருகே நெருங்க நெருங்க அது டாடா சுமோ வண்டியின் முன் பக்க விளக்குகளின் வெளிச்சமென்பதை அறிந்தான். அந்த வெளிச்சத்தில் பத்து பனிரெண்டு ஆண்கள் ரோட்டோரமாய் இருந்த கரும்புக் காட்டில் இறங்கி தேடிக் கொண்டிருந்தார்கள்.

இவர்களிடம் வழி கேட்கலாம் என்று எண்ணி காரில் வேகத்தைக் குறைத்தவன் அவர்களைக் கடந்து சிறிது தூரத்தில் காரை நிறுத்தி விட்டு இறங்கி அவர்களை நோக்கிச் சென்றான்.

டாடா சுமோ வண்டியின் முன் நின்று கொண்டிருந்த ஆள்,

''தேடுங்கள்... இங்கேதான் கட்டாயம் இருக்க வேண்டும். தேடுங்கள்'' என்று கத்திக் கொண்டிருந்தான்.

இந்த நடுக்காட்டில் கரும்புத் தோட்டத்தில் இவர்கள் எதை அல்லது யாரைத் தேடுகிறார்கள் என்ற சந்தேகத்துடன் அவனை நெருங்கிப் பேசினான் ஹரிஹரன். அதே நேரம் காரின் பின்பக்கத்தில் ஏறிய சுமத்ரா அவன் பரந்தாமனிடம் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

'அடக்கடவுளே... இவன் பரந்தாமனுக்கு வேண்டியவனா...?'

அவர்கள் பேசிக் கொண்டிருந்தது காதில் விழாததால் சுமித்ரா பயந்து போனாள் அவனுக்குத் தெரியக்கூடாது என்று பின் சீட்டின் இடைவெளியில் பதுங்கிக் கொண்டாள்.

காலடிச் சத்தம் நெருங்கி வந்தது. மூச்சுவிடவும் பயந்து சுமித்ரா வாயைப் பொத்திக் கொண்டாள். கார் கிளம்பியது. சாலையில் விரைந்தது.

'இந்தக் காரிலிருந்து எப்படித் தப்பிப்பது? இவனுக்கு மட்டும் நான் காரில் ஒளிந்திருப்பது தெரிந்து விட்டால் பரந்தாமனிடம் நேரே கொண்டு போய் சேர்த்து விடுவான்.'



காரின் பின் சீட்டுக்கடியில் சுருண்டு படுத்திருந்த சுமித்ராவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

'அம்மா.. நான் திரும்பவும் உன்னைப் பார்ப்பேனா?'

ஹரிஹரனின் கார் போடியைத் தொடும்போது நேரம் நள்ளிரவைத் தொட்டுக் கொண்டிருந்தது. அவனுக்கு பசி எடுக்க ஆரம்பித்தது.

'இந்த நோத்தில் எந்த ஹோட்டல் திறந்திருக்கும்.'

ஒரு ஹோட்டல் திறந்திருந்தது. கார்க் கதவைத் திறந்து கொண்டு இறங்கியவன் கார் கதவுகள் நான்கையும் பூட்டி விட்டுப் போய் விட்டான்.

அவன் இறங்கியதை அறிந்ததும் சுமித்ரா எழுந்து கார் கதவைத் திறக்க முயற்சி செய்தாள். ஆனால் அது பூட்டியிருந்தது.

'கடவுளே.. காரிலிருந்து இறங்கி விட்டால் எப்பாடு பட்டாவது வீடு போய் சேர்ந்து விடலாமே. இது போடி போல இருக்கே. இங்கேதானே பரமன் மச்சானின் அக்கா வீடு இருக்கு. காயின் போனிலிருந்து ஒரு போன் போட்டால் பறந்து வந்து கூட்டிப் போயிடுவாங்களே.'

சுமித்ராவின் தவிப்பாய் தவித்தாள். ஆனால் அவளால் காரிலிருந்து வெளியேறவும் முடியவில்லை. அவள் உள்ளேயிருந்து கார் கதவைத் தட்டியதும் யார் கவனத்தையும் ஈர்க்கவுமில்லை.

ஹரிஹரன் சாப்பிட்டு விட்டுத் திரும்பி வந்து விட்டான். சுமித்ரா பழையபடி பதுங்கினாள்.

கார் வேகம் பிடித்து ஓட ஆரம்பிக்க லேசாய் குளிர் ... ஆரம்பித்தது. சுமித்ரா காரின் கார்பெட்டின்



இதத்தில் தாவணியை இழுத்துப் போர்த்திக் கொண்டு பேக்கில் தலை வைத்து தன்னையறியாமல் தூங்க ஆரம்பித்தாள்.

போடி மெட்டில் கார் மூணாறிற்கு மலைப்பாதையில் ஏற ஆரம்பித்தது. அதிகாலையில் மூணாரை அடைந்து விட்ட ஹரிஹரன் உற்சாகத்துடன் நண்பனின் எஸ்டேட்டிற்கு காரைச் செலுத்தினான்.

மலைச்சரிவில் அழகாய் கட்டப்பட்டிருந்த அந்த பங்களாவிற்குப் போகும் பாதையின் இருபுறமும் சீராக பாத்தி போடப்பட்டு வளர்ந்த தேயிலைச் செடிகள் காலைப் பனியின் குளுமையோடு காட்சி அளித்தன. எங்கு பார்தாலும் பசுமை, பசுமை... மலைப் பிரதேசத்திற்கே உரிய குளிர் உடலைத் துளைத்தது. உயரமாய் தெரிந்த மலையின் முகடுகளில் மேகம் தவழ்ந்து சென்றது. பனி மூட்டத்தின் இடையே பாதை மங்கலாய் தெரிந்தது. தரை பிரதேசத்தில் காண முடியாத பறவைகள் பல இங்கும் அங்கும் பறந்து கொண்டிருந்தன.

'வான் குயில்' எஸ்டேட் பங்களாவின் பிரம்மாண்டமான நுழை வாயிலின் எதிரே காரை நிறுத்திய ஹரிஹரன் தன் செல்போனில் தன் நண்பன் விஷாலின் எண்களை அழுத்த மறுமுனையில் அவன் குரல் கேட்டது.

''ஹாய்... ஹரி... எப்படி இருக்கிறாய்?''

''எங்கே இருக்கிறாய்ன்னு கேளு.''

''இது என்னடா கேள்வி.. ஒன்று சென்னையில் இருப்பாய் இல்லாவிட்டால் பாண்டிச்சேரியில் இருப்பாய்.''



''இரண்டு ஊரிலும் இல்லை. உன் வீட்டு வாசலில் இருக்கிறேன்.''

''வாட்... மூணாறிற்கு வந்திருக்கிறாயா... ரூபா.. அம்மா... வாசவி..'' மறுமுனையில் விஷால் உற்சாகமாய் தன் மனைவி தாய், தங்கையை அழைப்பது கேட்டது.

சிரித்துக் கொண்டே செல்போனை அணைத்து சட்டைப் பாக்கெட்டில் போட்டவன்... நண்பனின் வருகைக்காக காத்திருந்தான்.

பங்களாவின் கேட் திறந்தது. வாட்ச்மேன் வணக்கம் சொன்னான். ஹரிஹரன் செல்போனில் உரக்கப் பேசும் போதே விழித்துவிட்ட சுமித்ரா திகைத்தாள்.

'இது எந்த ஊர்? எங்கே வந்திருக்கிறேன்?'

ஹரிஹரன் காரை பங்களாவிற்குள் செலுத்தினான். நீண்ட பாதையில் ஓடி மிகப் பெரிய போர்டிகோவில் கார் நின்றது.

வீட்டு வாசலிலேயே ஹரிஹரனை வரவேற்க விஷால் மனைவி ரூபாவுடனும் தாய் பத்மாவதியுடனும் தங்கை வாசவியுடனும் நின்று கொண்டிருந்தான்.

## 17



''ஹரி.. வாடாவா.. என்னடா திடீர்ன்னு வந்திருக்க? ... கூட்டி வந்திருக்கலாமே..''

விஷால் காரை விட்டிறங்கிய நண்பனைப் பார்த்து கைகளை விரிக்க,

''சரியாப் போச்சுபோ.. நானே அவர்களுக்குத் தெரியாமல் ஓடி வந்திருக்கிறேன்டா..'' என்றவாறு அவன் கைகளுக்குள் புகுந்து கொண்டான் ஹரிஹரன்.

''தெரியாமல் வந்திருக்கிறாயா? வாட் இஸ் தி மேட்டர்டா?''

''எல்லாம் மேரேஜ் மேட்டர்தான். அவர் நிச்சயம் பண்ணின பெண்ண நான் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை.''

''ஏன்... ஏதேனும் காதலில் சிக்கி விட்டாயா?''

''காதலில் சிக்கியது மாத்திரமில்லை. பெண்ணைக் கூட்டிக் கொண்டு வீட்டை விட்டே ஓடி வந்து விட்டேன். எங்களுக்கு நீதான் திருமணம் பண்ணி வைக்க வேண்டும். ஹா ஹா...''

இன்னார்க்கு இன்னார் என்பது இறைவன் எழுதிய விதி. ஹரிஹரன் யார்? சுமித்ரா யார்? இருவரும் எதிர் மறைத் துருவங்கள்.

சென்னையில் பிறந்து வெளிநாட்டில் படித்து மிகப் பெரிய ஏற்றுமதி இறக்குமதி நிறுவனத்தின் முதலாளியாக இருக்கும் ஹரிஹரன் எங்கே...

தேனிக்கு அருகில் உள்ள கிராமத்தில் பிறந்து மதுரையில் ஹாஸ்டலில் தங்கி படிக்கும் சாதாரண கிராமத்துப் பெண்ணான சுமித்ரா எங்கே.

இருவருக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அவனோ வைரங்களில் ஒளிரும் ஆடைகளை அணியும் உயர்தர



குடும்பத்தில் பிறந்த அதி நாகரிக பரம்பரைப் பணக்காரன்.

அவளோ தங்கத்தை பெருமையாய் பேசும் கிராமத்தின் பெரிய வீடு என்று சொல்லப்படும் சிமெண்ட் போட்ட மாடி வீட்டின் செல்லப் பெண்.

அவன் இன்றைக்கு இந்தியா.. நாளைக்கு பிரான்ஸ்.. அதற்கு மறுநாள் லண்டன் என்று விமானத்தில் பறந்து கொண்டிருப்பவன்.

அவள் வருடத்தில் நான்கு முறை கல்லூரி போவதற்காக பஸ்ஸில் ஏறுவதை மிகப் பெருமையாய் கூறிக் கொள்ளும் வீட்டுப் பறவை.

யாருக்கு யார் இணை?

நிம்மதியாய் குடும்பம் என்ற கூட்டில் பாதுகாப்பாய் இருந்தவள் ஒரே இரவில் குடும்பத்தைப் பிரிந்து அறியாத ஆண் மகனின் காரில் ஏறி அவனறியாமல் பதுங்கிக் கொள்ள வைத்தது யார் செய்த செயல்?

பிடிக்காத திருமணத்தில் இருந்து தப்பிக்க நிம்மதி தேடி மூணாறு வந்தவன், தன் காரில் பாதுகாப்பு தேடி ஒரு பெண் ஏறி ஒளிந்து கொண்டதை அறியாமல் நண்பனின் வீட்டுக்கு வந்து விளையாட்டாய் வார்த்தையை விட்டது எதனால்?

அதுவும் காதலித்த பெண்ணோடு வீட்டை விட்டு ஓடி வந்ததாய் விளையாட்டாய் அவன் ஏன் சொன்னான்?

அதுதான் இறைவனின் விளையாட்டு.

ஹரிஹரன் சப்தமாய் சிரித்துக் கொண்டே விஷாலின் தோள்களைக் கட்டித் தழுவிக் கொண்டிருக்கையில்,



''வாம்மா... வா.. பயப்படாதே. நான் உன் அம்மா போல.. இது உன் வீடுன்னு நினைத்துக் கொள்'' என்றாள் பத்மாவதி.

'யாரை அழைக்கிறாள்?' என்று புரியாமல் ஹரிஹரன் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு தூக்கி வாரிப் போட்டது.

கார் கதவைத் திறந்து கொண்டு ஓர் அழகிய பெண் இறங்கினாள். பாவாடை தாவணியில் தமிழ் பெண்ணின் கலாச்சாரத்தைப் பிரதிபலித்தாள். அழகான அகன்ற கண்களில் கடலளவு அச்சம் இருந்தது. நீண்ட பின்னல் முழங்காலைத் தொட்டுக் கொண்டிருந்தது. கடலை மாவின் நிறம். ஒல்லியாய் உயரமாய் இருந்தாள். தோளில் ஓர் டிராவல் பேக்கை மாட்டியிருந்தாள்.

'யார் இவள்?' என்று ஹரிஹரன் விழிக்க,

''பார்த்துக்க வாசவி. இவள்தான் உன் ஹரிஹரன் அண்ணாவுடைய காதலி. உன் வருங்கால அண்ணி...'' விஷாலின் மனைவி ரூபா அந்தப் பெண்ணின் கரம் பிடித்துக் கொண்டாள்.

'என் காதலியா..? வருங்கால மனைவி வேறா..? என்ன விசித்திரம்டா இது? இவள் பெயர் என்னவென்று கூட எனக்குத் தெரியாது. இவள் என் காதலியாம்' என்று ஹரிஹரன் நினைக்கும்போதே,

''உன் பெயர் என்னம்மா?'' என்று பத்மாவதி கேட்டாள்.

தன் 'வருங்கால மனைவி' என்று நின்று கொண்டிருக்கும் பெண்ணின் பெயரை அறிய ஹரிஹரனும் ஆவ



... நோக்க விஷால் அவன் முதுகில ...

லாய் அவளை ...

ஓர் அறை வைத்தான்.

''ஏண்டா.. என்னவோ ஊர், பெயர் தெரியாதவங்களை உற்றுப் பார்ப்பது போல் அவங்களை அந்தப் பார்வை பார்க்கிறாய். தாலி கட்ட இழுத்துக் கொண்டு ஓடிவந்து விட்டு அறிமுகமில்லாதவங்களைப் பார்ப்பது போல் டார்க்கிறான்பார்.. தடியன்...''

'அடப்பாவி!' என்றிருந்தது ஹரிஹரனுக்கு.

'இவள் யாரென்று உண்மையிலேயே எனக்குத் தெரியாதுடா. இவளுடைய ஊரெது.. பெயரென்ன என்று எதுவுமே தெரியாதுடா..'

''என் பெயர் சுமித்ரா...'' என்றாள் அவள் கண்களை இமைகளால் மூடி மூடித் திறந்தவாறு. பயந்து தெரிந்தாள். உடை கசங்கி.. தலை முடி கலைந்து இருந்த அந்தக் கோலத்திலும் பார்க்க மிக மிக அழகாய் இருந்தாள்.

'இயற்கை அழகு என்பது இதுதான் போல. ஹரிஹரன் விழி விரிய அவளைப் பார்த்தான். புயலுக்குத் தப்பி ஓடி வந்தவனைத் தென்றல் தேடி வந்து அரவணைத்துக் கொண்டதைப் போல் உணர்ந்தான் அவன்.

நான் தேடிய பெண் இவள்தான். பட்.. இவள் யாரென்று தெரியவில்லையே. எப்படி என் காருக்குள் வந்தாள். ஏன் வந்தாள்? ஏதேனும் குற்றம் செய்துவிட்டு தப்பி ஓடி வந்திருப்பாளோ.'

சந்தேகத்துடன் அவள் விழிகளை ஊடுருவிப் பார்த்தான் ஹரிஹரன். அவன் பார்வையின் வேகம் தாளாமல் சுமித்ரா தலையைக் குனிந்து கொண்டாள். அவள் உடல் நடுங்கியது.

''அடேங்கப்பா.. உங்கள் சிநேகிதரை என்னவோன்னு நினைத்தேன். இந்தப் பூனையும் பால் குடிக்குமான்னு சாது போல் இருந்து கொண்டு நம் முன்னாலேயே அவருடைய காதலியை விழுங்கி விடுவது போல் என்ன பார்வை பார்க்கிறார் பாருங்கள். நீங்களும் இருக்கிறீர்களே..'' ரூபா கணவனின் காதுகளில் கூறியது எல்லோருக்கும் கேட்டுத் தொலைத்தது.

''அவன் காதலித்து விட்டுக் கல்யாணம் பண்ண கூட்டி வந்திருக்கிறாண்டி. அப்படித்தான் பார்ப்பான். நான் உன்னைக் கல்யாணம் பண்ணி வைத்து விட்டார்களேயென்று காதலிக்க முயற்சி பண்ணிக் கொண்டு இருக்கிறேன். என் பார்வை இப்படித்தான் இருக்கும்'' விஷால் மனைவிக்கு அவளை விட உரத்த குரலில் பதில் கூறினான்.

பத்மாவதி தர்ம சங்கடத்துடன் மகளைப் பார்த்தாள். வயதுப் பெண்ணை வைத்துக் கொண்டு பேசுகிற பேச்சா இது?

''வாசவி.. சுமித்ராவை உள்ளே கூட்டிக் கொண்டு போம்மா'' என்று மகளுக்கு வேலை கூறி அவளை அங்கிருந்து அகற்ற முயன்றாள் அவள்.

வாசவி சுமித்ராவின் தோள் மீது கை போட்டு அணைத்துக் கொண்டாள்.

''வாவ்... நீங்க எவ்வளவு அழகாய் இருக்கறீங்க தெரியுமா அண்ணி. எங்க ஹரிஹர அண்ணா கல்யாணம்ன்னு சொன்னால் காத தூரம் ஓடுவார். அவரே உங்களைக் கூட்டிக் கொண்டு வந்திருக்காரென்றால் நீங்கள் அதற்கு தகுதியுடையவர்கள்தான் அண்ணி. ஐ



லைக் யு வெரிமச். யு ஆர் ஸோ.. ஸ்வீட், எங்க ஹரி அண்ணா செம லக்கி.''

சுமித்ரா பதறிக் கொண்டிருந்தாள். யாரோ ஒருவனோடு அவளைச் சம்பந்தப்படுத்திப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவனும் அவளை 'சைட்' அடித்துக் கொண்டு 'நெடுமரம்' போல் நின்று கேட்டுக் கொண்டு இருக்கிறானே. இவனுக்கும், தனக்கும் சம்பந்தமில்லையென்று எப்படிச் சொல்வது? இங்கேயிருந்து உடனே வெளியேறியாக வேண்டுமே... எப்போது வெளியேறுவது?

அவள் கைகளைப் பிசைந்து கொண்டிருக்கையில் அந்த 'நெடுமரமே' வாய் திறந்து பேசினான்.

''உள்ளே போ சுமித்ரா... குளித்துச் சாப்பிட்டு விட்டு.. நிதானமாய் என்ன செய்வதென்று யோசிக்கலாம். பயப்படாதே.''

அவனது கண்களில் ஏதோ செய்தி இருந்தது. ஓரளவு புரிந்து கொண்டவளாய் அவள் வாசவியைத் தொடர்ந்து தன் பேக்கைத் தூக்கிக் கொண்டு உள்ளே போனாள்.

காரின் பின் சீட்டில் கதவைத் திறந்து தனது டிராவல் பேக்கை எடுத்துக் கொண்ட ஹரிஹரன் விஷாலைப் பார்த்துக் கூறினான்.

''உடம்பெல்லாம் பூட்டுக்கு பூட்டு வலிக்குதுடா விஷால். முதலில் குளித்துவிட்டு அம்மா கையால் பரிமாறும் சாப்பாட்டை ஒரு வெட்டு வெட்டுகிறேன். அப்புறம் எல்லாவற்றையும் பற்றிப் பேசலாமே.''

''அதுவும் சரிதான். நீயே பெரிய அட்வென்ஜரைச் செய்து விட்டு வந்திருக்கிறாய். உன் காதலியைப்



பார்த்தால் கட்டுப்பாடான கிராமத்துக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் போல் தோன்றுகிறது. உன்னை நம்பி உன் பின்னால் வந்திருக்கிறாங்கன்னா உங்க காதல் எவ்வளவு உறுதியானதுன்னு தெரியுது.''

விஷால் கூறக்கூற ஹரிஹரன் வாய் விட்டுக் கடகடவென்று சிரித்தான். கண்களில் நீர் வருமளவிற்கு விழுந்து விழுந்து சிரித்தான்.

'இப்படி மனம் விட்டுச் சிரித்து எத்தனை நாள்கள்... இல்லையில்லை.. வருடங்களாகின்றன... யாரென்று ஊர், பெயர் தெரியாத... அவன் முன்னே பின்னே பார்த்திராத ஒருத்தி.. தென்றல் போல் தெரிகின்றாள். மான் குட்டி போல் மருளுகிறாள். வழி தவறிய ஆட்டுக் குட்டி போல் மிரளுகிறாள். பாவம்... அவளுக்கும் அவனுக்கும் காதலாம். அது உறுதியானதாம். அவர்கள் இருவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு சினிமாவில் வரும் காதலர்கள் போல் ஸ்லோ மோஷனில் ஓடோடி வேறு வந்திருக்கிறார்களாம்.. என்ன ஓர் வேடிக்கை..!

## 18



''நேற்று முதல் நீ யாரோ.. நான் யாரோ
இன்று முதல் நீ வேறோ.. நான் வேறோ...''

ஹாலில் இருந்த டி.வி.யில் ஏதோ ஓர் சேனலில் பழைய பாடல் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.



வீட்டிற்குள் நுழைந்த ஹரிஹரன் அந்தப் பாடலில் லயித்தான்.

யார் அவள்? நேற்று வரை அவனறியாதவள்... இன்று அவன் காரிலிருந்து அவன் கண் முன்னே இறங்கி நின்றவள்.

எது, எப்படியோ.. ஹரிஹரனுக்கு இந்த நிலை மிகவும் பிடித்திருந்தது. சாயப் பூச்சுக்களின்றி இயற்கை வனப்புடன் முகம். அலங்காரமில்லாத அதி அற்புதமான அழகு. மேலாடை சிறிது விலகினாலும் பதறி சரி பண்ணிக் கொள்ளும் குணம். அந்நியர் முன் நிற்க பயந்து மருண்டு நின்ற அவளது தோற்றம்... நினைக்க நினைக்க இவளை முதலிலேயே பார்த்திருந்தால் கட்டாயம் தான் காதலித்திருப்போம் என்றே ஹரிஹரனுக்குத் தோன்றியது.

ஆர்ப்பாட்டமாய் கொட்டும் நயாகரா நீர் வீழ்ச்சியைத் தாங்க முடியாது என்று விலகி வந்தான். அவன் கண் முன் அழகிய நதியாய் எழுந்து நிற்கின்றாள் இந்தப் பெண்.

மூணாறு வந்தவுடனே எதிர்பாராமல் நேர்ந்த இனிய திருப்பம் கண்டு ரசித்துச் சிரித்துக் கொண்டான் ஹரி.

'பிஸினெஸ்ஸில் ஆயிரம் சவால்களை எதிர் கொண்டு ஜெயித்து வெற்றி வாகை சூடியிருக்கிறேன். அழகிய பெண்ணின் மனதை இதுவரை ஜெயித்தது இல்லையே... யார் இவள்?'

சிந்தனையுடனே குளித்துச் சாப்பிட வந்தான் ஹரிஹரன். சாப்பிடும் அறையில் அவளும் இருந்தாள். குளித்து முடித்து அன்று பூத்த பனிமலர் போல் அவள்

நின்ற தோற்றம் மூணாறு மலையின் சீதோஷ்ணம் ஏற்படுத்திய ஜிலுஜிலுப்பை விட அதிக ஜிலுஜிலுப்பை அவனுள் ஏற்படுத்தியது.

கருநீலப் பட்டுப் பாவாடை பஞ்சுமிட்டாய் ரோஸ் கலரில் கெட்டி ஜரிகை பார்டர். அதே பாவாடைத் தாவணியிலேயே வெட்டித் தைக்கப்பட்ட ஜாக்கெட். பார்டரின் ரோஸ் கலரில் ஷிபான் தாவணி. அழகாய் பின் பண்ணி தாவணியின் ஒரு முனையை இழுத்துச் செருகியிருந்தாள். நீண்ட கருங் கூந்தலை வாரிப் பின்னலிட்டிருந்தாள். பின்னலில் பத்மாவதி வைத்து விட்டிருந்த நெருக்கிக் கட்டப்பட்டிருந்த முல்லைச் சரம். காதுகளில் தங்க ஜிமிக்கிகள். கைகளில் இரண்டு தங்க வளையல்கள். கழுத்தில் தடிமனான தங்கச் செயின் இரண்டு அன்னப் பறவைகள் ஒன்றோடொன்று முகம் பார்த்துக் கொள்வதைப் போலிருந்த டாலருடன் தொங்கிக் கொண்டிருந்தது. டாலரின் கீழ்புறம் வரிசை கட்டியிருந்த தங்க முத்துக்கள்.

அவளுடைய நகைகளே அவளது கிராமிய பழமை சார்ந்த நாகரிகத்தை விளக்க.. இது போன்ற பெண்ணை இதற்கு முன் பார்த்திராத பட்டினத்து ஹரிஹரன் ஆச்சர்யத்துடன் அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

'ஏன் இப்படிப் பார்க்கிறான்?' சுமித்ராவிற்கு முகம் சிவந்தது.

'இவன் என்ன பெண்களையே பார்த்ததில்லையா? இப்படி விழுங்கி விடுவது போல் பார்த்தால் என்ன அர்த்தம்? இவர்கள் வேறு என்ன என்னவோ சொல்கிறார்கள். இந்தச் சமயத்தில் இவன் இப்படிப் பார்த்தால் அது உண்மையென்று ஆகி விடாதா?'



அவள் சங்கடத்துடன் இதழ் கடித்துத் தலை கவிழ்ந்தாள். அல்லி மலர் போன்ற அவள் முகம் குனிந்து நிலம் பார்த்த விதம் ஹரிஹரனை ஈர்த்தது. அவன் பார்த்துப் பழகிய பெண்கள் வேறு ரகம்.

நுனி நாக்கில் ஆங்கிலம் பேசி.. நேராய் முகம் பார்த்து ஆண், பெண் வித்தியாசமில்லாமல் பழகும் பெண்களைத்தான் அவன் அறிவான்.

இவளைப் பார்த்தது போல் அவன் வேறு எந்தப் பெண்ணையும் பார்த்தது இல்லை. இப்படி வைத்த கண் வாங்காமல் அவன் அறிந்த பெண்களில் ஏதாவது ஒரு பெண்ணை அவன் பார்த்திருந்தால் இந்நேரம்.

'ஹேய் ஹரி.. வொய் ஆர் யு லுக்கிங் திஸ் டைப் ஆப் மேனர்ஸ்? வாட் டு யு வான்ட்? ஆர் யு மேட்?' என்று கிண்டலடித்துச் சிரித்திருப்பார்கள்.

இவளோ அவன் விழி பார்க்க முடியாமல் அவளது விழி தாழ்த்திக் கொள்கிறாள்.

'நாணம்..!'

அவனறியாதது.. அவளிடம் அவன் அறிந்தது. இந்த நாணம்தான் ஒரு பெண்ணுக்கு எத்தனை அழகைக் கொடுக்கிறது? தன் பார்வையில் நாணம் கொண்டு ஒரு பெண் தலை சாய்ந்தால் அச்செய்கை ஒரு ஆணுக்கு எத்தனை கர்வத்தைக் கொடுக்கிறது?

பாண்டிச்சேரியில் முதன்மையான பணக்காரன் என்ற பெயர் தராத கர்வத்தை... தொடங்கிய சில வருடங்களிலேயே சென்னையில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறக்கும் மிகச் சிறந்த தொழிலதிபன் என்ற பெயர் தராத கர்வத்தை... அவளது நாணம் அவனுக்கு அளித்தது.



ஹரிஹரனின் ஆண்மை அவள் நாணம் கண்டு கர்வம் கொண்டது.

"டேய்... எத்தனை தடவைதான் சொல்வது? சாப்பிட உட்காரேன்டா. எவ்வளவு நேரம்தான் சைட் அடிப்பாய். உன் காதலிதானே. முதலில் சாப்பிட்டு விட்டு அப்புறம் சைட் அடி. கிணற்று நீரை ஆற்று வெள்ளம் கொண்டு போகப் போவதில்லை.. இவங்க உன் வீட்டுப்புறா? நின்று நிதானமாய் அவங்களிடம் காதல் பேசு.. முதலில் இப்போது சாப்பிடு.."

விஷால் ஹரிஹரனின் தோளைப் பிடித்து நாற்காலியில் அமர வைத்தான். ஹரிஹரனின் பார்வை சுமித்ராவை விட்டு விலகவில்லை. அவன் பார்வை வினவியது.

'நீ என் வீட்டுப் புறாவா?'

சுமித்ரா தடுமாறி விட்டாள். என்ன மாதிரியான பார்வை இது... இவன் முன்னால் எப்படி அமர்ந்து சாப்பிடுவது? தவிப்புடன் பத்மாவதியை நோக்கினாள்.

"நான் அப்புறமாய் சாப்பிட்டுக் கொள்கிறேனே..."

'களுக்'கென்று வாய் பொத்திச் சிரித்தாள் வாசவி.

"அது சரி... நானும் அப்புறமாய் சாப்பிட்டுக் கொள்கிறேனென்று எங்கள் ஹரிஹரன் அண்ணன் உங்கள் பின்னால் வந்து விடுவார்... பாவம்... அவர் உங்களைக் கடத்திக் கொண்டு வரும் டென்ஷனில் எப்போது சாப்பிட்டாரோ என்னவோ... அவர் பசி தாங்க மாட்டார் அண்ணி. பேசாமல் உட்கார்ந்து சாப்பிட்டு விடுங்கள்."

சுமித்ரா வார்த்தை வளர்க்காமல் பட்டென்று அமர்ந்து விட்டாள். இன்னும் தயங்கினால் என்னவெல்லாம் கேட்க வேண்டி வருமோ.. என்ற பயம் அவளுக்கு.



'இதிலிருந்து எப்படித் தப்பிப்பது?'

"வாவ்.. இட்லியும் கோழி வறுவலுமா.. கிரேட் காம்பினேஷன். அம்மா.. உங்க கைப்பக்குவமே தனிம்மா... ஆமாம். அப்பா எங்கே காணோம்? நான் வந்ததிலிருந்து என் கண்ணில் படவேயில்லையே..." ஹரிஹரன் சாப்பிட்டுக் கொண்டே வினவினான்.

"அவர் சிநேகிதர் ஒருத்தருக்கு உடம்பு சரியில்லை. பார்த்துவிட்டு வருகிறேன்னு நேற்றுத்தான் கேரளா போனார். நாளைக் காலையில் வந்து விடுவார். சுமித்ரா.. என்னம்மா இரண்டு இட்லிகளோடு எழுந்திருக்கப் பார்க்கிறாய்.. இன்னும் இரண்டு சாப்பிடு..."

"போதும்மா..."

"என்ன போதும்? மூச்... வாயைத் திறக்காமல் இந்த இட்லிகளைச் சாப்பிட்டு விட்டுத்தான் எழுந்திருக்க வேண்டும். அசைவம் பிடிக்கும்தானே...?"

'எனக்கா அசைவம் பிடிக்காது..? எங்கள் வீட்டில் கோழி என்றால் இரண்டு கோழி மீனென்றால் நான்கு கிலோ... என்று உணக்கையாய் சமைத்து வைப்பார்கள்... தின்கப் படித்தக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள் நான். இப்போது ரசித்து ருசித்துச் சாப்பிடும் நிலையிலா நான் இருக்கிறேன்?'

சுமித்ரா தனக்குள் நொந்து கொண்டே சாப்பிட்டு முடித்தாள். எழுந்து கை கழுவிவிட்டு தயங்கி நின்று ஹரிஹரனைப் பார்த்தாள்.

'இங்கேயிருந்து வெளியேற இவன் துணை வேண்டுமே...'

அவனும் அப்போது அவளையேதான் பார்த்துக் கொண்டிருந்தான். கவலை படிந்த அவள் கண்களைக் கண்டதும் ஆறுதல் அளிக்கும் புன்னகையை உதிர்த்தான்.

"உன்னைப் போல் என்னால் அரை குறையாய் சாப்பிட்டு வர முடியாது. நான் சாப்பாட்டுப் பிரியன். அதுவும் அம்மாவின் கைச் சமையலுக்கு தீவிர ரசிகன். எப்போதோ ஓர் முறைதான் இங்கு வருவேன். அடுத்து எப்போது வர முடியுமோ?"

"ஏன் அண்ணா... நீங்களும் அண்ணியும் ஹனிமூனுக்கு இங்கே வர வேண்டியதுதானே..."

வாசவி கூறவும் ஹரிஹரன் சுமித்ராவை ஆழ்ந்து ஓர் முறை பார்த்தான். அவன் எதிர்பார்த்தது போல் அவள் கண்களில் கலக்கம் மறைந்து நாணம் குடி கொண்டது. ஹரிஹரன் லேசாய் உதடு கடித்துக் கொண்டான். அவன் கண்கள் மின்னின. இது போன்றதோர் உணர்வை இதற்கு முன் அவன் அனுபவித்தது இல்லை.

"ஏன் வாசவி.. இப்போதே ஹனிமூனை கொண்டாடக் கூடாதா?" ஹரிஹரன் வாசவியைப் பார்த்துக் கொண்டே சுமித்ராவைப் பார்த்துப் புருவத்தை உயர்த்தினான்.

'என்ன தைரியம்!'

சுமித்ராவின் மனதில் கோபம் தோன்றுவதற்குப் பதில் என்னவென்று அவளுக்கேப் புரியாத இனம் விளங்காத இதம் தோன்றியது.

'அட அறிவு கெட்ட மனமே! இவன் யாரோ.. எவரோ.. கொஞ்ச நேரத்தில் அவனிடம் நடந்ததைக் கூறி விட்டு



விலகிச் சென்று விட வேண்டிய நிலையில் இருந்து கொண்டு அவனிடம் சொக்கிப் போய் நிற்கிறாயே..'

தன் மனதை கடிந்து கொண்டாள் சுமித்ரா. ஆனால் சற்று நேரத்தில் தோட்டத்தில் தனிமையில் அவனைச் சந்தித்தபோது அவளுக்கு எல்லாம் மறந்து விட்டது. அவன் அருகாமை மட்டுமே நினைவில் நின்று தொலைத்தது.



19

தேனிலவை இப்போதே கொண்டாட விரும்பிய ஹரிஹரனின் வார்த்தைகளைக் கேட்ட வாசவி கை கொட்டிச் சிரித்தாள்.

"அண்ணி... ஹரி அண்ணா உங்களிடம்தான் கேட்கிறார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"நானா... நான் என்ன சொல்ல?" சுமித்ரா சங்கடத்துடன் கூற,

"என்ன சொல்வதா? பதிலைச் சொல்லு" என்றான் ஹரிஹரன் விஷமப் புன்னகையுடன்.

"என்ன பதிலைச் சொல்ல?" சுமித்ரா ஹரிஹரனை லேசாய் முறைத்தாள். அவனோ அவளது முறைப்பை ரசித்துச் சிரித்தான்.

"என்ன பதில் சொல்வதா? தேனிலவை இங்கேயே... இப்போதே.. கொண்டாடுவதா.. இல்லை வேண்டாமா?"



சுமித்ரா இப்போது இதழ் கடித்தாள்.

'இவன் என்ன இவளை வம்புக்கு இழுக்கிறானா?'

'என்னை வம்புக்கு இழுக்க நீயென்ன என் மாமனா... இல்லை.. மச்சானா..' என்பது போல் ஓர் கித்தாய்ப்பு பார்வை பார்த்தபடி..

"முதலில் நீங்கள் ரசித்துச் சாப்பிடும் காலை டிபனை உள்ளே தள்ளி முடிக்கவே இன்றைய பொழுது போய் விடும். நாளைப் பொழுது விடிந்தால் திரும்பவும் அம்மாவின் கைப் பக்குவத்தில் மீன் வறுவல் காத்திருக்கும். நீங்கள் டைனிங் டேபிளே கதியென்று உட்கார்ந்து விடப் போகிறீர்கள். நீங்கள் சாப்பிட்டு விட்டு இப்போது வந்து விடுவீர்கள். பேசி விடலாமென்று ஒரு மணி நேரமாய் நானும் காத்திருக்கிறேன். நீங்கள் சாப்பிட்டு முடித்த பாடில்லை. பேச்சு வார்த்தையே இப்படியிருக்கும்போது நீங்களும் நானும் ஹனிமூன் கொண்டாடி... ம்ஹூம்" என்று கழுத்தை ஒரு வெட்டு வெட்டினாள்.

"மெல்ல.. என்னுடன் பேச உனக்கு இவ்வளவு ஆசையிருக்கும்போது அதில் பாதியாவது எனக்கு இருக்காதா...? நீ தோட்டத்திற்கு போ... உன் பின்னால் பறந்து கொண்டு வந்து விடுகிறேன்." ஹரிஹரன் அவளுக்கு குறிப்பை உணர்த்தினான்.

"பாரு ரூபா.. பேச்சோடு பேச்சாய் மீட்டிங் பிளேஸை பிக்ஸ் பண்ணி விட்டான் பார்.. அதுதான் என்னுடைய பிரண்ட்" விஷால் தோழனைப் புகழ,

"ரொம்பப் பீற்றிக் கொள்ளாதீர்கள். சண்டை போடுவது போல் போட்டு பேச்சு வாக்கில் உன்னோடு பேச வேண்டும் எழுந்து வா' என்று சொல்லாமல் சொன்னது



யார்? சுமித்ரா தானே.. இந்த டெக்னிக் யாருக்கு வரும்" ரூபா சுமித்ராவைப் பாராட்டினாள்.

அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் ஹரிஹரன் மேல் ஓர் பார்வையை வீசிவிட்டு சுமித்ரா அறையை விட்டு வெளியேற முயன்றாள்.

"நில்லுங்கள் அண்ணி. நான் வந்து காட்டுகிறேன்" என்று கூறியபடி வாசவி எழுந்தாள்.

"எதைக் காட்டப் போகிறாய்?"

"வேறு எதை? தோட்டத்தைத்தான். நீங்கள் அங்கே தானே போகிறீர்கள்."

'இவனால் மானமே போகிறது' என்று பல்லைக் கடித்துக் கொண்டாள் சுமித்ரா. ஹரிஹரனை எரித்து விடுவதைப் போல் பார்ப்பதாக எண்ணி ஓர் பார்வையை பார்த்து வைக்க முயன்றால் அவனது விஷமப் பார்வையைக் கண்டு அவளுக்கு ஏதோ பண்ணியது.

'இவன் வேறு.. ஏன் இப்படிப் பார்த்துத் தொலைக்கிறான்?'

அதற்கும் அவனைக் கடிந்து கொண்டு அங்கிருந்து அகன்றால் போதும் என்று பதிலே பேசாமல் வாசவியைப் பின் தொடர்ந்தாள் சுமித்ரா.

பங்களாவைச் சுற்றியே தோட்டம்தான். வீட்டுக்கு முன்னால் இன்னும் பெரியதாக இருந்தது. அலங்காரப் புல் வளைவுகளும் ஆங்காங்கே போடப்பட்டிருந்த மர பெஞ்சுகளும் ஏதோ பூங்காவில் இருக்கும் நினைவை உண்டு பண்ண சுமித்ரா ரசித்துச் சுற்றிப் பார்த்தாள். இரும்புக் கம்பிகள் நட்டு அதில் ஊஞ்சல் தொங்கிக் கொண்டிருக்க அதில் ஏறி ஆடிப் பார்த்தாள்.

அவளது உற்சாகத்தை ரசித்த வாசவி,

''நீங்கள் இதற்கு முன்னால் மூணாறே வந்தது இல்லையா?'' என்று கேட்டபடி ஊஞ்சலில் சுமித்ராவின் அருகே அமர்ந்தாள்.

''ஊஹூம்.. என் கிராமத்தை விட்டுப் படிப்பதற்காக மதுரைக்கு மட்டும் போயிருக்கிறேன். வேறு எங்கும் போனதில்லை. இந்த ஊஞ்சல் வேகமாய் ஆடாதா?''

''ஏன் ஆடாது? இறுக்கிப் பிடிச்சுக்கோங்க. நான் காலை உந்தி வேகமாய் ஆடப் போகிறேன். ம்ம்... இப்ப எப்படி இருக்கு?''

''ஜோராய் இருக்கு... நீ எங்கே படிக்கிறாய்?''

''சென்னையில்... அங்கேயும் எங்களுக்கு வீடு இருக்கிறது. இப்போது லீவ்... நீங்கள் என்ன படிக்கிறீர்கள்?''

''பி.எஸ்ஸி. பைனல் இயர். எக்ஸாம் திங்கள் கிழமையன்று ஸ்டார்ட் ஆகிறது. நான் இங்கே வந்து மாட்டிக் கொண்டிருக்கிறேன். எப்படிப் பரிட்சை எழுதப் போகிறேனோ?''

''மாட்டிக் கொண்டிருக்கிறீர்களா? ஹரிஹரன் அண்ணாவின் காதல் கிடைக்க நீங்கள் மிகவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். எவ்வளவு பெரிய இடங்களில் இருந்தெல்லாம் அண்ணனுக்கு பெண் கொடுக்க ஆசைப்பட்டாங்க தெரியுமா? அண்ணன் பிடி கொடுக்கவில்லை'' வாசவி பெருமையாய் கூறினாள்.

''ஏனாம்?'' சுமித்ராவின் மனம் ஏனோ படபடத்தது.

''தெரியவில்லை.'' தோளைக் குலுக்கிய வாசவி தொடர்ந்தாள்.



''அண்ணன் டேஸ்டுக்கு அவர்கள் கிட்டேக் கூட வர முடியாது.''

''அப்படியென்ன டேஸ்ட். உங்கள் அண்ணன் டேஸ்ட்...''

''அண்ணனின் காதலியாக இருந்துகொண்டு என்னிடம் கேட்கறீங்களே. உங்களுக்குத் தெரியாதா?''

''இன்னும் கொஞ்சம் தெரிந்து கொள்ளலாமேயென்று தான்.''

''ஓ...! அப்படியா.. சரி கேளுங்கள். அண்ணனுக்கு இண்டியன் கல்ச்சர்தான் பிடிக்கும். பட் அண்ணன் பிறந்து வளர்ந்தது ஹை சொஸைட்டியில். அவர் படித்தது பாரினில். அவர் தேடிய பெண் அவருக்குக் கிடைக்கவேயில்லை. மும்பை, டெல்லி, லண்டன்னு ஹை சொஸைட்டியில் இருக்கிற பெண்களைத் தானே அவரோட பேரண்ட்ஸ் அவருக்குன்னு பிக்ஸ் பண்ணுவாங்க. இவர் நான் தேடும் பெண் இவளில்லைன்னு சொல்லி எல்லோரையும் ரிஜக்ட் பண்ணி விடுவார். நோ அதர் வேன்னு இரண்டு நாள்களுக்கு முன்னால் இவரைக் கேட்காமல் அண்ணனுடைய பேரண்ட்ஸ் அண்ணனுக்கு திருமண நிச்சயதார்த்தத்தை நடத்தி விட்டார்கள். அண்ணன் கோபித்துக் கொண்டு உங்களை கடத்திக் கொண்டு வந்து விட்டார்.''

சுமித்ரா ஆர்வமாய் கேட்டுக் கொண்டிருக்க அதை விட ஆர்வமாய் கைகளை ஆட்டி வாசவி சொல்லிக் கொண்டிருந்தபோது.

''கதை சொல்லி முடித்து விட்டாயா?'' என்ற ஹரிஹரனின் குரலைக் கேட்டு இருவரும் திரும்பினார்கள்.



சுமித்ரா பதறிக் கீழே இறங்கினாள்.

''என்ன அண்ணி... அண்ணனை உள்ளே அந்த விரட்டு விரட்டினீங்க. இப்ப இப்படிப் பயப்படறீங்க? சும்மா உட்காருங்க.''

''உங்க அண்ணியை நான் உட்கார வைத்துக் கொள்கிறேன். நீ இப்ப வீட்டுக்கு ஓடு.. அம்மா கூப்பிடுகிறார்கள்.''

''பொய்...''

''மெய்...'' என்று ஹரிஹரன் சிரித்த விதத்தில் இருந்தே அவன் பொய் கூறுகிறான் என்று தெரிந்து விட,

''அண்ணா..'' என்று ஹரிஹரனின் மார்பில் செல்லமாய் குத்திய வாசவி, ''ஓகே... அண்ணியுடன் நீங்கள் பேச வேண்டுமென்பதற்காக மன்னிக்கிறேன். பிழைத்துப் போங்கள்...'' என்றவாறு வீட்டை நோக்கிப் போனாள்.

அவள் போனபின் சுமித்ராவைத் திரும்பிப் பார்த்த ஹரிஹரனின் கண்களில் உல்லாசம் இருந்தது. அவளருகில் வந்தான். புருவம் உயர்த்தினான். அவளுக்குப் பேச வந்த வார்த்தைகள் தொண்டையில் சிக்கிக் கொண்டது. ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு தடுமாறி நின்றாள். அவளது தடுமாற்றம் கண்டு அவனுக்கு இன்னும் உல்லாசம் கூடியது. அவளருகில் இன்னும் நெருங்கி நின்று அவள் பிடித்திருந்த ஊஞ்சல் சங்கிலியை அவனும் பிடித்துக் கொண்டான். சற்று அவன் கையை இறக்கினால் அவள் கை மேல் அவன் கை படிந்து விடும் நெருக்கம்.

சுமித்ராவிற்கு ஊஞ்சல் சங்கிலியை விடவும் முடியவில்லை. அவளால் நிமிர்ந்து நிற்க முடியாமல்



நாணத்தில் கால்கள் தொய்ந்தன. பற்றுக் கோலாய் ஊஞ்சலை பிடித்திருந்தாள் அவள்.

அவள் ஊஞ்சல் சங்கிலி மேல் சாய்ந்து நின்ற கோலம் பற்றுக் கோல் மேல் படர்ந்திருக்கும் கொடியை நினைவு படுத்தியது ஹரிஹரனுக்கு.

'இவள்தான் எத்தனை மென்மையானவள்' என்று வியந்தான் அவன்.

'ஒரு பார்வையைத் தாங்க முடியாமல் தொய்ந்து நிற்கிறாளே.. என் பார்வைக்கு இவளை மயக்கும் சக்தி இருக்கிறதா என்ன?'

ஒரு கணம் அவனது பார்வையை கவ்விப் பிடிக்க முயன்ற தீபாவின் பார்வை அவனுக்கு நினைவு வந்தது.

'நாணமில்லாத பார்வை...! அது சரி.. நாணமென்றால் கிலோ என்ன விலை என்றல்லவா அவள் கேட்பாள். அவளது ஜீன்ஸ் அதைச் சொல்லுமே..' என்று எண்ணிடும்போதே சுமித்ராவின் உடைமேல் அவனது பார்வை சென்றது.

பாவாடை தாவணியில் பெண்மை மிளிர அவள் வெட்கி நின்ற கோலம் அவனை வசீகரித்தது.

''இப்படியே நின்று கொண்டிருந்தால் எப்படி?'' மென்மையாய் வினவினான்.

''வேறு... என்ன...?'' அவள் தடுமாறினாள்.

''பேசு.''

''என்ன பேச?''

''நீ எப்படி என் காதலியாக வந்தாய் என்பதைப் பேசு.''

"என்ன சொன்னீர்கள்?" அவள் அதிர்ச்சியாய் தலை நிமிர்ந்தாள்.

"ஏய்... இப்ப நான் என்ன சொல்லி விட்டேன்? எதற்கு இந்தப் பதட்டம்? என் காதலியோடு வந்திருக் கிறேன் என்று நான் விளையாட்டாய் சொல்லிக் கொண் டிருக்கும்போது 'டிஷ்' என்று நீ என் காரிலிருந்து தேவதை போல் இறங்கி காட்சி கொடுத்தால் நான் உன்னை யாரென்று நினைப்பது? நீயே சொல்.. என் காதலி யென்று தானே நினைப்பேன்?"

# 20



'கேள்விக்கென்ன பதில் - உன்
பார்வைக்கென்ன பொருள்
மணமாலைக்கு என்ன வழி - உன்
மௌனம் என்ன மொழி?'

சுமித்ராவின் தாய் கனகவள்ளி எப்.எம்.ரேடியோவில் இந்தப் பாட்டைக் கேட்டு விட்டால் போதும்.. மெய் மறந்து விடுவாள்.

அது ஏனென்று சுமித்ராவிற்கு இப்போது புரிந்தது. இவன் கேள்விக்கு பதில் சொல்வதென்றால் என்ன வென்று சொல்வது? இவன் கண்கள் பேசும் கதைக்குப் பதில் கதை சொல்ல விழையும் மனதை எப்படி அடக் குவது?



மௌனம் ஒன்றுதான் சுமித்ராவிற்கு சா[illegible] அவள் மௌனித்தாள். ஊஞ்சலின் சங்கிலியின் மேல் படிந்திருந்த ஹரிஹரனின் கை மெல்லக் கீழே இறங் கியது. சுமித்ராவின் கரம் நடுங்க அவளது கரத்தின் மேல் ஆதரவாய் ஹரிஹரனின் கரம் படிந்து அவள் கரத்தை மென்மையாய் இறுக்கியது.

சுமித்ரா நடுங்கிப் போனாள். தன் கரத்தை விலக்கிக் கொள்ள முயன்றாள். ஹரிஹரனின் கரம் உடனே அதை அனுமதிக்கவில்லை. மெதுவாய்.. மிக மெதுவாய்.. அவளது கரத்தை விடுவித்த ஹரிஹரன்.

"சுமித்ரா...! உன் பெயரே என்னைக் காந்தம் போல கவர்கிறது..." என்றான்.

தைரியத்தை திரட்டிக் கொண்டு சுமித்ரா பதில் கூறினாள்.

"இப்போது இதுபோன்ற பேச்சுக்கள் தேவையில் லாதது..."

"உனக்கு தேவையில்லாமல் இருக்கலாம்... ஆனால் எனக்குத் தேவை."

"நான் என் ஊருக்குப் போக வேண்டும்."

"எது உன் ஊர்?"

"தேனிக்கு பக்கத்தில் ஒரு கிராமம்."

"போய் விட்டால் போகிறது. அதற்கு என் பதட்டப் படுகிறாய். ஆமாம்... நீ எப்படி என் காரில் ஏறினாய்? எப்போது ஏறினாய்? ஏன் ஏறினாய்?"

"எல்லா கேள்விகளுக்கும் பதில் ஒன்றுதான்.. என் தலைவிதி."



"அதற்கென்ன வந்தது? அது நன்றாகத்தான் இருக் கிறது.."

"எதை வைத்துச் சொல்கிறீர்கள்?"

"நான் உன்னை சந்தித்து இருக்கிறேனே... அதை வைத்துத்தான்."

"மண்டைக்கனம்.." சுமித்ரா முணுமுணுத்தாள்.

"யு மீன் ஹெட் வெயிட்...?"

"ஆமாம்..."

"ஸோ வாட்? உன்னை மாதிரி ஓர் ஏஞ்சலை சந்தித்து இருக்கிறேன் எனக்கு ஹெட் வெயிட் வராதா?"

'இவன் என்ன என் நிலைமையை புரிந்து கொள்ளா மல் பினாத்துகிறான்...' சுர்ரென்று கோபம் தலைக் கேறியது சுமித்ராவிற்கு.

"ச்சு... நான் ஒன்னும் ஏஞ்சலில்லை சார்... நேற்று மட்டும் உங்கள் காரில் ஏறிக் கொள்ளாமல் இருந்திருந் தேன்னு வையுங்க... இந்நேரம் என் கதை கந்தலாகி யிருக்கும்.. நாணாவது.. ஏஞ்சலாவது.."

"ஏன் என்ன ஆனது?"

"முதலில் அந்த பரந்தாமன் பயலுக்கும் உங்களுக்கும் என்ன தொடர்புன்னு சொல்லுங்கள்.. உங்களைப் பார்த் தால் நல்ல மனிதர் போலத் தெரிகிறது."

"அப்பா பிழைத்தேன். எங்கே என்னை வில்லன் ரேன்ஜில் வைத்து விடுவாயோ என்று பயந்து போய் விட்டேன். ஆமாம்.. யார் அந்த பரந்தாமன் பயல்?"

"அதுதான்.. நேற்று ராத்திரி.. கரும்புத் தோட்டத்



போய் பேசிக் கொண்டிருந்தீர்களே... அந்த எடுபட்ட நாய் தான்..."

"எடுபட்ட நாய்...! என்ன ஒரு லாங்வேஜ்! ஆமாம்.. நாய் என்றால் எனக்குத் தெரியும். 'டாக்.' அது என்ன எடு பட்ட நாய்? வாட் இஸ் த மீனிங் ஆப் 'எடுபட்ட நாய்'..."

"இப்போ இது ரொம்ப முக்கியம்... சரி கேளுங்கள்... இட் மீன்ஸ் கேடு கெட்ட நாய்... போதுமா?"

"ஓ!.. வெரி நைஸ். நான் அந்த எடுபட்ட நாயிடம் தேனிக்குப் போகும் ரோடு இதுதானா என்று கேட்டுக் கொண்டிருந்தேன்..."

"இவ்வளவுதானா? ரொம்ப நேரமாய் பேசிக் கொண் டிருந்தீர்களே."

"அவனும் இன்னும் கொஞ்சம் ஆள்களும் கரும்பு கார்டனில் யாரையோ தேடிக் கொண்டிருந்தார்கள். நான் வேண்டுமானால் ஹெல்ப் பண்ணவா என்று கேட்டுக் கொண்டிருந்தேன்..."

"அது சரி... நீங்கள் எப்படி ஹெல்ப் பண்ணுவதாக இருந்தீர்களாம். அந்த ராத்திரி நேரத்தில் கரும்புக் காட்டில் இறங்கி அவர்களுடன் ஒரு பெண்ணைத் தேட ரெடியாயிருந்தீர்களா? வெட்கக் கேடு. உங்களைப் போய் நல்ல மனிதர்ன்னு நினைத்தேனே."

"அவசரப்பட்டு அந்த நினைவை வாபஸ் பண்ணி விடாதே சுமித்ரா. அந்த நினைவு அப்படியே இருக் கட்டும். என் அங்கிள் சென்னையில் போலீஸ் டி.ஐ.ஜி. ஆக இருக்கிறார். அவரிடம் ஹெல்ப் கேட்டால் போலீஸ் படையே வந்து விடும் என்று சொல்லிக் கொண்டிருந் தேன்..."

''உங்களுக்குப் புண்ணியமாகப் போய்விடும். போய் வாங்கன்னு சொன்னான்.''

''அப்புறம் வேறு எப்படிச் சொல்வான். அவனே திருட்டுப் பயல்.''

''ஆமாம்.. அவன் ஒரு பெண்ணைத் தேடினான் என்று உனக்கு எப்படித் தெரியும்?''

''அந்தப் பெண்ணே நான்தானே.''

''வாட்..?'' அதுவரை இருந்த உல்லாச உணர்வு மறைந்துவிட ஹரிஹரன் கோபமாய் கேட்டான்.

''ஆமாம் சார்.. அந்தக் கரும்புக் காட்டில் தான் நான் ஒளிந்திருந்தேன். அவனுங்க என்னைத்தான் தேடி னாங்க. கார் விளக்கைப் போட்டிருந்தான். வெளியே வந்தால் மாட்டிக் கொள்வோம்ன்னு பயந்து போயிருந் தப்போ.. தெய்வம் போல் நீங்க வந்து காரை கரும்புக் காட்டோரமாய் நிறுத்தினீங்க. பத்தாக் குறைக்கு காரை விட்டு இறங்கி அவன்கிட்டப் போய் வேற பேசினீங்க. நான் படக்குன்னு பின் சீட்டில் ஏறி பதுங்கிக் கிட்டேன்.''

''மைகாட்.. இவ்வளவு நடந்திருக்கிறதா? கார் கிளம்பியதும் என்னிடம் சொல்லியிருக்கலாமே...''

''நீங்கள் அந்த கேத்தரவாடிடம் அவ்வளவு நேரம் பேசவும் நான் பயந்து விட்டேன்.''

''எதற்கு பயந்தாய்? அதற்கு முன்னால் எனக்கு இதற்கு மீனிங் சொல்லு.''

''எதற்கு?''

''வாட் இஸ் தி மீனிங் ஆப் 'கேத்தரவாடு'?''



''கடவுளே... உங்களுக்கு மீனிங் சொல்லியே என் வாய் வலித்து விட்டது. 'கேத்தரவாடு'ன்னா 'நாதாரி'ன்னு அர்த்தம் சார்.''

''நாதாரி..? வாட் இஸ்... தி...''

''மீனிங் ஆப் நாதாரி.. இதுதானே? இப்போ நான் சொல் வதைக் கேள்வி கேட்காமல் கேட்கிறீர்களா.. இல்லை.. நான் வருவது வரட்டும்ன்னு இப்படியே மூணாறு ரோட்டில் ஓடி விடவா?''

''ஓகே... ஓகே.. எனக்கு உன் லாங்வேஜ் பிடிபட வில்லை. மீனிங் கேட்க வேண்டாமென்று நீ சொன் னால் நான் இனி கேட்கவில்லை. அதற்காக தனியே ஒடுவேன்னு சொல்லலாமா? ஓட வேண்டாம் என்று நீ நினைத்தால் வா. நாம் இருவரும் கை கோர்த்துக் கொண்டு ஓடலாம்...''

''என்ன சார்... விளையாடுறீங்களா?''

''ஊம்.. விளையாட வேண்டும் போல்தான் ஆசை யாக இருக்கிறது. ஆனால் நீ என்ன சொல்லுவாயோ என்றுதான் பயமாய் இருக்கிறது.''

''எதுக்கோ தப்பி எதிலோ மாட்டிக் கொண்ட கதை யாய் போய் விட்டது என் கதை...''

''வாட் இஸ் தி மீனிங் ஆப் 'எதுக்கோ' அண்ட் 'எதிலோ'? முறைக்காதே. நீயும்தான் எனக்குப் புரிகிறது போல பேச வேண்டாமா?''

''இதெல்லாம் புரியாது... வேறு எது எதுவோ புரியும்.''

''எது எதுவோ.. என்றால்? இதோ பார்.. அடிக்க வராதே. உனக்கே.. ஐ மீன்.. இவ்வளவு சின்னப் பெண்



ணாக இருக்கும் உனக்கே புரியும்போது.. உலகம் சுற்றும் எனக்குப் புரியாதா?''

''ஓஹோ.. உலகம் சுற்றும் வாலிபன் எம்.ஜி.ஆர். நீங்கள்தானா?''

''உனக்கு அப்படிச் சொன்னால்தான் புரியும்போல... இப்போது என்ன சொல்லிக் கொண்டிருந்தாய்.. அவ னிடம் இருந்து தப்ப என் காரில் ஏறினாய்... ஆனால் அவன் ஏன் உன்னைத் துரத்தினான்? நீ எப்படி மிட் நைட்டில் கரும்பு கார்டனுக்குள் போனாய்?''

''கரும்பு கார்டனா... கடவுளே... அது கரும்புக்காடு.. கார்டனில்ல.. உங்களை என்ன செய்யறதுன்னே எனக்குத் தெரியலை. இதில் நடுராத்திரியில் அங்கே ஏன் போனேன்னு கேள்வி வேற.. ஏன் சார்.. நான் ஆசைப்பட்டா அங்கே போனேன்? நான் மதுரைக்கு என் காலேஜ் ஹாஸ்டலுக்குப் போக என் அண்ணன் துணை யுடன் பஸ் ஏறினேன்... வழியில் கலாட்டான்னு பஸ் நின்று விட்டது... இந்த பரந்தாமன் என் அண்ணியின் சித்தப்பன் மகன். என்னைப் பெண் கேட்டு வந்தான். எங்க வீட்டில் பொண்ணு கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்க. அந்தக் கோபத்தில் அவன் பத்து ஆள்களோடு வந்து என் அண்ணனை அடித்துக் காயப் படுத்திட்டு என்னைத் துரத்தினான். நான் தப்பி ஓடி வந்து கரும்புக் காட்டில் ஒளிந்து கொண்டேன்.. போதுமா.. நீங்கள் அவனிடம் பேசிக் கொண்டிருப் பதைப் பார்த்து அவனுக்கு வேண்டப்பட்டவர்ன்னு நினைச்சு பயந்து போய் சீட்டுக்கு அடியில் ஒளிந்து கிட்டேன்.''



''என்னைப் பார்த்து பயந்தாயா? நைட்டெல்லாம் பசியோடும் பயத்தோடும் என் காரில் நீ இருந்தது தெரியாமல்.. நான் ஸ்டெமெக் புல்லா சாப்பிட்டுவிட்டு ஜாலியாய் கார் ஓட்டிக் கொண்டிருந்தேனா..? ஐ ஆம் வெரி ஸாரி பார் தட்..''

''அதனாலென்ன சார்.. நீங்கள் என்ன தெரிந்தா அப்படிச் செய்தீர்கள். தெரியாமல் தானே.. பரவா யில்லை விடுங்கள்.''

அவன் பேச்சை விடவில்லை. தொடர்ந்தான். அப்போதுதான் அந்தக் கேள்வியைக் கேட்டான் அவன். பதில் சொல்ல முடியாமல் அவள் திகைத்தாள்.

## 21



''பட் ஒன்திங் சுமித்ரா.. நான் தெரியாமல் இருந் தேன்... ஓகே... நீ தெரிந்து இருக்கிறாயா? இல்லை தெரியாமல் இருக்கிறாயா?''

சுமித்ரா திகைத்தாள். இவன் என்ன சொல்கிறான்?

''ஏன் சார்.. மொட்டைக் காத்தான் குட்டையில் விழுந்த கதையாய் எதையுமே விளங்கச் சொல்லக் கூடாதுன்னு ஒரு முடிவோடு இருக்கீங்களா?''

'ஆமாம்.. இவள் மட்டும் மிகவும் விளக்கமாய் பேச கிறாள்..' ஹரிஹரன் முணுமுணுத்தான்.

''என்ன சொன்னீங்க?''

''என்ன சொல்லப் போகிறேன்? இந்த மொட்டை. ''என்ன சொல்லப் போகிறேன்? இந்த மொட்டைக் குட்டையென்று எதையோ சொன்னாயே.. அது என்ன வென்று.. பொறு.. பொறு.. இப்போது கோபமாய் ஏன் வெளியே ஓடப் பார்க்கிறாய்? எனக்குத் தலையில் கொஞ்சம் குறைகிறது சுமி.''

''என்னது 'சுமி'யா?''

''சார்ட்டாய் சொன்னேன். உன் முழுப் பெயரையும் சொல்வதற்கு வாய் வலிக்கிறது சுமி. ப்ளீஸ் அன்டர் ஸ்டான்ட் மீ.''

''இந்த விளக்கம் கேட்பதற்கும் விளக்கம் சொல்வ தற்கும் வலிக்காத வாய் என் பெயரைச் சொல்ல மட்டும் வலிக்குதாக்கும்? இந்த லட்சணத்தில் உங்களுக்கு மண்டையில் மசாலா இல்லைன்னு கதை வேற... யாரிடம் சரடு விடுகிறீர்கள்?''

சுமித்ரா படபடவென்று பொரிந்தாள். ஹரிஹரனுக்கு அவளது பேச்சும் சுவையாக இருந்தது. கோபமும் வேடிக்கையாக இருந்தது. அவன் விழிகளில் சுவாரஸ்யம் தெரிந்தது.

''என்ன நீ.. வார்த்தைக்கு வார்த்தை புதிதாய் சொல் கிறாய்..'' மண்டையில் மசாலா.. 'சரடு..' பெண்டாஸ்டிக். இதெல்லாம் என்ன சுமி?''

சுமித்ராவிற்கு சிரிப்பதா அழுவதா என்று தெரிய வில்லை. இவனைச் சொல்லிக் குற்றமில்லை. கான் வென்ட் தமிழில் பேசுகிறவனுக்கு கிராமத்து மண்ணின் தமிழ் வித்தியாசமாகத்தான் தெரியும்.



''சார்.. நான் என் வீட்டிற்குப் போக வேண்டும் சார்.. எங்கள் ஊர் தமிழைப் பற்றி உங்களுக்கு எடுத்துச் சொல்லி டியூசன் எடுக்கவெல்லாம் எனக்கு நேரமில்லை சார்.''

ஹரி புருவம் உயர்த்தினான்.

''என்னது சாரா? என் பெயர் ஹரி. தெரியுமா.. தெரி யாதா?''

''தெரியும் சார்.. உங்கள் பெயர் ஹரிஹரன்.''

''ஹரிஹரன் என்பது மற்றவர்களுக்கு... உனக்கு நான் ஹரி.''

''ஏன் சார் நீங்க வேற நேரம் காலம் தெரியாமல் ரொமான்ஸ் பண்ணிக்கிட்டு. நான் இருக்கிற இருப்புத் தெரியாமல் பேசாதீங்க சார்.''

''இனியொரு தரம் சார் என்று சொல்லாதே. நான் உன் ஹரி...''

''ஸ்ஸ்.. இது என்ன அவஸ்தை? நீங்கள் யார்... நான் யார்.''

''ஓகே.. நான் யாரோதானே.. அந்தப் பரந்தாமனுடன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு என்னையும் தவறானவன் என்றுதானே நினைத்தாய். அப்படியிருக் கும்போது ஏன் என்னை மட்டும் மரியாதையாய் பேசி னாய்? பரந்தாமனை அவன் இவன் நாய் நரி.. என் றாயே.''

''நாய்.. நரியா.. நான் எப்போ அவனை அப்படி சொன்னேன்'' என்று கேட்ட சுமித்ராவிற்கு சிரிப்பு வந் விட்டது.





''அது நாதாரி.''

''என்னவோ ஒரு நாரி.. அப்படியெல்லாம் அவனைத் திட்டிவிட்டு என்னை மட்டும் வாங்க, போங்க, சார் என்று பேசினாயே. அது ஏன்?''

'ஏன்..?' சுமித்ரா பதில் சொல்ல முடியாமல் திகைத் தாள்.

'இவன் பெரிய கைகாரன்.. எப்படி வருகிறான் பார்..'

''இப்போது அதற்கு என்ன செய்ய வேண்டும் என் கிறீர்கள்..?''

''நீ என்னைக் காதலிக்க வேண்டும் என்கிறேன்.''

''அது என்ன தேவைக்கு?''

''என் தேவைக்கு. நான் உன்னைக் காதலிக்கிறேனே.''

''கண்டதும் காதலா?''

''ஊஹூம்.. காணாமலே காதல்...''

''உளற ஆரம்பித்து விட்டீர்கள்..''

''உண்மையைத்தான் சொல்கிறேன்... நான் உன்னை என் காரிலிருந்து இறங்கும் முன்னால் பார்க்கவே யில்லை. பட்... இந்த வீட்டில் எல்லோரும் உன்னை 'வாம்மா' என்று... அது என்ன பிளேட்டில் கற்பூரத்தை ஏற்றிக் காண்பிப்பார்களே...''

'இவனுக்கு விளக்கம் சொல்லியே ஓய்ந்து விடுவோம்' என்று அலுத்துக் கொண்ட சுமித்ரா.

''ஆரத்தி.. என்பார்கள்..'' என்றாள்.

''யெஸ்.. யெஸ்... அதைக் காண்பித்து உன்னை உள்ளே அழைத்துக் கொண்டார்களே.. எதற்காக?''



''அதையும் நீங்களே சொல்லி விடுங்களேன். அந்தக் குறை எதற்கு?''

''நான் என் காதலியைக் கூட்டிக் கொண்டு வந்து விட்டேன் என்றேன். அது நீயென்று அவர்கள் நினைத்து விட்டார்கள்.''

''அதுதான் எனக்குத் தெரியுமே.. நீங்கள் புதிதாய் எதையோ சொல்கிறீர்கள்ன்னு நினைத்தேன். இதுதானா?''

சுமித்ராவின் முகம் சிவந்தது. கண்கள் கனவில் மிதக்க இதைக் கூறினாள். ஹரிஹரன் அவள் முகத்தையே பார்த்தான்.

''தெரியும் என்று சொல்லிவிட்டு சார் என்றால் என்ன அர்த்தம்?''

''இதோ பாருங்கள். எனக்கு வரும் திங்கள் கிழமை மதுரையில் என் காலேஜில் பைனல் இயர் எக்ஸாம் தொடங்குகிறது. இன்று வியாழக்கிழமை. இன்னும் மூன்று நாட்கள்தான் ஊடே இருக்கிறது. என் குடும்பத் திலேயே நான்தான் முதன் முதலாய் பட்டதாரி ஆகப் போகிறேன்.''

''வாட்.. உன் பேமிலியில் யாரும் டிகிரிகூடப் படிக்க வில்லையா?''

''இல்லை.. என் ஊரிலேயே நான்தான் காலேஜில் போய் படிக்கிறேன்.''

''இன்ட்ரெஸ்டிங்... அப்புறம் சொல்லு.''

''என்னத்தைச் சொல்ல? நானென்ன கதையா சொல்லு கிறேன். 'இன்ட்ரெஸ்டிங்' போட்டுக்கிட்டு நீங்கள் கதை கேட்க? என் அண்ணனுக்கு என்ன ஆனதோ தெரிய

வில்லை. என்னைக் காணாமல் என் வீட்டில் பயந்த போயிருப்பார்கள்.. கிராமத்தில் எல்லாம் பெண் பிள்ளைகள் தொலைந்து போனால் கண்டபடி கதை கட்டி விடுவார்கள்."

"கண்டபடி என்றால்...?"

"ம்ம்... தாறுமாறுன்னு அர்த்தம்.."

"தாறு மாறு என்றால்?..."

"யோவ்.. நல்லபடி சொன்னால் நீங்கள் கேட்க மாட்டிங்களா? நான் என் வீட்டிற்குப் போக வேண்டும்.. முதலில் உங்கள் செல்போனைக் கொடுங்கள்."

"யோவ்..! நல்ல மரியாதை தெரிந்த பெண் நீ. உன் லாங்வேஜிற்காகவே உன்னை லவ் பண்ணலாம் போல. இப்போது செல்போனை வாங்கி என்ன செய்யப் போகிறாய்?"

"என் வீட்டிற்கு போன் போட்டுப் பேசப் போகிறேன்."

"பேசி...?"

"நான் மூணாறில் பத்திரமாய் இருக்கிறேன்னு சொல்லப் போகிறேன்..."

"ஓகே... ப்ளீஸ் டேக் இட்."

ஹரிஹரன் அவன் கையிலிருந்த செல்போனை அவளிடம் கொடுத்தான். சுமித்ரா வாங்கி வீட்டுப் போன் நம்பரை அழுத்தினாள். மணி ஒலித்துக் கொண்டே இருந்தது. யாரும் எடுக்கவில்லை.

"யாரும் எடுக்கலையே..." ஹரிஹரனின் முகம் பார்த்தாள்.

"உன் பிரதர்ஸ் நம்பருக்கு டிரை பண்ணலாமே."



"ஆமாமில்ல."

சுமித்ரா அவசரமாய் வெள்ளைச்சாமியின் செல்போனில் அழைத்தாள். மறுமுனை எடுக்கப்பட்டது.

"அலோ..." என்றாள் மல்லிகா.

"மதினி... நான் சுமித்ரா பேசுகிறேன்."

"அலோ.. அலோ.. யாருன்னே தெரியலையே."

செல்போன் அணைக்கப்பட்டது. மீண்டும் முயன்றாள்.

'ஸ்விட்ச் ஆப்' என்று பதில் வந்தது.

"என்ன ஆச்சு இந்த மதினிக்கு..?" என்று அலுத்தவாறு ராமசாமியின் செல்போனுக்கு முயற்சி செய்தாள். மறுமுனை எடுக்கப்பட்டதும் ஆவலாய்,

"ஹலோ..." என்றாள். மறுமுனை துண்டிக்கப்பட்டது. மீண்டும் முயன்றாள். அதே 'ஸ்விட்ச் ஆப்' பதில்.

"என்னவோ சரியில்லை." சுமித்ரா பதறினாள்.

"காம்டவுன்... காம்டவுன்.. எனக்கும் சம்திங் இஸ் ராங் என்று தான் தோன்றுகிறது. நாம் இரவே கிளம்பி விடலாம்."

"ராத்திரியாகுமா...?"

"இதோ பார்.. இங்கே இவர்களாய் ஒரு ஸ்டோரியை கற்பனை பண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். உன் ஸ்டோரி இவர்களுக்கு எதற்கு? தேவையில்லாத கேள்விகளும் விமர்சனங்களும் வரும். விஷால், அம்மா, வாசவி இவர்கள் மூவரோடு அது நிற்காது. ரூபாவிற்கும் தெரியும். அது உனக்கு நன்மை தராது. நாம் நைட்



கிளம்புவோம்.. என்கிறேனே.. என் மேல் நம்பிக்கை இல்லையா? ப்ளீஸ் பிலிவ் மீ."

அவள் அவனைத்தான் நம்ப வேண்டியிருந்தது. அப்போது மட்டுமல்ல அடுத்து நடந்த அதிரடி திருப்பங்கள் அனைத்திலும் அவன்தான் அவளுக்குக் கை கொடுத்தான்.

## 22



"நைட்டே கிளம்ப வேண்டுமா? என்னடா இப்படிச் சொல்கிறாய்? நீ வேறு உன் காதலியை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாய். உங்களுக்கு இன்னும் கல்யாணம் வேறு ஆகவில்லை. இப்படியே உங்களிருவரையும் எப்படி ஹரி அனுப்ப முடியும்? நாளைக்கு அப்பா வந்து விடுவார். உங்களிருவரின் பேரண்ட்ஸிடமும் அவர் பேசிப் பார்க்கட்டுமே. இரு வீட்டார் சம்மதத்துடன் மேரேஜை நடத்தி விடலாம் என்று அம்மா சொல்கிறாங்க ஹரி.." விஷால் ஹரிஹரனின் தோள் மேல் கை போட்டுக் கொண்டான்.

"ஆமாம் ஹரி. அவ்வளவு பெரிய குடும்பத்தில் பிறந்து விட்டு நீ ஏன் தனியாகத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்? என்ன இருந்தாலும் அவர்கள் உங்களிருவரையும் பெற்றவர்கள் இல்லையா? அவர்களிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் திருமணம்



செய்யக் கூடாதுப்பா. அவர்களிடம் சொல்லுவோம். அவர்கள் மறுத்தால் இங்கேயே எங்கள் உறவினர்கள் நண்பர்களை அழைத்து பிரம்மாண்டமாய் நாங்கள் உனக்குத் திருமணம் செய்து வைக்கிறோம். நீ கொஞ்சம் பொறுமையா இரு.." பத்மாவதி இரண்டு பிள்ளைகளைப் பெற்ற தாயின் பொறுப்போடு பேசினாள்.

ஹரிஹரன் சுமித்ராவைப் பார்த்தான். அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. அவனுக்கு சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டு ஒன்றும் அறியாதவன் போல் முகத்தை வைத்துக் கொண்டு சுமித்ராவைப் பார்த்துக் கேட்டான்.

"அம்மா சொல்வது போல் செய்யலாமா.. இல்லை இப்போதே செய்து கொள்ளலாமா? நீ என்ன நினைக்கிறாய் சுமி?"

'சுமி..!' பல்லைக் கடித்துக் கொண்டு ஹரிஹரனை முறைத்தவள்,

"மொட்டையாக் கேட்டால் எனக்கு ஒரு மண்ணும் புரியாது. எதைப் பற்றி நான் என்ன நினைக்கிறேன்னு கேட்கறீங்க?" என்று கேட்டாள்.

"வேறு எதைப் பற்றி? நம் திருமணத்தைப் பற்றித் தான்."

"என்னது..?" அவள் அதிர்ந்து விழித்தாள்.

'திருமணத்தையா இவன் இப்போதே செய்து கொள்ளலாமான்னு கேட்டான். இவன் பலே ஆள்தான். இவங்க முன்னால் நான் எதுவும் பேச மாட்டேன்னு என் வாயைப் பிடுங்குகிறான் பாரு...'

''இப்போதே செய்து கொள்ளலாம்ன்னா எங்கே எப்படிச் செய்து கொள்வதுன்னு விளக்க்...கமா சொன்னால் தேவலை...'' அவன் வழியிலேயே பதில் சொன்னாள் சுமித்ரா.

ஆனால் கோபத்தில் வார்த்தைகளை கடித்துத் துப்பினாள். விழிகள் ஹரிஹரனை சுட்டெரித்தன.

ஹரிஹரனுக்கு அவளது கோபம் மிகவும் உற்சாகத்தை அளித்தது. அவளுடன் விளையாட அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவளது கோபம் அவனுக்கு மிகமிகப் பிடித்திருந்தது. மேலும் சீண்ட விழைந்தான்.

''இப்போதே என்றால்... ரெஜிஸ்ட்ரார் ஆபிஸில் மேரேஜ் பண்ணிக் கொள்ளலாம்.. கோவிலில் மாலை மாற்றி தாலி கட்டிக் கொள்ளலாம். இது எல்லாம் அதிக நேரம் பிடிக்கும் என்றால் வேறு ஒரு முறை இருக்கிறது.''

''அதையும் உங்கள் அழகுத் திருவாயால் சொல்லி விடுங்களேன்.''

''இங்கே பெரியவங்களா அம்மா இருக்காங்க. அவங்க முன்னால் மோதிரம் மாற்றிக் கொண்டு வாழ்க்கையைத் தொடங்கி விடலாம்.''

''வாழ்க்கையைத் தொடங்குவதுன்னா..?''

''அது தெரியாதா.. பர்ஸ்ட் நைட்டைச் சொல்கிறார்..'' ரூபா குலுங்கிச் சிரித்தாள்.

''ஆனால் இப்போ காலை பத்து மணி ஆச்சேடா. இப்போது நீ சொல்லும் வாழ்க்கையைத் தொடங்கினால் இது பர்ஸ்ட் மார்னிங்...'' விஷால் முகத்தை அப்பாவி போல் வைத்துக் கொண்டு சொன்னான்.



''மார்னிங்கோ, ஆப்டர்நூனோ, நைட்டோ.. பர்ஸ்ட் இஸ் தி பெஸ்ட். அவரே அவசரத்தில் இருக்கிறார். நீங்கள் வேறு எடுத்துச் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். என்ன சுமி.. நீயென்ன முடிவுக்கு வந்திருக்கிறாய்?'' ரூபா சுமித்ராவிடம் வினவினாள்.

''அவளென்ன சொல்லப் போகிறாள். என் முடிவுதான் அவள் முடிவும்... இல்லை சுமி...'' ஹரிஹரன் சுமித்ராவை நோக்கி கண் சிமிட்டினான்.

சுமித்ராவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கையில் வைத்திருந்த புத்தகத்தை அவன் மேல் விட்டெறிந்தாள்.

''கேட்ச்...'' என்று விஷால், ரூபா, வாசவி உற்சாகப்படுத்த ஹரிஹரன் புக்கை இரு கைகளாலும் கிரிக்கெட் பிளேயர் போல தாவிப் பிடித்தான்.

''சூப்பர் கேட்ச் அண்ணா...'' வாசவி ஹரிஹரனுக்கு கை கொடுத்தாள்.

சுமித்ரா கோபத்துடன் சோபாவை விட்டு எழுந்தாள்.

''ஏய்... சுமி... கூல் டவுன்.. கூல் டவுன்.. டோண்ட் ஆங்க்ரி வித்மி. உன்னுடன் நான் விளையாடாமல் வேறு யார் விளையாடுவார்கள். சிட்டவுன்...'' சுமித்ராவின் கரம் பற்றித் தடுத்து இழுத்தான் ஹரிஹரன்.

அவன் இழுத்த வேகத்தில் சோபாவில் விழுந்தாள் சுமித்ரா. 'எவ்வளவு இயல்பாய் தொடுகிறான் இவன்?'

கோபம் வருவதற்குப் பதில் இனிமையான உணர்வு தான் அவளுக்கு வந்து தொலைத்தது. அவனது இனிமையான சுபாவமும், தென் தமிழக பாஷை புரியாமல்



விளக்கம் கேட்கும் வழக்கமும், அவன் கூறிய காதலும், அவளை அவன்பால் கவர்ந்து இழுத்தது.

'அடங்கு..' என்று மனதை அடக்கினாள் சுமித்ரா.

'ஆளைப் பார்த்தால் வெள்ளைக்கார துரை மாதிரி அட்டகாசமாய் இருக்கிறான். அவன் சொன்னதைக் கேட்டேயில்ல.. உலகம் சுற்றும் வாலிபனாம்.. இவனுக்கும் எனக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது.. கிட்டாத பழத்துக்கு கொட்டாவி விடக்கூடாது. பேசாமல் வாலைச் சுருட்டு.''

தன் மனதிற்கு கடிவாளமிட முயன்றாள் சுமித்ரா.

எவ்வளவு அழகனாக இருந்தாலும் மனதுக்குப் பிடிக்காவிட்டால் அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காது பெண் மனம்.

சுமித்ராவிற்கு அவனை மிகவும் பிடித்திருந்தது. அதனால் அவன் பேச்சைக் கோபப்படுவதைப் போல் ரசித்துக் கொண்டிருந்தாள். இதை அவளிடம் சொன்னால் ஏற்றுக் கொள்ளும் மனநிலையிலும் அவள் இல்லை.

''அம்மா.. நீங்கள் சொல்வது போல்தான்.. நானும் சுமியும் முடிவு பண்ணி இருக்கிறோம்..'' பத்மாவதியின் முகம் பார்த்தான் ஹரிஹரன்.

''என்ன முடிவுப்பா?''

''நாங்கள் நைட் கிளம்பி சுமியின் வீட்டிற்குத்தான் போகப் போகிறோம்.''

''ஏண்டா.. அவர்கள் தகராறு பண்ணவும் தானே சுமித்ரா உன்னுடன் கிளம்பி ஓடி வந்திருக்காங்க..'' விஷால்



இயல்பாய் கூற சுமித்ரா மானசீகமாய் தலையில் அடித்துக் கொண்டாள்.

'உன் கையைப் பிடித்துக் கொண்டு ஊரை விட்டு ஓடியா வந்தேன்'' அவள் விழியால் வினவ ஹரிஹரனுக்கு சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டான்.

'வேண்டாம் சிரித்து வைக்கக்கூடாது. கோபப்படுவாள்.''

''அதுவும் சும்மாவா ஓடி வந்தார்கள். அவர்கள் பின்னால் ஊரே துரத்தியதாமே.. என்ன என்னவோ கைகளில் வைத்திருப்பார்களே.. இந்த தமிழ் சினிமாக்களில் காட்டுவாங்களே...'' ரூபா புரியாமல் யோசிக்க,

''வெட்டறிவாள்.. வேல் கம்பு...'' என்று சுமித்ரா எடுத்துக் கொடுத்தாள்.

''ஆ... அதுதான்.''

''நீங்கள் தமிழ் சினிமா நிறைய பார்ப்பீர்கள் போல.''

''நீங்கள் தமிழ் சினிமா நிறைய பார்ப்பீர்கள் போல.'' is above; next:

''யு ஆர் கரெக்ட். எப்படிக் கண்டுபிடித்தாய்...''

'ஆமாம்.. நான் கொலம்பஸ்.. இந்தியாவைக் கண்டு பிடித்து விட்டேன். காலையிலிருந்து ஆள் மாற்றி ஆள் ஒட்டிக் கொண்டிருந்து விட்டு.. இப்போ எப்படிக் கண்டுபிடித்தாயாம். விட்டால் இவர்களே கதை, திரைக்கதை, வசனம் எழுதி சினிமா எடுத்து விடுவார்கள்.'

''எல்லாம் உங்கள் சிநேகிதர் கூட இருக்கிற மகிமைங்க. பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுமில்ல. அதுபோலதான் இதுவும்.''

அவ்வளவுதான்.. ஹரிஹரன் சுமித்ராவின் பக்கம் ஆவலாய் திரும்பினான்.

''சுமி..?'' கண்கள் மின்ன அவன் பேச ஆரம்பிக்கு முன்,

''ஸ்ஸ்ஸ்...'' என்று வாய் மேல் விரலை வைத்து அடக்கினாள் சுமித்ரா.

''இப்ப என்ன வேணும் உங்களுக்கு? 'பூ'ன்னா என்ன? 'நாரு'ன்னா என்ன.. இந்த சொலவடையின் விளக்கம் என்னன்னு தெரியனும். சொன்னால் மட்டும் விளங்கிடுமா? எதுக்கு இந்த வீண் வேலை... நான் 'நாதாரி'ன்னு சொன்னால் நீங்கள் 'நாய்நரி'ன்னு எடுத்துக்கப் போறீங்க. நீங்க உங்களுக்குத் தெரிந்ததை மட்டும் புரிஞ்சுக்கங்க. என்ன?''

சுமித்ராவின் மிரட்டலை ரசித்த பத்மாவதி,

''ஹரி.. என் மருமகள் கெட்டிக்காரப் பொண்ணுப்பா. வயது ரொம்ப சின்ன வயதாயிருக்கும் போலன்னு நினைத்தேன். உன்னையே மிரட்டி வைக்கிறாள் பார். பிழைத்துக் கொள்வாள்'' என்று பாராட்டினாள்.

''அது சரிம்மா.. இவள் எதையோ 'வடை'ன்னு சொன்னாளே... அது என்ன வடை?'' ஹரிஹரன் புரியாமல் விழித்தான்.

''அதை அவளிடமே கேளு.. உனக்கு அவள்தான் லாயக்கு...'' பத்மாவதி வயிற்றைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தாள்.

''சுமி... ப்ளீஸ்..'' அவன் கெஞ்சுவது போல் பார்த்தான்.

''நீங்கள் தின்பதிலேயே குறியாய் இருங்கள். 'சொல வடை'ன்னா உளுந்து வடை... பருப்பு வடை இல்லை. 'சொலவடை' மீன்ஸ் பழமொழி.''



''பழமொழி? வாட் எ பெண்டாஸ்டிக் நிக் நேம் சொல வடை.. ஐ லைக் இட்... ஐ லைக் இட்...''

''வடைன்னு வந்திருச்சுல்ல.. நீங்க லைக் பண்ணத் தான் செய்வீங்க.''

''சுமின்னு ஆரம்பித்தாலும் நான் லைக் பண்ணத்தான் செய்வேன்.''

''போதுமே...'' சுமித்ராவின் முகம் சிவந்தது.

ஹரிஹரன் விழுங்கி விடுவது போல் அவளைப் பார்க்க ஆரம்பிக்க... ரூபா அதை விழியால் உயர்த்தி விஷா விடம் செல்லக் கோபம் கொள்ள... வாசவி கன்னத்தின் மேல் கை வைத்து ஹரிஹரனின் பார்வையை ரசிக்க ஆரம்பிக்க... பத்மாவதி தாங்க மாட்டாமல் தொண் டையை,

''க்கும்..'' என்று கனைத்து ஹரிஹரனை தந்நிலைக்கு கொண்டு வந்தாள்.

சுமித்ரா இதழ் கடித்து முகம் திருப்பிக் கொண்டாள்.

## 23



ஒரு வழியாய் பத்மாவதியை சமாளித்து இரவு ஊருக் குக் கிளம்ப அனுமதி வாங்கிக் கொண்டான் ஹரிஹரன்.

''அம்மா.. சுமி அவங்க அப்பாவிடம் செல்போனில் பேசினாள். அவர்கள் கோபம் தணிந்து விட்டது. வீட்



டுக்கு வந்தால் நாங்களே உங்களிருவருக்கும் மேரேஜ் பண்ணி வைக்கிறோம்ன்னு சொல்லி விட்டார். ஸோ.. இன்றைக்கு நைட்டே கிளம்புகிறோம் அம்மா. சுமித் ராவை அவளது வீட்டில் விட்டு விட்டு நான் பாண்டிச் சேரி போய் அம்மா, டாடியிடம் பேச வேண்டும். அதற்குப் பின்னால் முறைப்படி சுமித்ராவை பெண் கேட்டு வருவோம்.''

ஹரிஹரன் சுமித்ராவைப் பார்த்துக் கொண்டே இந்த வார்த்தைகளை உச்சரித்தான். சுமித்ராவின் உடல் சிலிர்த்தது.

'என்ன மாதிரியான பந்தம் இது. இவனைப் போன்ற ஒருவனை இதற்கு முன்னாலும் நான் சந்தித்ததில்லை. இதற்கு மேலும் சந்திக்கப் போவதில்லை என்பது போன்ற பந்தமல்லவா இது.. இது எப்படி ஏற்பட்டது.. எனக்கு இது எப்படி நேர்ந்தது. எனக்கு என்னதான் ஆனது...'

சுமித்ராவின் மனம் 'ஹோ'வென்று ஆர்ப்பரித்தது. அவள் மனம் சிறகானது. அவள் வானில் பறந்தாள். மேகக் கூட்டங்களில் மிதந்தாள். பிறை நிலவின் மேல் அமர்ந்து கொண்டு பாடினாள்.

'உன்னை நான் சந்தித்தேன் - நீ
ஆயிரத்தில் ஒருவன்
என்னை நான் கொடுத்தேன் - என்
ஆலயத்தின் இறைவன்
எண்ணத்தால் உன்னை தொடர்ந்தேன் - ஒரு
கொடி போல் நெஞ்சில் படர்ந்தேன்



சொல்லத்தான் அன்று நினைத்தேன் - வந்த
நாணத்தால் அதை மறைத்தேன்
...மன்னவா... உன்னை நான்...
... மாலையிட்டால் மகிழ்வேன்..'

''அண்ணி.. அண்ணி..'' வாசவி சுமித்ராவை உலுக்கி னாள்.

''ம்ம்... என்ன.. என்ன...'' பதறி சுயநினைவுக்கு மீண் டாள் சுமித்ரா.

''சரியாப் போச்சு போங்க. இத்தனை நேரம் நாங்கள் பேசினது உங்கள் காதில் விழுகவில்லையா? கனவு கண்டு கொண்டிருந்தீர்களா?''

'ஆமாம்' என்று வெட்கத்துடன் நினைத்துக் கொண் டாள் சுமித்ரா.

''ஊரில் அம்மா அப்பாவை நினைத்துக் கொண்டிருந் தேன். வேறொன்றுமில்லை.''

''ஊம்... நம்ப முயற்சி பண்ணுகிறேன். சரி.. சரி.. கிளம்புங்க...''

''எங்கே...?''

''ஊர் சுற்றிப் பார்க்கத்தான். என் சுடிதார் எதையாவது போட்டுக் கொள்கிறீர்களா? இல்லை உங்களிடம் சுடிதார் ஏதாவது இருக்கிறதா?''

''என்னிடம் சுடிதார் இல்லை வாசவி.''

''நோ பிராப்ளம்... என்னுடையதை போட்டுக்கங்க.. கமான்.. க்விக்.''

''வேண்டாம் வாசவி.. அவளுக்கு இந்த டிரஸ்தான் அழகாயிருக்கிறது. ஐ லைக் திஸ்'' ரசனையாய் சுமித் ராவைப் பார்த்தபடி கூறினான் ஹரிஹரன்.

''ஓ..'' என்று ரூபா, வாசவி, விஷால் மூவரும் 'ஓ' போட்டனர்.

''ஏன்டா.. நீ பாவாடை தாவணி அணிந்த பெண்ணைப் பார்த்ததே இல்லையா?'' விஷால் கேட்டான்.

''இல்லையென்று தான் நினைக்கிறேன்.''

''சரி விடு... வாசவி.. ஹரி ரசிக்கத்தானே சுமித்ராவும் ஆசைப்படுவாங்க. விட்டு விடு. பாவாடை தாவணியிலேயே வரட்டும்.''

அவர்கள் ஐவரும் டாடா சுமோவில் ஏறிக் கொண்டார்கள். டிரைவர் ஏறி அமர்ந்து காரைக் கிளப்பினார்.

''மதியம் சாப்பிட வந்து விட்டுப் போங்கப்பா. டேமிலிருந்து விரால் மீன் வாங்கி பொறித்து வைத்திருக்கிறேன். சிக்கன் பிரியாணி செய்யப் போகிறேன். போதுமில்லையா?''

''நீங்கள் வேறம்மா. அவர் ஊர் சுற்றிப் பார்க்க வேண்டாம்னு நேரே டைனிங் டேபிளுக்கு வரலாமான்னு யோசிச்சுட்டிருக்கார்.'' சுமித்ரா ஹரிஹரனைப் பார்த்துக் கொண்டே பத்மாவதியிடம் கூறினாள்.

''அண்ணிக்கு அண்ணன காலை வாருவதில் அத்தனை குஷி.''

''அதைச் சொல்வதில் என் தங்கைக்கு அவ்வளவு ஹேப்பி.''

அவர்கள் உற்சாகமாய் பேசியபடி வர டாடா சுமோ கிளம்பியது. டிரைவர் முன் சீட்டில் அமர்ந்திருக்க நடு சீட்டில் விஷால், ரூபா இருவரும் அமர்ந்திருந்தனர். பின் பக்கம் இரண்டிரண்டு நபர்கள் அமரும் சீட்டில் ஒன்றில் ஹரிஹரன் அமர்ந்திருக்க அவனுக்கு ...



...வாசவியும், சுமித்ராவும் அமர்ந்திருந்தனர். ஹரிஹரன் ...வசதியாய் அமர்கிறேன் பேர்வழி என்று கால்களை நீட்டிக் கொண்டான். சுமித்ராவின் காலோடு அவன் கால் ...ட்டாய சுமித்ரா சங்கடமடைந்தாள். தன் கால்களை ...சற்றுக்கு நகர்த்திக் கொண்டாள். அவன் கால்கள் முன்னேறின. குனிந்து எதையோ பார்ப்பது போல் அவன் கால்களில் 'நறுக்'கென்று கிள்ளினாள். அவன் அசைவதாய் இல்லை.

''வாசவி.. உன் அண்ணனை நேராய் உட்காரச் சொல்..''

''அண்ணா... நேராய் உட்காருங்கள்.''

''உன் சொந்த அண்ணனிடம் சொல்லச் சொல்லவில்லை. எதிர்த்தாப்புல இஞ்சி தின்ற குரங்கு போல் உட்கார்ந்திருக்கிறாரே. இந்த அண்ணன்... இவரிடம் சொல்லு.''

'இஞ்சி தின்ற குரங்கா... யார் எங்கள் ஹரி அண்ணனா? அண்ணி... இது அபாண்டம். அரவிந்தசாமி போலிருக்கும் அண்ணனைப் பார்த்தா இப்படி ஒரு வார்த்தையைச் சொல்லுகிறீர்கள்.''

''சுமி.. வாட் இஸ் தி மீனிங் ஆப்'' - ஹரிஹரன் ஆரம்பித்து விட்டான்.

''இஞ்சி தின்ற குரங்கிற்கெல்லாம் அர்த்தம் சொல்ல முடியாது. வேண்டுமானால் கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்.''

''விஷால்... இஞ்சியென்றால்...''

''அடடா... உங்கள் முன்னால் வாயைத் திறக்கவே முடியவில்லையே.. சாமி.. உங்கள் காலைத் தூக்கி என்



மடியில் கூடப் போட்டுக் கொள்ளுங்கள். வாயைத் திறந்து 'வாட் இஸ் தி மீனிங்'ன்னு ஆரம்பிக்காதீர்கள். உங்களோடு பெரிய 'லொள்'ளாகப் போய் விட்டது...''

''லொள்... வாட் இஸ்...''

சுமித்ரா முன்னே சாய்ந்து ஹரிஹரனின் வாயை ஒரு கையால் பொத்தி தன் வாயின் மேல் ஒற்றை விரலை வைத்து எச்சரித்தாள்.

ஹரிஹரன் மகிழ்ந்து போய் விட்டான். மூடிய அவள் கையில் தன் இதழ் பதித்தான். சுமித்ரா பதறிப் போய் கையை எடுத்துக் கொண்டாள்.

'என்ன இது... இவன் இப்படியெல்லாம் செய்கிறான்.'

வாசவி இவர்களின் போராட்டத்தை உணராமல் சுமித்ராவிற்கு வழியில் தென்படும் இடங்களைக் காட்டி விளக்கம் சொல்லிக் கொண்டு வந்தாள்.

''அண்ணி இறங்குங்க. இதுதான் ராஜமலை. இங்கே ஒரு விசேஷம் இருக்கு. அது என்ன தெரியுமா?''

''என்ன...?''

''அதோ அவைதான்.''

வாசவி கைகாட்டிய இடத்தில் கூட்டம் கூட்டமாய் ஆடுகள் இருந்தன. அவற்றின் கொம்புகள் நீண்டு வளைந்து மானின் கொம்புகள் போல் காணப்பட்டன.

''ஹை... இவ்வளவு பெரிய கொம்புகளோடு ஆடா?''

''ம்ம்.. இந்த ஆடுகளுக்குப் பெயர் வரை ஆடுகள்.''

பெரிய பால் பண்ணை ஒன்றும் அங்கு இருந்தது. அதைச் சுற்றிப் பார்த்து விட்டு மீண்டும் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். டாடா சுமோவின் பின் பக்க



...ஜன்னல் வழி மலையின் இரு பக்கங்களிலும் சரிவாய் வளர்ந்திருந்த தேயிலைத் தோட்டங்களைப் பார்ப்பது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. சுமித்ரா தன் பிரச்னைகளை மறந்து ஆர்வமாய் அவற்றை வேடிக்கைப் பார்க்க, அவளை ரசித்துப் பார்த்துக் கொண்டு வந்தான் ஹரிஹரன்.

''விஷால்.. மலைப் பாதைக்கு டாடா சுமோதான் பெஸ்ட் சாய்ஸ்.''

''அப்கோர்ஸ் ஹரி...''

அடுத்து அவர்கள் நேஷனல் பார்க்கிற்குப் போனார்கள். பூங்காவைச் சுற்றிப் பார்த்துவிட்டு அருகிலிருந்த வாகுபரை என்னும் இடத்தில் கொட்டும் அருவியை ரசித்தார்கள்.

''குளிக்கலாமா?'' ஆர்வமாய் சுமித்ரா வினவினாள்.

''சில்லுன்னு இருக்கும்..'' ஹரிஹரன் தடுத்தான்.

''அண்ணாவுக்கு அண்ணி மேல்தான் அக்கறை...''

''உன் மேலும் அக்கறை காட்ட ஒருவனைத் தேடவா...''

''போங்க அண்ணா.''

அருவிக் காட்டிற்குப் போனார்கள். போகும் வழியெல்லாம்... நதி நீர் பாய்ந்து வந்து கொண்டிருந்தது. நதியோரம் வண்டி செல்ல சுமித்ரா விட்டால் நீரில் பாய்ந்து விடுபவள் போல எட்டிப் பார்த்துக் கொண்டே வந்தாள்.

''அண்ணி.. இந்த நதி நீர் எங்கிருந்து வருகிறது தெரியுமா?''

"எங்கிருந்து வருகிறது..?"

"அதோ அங்கேயிருந்து..."

வாசவி கை காட்டிய பக்கம் திரும்பிப் பார்த்த சுமித்ரா கன்னத்தில் கை வைத்து ஆச்சரியப்பட்டுப் போனாள்.

அகன்று விரிந்த மலைப்பகுதியில் வெள்ளைத் திரையிட்டு மறைத்தது போல் ஆர்ப்பாட்டமாய் கொட்டிக் கொண்டிருந்தது அருவி.

"இதனால்தான் இந்த இடத்திற்கு அருவிக்காடுன்னு பெயர்."

சிரிப்பும் கும்மாளமுமாய் அருவிக் கரையில் சுற்றி வந்தவர்களிடம் "இந்தாங்க..." என்று பிளாஸ்டிக் தட்டு களில் வடைகளை வைத்து நீட்டினாள் ரூபா.

"இங்கே எப்படி வடை கிடைத்தது.." ஹரிஹரன் வினவ.

"அம்மா நம்மை சும்மா ஊர் சுற்றிப் பார்க்க அனுப்பு வார்களா அண்ணா.. கூடையில் வடை காபியெல்லாம் வைத்துக் கொடுத்துத்தான் அனுப்பியிருக்கிறார்கள்.." என்றாள் வாசவி.

"உன் அண்ணன் குணம் தெரிந்த அம்மா.." சுமித்ரா கூறினாள்.

"ஊஹும்.. நம் பசி தெரிந்த அம்மா.. மலைக்காற்றில் நான்கு முறை வெளியே நடந்து விட்டு வந்தாலே அசுரப் பசி எடுக்கும். நாம் ஊரே சுற்றுகிறோம். பசிக்காதா? இவ்வளவு சொல்கிறீர்களே... உங்களுக்குப் பசிக்கவில் லையா? உண்மையைச் சொல்லுங்கள்."

சுமித்ரா வாயை மூடிக் கொண்டாள். அவளுக்குப் பசித்தது. பேசாமல் வடைகளைக் காலி செய்து விட்டு



காபியை வாங்கிக் குடித்தாள். ஊர் சுற்ற புதுத் தெம்பு வர அவர்கள் டேம் பார்க்கச் சென்றார்கள்.

## 24



மிகச் சிறிய டேம்தான் அது. டேமின் அடியில் படகுகள் போய் கொண்டிருந்தன.

"முதலில் போட்டிங் போகலாம் அண்ணா..." வாசவி குதித்தாள்.

ரூபாவும் விஷாலும் ஏறிக் கொண்ட போட்டில் வாசவியையும் அழைத்துக் கொண்டார்கள்.

"வாசவி என் கூட வரட்டும்.." சுமித்ரா தடுத்தாள்.

"லவ் பேர்ட்ஸ் இருக்கிற இடத்தில் அவள் எதற்கு?" ரூபா தங்களுடன் ஏறச் சொல்லி விட்டாள்.

வேறு வழியின்றி ஹரிஹரனுடன் போட்டில் ஏறி ணாள் சுமித்ரா. நீண்ட ஏரியில் நீரைக் கிழித்துக் கொண்டு போட் அன்னப் பறவை போல் செல்ல ஆரம்பித்தது.

இருவர், மட்டும் துடுப்புப் போட்டுச் செல்லும் படகில் ஹரிஹரன் துடுப்புப் போட ஆரம்பிக்க சுமித்ரா அவன் எதிரே அமர்ந்து நீருக்குள் கையை விட்டுத் துழாவினாள்

"ஓ.. மை டியர்.. ஓ.." ஹரிஹரன் ஆங்கிலப் பாடல் ஒன்றைப் பாட ஆரம்பித்தான்.



"இந்தா பாருங்க.. சும்மா 'கைய்யா முய்யான்'னு கத்திக்கிட்டு வந்தீங்க.. தண்ணிக்குள்ளேயே குதிச்சிருவேன்."

"கைய்யா.. முய்யாவா.. சுமி.."

"வாட் இஸ் தி மீனிங்குன்னு ஆரம்பிச்சுட்டிங்களா... ஏங்க ஒரு முடிவோடுதான் நடு ஏரிக்கு என்னை தள்ளிக்கிட்டு வந்திருக்கீங்களா.."

"தள்ளிக்கிட்டா.. இதுக்கு என்ன அர்த்தம் என்று தெரியுமா?"

"ஏதோ எசகு பிசகான அர்த்தம்ன்னு தெரியுது..."

"எதை வைத்து அப்படிச் சொல்கிறாய்?"

"உங்களுக்குத்தான் நல்ல பேச்சுக்கு அர்த்தம் புரியாதே. இந்த மாதிரி இடக்கு முடக்கான பேச்சுக்கு டான்னு அர்த்தம் புரிஞ்சிடுமே."

"ஸோ.. 'எசகு பிசகு'... 'இடக்கு முடக்கு'... இதற்கெல் லாம் தப்பான பேச்சுன்னு அர்த்தமா? ஐஸீ..."

"தெரியுதில்ல... இனி வாயை மூடிக்கிட்டு வர்றீங் களா?"

"அது எப்படி.. வொண்டர்புல் சிச்சுவேஷன். லேக் கில் போட்டிங் போய்கிட்டு இருக்கோம். நாம் வேறு லவ் பேர்ட்ஸ்... ஸோ... என்னால் பாடாமல் இருக்க முடியாது. பாடத்தான் செய்வேன்..."

"நான் தண்ணிக்குள் குதிப்பேன்."

"நீ குதிக்க மாட்டாய்."

"எப்படி அவ்வளவு நம்பிக்கையாய் சொல்கிறீர்கள்?"



"உன் பேரண்ட்ஸ் முன்னால் போய் ஆஜராகாமல் நீ தண்ணீரில் குதிப்பாயா?"

எப்படி மடக்குகிறான் பார்? அதற்காக இவன் 'ஓஓ' வென்று கத்துவதைக் கேட்டுக் கொண்டு வருவதா?

"கொடுமைடா சாமி.." சுமித்ரா தலை மீது கை வைத்தாள்.

"நான் பாடுவது அவ்வளவு கொடுமையா?"

"ஆமாம்.. ஆமாம்."

"நான் நன்றாகப் பாடுவேன் தெரியுமா?"

"கேட்கிறவளுக்குத்தான் அந்தக் கஷ்டம் தெரியும்."

"இப்போது என்ன வேண்டும் உனக்கு?"

"நீங்கள் பாடக்கூடாது. வாயை மூடிக் கொள்ள வேண்டும்."

"ஓகே.. நான் பாடவில்லை... நீ பாடு."

"நானா...? அதுக்கு வேறு ஆளைப் பாருங்கள்."

"வேறு பெண்ணை இனி ஏறெடுத்தும் பார்க்கும் எணணமில்லை. இப்போது நீ பாடுவதாக இருந்தால் நான் வாய் மூடி காதைத் திறந்து வைப்பேன். இல்லா விட்டால்..."

எப்படி மிரட்டுகிறான் பார்... சுமித்ராவிற்கு சிரிப்பு வந்தது.

"என்ன பாட்டுப் பாட..."

"லவ் பேர்ட்ஸ் பற்றிப் பாடு.."

இவன் வம்புக்கு இழுக்கிறான்... ஆனால் அவனுக்குத் தெரியாது. லவ் பேர்ட்ஸ் பற்றிப் பாடல் இருக்கிறது என்பது. அவள் பாட ஆரம்பித்தாள்.

''லவ் பேர்ட்ஸ்.. லவ் பேர்ட்ஸ்

தக்கத்திமித்தா.. என்னும் தாளத்தில் வா.''

''வாவ்... ரியலி திஸ் சாங் இஸ் சூப்பர்...''

''கண்ணைத் தொட்டு நெஞ்சைத் தொட்டு

பெண்ணைத் தொட்டது ஆசை

ஆசைக் கனவில் யாரோ பாட

காற்றில வந்தது ஓசை...''

மெல்ல அந்தப் பாடலின் இனிமையில் கவரப்பட்டான் ஹரிஹரன். சுமித்ராவோ பாடலில் ஆழ்ந்து போனாள்.

அந்த இனிய சூழ்நிலையை பாடல் மேலும் இனிமையாக்கியது. தலைப் பின்னலை முன்னால் போட்டு அதைச் சீண்டிய வண்ணம் அவள் அவன் முகத்தைப் பார்த்த வண்ணம் பாடினாள். பாடல் முடிந்ததும் இருவருமே பேச வார்த்தைகள் இல்லாதது போல் மௌனமாகி விட்டனர். ஹரிஹரன்தான் முதலில் மௌனத்தைக் கலைத்தான்.

''வாட் எ பியூட்டிபுல் மெலோடி சாங். நான் இதுவரை இப்படிப்பட்ட பாடல்களைக் கேட்டதே இல்லை... இது பிலிம் பாடலா?''

''ஆமாம்.. பழைய பாட்டு.. நீங்கள் எங்கே பாட்டெல்லாம் கேட்டிருக்கப் போகிறீர்கள். நான் பாடியதைப் போய் பெரிதாய் சொல்கிறீர்களே. இதை ரேடியோவில் கேட்டிருந்தால் என்ன சொல்வீர்களோ.. இதைப் பாடியவங்க பெயர் பி.சுசீலா. அவங்க குரல் தேன் குரல்...''

''தேன் குரல்...?''



''இட் மீன்ஸ் ஸ்வீட் வாய்ஸ்... போதுமா?''

''உன்னைவிட ஸ்வீட் வாய்ஸா... நோ சான்ஸ்.''

''சும்மா ஜொள்ளாதீர்கள்... அவங்க எங்கே... நான் எங்கே.. அவங்க கிட்டக்கூட நான் நிற்க முடியாது.''

''ம்ம்.. நான் 'ஜொள்' விடுவது தெரிந்தால் சரி.''

''இது மட்டும் தெரிந்து விடுமே. நான் தான் முதலிலேயே சொல்லிவிட்டேனே... எக்குத் தப்பானது எல்லாம் உடனே புரிந்துவிடும். மற்றதுதான் மண்டையில் ஏறாது.''

''நீ பக்கத்திலிருந்து சொல்லிக் குடு...''

''எனக்கு வேறு வேலையே இல்லை பாருங்கள்.''

''இதையும் ஒரு வேலையாக வைத்துக் கொள்.''

''என்ன தேவைக்கு?''

''என் தேவைக்குன்னு முதலிலேயே சொல்லி விட்டேன்.''

''நான் ஆள் அம்பில்லாத அநாதை பாருங்க. உங்க தேவைக்கு ஓடி வந்து சேவை பண்ண.. எனக்கு அப்பா, அம்மா, ரெண்டு அண்ணன்கள், மதினிகள் அண்ணன் பிள்ளைகள் சித்தப்பன், பெரியப்பன், அத்தை, தாய் மாமன்னு பதினெட்டு பட்டி கிராமமும் சொந்தமாக்கும்.''

''ஐ ஸீ... பதினெட்டு பட்டி... அப்புறம்?''

''அப்புறம் முக்கியமா என் அத்தை மகன் பரமன் இருக்கிறார்.''

''அத்தை மகன்? எனக்குப் போட்டியா...?''



''ம்ம்... நீங்கள்தான் அவருக்குப் போட்டி... நான் பிறந்தபோதே அவருக்குத்தான் நான்னு நிச்சயம் பண்ணிட்டாங்களாம்.''

''பண்ணிட்டாங்களாம் என்றால் யார் யார்.''

''பெரியவங்கதான்.''

''பெரியவர்கள் எல்லாம் பிறந்த குழந்தைக்கு மேரேஜ் எங்கேஜ்மெண்ட் நடத்தினார்களா? நாம் எந்த நூற்றாண்டில் இருக்கிறோம்?''

''ஏன்... இருபத்தி ஓராம் நூற்றாண்டில்தான்... இதிலும் சந்தேகமா?''

''உன்னைப் போல் ஒருத்தியைக் கண்டால் சந்தேகம் வரத்தான் செய்யும். ஆமாம். நீயென்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்?''

''திடீர்னு என் நினைப்பப்பத்தியென்ன கவலை?''

''வந்துவிட்டதே. அந்த பரமன் பற்றி உன் நினைவு என்ன? அந்த பரமன் ஆள் எப்படி? என்னை விட அவன் எந்த வகையில் பெஸ்ட்?''

''இது என்னங்க இப்படிக் கேட்டுட்டீங்க. எங்க ஊர் ஜல்லிக் கட்டில் காளையை அடக்குற முதல் ஆளு என் பரமன் மாமாதான். அடிதடின்னா வேட்டியை மடித்துக் கட்டிக்கிட்டு இறங்கிருவாரு...''

''வேட்டியை ஏன் மடித்துக் கட்டணும்?''

''கடவுளே... சண்டை போட்டால் வேட்டி தடுக்கி விடாதா?''

''அவ்வளவு டிஸ்டர்ப் பண்ற வேட்டியை ஏன் கட்டணும்? பெர்முடாஸ் போட்டுக்கலாமே...



அதுதான் வசதி... அப்புறம் சுமி... காளை என்றால் புல்லக்தானே. அதை அடக்க வேண்டுமென்றால் தான் கொஞ்சம் இடிக்கிறது. இந்த கார் ரேஸ் மாதிரி ஏதையாவது உன் வில்லேஜில் வைக்கக்கூடாதா? அது எனக்கு வெரி ஈஸி சப்ஜெக்ட்...''

சுமித்ராவிற்கு அவன் கவலையைக் கண்டு சிரிப்பு வந்தது. ஆகாயத்தில் பறந்து பறந்து பிஸினெஸ் பண்ணும் புலி. கிராமத்தில் காளையை அடக்க முடியவில்லை என்று உண்மையிலேயே கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறானே... அவள்மீது அவ்வளவு காதலா... அதுவும் இந்த ஓர் நாள் பழக்கத்திலேயேவா... நினைத்ததை வாய் விட்டுக் கேட்டு விட்டாள்.

''என்னை இந்த ஒரு நாளாய்த்தான் உங்களுக்குத் தெரியும். அதெப்படி அதற்குள் என்னைக் காலம் காலமாய் தெரிந்தது மாதிரி கதையளக்கிறீர்கள்? நீங்கள் பலே கில்லாடிதான்.''

''உன்னோடு ஒரு நாள் தான் பழகியிருக்கிறேன். ஆனால் என் உயிருள்ள வரை உன்னை என்னால் மறக்க முடியாது. இவ்வளவு பேசுகிறாயே உன்னால் என்னோடு கழித்த இந்த ஒரு நாளை மறந்துவிடமுடியுமா? உன் பரமன் மாமாவை திருமணம் செய்துகொள்ள முழுமனதாய் சம்மதம் சொல்ல முடியுமா?''

சுமித்ரா இந்தக்கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் கண்களை மூடிக் கொண்டாள். என்ன பதிலைச் சொல்வது? எப்படிப் பதிலைச் சொல்வது?

'உன்னோடு ஒரு நாள்... என் வாழ்வில் என்றும் திருநாள்...'

# 25



வரும்போது இருந்த உற்சாகம் திரும்பும்போது ஹரிஹரனிடமும் இல்லை. சுமித்ராவிடமும் இல்லை. இருவரும் ஆழ்ந்த யோசனையுடன் இருந்தனர். ஊர் சுற்றிய களைப்பில் ரூபா விஷாலின் தோள் மேல் சாய்ந்து தூங்கிக் கொண்டு வந்தாள். வாசவி சுமித்ராவின் தோள் மேல் தலை சாய்த்தாள். பாசத்துடன் அவள் தலைதாங்கிக் கொண்ட சுமித்ராவின் விழிகளில் நீர் கசிந்தது.

இந்த வாசவி யார்... அவள் யார்? ஏன் இவ்வளவு பாசத்தை காட்டுகிறாள். சுமித்ரா ஹரிஹரனின் காதலி என்பதற்காக... நாளை உண்மை தெரிந்தால் இவள் பாசம் இப்படியே இருக்குமா? மாறிவிடுமா?

ஹரிஹரனின் முகம் பார்த்தாள். அவன் கடந்து செல்லும் தேயிலைச் செடிகளைப் பார்த்துக் கொண்டு வந்தான். குரும்புத்தனமில்லாத அவனது முகத்தைக் காண அவளுக்கு சகிக்கவில்லை.

''எந்தக் கோட்டையைப் பிடிக்க திட்டம் போடுறீங்க?'' என்றாள்.

அவன் சிந்தனை கலைந்து அவள் முகம் பார்த்தான். அவள் எதிர்பார்த்த பதிலைச் சொன்னான்.

''எல்லாம் உன் மனம் என்னும் கோட்டையை பிடிக்கத்தான்.''



''இப்படி ஊமைச் சாமியார் போல வந்தால் மண் கோட்டையைக் கூடப்பிடிக்க முடியாது. இதில் மனக் கோட்டையை எப்படிப் பிடிப்பீர்கள்?''

''ஓ... ஐஸீ... உன்னோடு என்ன பேசுவது? உன் லாங்வேஜ் புரியாமல் விளக்கம் கேட்டால் என் வாயை மூடுவாய்... பேசாமல் வந்தால் சாமியார் என்பாய். இந்தப் பெண்களின் சைக்காலஜியே எனக்கு விளங்கவில்லை...''

''பெண்களா? என்னைத்தவிர இன்னும் எத்தனை பெண்களுடன் பழக்கம்?''

''அது... கணக்கெல்லாம் சொல்ல முடியாது. நிறையப் பெண்கள்...''

''உங்களைப் போய் நல்லவர்ன்னு நினைத்தேனே...''

''இப்போது அந்த நினைவுக்கு என்ன கெடுதல் வந்து விட்டது. எல்கேஜியிலிருந்து நான் படித்தது எல்லாம் கோ.எஜுகேசன் தான். ஸோ... என் பிரண்ட்ஸில் பாதி பெண்கள்தான். இது ஒரு பெரிய மேட்டரா?''

சுமித்ரா கடுப்புடன் வாய்க்குள் முணுமுணுத்தாள்.

''கோபம் வந்தால் சத்தமாய் திட்டு. உதட்டை மட்டும் அசைத்தால் எப்படி?''

''அது அப்படித்தான்...''

விஷாலின் பங்களாவிற்குள் வண்டி நுழைந்தது. பத்மாவதி வாசலிலேயே காத்திருந்தாள்.

''ஏன்ப்பா... மணி மூணாகப் போகுது. இன்னும் மதியச் சாப்பாடு சாப்பிடாமல் அப்படி என்ன ஊர் சுற்ற வேண்டியிருக்கு. வந்து சாப்பிட்டுவிட்டு திரும்பப் போய் பார்த்தால் வேண்டாம் என்கிறதா?''



வண்டியை விட்டு கீழே இறங்கியபடி இலகுவாய் பதில் கூறினான் ஹரிஹரன்.

''நீங்களோ எனக்குப் பிடித்த ஐட்டமாய் சமைத்து வைத்திருக்கிறீர்கள். நான் ஹெவியாய் சாப்பிட்டு விடுவேன். சாப்பிட்டவுடன் மதியத் தூக்கம் வந்து விடும். அப்புறம் எப்படி ஊர் சுற்றிப் பார்ப்பது? அதனால் மொத்தமாய் பார்த்து விட்டு வந்து விடலாம்ன்னு ஐடியா பண்ணினோம்...''

''இது உன் வேலையா? சரி சரி உள்ளே வந்து சாப்பிடுங்க.''

எல்லோரும் ஊர் சுற்றிய களைப்பில் நன்றாகச் சாப்பிட்டார்கள். ஹரிஹரன் மதியம் தூங்கச் சென்று விட்டான்.

சுமித்ராவை வாசவி தன் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

''படுங்க அண்ணி. ரெஸ்ட் எடுங்க. நைட் ஜர்னி போகனுமில்லை...''

''எனக்குத் தூக்கம் வரவில்லை வாசவி.''

சற்று நேரம் வாசவியுடன் பேசிக்கொண்டிருந்து விட்டு சுமித்ரா தன் பாடப் புத்தகத்தை எடுத்துப் பிரித்துப் படித்தாள்.

பத்மாவதி காபியுடன் வந்தாள்.

''என்னம்மா செய்கிறாய்...''

''சும்மா கதை படிக்கிறேன்ம்மா...''

'இதுவும் காலக் கொடுமைதான். எல்லோரும் கதை புக்கை படித்துக் கொண்டு பாடபுக்கென்று பொய் சொல்வார்கள். நான் பாடபுக்கை கதை புக்கென்று சொல்லி மறைக்கிறேன்.'



இரவு உணவுக்குப் பின் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டபோது பத்மாவதி ஒரு தட்டுடன் வந்தாள். அதில் பூ, புதுப் பட்டுப் புடவை,ஒரு நகைப் பெட்டி, குங்குமச் சிமிழ் முதலியவை இருந்தன.

''என்னம்மா... இது...'' சுமித்ரா பதற்றத்துடன் விலகி நின்றாள்.

''ஹரிஹரன் எனக்கு இன்னொரு மகன் போலம்மா. நீ அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப்போகிற பெண். உன்னை வெறுங்கையுடன் எப்படி நான் அனுப்புவேன்? வாங்கிக் கொள்ளம்மா...''

''நீங்களாவது சொல்லக் கூடாதா?'' சுமித்ரா ஹரிஹரனின் முகம் பார்த்துக் கெஞ்சும் குரலில் கூறினாள்.

''இது லேடிஸ் டிபார்ட்மென்ட். நான் தலையிடமுடியாது...'' ஹரிஹரன் திட்டவட்டமாய் கூறிவிட்டான்.

ஒரு முடிவுக்கு வந்தவளாய் சுமித்ரா பத்மாவதியின் கால்களில் பணிந்து எழுந்தாள். பத்மாவதி அவள் நெற்றியில் குங்குமம் வைத்து தலையில் பூவை சூட்டினாள். ஹரிஹரனின் முகம் மலர்ந்தது.

''இந்தச் சேலையையும், நகையையும் ஒரு பையில் போட்டுத் தாங்கம்மா...''

எதற்காக கேட்கிறாள் என்பது புரியாமல் புதுப்பை ஒன்றில் போட்டுத் தந்தாள் பத்மாவதி.

கண்கலங்க எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு ஹரிஹரனின் காரில் முன் பக்கத்தில் ஏறி அவனருகில்

அமர்ந்தாள் சுமித்ரா. பயணம் தொடங்கியது. வரும் போது காரின் பின்சீட்டின் அடியில் பயந்துபோய் ஒளிந்து வந்தவள் போகும்போது காரின் முன்சீட்டில் அவன் அருகே உரிமையுடன் அமர்ந்து செல்கிறாள்.

ஒரு நாளில் எப்படி ஒரு திருப்பம்?

''இந்தாங்க...'' மூணாறு சாலையில் கார் விரைந்து கொண்டிருக்க சுமித்ரா ஹரிஹரனிடம் அந்தப் பையை நீட்டினாள்.

''வாட் இஸ் திஸ்?''

''அவங்க கொடுத்த புடவையும் நகையும்.''

''இதை என்னிடம் ஏன் கொடுக்கிறாய்?''

''இதை வைத்துக் கொள்ள எனக்கு என்ன உரிமை யிருக்கிறது?''

''இதை அவர்களிடம் போய் சொல்லித் திருப்பிக் கொடு.''

''இதோ பாருங்க. உங்களுக்கும் எனக்கும் வழக்கு வேண்டாம். இதை நான் வைத்துக் கொள்ள விரும்ப வில்லை. இது உங்களைக் கட்டிக்க போகிறவளுக்கு உங்கள் நண்பரின் அம்மா கொடுத்த பரிசு.''

''அது நீ தான் என்று நினைத்துத்தானே கொடுத் திருக்கிறார்கள்...''

''நானில்லையென்பது உங்களுக்கும் தெரியும். எனக் கும் தெரியும். உங்களுக்கு என் குடும்பத்தைப் பற்றித் தெரியாது. முன்பின் தெரியாத மூன்றாம் மனிதருக்கு எல்லாம் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க மாட்டார்கள். நடக்காத ஒன்றுக்கு ஏன் ஏங்க வேண்டும்?



து எனக்கு சொந்தமில்லாத பரிசு. இதை எடுத்துக் கொண்டுபோய் நாளை உங்களை மணம் செய்து கொள்ளப் போகிறவளுக்கு கொடுங்கள். அதுதான் முறை.''

''லுக் சுமி... முறை பற்றியெல்லாம் நீ பேசாதே. நானா உன்னை என் காரில் ஏறச் சொன்னேன்? நானா என் நண்பனின் வீட்டில் உன்னை என் எதிர்கால மனைவி யென்று சொன்னேன்? ஆபத்திலிருந்து தப்பிக்க என் காரில் ஏறி ஒளிந்து கொண்டாய். என் நண்பனின் வீட்டில் உன்னை என் காதலியென்று நினைத்தபோது உண்மையைச் சொல்லாமல் மௌனமாக நின்றாய்...''

''நீங்கள்தானே சொல்ல வேண்டாம் என்றீர்கள்...''

''பாதி பிலிம் ஓடி முடித்த பின்னால் கதையை எப்படி மாற்றுவது? நீ காரிலிருந்து இறங்கிய மறு கணமே நீயார் என்பதை அவர்களிடம் சொல்லியிருக்க வேண்டுமா.... இல்லையா? ஏன் அதை நீ செய்யவில்லை?''

''என்னைக் குற்றவாளி ஆக்குகிறீர்களா?''

''உன்னைக் குற்றம் சொல்லி எனக்குப் பயன் என்ன? உன்னோடு கழித்த இந்த ஓர் நாள்... என் வாழ்நாளெல் லாம் தொடர்ந்து வரப் போகிறது. என் சுவாசத்தின் கடைசி வினாடிகளிலும் இந்த ஓர் நாளின் நினைவு என் நெஞ்சில் இருக்கும். இந்த நாளை நான் எப்படி மறப்பது? நிம்மதியைத் தேடி வந்தேன். உன் நினைவு களைச் சுமந்து கொண்டு என் நிம்மதியை மீட்காமலே போகப் போகிறேன். இது யார் குற்றம்?''

''உங்களைப் போல் நினைத்ததை எல்லாம் நான் பேசிவிட முடியாது. அதற்கான சுதந்திரம் எனக்குக்



கிடையாது. நான் என் பெற்றவர்களுக்கு கட்டுப்பட்ட வள். உங்கள் வாழ்க்கை முறை வேறு. எங்கள் வாழ்க்கை முறை வேறு. இரண்டும் ஒட்டாது.''

''ஓ.கே... நான் உன்னை போர்ஸ் பண்ணப் போவ தில்லை. அதே சமயம் அவர்கள் கொடுத்த பரிசையும் வாங்கிக் கொள்ள முடியாது. அங்கேயே நான் உன்னிடம் சொல்லிவிட்டேன். இது லேடிஸ் டிபார்ட்மென்ட். நான் தலையிட மாட்டேன் என்று.''

''இப்போது இதை என்ன செய்வது?''

''வைத்துக் கொள் என்றாவது ஓர் நாள் அவர்களைச் சந்தித்தால் இவற்றைத் திருப்பிக் கொடுத்துவிடு. உன் பரமன் மாமா நீ மூணாறுக்கு போக வேண்டுமென்று ஆசைப்பட்டால் அழைத்து வர மாட்டாரா?''

''அவர் ஏன் என்னை அழைத்து வரவேண்டும்?''

''அவரைத்தானே நீ மேரேஜ் பண்ணிக் கொள்ளப் போகிறாய்''

''அப்படி நான் சொன்னேனா?''

''ஏறக்குறைய அப்படித்தான் நீ சொன்னாய்...''

''இப்போது என் மனதில் திங்கள்கிழமை நான் எழுத வேண்டிய பரீட்சை மட்டும்தான் நினைவில் இருக்கிறது. மற்றது எதுவுமில்லை...''

ஹரிஹரன் பதில் பேசாமல் மௌனித்தான். கார் மூணாறு மலைப் பாதையில் இறங்க ஆரம்பித்தது. சுமித் ராவுக்கு குளிர் அடித்தது. அவள் தாவணியை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

ஹரிஹரன் காரை சாலையோரமாய் நிறுத்தினான். காரின் பின்சீட்டிலிருந்த தன்



டுத்தான். அதிலிருந்து சால்வையை உருவி சுமித்ரா வின் தோளோடு போர்த்திவிட்டான். காரைக் கிளப்பி னான்.

அவனது பரிவான அந்தச் செய்கை சுமித்ராவை மிகவும் பாதித்தது. அவள் உடைந்து போய் அழுக ஆரம்பித்தாள். அவளின் கண்ணீர் துளிகள் சால்வையின் மேல் பட்டுச் சிதறின.

''சுமி... ப்ளீஸ்... டோன்ட் கிரை. என்னால் தாங்க முடியாது.''

''என்னால் மட்டும்தாங்க முடிகின்றதா? ஏன் என்னை உங்கள் அன்பால் கொல்லுகிறீர்கள்?''

''அன்பு காட்டுவது குற்றமா?''

''குற்றம்தான். ஆயிரம் கட்டுக்காவல் இருக்கும் குடும் பத்தில் பிறந்தவள் மேல் அன்பு காட்டுவதும் குற்றம் தான்.''

''அதற்காக உன்னை வெறுப்பது போல் என்னால் நடிக்க முடியவில்லையே...''

''உங்களை யார் நடிக்கச் சொல்லுகிறார்களாம்... உண்மையாகவே வெறுத்து ஒதுங்க வேண்டியதுதானே...''

''வாட் எ செல்பிஷ் வுமன் யு ஆர். இதை உன்னிடம் நான் எதிர்பார்க்கவில்லை. பெண்கள் சுயநலவாதிகள் என்பதை ப்ரூவ் பண்ணுகிறாய்.''

''ஆமாம்... நான் சுயநலவாதிதான். எனக்கு என் குடும் பம் என் அப்பாம்மா, அவர்களின் குடும்ப கௌரவம் இது மட்டும்தான் முக்கியம். ஒன்றைத் தெரிந்து கொள் ளுங்கள். பெண்கள் சுயநலமாய் தனி குடும்பம் என்று
ல்தான் உங்களைப் போன்ற ஆண்கள் ஊர்

சுற்றிக் கொண்டு குடும்பப் பொறுப்பில்லாமல் அலைகிறீர்கள்.''

''உன்னை நியாயப்படுத்தாதே...''

''அதற்கு அவசியமேயில்லை. நான் என்ன தவறு செய்தேன்?''

''இன்றைய நாளை மறக்க நினைக்கிறாயே அது தவறில்லையா?''

''இன்றைய நாளை நினைத்து வாழ்வதில் பயனில்லாதபோது மறந்து விடுவது தானே சரியாக இருக்கும்.''

''நீ தேவை இல்லாமல் பிடிவாதம் பிடிக்கிறாய்...''

''என் குடும்பத்தின் கௌரவத்திற்கு இந்தப் பிடிவாதம் தேவை.''

கார் போடி மெட்டை அடைந்திருந்தது. பாதையின் ஓரமாய் இருந்த காபி பாரில் இரண்டு கப் காபி வாங்கி ஒரு கப்பை அவளிடம் கொடுத்தான்.

''குடி... குளிருக்கு இதமாக இருக்கும். பேசிப் பேசி உன் தொண்டை வறண்டு போயிருக்கும். குடித்து விட்டுத் தெம்பாய் பேசு.''

பதில் சொல்லாமல் காலி கப்பை வெளியே மலைச் சரிவில் விட்டு எறிந்தாள் சுமித்ரா.

'பார்த்துப் பார்த்து செய்கிறானே... குளிரடித்தால் அம்மா மாதிரி போர்த்தி விடுகிறான். தொண்டை வறட்சிக்கு அப்பா போல் காபி வாங்கிக் கொடுக்கிறான். காலையில் பத்மாவதி வீட்டாரிடம் நான் யாரென்று சொல்லாமல் விட்டது என் தவறு தானே... நிம்மதி தேடி வந்தவன் உடனடியாய் திரும்பிச் செல்ல வேண்டிய



நிர்ப்பந்தத்தை உருவாக்கியிருக்கிறேன். அவனுக்கு அதில் கோபமேயில்லை. அவன் அன்பை மறுத்ததற்கு கோபம் கொள்கிறான். ஹரி! உன்னைப் போல் ஒருவனை என்னால் எப்படி மறக்க முடியும்? உன்னோடு கழித்த இந்த ஒரு நாளை எப்படி என்னால் ஒதுக்க முடியும்? இதை உன்னிடம் சொல்வதில் பலன் என்ன? என் கிராமம் வெட்டு. குத்து, வேல் கம்பு என்று வாழும் ஊர். அதில் உன்னை மாட்டிவிட எனக்கு இஷ்டமில்லை. விரல் நுனியில் அழுக்குப்படாமல் நுனி நாக்கில் ஆங்கிலம் பேசிக் கொண்டு மடிப்புக் கலையாத உடையுடன் வலம் வரும் நீ... வேட்டியை மடித்துக்கட்டி வெட்டறிவாளை தூக்கும் என் ஜனங்களுடன் எப்படி மல்லுக்கு நிற்க முடியும்? என்னால்தான் அதை எப்படி பார்க்க முடியும்? போய் வா... உனக்கென்று ஒருத்தி உனக்கேற்றவளாய் கிடைப்பாள். அவளுடன் குடும்பம் நடத்து. இந்த ஓர் நாளின் நினைவே எனக்குப் போதும்...

தூரத்தில் அவர்கள் கிராமம் தெரிந்தது. விடியலின் அறிகுறி வானத்தில் தென்பட்டது. சுமித்ராவின் வீட்டின் முன் கார் போய் நின்றது.

## 26



சுமித்ராவை மதுரைக்கு அழைத்துச் செல்ல பஸ்ஸில் ஏறிய வெள்ளைசாமி அவன் அருகே கார் மேகவண்ணன் அமர்ந்ததும் உஷராகி விட்டான். தன் செல்



போனில் தகப்பனின் நம்பரை அழுத்தி தயாராய் வைத்து விட்டு செல்லை அனைத்து சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான். கார்மேகவண்ணனால் மட்டுமே ஆபத்து வரும் என்று அவன் கணக்கிட்டுக் கொண்டு தங்கையை காவல் காத்துக் கொண்டு வந்தபோது கருமாத்தூர் அருகே பரந்தாமன் உருவத்தில் அடுத்த ஆபத்து காத்திருந்தது.

எவ்வளவோ போராடியும் தங்கையை காவல் காக்கமுடியாதபோது அவன் செய்த புத்திசாலித்தனமான வேலை செல்போனை கையில் எடுத்து தகப்பனின் போன் நம்பரை அழுத்தியதுதான். பேச முடியாமல் அடி மடேர், மடேரென்று அவன் மேல் சராமாரியாக விழுந்த போது தலையை கையில் பிடித்துக் கொண்டு தங்கையிடம் கத்தினான் அவன்.

''ஓடிவிடு சுமித்ரா... இது பரந்தாமனின் வேலை. உன்னைத் தூக்கிப் போக பார்க்கிறான். அவனிடம் மாட்டிக் கொள்ளாதே ஓடிவிடு...''

போன் மணி அடித்ததும் எடுத்துப் பேசிய வீராச்சாமிக்கு மறுமுனையில் மகன் கதறியது காதில் விழுந்தது.

மீசை துடிக்க கண்கள் சிவக்க அய்யனார் போல் அவர் சிலிர்த்து எழுந்தார். மறுமுனையில் ராமசாமியின் அலறல் தொடர்ந்து கேட்டது.

''உன்னை என்கூட அனுப்ப அப்பா ஆயிரம் யோசனை பண்ணினார் அவர் பயந்தது போலவே நடக்குது. என் மேல் பழி வராமலிருக்கணும்னா உனக்கு உண்மையாகவே இந்த அண்ணன் மேல் பாசமிருந்தால் அவன்



''வெள்ளைச்சாமி... நான் பெத்தமகனே... உனக்கு என்னடா ஆச்சு...'' வீராச்சாமி போனில் கதறினார்.

...சவேலையாக இருந்த கனகவள்ளி அதைப் போட்டுவிட்டு ஓடி வந்தாள். சமையலறையில் இருந்த மல்லிகாவும், செல்வியும் பதறிப் போய் கிட்டவந்தனர். இருவர் மனதிலும் வேறுவேறு எண்ணங்கள்.

''ஐயோ... என் சித்தப்பன் மகன் ஆத்திரத்தில் என் புருசனை அடிச்சுப்போட்டிருச்சோ... ஐயோ கடவுளே... வினை விதைத்தவன் வினையை அறுக்கிற கதையாய் என் கதை ஆகிப் போச்சே. நான் வைச்ச கொள்ளத்தீ என் வீட்டுக் கூரையைப் பத்தி எரிஞ்சு போச்சே... ஆத்தா மகமாயி... என் தாலியைக் காப்பாத்திக் கொடு தாயி...'' மல்லிகாவின் மனம் ஓலமிட்டது.

'நல்லவேளை... என் புருசன் போகாம இவ புருசன் போனாரு... இந்த கூறுகெட்ட பெரியப்பன் மகன்... என் கோபக்கார அண்ணன் இவ புருசனை போட்டுத் தள்ளிருச்சோ... ஆனாலும் என் அண்ணனுக்கு இவ்வளவு ஆங்காரம் ஆகாது...'' செல்வியின் மனம் ஆறுதல் கொண்டது.

''என்னங்க... என்ன ஆச்சு... நான் பெத்த பிள்ளைகளை காவல் காக்கத் தெய்வமிருக்குன்னு அனுப்பினேனே... அதுக கண் திறக்கலையா? என் பொண்ணு கதி என்ன ஆச்சு? நான் தலைநாளில் பெத்த என் தங்கமகன் என்ன ஆனான்? ஐயோ... தெய்வமே... என் பெத்த வயிறு பத்தி எரியுதே...'' கனகவள்ளி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு போட்ட ஒப்பாரியில் ...டியது.

''யாருடி இவ? நேரம் காலம் தெரியாமல் சத்தம் போட்டு ஊரைக் கூட்டுறவ... பொறு... என்ன ஆச்சுன்னு ஏதாச்சும் தெரியுதான்னு பார்ப்போம்...''

அடிபட்ட வெள்ளைச்சாமியின் கைவிரல் அவனையறியாமல் செல்போனை அணைக்க அவன் மயங்கி விழுந்தான். சுமித்ரா தன் பேக்கை சுழற்றியடித்து வழி ஏற்படுத்திக் கொண்டு தப்பி ஓடினாள். அவளைத் தொடர்ந்து ஆண்கள் ஓடிவிட ரத்த வெள்ளத்தில் கிடந்த வெள்ளைச்சாமியின் கை ஓரமாய் செல்போன் கிடந்தது.

செல் அணைக்கப்பட்டதை உணர்ந்த வீராச்சாமி வெள்ளைசாமியின் செல்போன் நம்பரை போனில் அழுத்தினார். வெள்ளைச்சாமியின் செல்போன் மணி அடிக்க ஆரம்பித்தது.

தள்ளி நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தில் இருந்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''செல்போன் மணியடிக்குது'' என்றார் ஒருவர்.

''எடுத்துப் பேசிப் பார்க்கலாமா'' மற்றொருவர் யோசனை கேட்டார்.

''வேண்டாம். வீண் வம்பு...'' தீர்மானமாய் கூறினார் இன்னொருவர்.

''அடப் போங்கய்யா... போக்கத்த மனுசன்களா... கண்ணுக்கு முன்னால் ஒருத்தனை அடிச்சுப் போட்டுட்டு பொம்பளைப் புள்ளைய தூரத்திக்கிட்டு போறானுங்க... அதை ஏன்னு கேட்காமல் வேடிக்கை பார்த்துக்கிட்டு நிக்கிறதும் இல்லாம... அடிக்கிற செல்போனை எடுத்துப் பேசக்கூட பயுங்குச்சி...



நீங்கள்ளாம் மனுசப்பிறவிகளா? தூ... ரத்தம் கொட்டிக் கிடக்கிற மனுசன் செத்துப் போனா அடிச்சுப் போட்டவன் மட்டும் பொறுப்பில்லைய்யா. அதை வேடிக்கைப் பார்த்துக்கிட்டு அசையா மரம்போல நின்னோமே... நாமளும்தான் பொறுப்பு...''

ஆவேசப்பட்டாள் சுமித்ராவின் அருகே அமர்ந்து வந்த பெண்மணி. கோபமாய் போய் மணி அடித்துக் கொண்டிருந்த செல்போனை எடுத்துப் பேசினாள்.

''யாருங்கைய்யா... ஐயோபாவமே... இந்த புள்ளைகளோட அப்பாவா? ஐயா... அடிபட்டுக் கிடக்கிற இந்தத் தம்பியும் படிச்சுக்கிட்டிருக்கிறது போல் பாவாடை தாவணி போட்ட ஒரு பொண்ணும் நான் வந்த பஸ்ஸில் தான் வந்தாங்க. இங்கே கருமாத்தூர் பக்கம் கலாட்டாங்கய்யா... பஸ் நின்னு போச்சு... எங்கேயிருந்தோ வந்த பத்துபனிரெண்டு ஆளுக உங்க மகனை மட்டும் குறிவச்சு அடிச்சுப் போட்டுட்டு அந்தப் பொம்பளை புள்ளைய தூரத்திக்கிட்டு ஓடிட்டானுங்கய்யா... இந்தப் புள்ள பாவம் ரத்தம் கொட்டி கிடக்குது. லாரி பஸ் எதுவுமே ஓடாம ரோடு அடச்சு கிடக்குதுங்க... நீங்க பேசறதை பார்த்தா பெரிய வீட்டு மனுசர் போல தெரியுது. காலாகாலத்தில் வந்து இந்தப் புள்ளய காப்பாத்திக் கொண்டு போங்க.''

தேவையில்லாமல் தொண தொணக்கிறாள் என்று அவள் மேல் கோபம் கொண்டு அலட்சியப்படுத்தினாள் சுமித்ரா. தானுண்டு.... தன் வேலையுண்டு என்று இருக்கத் தெரியாத பெண்மணி என்று தன் மனதிற்குள் திட்டினாள். அந்தப் பெண்மணிதான் ஒரு கும்பலே ...ன்ன' என்று ஒதுங்கி நின்று வேடிக்கைப்



பார்த்துக் கொண்டிருந்தபோது துணிந்து வந்து நிலைமையைச் சொன்னாள்.

அன்று மட்டும் அவள் சுமித்ரா சலித்துக் கொண்டது போல் தன் வேலையைப் பார்த்துக் கொண்டு போயிருந்தால் வெள்ளைச்சாமியை உயிரோடு பார்த்திருக்கவே முடியாது.

மனிதரை நல்லவர் யார்... கெட்டவர் யார்... என்று பார்வையில் தீர்மானிக்க முடியாது. சூழ்நிலையே அதைத் தீர்மானிக்கும்.

செய்திக்கேட்டதும் கனகவள்ளி தன் ஒப்பாரியின் சத்தத்தை இன்னும் கூட்டினாள். தலைதலையாய் அடித்துக் கொண்டு கதற ஆரம்பித்தாள்.

''நான் பெத்த மக்கா... நாதியத்து போனீங்களா நான் வளர்த்த செல்லங்களா... ஊரையே கட்டிஆளுர மவராசன் பொண்டாட்டின்னு பீத்திக்கிட்டுத் திரிஞ்சேனே... நடுக்காட்டில் என் மகனை அடிச்சுப் போட்டுட்டு என் பச்சைப் பசுங்கிளியை துரத்திக்கிட்டு ஓடியிருக்கானுங்களே... எந்த களவாணிப்பய மகன் இதைச் செய்தானோ... எந்த களவாணிச்சிறுக்கி சேதி சொல்லி விட்டாளோ... அவ எங்கையில் அகப்பட்டா கொரவளையை நெறிச்சே கொன்னிடுவேனே... ஐயோ... நிக்கறீங்களே... என் பொண்ணைத் தேடிக் கொண்டு வந்து என்கிட்ட ஒப்படைங்க... என் மகன் உயிரைக் காப்பாத்தி என் கண் முன்னால கொண்டு வந்து நிப்பாட்டுங்க... அப்பத்தான் உங்களுக்கு வாக்கப்பட்டு மூணு புள்ளைகளை நான் பெத்ததற்கு ஒரு அர்த்தமிருக்கும். என் ஈரக்குலை துடிக்கிற சத்தம் உங்களுக்கு கேட்கலையா? ஊருக்கு



...உங்க வீட்டு நியாயதை யாரு நாயம் சொல்வீங்களே... பார்ப்பா...?''

மாமியாரின் கதறலில் மல்லிகா இணைந்து கொண்டாள். ''ஐயோ... அத்தே... காலையில அவர் போகும் போது நிலைப்படி இடிச்சுச்சே... ஒருவா தண்ணி குடிச்சுட்டு உட்கார்ந்துட்டு போங்கன்னு சொன்னேனே... பாவிமனுசன் என்னை முறைச்சுக்கிட்டு தங்கச்சிய கூட்டிக்கிட்டுப் போனாரே... அவரை என் கண்ணில இனி நான் பார்ப்பேனா... ஐயோ... என் கட்டழகு துரையே... எந்தச் சிறுக்கிபெத்த சிறுக்கி மகள் உங்களை இந்தகதிக்கு ஆளாக்கினா... அவளை மாறுகை மாறுகால் வாங்கினாத்தான் என் மனசு ஆறும் என் மச்சானே...''

செல்வி திகிலடைந்துபோனாள். ஒரு பக்கம் மாமியார் குரல் வளையை நெறிக்கத் துடிக்கிறாள். இன்னொரு பக்கம் மச்சான்காரரின் மனைவி மாறுகை மாறுகால் வாங்க சபதம் போடுகிறாள். இந்த பெரியப்பன் மகன் எந்தக் காரியத்தை எடுத்தாலும் இப்படித்தான். விளங்காது. பொண்ணைத் துரத்திக்கிட்டு போனவன் ஒரு தாலியைக் கட்டிவிட்டால் இவர்களின் வெறி அடங்கி விடும். அதையாவது ஒழுங்காய் செய்து வைத்திருக்கிறானா... இல்லை துரத்திப் போனவளை கோட்டை விட்டுவிட்டு உட்கார்ந்திருக்கிறானா?

வீராச்சாமி தரையில் விழுந்து கதறும் மனைவியைப் பார்த்தார். அவரது நெஞ்சம் குமுறியது. கைகால் நரம்புகள் புடைத்தன. இளைய மகன் ராமசாமியைப் பார்த்துக் கத்தினார்.

''கிளம்புங்கடா எல்லோரும்... உன் அண்ணனை முதலில் காப்பாத்துவோம். இந்த வேலையை செஞ்

சவன் எவனாயிருந்தாலும் அவனை உண்டு இல்லைன்னு பண்ணலே... நான் வீராச்சாமி இல்லடா...''

அதற்குள் அவரது ஒன்றுவிட்ட அண்ணன் தம்பிகளின் மகன்கள் அங்கு வந்து குமிந்து விட்டனர். நடந்ததைக் கேள்விப்பட்டு ஆவேசமானவர்கள் அவர்களிடமிருந்த அனைத்து வாகனங்களையும் கிளப்பிக் கொண்டு பறக்க ஆயத்தமானார்கள்.

''ஏன் பெரியப்பு நாங்க இத்தனை பேர் இருக்கிறப்போ அவனுகளை சும்மா விட்டிருவமா? நம்ம வீட்டுப் பொண்ண தூக்கிப் போக பார்த்தான்னா அவன் சோலியை முடிக்காம மூலையிலா உட்காருவோம். நீ வா அப்பு. ஒரு கை பார்க்கலாம்...''

அப்போது வீராச்சாமியின் வீட்டுவாசலில் டாடா சுமோ வண்டி ஒன்று சீறிப் பாய்ந்து வந்து நின்றது. அதிலிருந்து பரமன் பாய்ந்து இறங்கினான். வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு வீட்டுக்குள் பாய்ந்து வந்தான். வீராச்சாமியைப் பிடித்து உலுக்கினான். வெறி கொண்ட வேங்கையின் ஆவேசத்தோடு உருமினான்.

''நான் கேள்விப்பட்டது உண்மையா? என் மாமன் மகனை அடிச்சுப் போட்டுட்டு என் மாமன் மகளை துரத்திக்கிட்டு ஓடியிருக்கானுங்களாமே... சொல்லு மாமா... ஏன் பிடிச்சு வைச்ச பிள்ளையார் மாதிரி நிற்கிற. என் மாமன் மகன் மேல் ஒருத்தன் கையை வைச்சிருக்கான். அவன் கையை எடுக்காமல் நான் விடமாட்டேன். என் மாமன் மகளை துரத்தியிருக்கானுங்க... அவனுக காலை எடுக்காமல் வரமாட்டேன். வா மாமா போகலாம்.''



''டேய்... எல்லாரும் வாங்கடா... போய் அவனுகளை வெட்டிச் சாய்ச்சிட்டு வரலாம். அட நீ ஏன் அத்தை அழுது புலம்புற... உன் மகனுக்கும், மகளுக்கும் ஒண்ணும் ஆகாது. என் மாமனை கட்டிக்கிட்டு வந்துட்டு நீ ஏன் கதறி கண்ணீர் விடறே... அதைப் பார்க்கவா நாங்க ஆம்பளைங்கன்னு சொல்லிக்கிட்டு வெள்ளை வேட்டியை மடிச்சுக்கட்டிக்கிட்டு அலையறோம். நீ தைரியமா இரு அத்தை... உன் மகனையும், மகளையும் கொண்டு வந்து உன் கண் முன்னால் நிப்பாட்டுறோம்... ராமசாமி... வாடா...''

ரத்த பந்தம் என்பது எது? ரத்த சொந்தம் என்பது எது? அடித்தாலும் பிடித்தாலும் ஒன்றுக்குள் ஒன்றாக ஒன்றிக் கொள்வதுதான் ரத்த பந்தம். அவர்களுக்குள் ஆயிரம் சண்டை சச்சரவுகள்... போட்டி பொறாமைகள் இருந்தாலும் அயல்மனிதரின் முன் விட்டுக் கொடுக்காமல் இருப்பதுதான் ரத்த சொந்தம்... ஒரு கண்ணில் அடித்தால் மறுகண்தான் வலிக்கும். உண்மையான ரத்த சொந்தமென்று இருந்தால் அவர்கள் அனைவரின் கண்களும் வலிக்கும்.

கிராமத்து மண்ணின் வலிமை இதுதான். எது வந்த போதும் தன் ஊர் மக்களை விட்டுத் தராத போர்க்குணம் கொண்டவர்கள் இவர்கள்.

''டேய்... அந்த ஊருக்காரன்கிட்ட விளையாட்டு வச்சிக்காதே. ஊரே ஒன்று கூடி மொத்திவிடும் ஜாக்கிரதை...''

ஒரு தனி மனிதனைப் பார்த்து அல்ல... ஊரைப் பார்த்து பயப்பட வைப்பது கிராமத்தின் அடையாளம். ஒரு வீட்டில் பிரச்னை என்றால் ஊரே ஒன்றுகூடி தீர்த்து



வைக்கும் தவறு செய்தவர்களை கண்டிக்கும்... அடங்காதவர்களை தண்டிக்கும்... அநீதி இழைக்கப்பட்டவர்க்கு நியாயம் கிடைக்கும்.

கீழ் கோர்ட்டிலிருந்து மேல் கோர்ட் வரை உச்சநீதிமன்றம் கூட தீர்த்து வைக்க முடியாத பிரச்னைகளை ஒரு நொடியில் கிராமத்தார் கூட்டும் பஞ்சாயத்து தீர்த்து வைக்கும்.

ஊர் ஒன்றுகூடும் பஞ்சாயத்தில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வித்தியாசமில்லை.... ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இல்லை. ஆள் அம்பு என்று ஜனக்கட்டு உள்ளவன், சொந்த பந்தமில்லாத அநாதை என்ற பேதமில்லை. கிராமத்து பஞ்சாயத்தில் எல்லோரும் சரிசமம்.

அநியாயம் நடந்தது என்று யார் முறையிட்டாலும் கிராம பஞ்சாயத்து கூடும். ஊரே திரண்டு ஒன்று கூடி நிற்க உடனடியாய் விசாரித்து நியாயம் வழங்கப்படும்.

பஞ்சாயத்தின் தீர்ப்பை பகவானின் தீர்ப்பாய் ஏற்று அந்த முரட்டு மக்கள் கட்டுப்படுவார்கள்... இதுதான் கிராமம். நம் இந்திய கிராமம்.

27



பரமனின் டாடா சுமோ வண்டியில் வீராச்சாமி,



ஏறிக் கொள்ள மற்றவர்கள் அவரவர்களின் வாகனங்களில் தொடர்ந்து செல்ல அவர்கள் கூட்டமாய் கருமாத்தூரை நோக்கிப் பறந்தனர்.

செல்போனில் பேசிய ஐந்தே நிமிடங்களில் புயல் போல் வந்து சேர்ந்த அவர்களின் கூட்டத்தைக் கண்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த கூட்டம் அரண்டு விட்டது.

வீராச்சாமி இறங்கி வெள்ளைச்சாமியிடம் ஓட பரமன் கூட்டத்தினரை சுற்றி வந்து கேட்டான்.

''உங்கள்ல யாருக்காவது அவனுகளை அடையாளம் தெரியுமா?''

கூட்டம் மௌனம் சாதிக்க

''எனக்குத் தெரியும்...'' என்றது ஒரு குரல்.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு தலையில் ரத்த காயத்துடன் கார்மேகவண்ணன் வந்தான்.

''ஏய்... நீ அந்த என்ஜினியர் பயல் இல்ல...''

''ஆமாம்... நானும் இந்த பஸ்ஸில்தான் வந்தேன்...''

''நீ எப்படி இந்த பஸ்ஸில் வந்தே... எதுக்கு வந்தே...''

''அது... நான்... வந்து...''

அவன் 'பெப்பெப்பே...' என்று உளற

''தூக்கி வண்டியில போடுங்கடா இவனை'' என்றான் பரமன். கார்மேகவண்ணனை கோழியை அமுக்குவது போல் அவர்கள் அமுக்கி தூக்கி டாடா சுமோவில் போட்டனர்.

''என்னை ஏண்டா தூக்கறீங்க... அவனைத் தூக்குங்

''எவனை...?''

''அந்தப் பரந்தாமனை... அவன்தான் பத்துப் பேரைக் கூட்டிக்கிட்டு வந்து என் மச்சானை அடிச்சுப் போட்டுட்டு அவர் தங்கச்சியை தூரத்திக்கிட்டுப் போனான்...''

''மாமா... கேட்டியா...''

''ஆமாண்டா பரமா... இது அந்த பரந்தாமன் பய வேலையா...?''

''அவன் மட்டுமில்லை மாமா... இந்த வழுக்கை மண்டையன் எதுக்கு நம்ம வீட்டு ஆளுக பின்னாடி தொடுத்துக்கிட்டு வந்தான்னு புரியுதா? அவன் இல்லாட்டி இவன் இதே வேலையைச் செஞ்சிருப்பான். வலுத்தவன் முந்திக்கிட்டான்...''

''ஆனா... இந்த பஸ்ஸில் அண்ணனும், தங்கச்சியும் வர்றது இந்த நாதாரிகளுக்கு எப்படித் தெரிஞ்சுதுடா மாப்பிள்ளை....''

''இதை வேற வெத்தலையில் மை போட்டு பார்க்கணுமாக்கும். மச்சான் வீட்டில் வினையை வச்சுக்கிட்டு ஊரானுகளை குத்தம் சொல்லி என்ன பண்றதுடா... எல்லாம் உன் பெண்டாட்டியும் உன் அண்ணன் பெண்டாட்டியும் செய்த சதியாய் இருக்கும்... அவக தகவல் சொல்லாம இவனுக கரெக்டா இந்த பஸ்ஸில் ஏறியிருக்க முடியாது...''

பரமன் பல்லைக் கடித்தான். வீராச்சாமியுடன் சேர்ந்து வெள்ளைச்சாமியை தூக்கி மடியில் போட்டுக் கொண்டு 'அந்த தண்ணி பாட்டிலை எடு மச்சான்' என்றான்.

ராமசாமி தண்ணீர் பாட்டிலுடன் வர அதை வாங்கி வெள்ளைச்சாமியின் முகத்தில் அடித்தான். வெள்ளைச்



...மியிடம் லேசாய் அசைவு தெரிந்தது. அவன் உதடுகள் ...தையோ முணுமுணுத்தன. குனிந்து கேட்டான்.

''தண்ணீ... தண்ணீ...''

பரமனின் கண்கள் கலங்கின.

''குடிமச்சான்'' தன் கையிலிருந்த தண்ணீர் பாட்டிலை அவன் வாயில் வைத்து புகட்டினான்.

''தூக்கு மாமா... சீக்கிரமா ஆஸ்பத்திரிக்கு ஓடுங்க...''

''நீ வரலையாடா பரமா?''

''இல்ல மாமா... வெள்ளைச்சாமி மச்சான் உயிருக்கு ஆபத்தில்ல. அடிபட்டிருக்கு. ஆஸ்பத்திரியில போய் கட்டுப்போட்டா சரியாகிடும். தேனிக்கு போங்க... நானும் மத்த பயலுகளும் சுமித்ராவைத் தேடறோம்... ...ய் வேலா... நீங்க நாலுபேரும்... இந்த ஒன்றரைக் ...ண்ணு கார்மேகத்தை நம்ம ரைஸ் மில்லுக்கு கூட்டிப் போய் அடைச்சு வையுங்கடா. போகும்போது அவன் மண்டைக் காயத்துக்கு ஒரு கட்டுப்போட்டு கூட்டிப் போங்கடா... நான் வரும் வரை இவனை அங்கிட்டு இங்கிட்டு நகராமல் காவல்காக்கணும் புரியுதா.''

வெள்ளைச்சாமியை தூக்கி உள்ளே போட்டுக் கொண்டு கார்மேகவண்ணனையும் கடத்திக் கொண்டு டாடா சுமோ வண்டியில் வீராச்சாமியும் ராமசாமியும் பறந்துவிட பரமன் நின்று கொண்டிருந்த புல்லட்டில் ஆரோகணித்தான். இருட்டியிருந்தது.

''ரோட்டில் இந்தப் பக்கமாத்தான் துரத்திக்கிட்டு ஓடியிருக்கானுங்க வாங்கடா'' என்றவாறு பரமன் முன்னால் செல்ல அவன் பின்னாலேயே பதினான்கு மோட்டார் சைக்கிள்கள் சீறிப்பாய்ந்து சென்றன.





தூரத்தில் வெளிச்சம் தெரிந்தது. பரந்தாமன் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. கொஞ்சம் கூட யோசிக்காமல் அவனருகே வண்டியை நிறுத்தி என்ஜினைக் கூட அணைக்காமல் அப்படியே வண்டியைப் போட்டு விட்டு அவன் மேல் பாய்ந்தான் பரமன்.

''டேய்...'' என்ற கூவலுடன் பரமனுடன் கட்டி உருண்டு சண்டையிட்டான் பரமன்.

கரும்புக் காட்டிலிருந்த பத்து ஆண்களும் ரோட்டிற்கு ஓடிவர பரமன் கூட வந்திருந்தவர்கள் அவர்களுடன் மல்லுக்கு இறங்கினர். கொஞ்ச நேரத்தில் அந்த ரோடு யுத்த பூமியானது.

அடித்து துவைத்து பரந்தாமனை குற்றுயிரும் குலையுயிருமாய் ஆக்கிவிட்ட பரமன் அவன் நெஞ்சின் மேல் தன் காலை வைத்து உருமினான்.

''சொல்லுடா... என் மாமன் மகள் சுமித்ரா எங்கே?''

''தெரியாது...''

''உன்னைக் கொன்னு இங்கே புதைச்சுப்பிடுவேன். இப்பச் சொல்லப் போறியா இல்லயா?''

''என்னைக் கொன்னாலும் என் பதில் இதுதான். நாங்களும் அவளைத்தான் தேடிக்கிட்டு இருக்கோம். கரும்புக் காட்டில் இருக்காளான்னு கரும்புக் காட்டை அலசிக்கிட்டு இருக்கோம்...''

''தூ... நீயெல்லாம் ஒரு ஆம்பளை? பேடிப்பயலே... ஒரு பொண்ணு மேல ஆசைப்பட்டால் முறைப்படி கல்யாணம் பேசித் தாலிக்கட்டணும். தூக்கிப் போய் தாலி கட்டுறது வீரமாடா? உனக்குப் பயந்து என் மாமன் மகள் கரும்புக்காட்டில் ஒளிஞ்சிருக்காளா? அவள் பச்சை



...ண்ணுடா... இந்த ராத்திரி நேரத்தில பதறப் பதற ஒரு பொம்பளைப் புள்ளையை ஓட வச்சிருக்கியே... உன்னை என்ன செய்தால் என் மனசு ஆறும்...''

''நான் அவ மேல் ஆசைப்பட்டுத்தான் துரத்தினேன்...''

''ஆசைப்படறதுக்கும் ஒரு யோக்கியதை வேணும்டா... ஒருத்தியை காலம் பூராவும் கண்ணீர் வராமல் காப்பாத்த முடியும்ன்னா நீ ஆசைப்படலாம். ஆனால் அவ கண்ணு முன்னாலேயே அவ அண்ணனை கொலைகாரன் போல் அடிச்சுப் போட்டுட்டு... அவளையும் உயிரை வெறுத்து ஓடி இந்தக் கரும்புக் காட்டில் ஒளிய வைச்சியே... உனக்கு அந்த யோக்கியதை இருக்காடா... நீயெல்லாம் எப்படிடா... என் சொந்தக்காரனா பிறந்து தொலைச்சே...''

தூரத்தில் வெளிச்சப் புள்ளிகள் தெரிந்தன. டாடா சுமோ வண்டி வந்து நின்றது. வீராச்சாமியும் வெள்ளைச்சாமியும் குதித்தார்கள். ராமசாமி வந்த வேகத்தில் கீழே கிடந்த பரந்தாமனை எட்டி மிதித்தான். வீராச்சாமி அவன் முடியைப் பற்றி தரையில் மோதினார்.

''என்னடா மாப்பிள்ளை சொல்றான்...''

''சுமித்ரா கரும்புக்காட்டில் ஒளிஞ்சிருக்காளாம்...''

''என்னது... என் மகள் காலில் செருப்பு இல்லாமல் நடந்தால் மண்ணுபட்டு... காலில் ரத்தம் வந்திருமே... பொத்தி பொத்தி வளர்த்த என் பஞ்சவர்ணக்கிளி கரும்புக் காட்டில் ஒளிஞ்சு கிடக்குதா... அம்மாடி... என் உயிரே... என் தெய்வமே... நான் வரம் வாங்கி வந்த செல்லமே...''

வீராச்சாமி துண்டை மடித்து முண்டாசுக்கட்டிக் கொண்டு வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு அந்த இருட்டில் கரும்புக்காட்டில் இறங்கிவிட்டார்.

விடிய விடிய அந்தக் கரும்புக்காட்டை சல்லடைப் போட்டுத் தேடியும் சுமித்ராவைக் காணவில்லை. பரந்தாமனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் ரைஸ் மில்லில் போட்டு அடைத்தான் பரமன்.

''சுமித்ரா கிடைக்காமல் உங்களுக்கு விடுதலை யில்லை. அவ கிடைத்தால் பிழைச்சீங்க... இல்லைன்னா ரைஸ் மில்லில் குழி தோண்டிப் புதைச்சிருவேன்...''

ரோடு போகும் பாதையெல்லாம் ஆளுக்கொரு பக்கமாய் வண்டியில் போய் தேடினார்கள். வெள்ளைச் சாமியை காலையில் வீட்டுக்கு அழைத்து வந்துவிட் டார்கள். கார்மேகவண்ணனும், பரந்தாமனும் கொடுத்த தகவலின்படி மல்லிகாவும், செல்வியும் தான் அவர் களுக்கு திட்டம் போட்டுக் குடுத்திருக்கிறார்கள் என்று தெரிந்துவிட்டது.

வீட்டுக்கு வந்து கனகவள்ளியின் கையால் ஒருவாய் சாப்பிட்டவுடன் தெம்பு மீண்டிருந்த வெள்ளைச்சாமி மல்லிகாவிற்கு பிறந்த நாளே கொண்டாடி விட்டான்.

''நினைச்சேண்டி... உன் அண்ணன் கார்மேக வண்ணன்... அந்த ஒன்றரைக் கண்ணனை பஸ்வில் பார்த்தப்பவே என் மண்டைக்குள் மணி அடிச்சுச்சுடி... என்னடா வழுக்கை இந்தப் பக்கம் அலையுதே... யாரு துப்பு கொடுத்திருப்பாங்கன்னு... ஏண்டி... கட்டின புருசன் பெரிசில்லை... அவன் கூடப் பிறந்தவள் பெரி சில்லை... உன் சித்தப்பன் மகன்தான் உனக்குப் பெரிசு. ஓடுடி நாயே... உன் முகத்தைப் பார்த்தாலே கொலை வெறி வருது... செத்துப் போகாமலிருக்கணும்னா என்



சொந்த பந்தங்கள் ஊடே வந்து பஞ்சாயத்து பேசி புருசன் பெண்டாட்டியை பிரித்து விட்டார்கள்.

''அட விடுப்பா. பொறந்த வீட்டுப் பாசத்தில் கழுத தெரியாம செஞ்சு புடுச்சு. அதுக்காக தொலைஞ்சு போடின்னா அது எங்க போகும்?''

''அவ சித்தப்பன் மகன் இருக்கானில்ல. அவன்கிட்ட போகச் சொல்லு. அவன் காலம் பூராவும் வச்சுக் கஞ்சி ஊத்துவான்...''

''ஏம்பா... இப்படிச் சொன்னா எப்படிப்பா... அது மூஞ்சிக்காக பார்க்காட்டியும் பெத்துப் போட்டிருக்க ரெண்டு புள்ளைகளுக்காக பாருப்பா... ஏ புள்ள மல்லிகா... அவன்தான் கொலை வெறியோட இருக்கான்னு தெரியு தில்ல உள்ள போய் தொலைபுள்ள. நீ பண்ணி வச்சிருக் கிற வேலைக்கு அவன் கொஞ்சுவான்னு நினைச்சா அவன் முன்னால வந்து நின்னு தொலைக்கிற...''

மல்லிகா சமையலறையில் பதுங்கிக் கொண்டாள். அப்போது பார்த்து வெள்ளைச்சாமியின் செல்போனில் சுமித்ரா அழைக்க பயந்து போய்

''ஹலோ... ஹலோ...'' என்று கூறிக் கொண்டே போனை ஸ்விட்ச் ஆப் செய்து விட்டாள்.

செல்வி எப்போதுமே கெட்டிக்காரி. தன் கணவன் அடிபட்டதால் மல்லிகா நிலைகுலைந்து போயிருக்க... அவள் திடமாய் நின்றாள். முதலில் வீட்டுப் போனை அப்புறப்படுத்தி மச்சு வீட்டு அறைக்குள் வைத்து விட்டாள். வீட்டுப் பெண்கள் பேசுவதற்காக அங்கும் போன் வயர் கனெக்சன் கொடுக்கப்பட்டிருக்கும். மச்சுவீட்டுக் கதவை மூடிவிட்டால் உள்ளே என்ன சத்தம்



வந்தாலும் வெளியே கேட்காது. சுமித்ரா வீட்டு போனில் அழைத்தது அதனால்தான் வீட்டில் உள்ளவர்களுக்கு தெரியாமல் போய் விட்டது.

சுமித்ராவைக் காணாத பதட்டத்தில் வீட்டில் உள்ளவர் கள் போனைக் கவனிக்கவில்லை. அவரவர் செல் போனில் பேசிக் கொண்டு இருந்தார்களேயொழிய வீட்டுப் போன் என்ன ஆயிற்று என்று யாரும் கவலைப் படவே இல்லை.

வெள்ளைச்சாமி மல்லிகாவை மிதித்து முடித்ததும் அடுத்து ராமசாமி தன்னைத் தேடித்தான் வருவானென்று அறிந்திருந்த செல்வி அவசரமாய் மாடியில் பதுங்கிக் கொண்டாள். அப்போது பார்த்து சுமித்ராவின் அழைப்பு வர... மணியொலி தன்னைக் காட்டிக் கொடுத்து விடும் என்று செல்போனின் சுவிட்சை ஆப் பண்ணினாள்.

எல்லாம் நன்றாகத்தான் போய் கொண்டிருந்தது. கீழே என்ன பேசுகிறார்கள் என்று அறிய அவள் ஆவல் காட்டாமலிருந்தால் தப்பித்தும் இருப்பாள். பரமன் வரும் சத்தம் கேட்டு தன் பெரியப்பன் மகன் கதி என்ன ஆனது என்று அறிய மாடியிலிருந்து தலையை மட்டும் நீட்டி ஒட்டுக் கேட்க முயன்றவள் கால்வழுக்கி மாடிப்படி களில் உருண்டாள். வலி தாங்காமல்

''ஐயோ...'' என்று அவளே கத்தி தன் இருப்பைக் காட்டிக் கொள்ள அவளுக்கு என்ன ஆயிற்று என்று கூடக் கவனிக்காமல்...

''வாடி என் வித்தாரக் கள்ளி. எங்கேடி போய் ஒளிஞ் சிருந்த... ஏண்டி திங்கிறது என் வீட்டுச்சோறு... நீ விசுவாசமாய் இருக்கறது உன் பெரியப்பன் மகனுக்கு... இதுக்காடி உன்னைத் தொட்டுதாலிகட்டி உன்கூட



வாழ்ந்து ஒத்த பிள்ளையையும் பெத்துக்கிட்டேன். என்ன தைரியம் இருந்தால் பயம் பத்து துளிக்கூட இல்லாமல் இப்படி ஒரு துரோகச் செயலை செஞ்சிருப்ப...? உன்னை கொன்னு குழி தோண்டிப் புதைத்தால்தான் என் மனசு ஆறும்டி...'' என்று கூறிக் கொண்டே ராமசாமி மிதித்தான். அவன் கொடுத்த அடிகளில் அவன் சொன் னதை நிறைவேற்றும் வெறி இருந்தது. அனைவரும் தடுத்து நிறுத்தினார்கள்.

''விடுப்பா.. உன் அண்ணன்காரன் மாதிரியே நீயும் போய் பட்டால் எப்படி? ஒன்னுகிடக்க ஒன்னு ஆகிட்டா என்ன பண்றது?''

''தூக்கிப் போட்டுற வேண்டியதுதான் பெரியப்பு...''

''அதுக்கா இத்தனை நாள் அவ கூட வாழ்ந்தே? சொல்லித் திருத்தப்பா...''

''இவ திருந்தாத ஜென்மம் பெரியப்பு...''

''காலப்போக்கில் சரியாகிடும்.. விடப்பா...''

''என் தங்கச்சியை விட்டுப்புட்டுத்தான உட்கார்ந்திருக் கேன்.. இவள...''

''பொறுடா.. அண்ணனும் தம்பியும் இப்ப பொண் டாட்டிகளைப் போட்டு பொரட்டி எடுத்தா எல்லாம் சரியாகிடுமா? இங்கே பாருடா.. பொண்டாட்டி பேச்சைக் கேட்காமல் இருக்கிற ஆம்பளையும் பொழைக்க மாட்டான்.. பொண்டாட்டி என்ன சொன்னாலும் கேட்டுக் கிட்டு நிற்கிற ஆம்பளையும் உருப்பட மாட்டான்... நல்லது கெட்டதை பிரிச்சு தெரிஞ்சுக்காம நீ நின்னுப் புட்டு அந்தப் புள்ள மேல ஏன் குத்தம் சொல்றவன்? சேப்பையில் நெய் வடியுதுன்னா கேட்கிறவன் ஏண்டா

கேணப்பயல் மாதிரி கேட்டுக்கிற? உனக்குப் புத்தி வேணாம்?'' ,

வெள்ளைச்சாமியும், ராமசாமியும் தலைகுனிந்தார்கள்.

''நிஜம்தான் பெரியப்பு. என் கூடப் பிறந்த ஒத்தைப் பெண் பிறப்பு.. அது காணாத காட்டுக்குள்ள போய் தொலைஞ்சு போச்சு. நான் அண்ணன்காரன்னு உசி ரோடு நின்னு என்ன பிரேயாசனம் பெரியப்பு. அண்ண னாவது அது உயிரைக் கொடுத்து போராடிப் பார்த் திருக்கு... நான் பொண்டாட்டி முந்தானையைப் பிடிச்சுக் கிட்டு வீட்டுக்குள்ள கிடந்தேனே பெரியப்பு.'' ராமசாமி கலங்கினான்.

''நான் கூடப் போய் என்னடா என்ன? 'ஒடும்மா'ன் னேன். அதுவும் ஓடுச்சு. சும்மா ஓடலைடா. வீராச்சாமி மகள்ங்கிறதை நிருபிச்சுட்டு ஓடுச்சு. பிடிச்சிருந்த பேக்கோட வாரைப் பிடித்து ஒரு சுத்து சுத்தி பத்துப் பேரையும் அடிச்சுச்சு பாருடா... அத்தனை பயலுகளும் சிதறி ஓடினான்க.. அப்படியும் என் தங்கச்சி என்னைத் திரும்பித் திரும்பி பார்த்துக்கிட்டே ஓடுச்சுடா...'' வெள்ளைச்சாமி குலுங்கி அழுதான்.

பரமன் கண்களை சிமிட்டி தன் கண்ணீரைக் கட்டுப் படுத்தினான். மாமன் மகனின் அருகே வந்து அவனை கட்டியணைத்து முதுகில் தட்டிக் கொடுத்தான்.

''விடு மச்சான். நாம் நல்லதையே நினைப்போம். சுமித்ரா படிச்ச பொண்ணு. விரவமானது. பரந்தாமன் கையிலயோ கார்மேகவண்ணன் கையிலயோ அது எம் புடலை.. பறந்துருச்சு. அந்த மட்டிலும் நிம்மதி. கரும்புக் காடு.. சுக்குப்பட்டி கிராமம் பூராவும் தேடியாச்சு. எங்



வீட்டுக்கு போயிருக்க சான்ஸ் இருக்கு... எல்லா பக்கமும் தேடலாம். நீ தைரியமா இரு மச்சான்...''

வீராச்சாமி மனம் சுக்கு நூறாய் நொறுங்கிக் கிடந்தது. வாய்விட்டு அழுதால் மகன்கள் மருமகள்களை உண்மை யிலேயே கொன்று புதைத்து விடுவார்கள் என்பதால் அடக்கிக் கொண்டு இருந்தார்.எப்போது கண்ணுக்குள் வைத்து வளர்த்த மகள் கரும்புக் காட்டில் இருட்டில் போய் ஒளிந்து கொண்டாள் என்பதை அறிந்தாரோ அப்போதிருந்து அவர் அவராகவே இல்லை.

'நான் பொழைச்ச பொழைப்புக்கு அர்த்தம் இல்லாமப் போயிடுச்சே... என் மகள் மானத்தைக் காப்பாற்றிக்க ஓடி ஒளிய வேண்டிய நிலையில் வைத்துவிட்டேனே... வீட்டுக்குள் வினையிருப்பதை கண்டும் காணாமல் மகன்கள் வாழ்க்கை கெட்டுப் போகுமென்று பொறுமை யாய் போனது தப்போ..? அடக்க வேண்டிய சமயத்தில் அடக்கியிருந்தால் என் மகள் கண்காணாமல் தொலைஞ்சு போயிருக்க மாட்டாளோ..'

வீராச்சாமி கயிற்றுக் கட்டிலில் தளர்வாய் அமர்ந்திருப் பதைக் கண்ட பரமனின் மனம் வருந்தியது. தாய்மாம னின் மனம் படும்பாட்டை அவனால் உணர முடிந்தது.

''மாமா எதுவும் சாப்பிடாமல் கெடக்கறியே.. சூடா காபித் தண்ணியக் குடி தெம்பு வரும்.. மல்லிகா..'' என்று அவன் அழைக்க வீராச்சாமி கையால் சைகை செய்து அவனைத் தடுத்தார்.

"அந்த ரெண்டு பொம்பளைக கிட்டயும் இனி பச்சைத் தண்ணி கூட வாங்கிக் குடிக்க மாட்டேன்... கனகம் நீ



மல்லிகாவும், செல்வியும் மூலையில் சிலையாய் சமைந்து போனார்கள்.. எப்படிப்பட்ட தண்டனை இது..?

## 28



அந்த ஒருநாள்...! சுமித்ரா ஹரிஹரனைச் சந்தித்துப் பழகிய அந்த ஒருநாளில் அவளுடைய குடும்பம் நிலை குலைந்து போயிருந்தது. விடியாதா என்று அவர்கள் ஏங்கிய அந்த இரவுப் பொழுது ஒருவழியாய் விடியும் போது அவர்கள் வீட்டு வாசலில் ஒரு வெளிநாட்டுக் கார் ஒன்று வந்து நின்றது.

வீட்டிலிருந்தவர்கள் அனைவரும் வாசலுக்கு ஓடி வந்தனர். சுமித்ரா காரை விட்டு இறங்கியதும் வீராச்சாமி,

''ஆத்தா... என் குல தெய்வமே... வந்துட்டியா ஆத்தா,'' என்று உணர்ச்சிப் பிழம்பாய் கைகளை விரித்தார்.

''அப்பா..'' என்று அவர் கைகளுக்குள் புகுந்து கொண் டாள் சுமித்ரா.

''நான் பெற்ற கண்ணே.. கால் வலிக்க ஓடினயா தாயி. பெத்தவன் உயிரோடு இருக்கிறப்போ... இருட்டுக் காட்டில பறந்து போய் ஒளிஞ்சயா... இதுக்கா உன்னை பாடுபட்டு வளர்த்தேன்...''

''அதுதான் வந்து விட்டேனே அப்பா... இன்னும் கலங்கினா எப்படி...''



அதற்குள் கனகவள்ளி கதறினாள்.

''சுமித்ரா.. நான் பெத்த மகளே.. உன்னைக் கண்ணில திரும்பவும் காண மாட்டோமான்னு தவிச்சுப் போனேன் தாயி.. அம்மாகிட்ட வா மகளே... ஆத்தி.. என்பொண்ணு முகம் கன்றிச் சிவந்திருக்கே.. என்ன பயம் பயந்துச்சோ.. என்ன பதறு பதறுச்சோ...''

சுமித்ரா தாயின் தோளில் முகம் புதைத்துக் கொண் டாள்.

''இல்லைம்மா... அழுகாதே... நான்தான் பத்திரமாய் திரும்பி வந்துட்டேனில்ல... எனக்கு ஒன்னும் ஆக லைம்மா...''

ஆள்மாற்றி ஆள் சுமித்ராவை சூழ்ந்து கொள்வதையும் அவள் மேல் பாசத்தைப் பொழிவதையும் பார்த்துக் கொண்டே காரில் அசையாமல் உட்கார்ந்திருந்தான் ஹரிஹரன்.

'இது வேறு உலகம்.. இவர்கள் வேறு வகையான குணங்களைக் கொண்ட மனிதர்கள்.. இப்படிப்பட்ட பாசப்பிணைப்பிலிருந்து விடுபட சுமித்ராவால் எப்படி முடியும்? இந்த அளவுக்கு நேசிப்பவர்களின் நெஞ்சத்தை உடைக்கச் சொன்னால் அவள் எப்படி உடைப்பாள்? இவர் களின் அன்புக்கு இவளால் அடிமையாகாமல் இருக்க முடியாதே...'

''வாசலிலேயே நிற்க வைச்சுப் பேசினால் எப்படி... வீட்டுக்குள் கூட்டிப் போ மாமா.''

மாநிறமாய் உயரமாய் வாட்ட சாட்டமான தோற்றத் துடன் இருந்த அவன்தான் பரமனாய் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான் ஹரிஹரன்.

'ரியலி ஹி இஸ் ஹேண்ட்சம். சுமித்ராவிற்கு பொருத்தமானவன்தான்.'

ஹரிஹரன் பெருமூச்சுடன் காரைக் கிளப்பப் போனான். வீட்டு வாசல் படியில் கால் வைத்த சுமித்ரா கார் சத்தம் கேட்டுப் பதறித் திரும்பினாள். பரமன் கண்களில் கேள்வியோடு அவளைப் பார்த்தான்.

'என்னவென்று சொல்வது?'

வாய்க்கு வந்ததைச் சொன்னாள் சுமித்ரா.

''மாமா.. அவர் என் பிரண்டோட அண்ணன். என்னைக் காப்பாத்தினது இவர்தான்.. இவர் இல்லைன்னா இந் நேரம்...''

பாதி உண்மையும் பாதிப் பொய்யும் கலந்து சொன்னாள் சுமித்ரா.

''ஐயோ. சொல்லாதேடி மகளே.. டேய் வெள்ளைச் சாமி அந்தத் தம்பி யாருன்னு பார்த்து உள்ள கூட்டியாடா.. நீ வாடி ராசாத்தி...''

சுமித்ரா அவன் வருகிறானா என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே படியேறினாள்.

அவளது தவிப்பைக் கண்ட பின் அவனால் எப்படிக் காரைக் கிளப்ப முடியும்?

என்ஜினை அணைத்துவிட்டு தலையைக் குலுக்கிக் கொண்டவனை, ''வாங்க சார்... வாங்க..'' என்று கார் கதவை திறந்து விட்டு வரவேற்றான் வெள்ளைச்சாமி.

'யாரிவன்?' என்று யோசித்தவாறு வண்டியை விட்டு இறங்கிய ஹரிஹரன்.

''ஹலோ.. மிஸ்டர் பரமன்..'' என்று கை நீட்டினான்.



சிவந்த நிறத்துடன் அதிநாகரிக உடையணிந்த மேல்நாட்டு வாலிபன் ஒருவன் தன்னிடம் கை குலுக்க விரும்பியதைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போன பரமன் பதிலுக்கு தன் கரத்தை நீட்டிப் பற்றிக் குலுக்கினான்.

''என்னை உங்களுக்குத் தெரியுமா?''

''ம்ம்.. சுமித்ரா வாய் திறந்தாலே பரமன் மாமாவின் பெருமைதானே பேசுவாள்...''

''உண்மையாகவா...'' பரமனின் முகம் மலர்ந்து விட்டது.

''ஏன் உங்களுக்கு இது இப்போதுதான் தெரியுமா?''

''அப்படியெல்லாமில்லை. என்னதான் மாமன் மகள்... கட்டிக்கப் போற முறைப் பொண்ணுன்னாலும் வயசுக்கு வந்த பொண்ணுகிட்ட கிராமத்தில் அதிகமா பேசமாட்டோம். அதான். சுமித்ரா என்ன பேசும்.. எப்படிப் பேசும்ன்னு எனக்குத் தெரியாது.''

ஹரிஹரனின் மனக்கண்ணில் பேசுகிற சுமித்ரா தோன்றினாள்.

'ஆரம்பிச்சாச்சா... உங்களுக்கு அர்த்தம் சொல்லியே வாய் வலிக்குது. இனிமே வாட் இஸ் தி மீனிங்குன்னு கேட்டிங்க... இப்படியே தனியாய் ஓடியே போய் விடுவேன்.. ஸ்ஸ்.. வாயை மூடுங்கள்.'

''ஸோ... நீங்கள்தான் அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகிற முறை மாமன்... ஆம் ஐ கரெக்ட்.''

''கரெக்டு..''

பரமனுக்கு ஹரிஹரனை மிகவும் பிடித்துவிட்டது. உலக நடப்புத் தெரிந்தவன். உள்ளூர் பணக்காரன்



ஹரிஹரனின் காரின் விலை அவனுக்குத் தெரிந்திருந்தது. அதன் மூலம் ஹரிஹரனின் பின்புலம் எவ்வளவு பெரியது என்று அவனால் அளவிட முடிந்தது.

இவ்வளவு பெரிய மனிதன்.. ஆணழகன்.. அவனிடம் சரி சமமாய் நின்று பேசுகிறான். அவனுடைய முறைப் பெண்ணை மணக்கப் போவதைப் பற்றி அதிநிச்சயமாய் கூறுகிறான்.

''உள்ளே போகலாம் வாங்க சார்...''

அவர்கள் உள்ளே போனபோது அந்த வீட்டின் அமைப்பை வியந்து கொண்டே உள்ளே சென்றான் ஹரிஹரன். வீட்டினுள்ளே இருந்த முற்றத்தில் அந்த ஊர் மக்களே குழுமியிருந்தார்கள். ஹரிஹரனை நடு மையத்தில் நாற்காலி போட்டு அமர வைத்தார்கள். அமர்ந்தவனின் விழிகளில் யாரிடாமோ எதையோ பேசிக் கொண்டிருந்த சுமித்ரா தென்பட்டாள். அதே நேரம் சுமித்ராவும் அவனைப் பார்த்தாள். பேச்சிழந்து போனாள்.

''அப்புறம் என்னம்மா ஆச்சு?'' கேட்டுக் கொண்டிருந்தவள் ஆவலாய் வினவினாள்.

''எது?'' பேசிக் கொண்டிருந்தது மறந்து போனவளாய் சுமித்ரா திருதிருவென விழித்தாள்.

''என்னம்மா... இப்போ பேசிக்கிட்டிருந்தது எப்படி மறந்து போகும்? என்னடி கூத்து இது?'' அவள் முகவாயில் கை வைத்தாள்.

'எல்லாம் உன்னால்தான்' சுமித்ராவின் விழிகள் ஹரிஹரனை குற்றம் சாட்டின.

அவன் மௌனமாக நாற்காலியின் கைப்பிடிமேல் முழங்கையை ஊன்றி உள்ளங்கையில் முகம் பதித்து அவளைப் பார்த்தான்.



''இல்லத்தை.. ஒரு நாளுக்குள்ள என்னென்னவோ நடந்து போச்சு. எதைச் சொல்வேன்... எதை விடுவேன்.'' சுமித்ரா சமாளித்தாள்.

''அதைச் சொல்லு.. நீயா இருக்கப் போயி சமாளிச்சே... வேற ஒருத்தியாயிருந்தா அவன்க கிட்ட சிம்புட்டு இருப்பாளே...'' என்ற அந்த அத்தை பரமனைப் பார்த்து,

''ஏண்டா பரமா.. அந்தக் கட்டையிலே போற கருவாயனும் வழுக்கை மண்டையனும் உன்கிட்டத்தானே மாட்டியிருக்காங்க..'' என்று கேட்டாள்.

''ஆமாம் சின்னம்மா.. ரைஸ்மில்ல கட்டிப் போட்டிருக்கேன்.''

''யாரை..?'' ஹரிஹரன் ஆச்சர்யமாய் வினவினான்.

''நம்ம சுமித்ராகிட்ட வம்பு பண்ணின ரெண்டு தடியன்களைத்தான்...''

'நம்ம சுமித்ரா..! அவள் உனக்கா.. இல்லை எனக்கா?'

ஹரிஹரனின் பார்வை சுமித்ராவின் மேல் மீண்டும் படிந்தது. வாய் மட்டும் தன்னிச்சையாய் பரமனிடம் பேசிக் கொண்டிருந்தது.

''ஏன்? போலீஸில் ஹேண்ட் ஓவர் பண்ணிவிடலாமே.''

''என்னன்னு சொல்லி கம்ப்ளைண்ட் கொடுப்பீங்க.. இது பொம்பளப் புள்ளை விவகாரம்.. அடக்கி வாசிக்கணும்.''

''ஓ.. ஐஸீ... அவர்களை என்ன பண்ணப் போகிறீர்கள்?''

''ஊர் பஞ்சாயத்தில் நிறுத்துவோம்...''

''ஊர் பஞ்சாயத்..? வாட் இஸ் திஸ்..?''

சுமித்ரா தலையை உயர்த்தி அவனைப் பார்த்தாள். அவள் விழிகள் கேட்டன.

'ஆரம்பித்து விட்டாயா?'

''பஞ்சாயத்துன்னா.. பஞ்சாயத்துன்னா.. உங்களுக்கு எப்படிச் சொல்லி விளங்க வைக்கிறதுன்னு தெரியலையே.. ம்ம்... சுமித்ரா நீயே சாருக்கு விளக்கம் சொல்லும்மா...''

அவள் சலிப்பாய் முகத்தை வைத்துக் கொண்டு ஹரிஹரனைப் பார்த்து.

''எனக்கு ஏற்கனவே நிறைய விளக்கம் சொல்லி வாய் வலிச்சுக் கிடக்கு. இனியும் விளக்கம் சொல்ல முடியாது,'' என்றாள்.

''வொய்..?''

''சார்.. நானே நொந்து நூடுல்ஸாகியிருக்கேன். உங்க பாஷையில் விளக்கம் சொல்ல என்னால் முடியாது...''

ஹரிஹரன் பரமனைப் பார்க்க அவன் சிபாரிசுக்கு வந்தான்.

''தெரியாமல் தானே கேட்கிறார்.. சொல்லும்மா...''

''நீங்க சொல்ல வேண்டியதுதானே மாமா..''

''பாரு.. உன்னைக் காப்பாத்தி கூட்டி வந்திருக்கிறார். அந்த நன்றியை நீ மறக்கலாமா? இப்படிச் சலிச்சுக்கிறயே... என்ன புள்ள நீ...''

''விடுங்கள் மிஸ்டர் பரமன். உங்கள் மாமாவின் டாட்டருக்கு மறுப்பென்றால் அல்வா சாப்பிடுவது போல



சுமித்ராவின் பார்வையில் அடிபட்ட வலி தெரிந்தது. பரமனைப் பார்த்துக் கேட்டாள்.

'இப்போ எதுக்கு விளக்கம் சொல்லணுமாம்...''

''பஞ்சாயத்துன்னா என்னன்னு கேட்கிறாரு...''

''சிம்பிள்.. இட் மீன்ஸ் வில்லேஜ் கோர்ட்...''

''வில்லேஜ் கோர்ட்? நைஸ்... ஜட்ஜையெல்லாம் யார் அப்பாயின்மெண்ட் பண்ணுவார்கள்...''

''அது பரம்பரையாய் வரும் பதவி..''

''லாயர்ஸ்...?''

''நோ லாயர்ஸ்.. அவங்கவங்க நியாயத்தை அவங்கவங்களே சொல்லிக்கணும். ரெண்டு பக்க நியாயத்தையும் கேட்பாங்க...''

''பெண்டாஸ்டிக்.. யாரும் ஆஜராகவில்லையென்றால் வாரண்ட் போடுவார்களா?''

''அதெல்லாம் இங்கே கிடையாது. ஊர் கூட்டும் பஞ்சாயத்தில் ஆஜராகணும்ன்னு சொல்லிவிட்டால் கட்டாயம் வந்து பஞ்சாயத்தில் நிக்கணும்.. அதற்கு மறுப்பே கிடையாது...''

''அப்புறம் ஜட்ஜ்மெண்ட் எத்தனை வருடம் கழித்துக் கொடுப்பார்கள்?''

''வருசமா.. எத்தனை நிமிசம்ன்னு கேளுங்க. அன்னைக்கு விவகாரம் அன்னைக்கே முடிஞ்சிடும்...''

''சப்போஸ் ஜட்ஜ்மெண்டை ஒருவர் ஏற்றுக் கொள்ளாவிட்டால்... ஏற்க மறுத்தால்... என்ன செய்வீர்கள்...''

''இது கிராமம் சார். இங்கே பஞ்சாயத்தின் தீர்ப்புக்கு கட்டுப்பட்டுத்தான் ஆகணும். மாட்டேன்னு சொன்னால் ... தள்ளி வச்சிருவாங்க...''



''ஊரை விட்டு தள்ளி வைப்பதா? எப்படி...?''

''ஊருக்குள் மளிகை ஜாமான்கள் கொடுக்க மாட்டாங்க. பொதுக்குழாயில் தண்ணிபிடிக்க விட மாட்டாங்க. யாருமே அவங்க கூட பேச மாட்டாங்க.. ஒதுக்கி வைச்சிடுவாங்க...''

''கொடுமை...!''

''கொடுமைதான். ஆனால் அப்படிப்பட்ட தீர்ப்பை பெறுபவன் எப்படிப்பட்ட குற்றத்தை செய்திருப்பான் என்பதை நீங்களே சொல்லுங்கள்...''

''யெஸ்... ஐ கேன் அன்டர்ஸ்டாண்ட்.''

''ஒரு வழியாய் புரிந்து கொண்டீர்களா? அப்பாடி... மாமா.. சொல்லி முடித்து விட்டேன்.''

''ஆமாம்... உங்கள் வுட்பி.. மிகப் பெரிய வேலையை செய்து முடித்து விட்டாள். பாவம் அவளுக்கு களைப்பாயிருக்கப் போகிறது...''

''வுட்பி...?''

''யெஸ்... நீ தானே பரமனின் வுட்பி...''

''வுட்பின்னா என்னங்க சார்...'' பரமன் விளக்கம் கேட்டான்.

''வருங்கால மனைவி...'' ஹரிஹரன் சுமித்ராவை பார்த்துக் கொண்டே பதில் கூறினான்.

சுமித்ரா முகம் திருப்பிக் கொண்டாள். இந்த வார்த்தையை நேற்றைக்கு முன்தினம் யாராவது சொல்லியிருந்தால் அவள் கண்டு கொண்டிருக்க மாட்டாள். பிறந்ததில் இருந்து எல்லோரும் அவளை பரமனுடன் முடிச்சுப் போட்டுத்தான் பேசுவார்கள். பற்றாக்குறைக்கு சுமித்



ராவை பெண்கேட்டு யாராவது வீட்டுப் படியேறி வந்துவிட்டால் பரமன் வந்து சாமியாடிவிட்டுப் போய்விடுவான். அப்போதும் அதைப் பற்றி சுமித்ரா கவலை கொண்டதில்லை. திருமணம் என்ற பந்தத்தை அவள் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. தனக்கு வரும் கணவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்ற கற்பனை எதுவும் அவளிடம் இருந்ததில்லை. தாய் தகப்பனுக்கு செல்லப் பெண். அம்மா அப்பாவிற்கு... முக்கியமாய் அப்பாவிற்கு நல்லது கெட்டது தெரியும். அவர்கள் பார்த்து யாரை மாப்பிள்ளையென்று கை காட்டியிருந்தாலும் கண்ணை மூடிக் கொண்டு கழுத்தை நீட்டியிருப்பாள்.

ஆனால் நேற்று..? எல்லாமே ஓர் நொடியில் தலைகீழாய் மாறிவிட்டதே. விடிய விடிய பயத்துடன் பயணம் செய்துவிட்டு விடிந்ததும் அதே பயத்துடன் கார் கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினால்... 'நீ தான் ஹரிஹரனின் வுட்பியா?' என்று கேட்டு அந்தக் குடும்பமே அன்புடன் அவளை அரவணைத்துக் கொண்டதே.. அப்போது ஒரு வார்த்தை.. ஒரே ஒரு வார்த்தை.. 'நீ யார்? என் காரில் திருட்டுத்தனமாய் எப்போது ஏறினாய்? எப்படி என்னுடன் வந்தாய்?' என்று கேட்டிருந்தால் அந்த மரியாதையும் பாசமும் அவளுக்குக் கிடைத்திருக்குமா? அவளை அவர்களது வீட்டிற்குள் அவர்கள் அனுமதித்து இருப்பார்களா?

'அண்ணி, அண்ணி'யென்று பாசத்தைப் பொழிந்தானே வாசவி.. அவள் அந்த உறவு முறையைச் சொல்லி அவளை அழைத்திருப்பாளா? சுமித்ரா சிறு பெண். அவள்தான் தன் அண்ணன் மனைவிகளை 'மதினி'

என்று அழைப்பாள். அவளை 'அண்ணி'யென்று ஒரு
பெண் அழைக்கும் போது அவளுக்கு கிடைத்த ஆனந்
தத்தை அளவிட முடியுமா?

எதையும் பேசாமல்.. ஓர் வார்த்தை அவளிடம் கேள்வி
கேட்காமல் பார்வையிலேயே அவளது நிலையை
உணர்ந்து 'பயப்படாதே...' என்று அபயம் கொடுத்தானே...
அவனல்லவா உண்மையிலேயே அந்த ஹரிஹரன்!
அவள் கூறிய எந்த வார்த்தையையும் சந்தேகிக்காமல்
ஏற்றுக் கொண்டானே.. அந்த நம்பிக்கைதானே திருமண
பந்தத்திற்கு முக்கியமான அஸ்திவாரம்.

அவளிடம் தனிமையில் பேசிய முதல் வாக்கியமே,
'எப்படி நீ என் காதலியாக வந்தாய்?' என்பதுதானே..
மறந்தும் 'எப்படி என் காரில் வந்தாய்' என்று ஆரம்பிக்க
வில்லையே...

அந்த ஓர் நாளில் ஹரிஹரனின் காதலியாக.. வருங்
கால மனைவியாக வாழ்ந்துவிட்டு மற்றொருவனின்
வருங்கால மனைவி என்ற சொல்லை அவளால் எப்படி
காது கொடுத்துக் கேட்க முடியும்?

சுமித்ரா தன் நிலையை தானே வெறுத்தாள்.

## 29



“ஆமாம் தம்பி.. நீங்க எப்படி சுமித்ராவைப் பார்த்
தீங்க... இந்தாங்க காபித் தண்ணியை குடிச்சுக்கிட்டே
சொல்லுங்க..”



வீராச்சாமி கனகவள்ளி கொண்டு வந்த காபியை
வாங்கி ஹரிஹரனிடம் கொடுத்தவாறு வினவினார்.

கிராமப்புறங்களில் அது ஒரு வழக்கம். பெண்கள்
நேரடியாய் அந்நியரிடம் காபித் தம்ளரை கொடுக்க
மாட்டார்கள். தன் வீட்டு ஆண்களிடம் கொடுத்து
கொடுக்கச் சொல்லுவார்கள்.

தன் கையில் கொடுக்கப்பட்ட 'காபித் தண்ணி'
தம்ளரை பார்த்து ஹரிஹரன் மலைத்துப் போனான்.

சின்னஞ்சிறு காபிக் கோப்பையில் முக்கால் பகுதி
கூட இல்லாமல் காபி அருந்திப் பழகியவன் அவன்.
இப்போது அவன் கையில் கொடுக்கப்பட்ட காபித் தம்
ளரோ மிகப் பெரியதாய் இருந்தது. அடிப்பாகம் சிறுத்து
விரிந்து மேல்பாகத்தில் அகன்ற அந்தப் பித்தளை
தம்ளரை மியூசியத்தில் கூட அவன் பார்த்ததில்லை. மிக
நுண்ணிய சித்திரவேலைப்பாடுகளுடன் இருந்தது அது.
அது நிறைய இருக்கும் காபியை இருபது காபிக் கோப்பை
களில் தாராளமாய் ஊற்றலாம். 'இதை எப்படி அருந்துவது?'

ஹரிஹரன் அந்தத் தம்ளரை திருதிருவென விழித்த
படி ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக்க வீராச்சாமி
உபசாரமாய் கூறினார்.

“சாப்பிடுங்க தம்பி. காபித் தண்ணி குறைவா இருக்
குன்னு பார்க்கறீங்களா ஏ... புள்ள கனகம்... அந்தக் காபித்
தண்ணி கும்பாவை கொண்டாடி. தம்பிக்கு இன்னொரு
தம்ளர் ஊற்றுவோம்... இப்ப குடிக்கறீங்களா?”

“என்னது இன்னொரு கிளாஸா? தாங்காது சார். இதுவே
அதிகம்.”

அரண்டு போன ஹரிஹரன் கையிலிருந்த காபியை
மடமடவென்று குடித்தான். குடித்தவனுக்கு வியப்பு



வந்தது. கள்ளிச் சொட்டு போல் அவ்வளவு திடமாய்..
ருசியாய்.. மணமாய் இருந்தது அந்தக் காபி.

'இதுவா காபித்தண்ணி?'

அதன் ருசியும் மணமும் ஈர்க்க, வீராச்சாமி
“இந்தாங்க தம்பி...” என்று இன்னும் ஓர் தம்ளர்
காபியை ஊற்ற.

“ஓ.கே...” என்று வாங்கி குடிக்க ஆரம்பித்துவிட்
டான்.

'இவன் சாப்பாட்டுப் பிரியன்...!'

சுமித்ரா அவனைப் பரிவாக பார்த்தாள். இன்னும்
அம்மாவின் கைப்பக்குவத்தில் அவன் ஒரு நேரம்
சாப்பிட்டு விட்டால் அதன் சுவையில் சொக்கி அங்கேயே
தங்கிவிடுவான்.

'அப்படி இருப்பானா?' ஏக்கமாய் இருந்தது அவளுக்கு.
யாராவது அவனை இருக்கச் சொல்ல மாட்டார்களா?

“சொல்லுங்க தம்பி.. சுமித்ராவை எங்கே பார்த்தீங்க?”

“நேற்றைக்கு முதல்நாள்..”

“அப்படின்னா..” கூட்டத்தில் யாரோ கேட்க...

“முந்தா நாள்ன்னு சொல்லுது தம்பி...” வீராச்சாமி
பெருமையுடன் அவன் முகம் பார்த்தார். அர்த்தம்
சொல்லிவிட்டாராம்.. தமிழுக்கே விளக்கம்!

'அது சரி.. அவன் இவர்களின் தமிழுக்கு விளக்கம்
கேட்டால் இவர்கள் அவன் தமிழுக்கு விளக்கம் கேட்க
மாட்டார்களா?'

சுமித்ரா தனக்குள் சிரித்துக் கொண்டாள்.



“யெஸ்.. யு ஆர் கரெக்ட்.. நாங்கள் காரில் வந்து
கொண்டிருந்தோம்..”

'நாங்களா..?' சுமித்ரா விழித்தாள்.. 'யார் யார்?'

“நாங்கன்னா யாரு தம்பி?” கூட்டத்தில் கேட்டார்கள்.

“மை சிஸ்டர்.. மை மாம்.. அன்ட் ஐ...”

இப்போது வீரச்சாமிக்கு விளக்கம் சொல்லத் தெரிய
வில்லை.

'சிஸ்டர்ன்னா தங்கச்சி.. மாம்ன்னா யாரு.. மாமாவா?'

“தம்பியும் அவரோட தங்கச்சியும், மாமாவும் வந்தாங்
களாம்...” வீராச்சாமி விளக்கம் சொல்ல சுமித்ரா சிரிப்பை
அடக்கிக் கொள்ள தலைகுனிந்து கொண்டாள்.

“நோ அங்கிள்.. மாம் மீன்ஸ் மதர்.. 'அம்மா'...”

“அப்படிங்களா தம்பி.. கேட்டுங்கங்கப்பா... அவரோட
அம்மாவும் தங்கச்சியும் கூட வந்தாங்களாம்.. அது சரி
தம்பி.. அம்மாவை 'மம்மி'ன்னு தான் கூப்பிட்டுக்
கேட்டிருக்கிறேன். அது என்ன 'மாம்..'?”

“அது 'மம்மி'யை சார்ட்டாய் கூப்பிட்டால் 'மாம்...'”

“அப்படியா? மம்மிங்கிறது ரொம்பப் பெரிய வார்த்
தையா.. இருக்கட்டும்.. இருக்கட்டும்... உங்க நாட்டுப்
பழக்கம் அப்படி...”

என்னவோ அவன் தேசம்விட்டு தேசம் வந்தவன்
போல் அவர் கூறினார். 'எல்லோருமே.. இந்தியக் குடிமகன்
கள்தான்' என்று நினைத்துக் கொண்ட சுமித்ரா...
கிழக்கும் மேற்கும் உரையாடும் லட்சணத்தைப் பார்க்க
விழைந்து அவர்களின் பேச்சைக் கவனித்தாள்.

“தட் டைம் வாஸ்... நைட் டைம் அங்கிள்...”

''அது ராத்திரிப் பொழுதாம்பா...''

''இன் தி மிடில் ஆப் த ரோடு.. ஒரு பெண் மயங்கிக் கிடக்கிறாள்...''

''கேட்டிங்களா ஜனங்களா... நடுரோட்டில் நான் பெத்த பொண்ணு மயக்கம் போட்டிருச்சாம்.. என் சாமி.. என் குல தெய்வமே...''

''டோன்ட் வொர்ரி அங்கிள்...''

''சரி தம்பி. நான் கவலைப்படலே...''

''என் சிஸ்டர் பார்த்து விட்டுச் சொன்னாள்.. அண்ணா ஷி இஸ் மை பிரண்ட்...''

''நம்ம தம்பியின் தங்கச்சி சொல்லுச்சாம்... அண்ணே.. இதுதான் என் சிநேகிதப் புள்ளைன்னு..''

''நாங்கள் எல்லோரும் உங்க பெண்ணைத் தூக்கிக் காரில் படுக்க வைத்தோம்... என் சிஸ்டர் உங்க பெண்ணின் தலையை மடியில் வச்சுக்கிட்டாங்க...''

''உங்க தங்கச்சி கையைத் தொட்டு என் கண்ணில் ஒற்றிக்கனும் தம்பி. என் மகளைக் காப்பாத்துச்சே...''

''டோன்ட் கிரை அங்கிள்..''

''சரி தம்பி... நான் அழுகலே...''

''அப்புறம் தேனியில் எங்களுக்குத் தெரிந்த டாக்டரிடம் காண்பிக்கலாம்ன்னு போனோமோ.. அதற்குள் உங்கள் பெண்ணிற்கு மயக்கம் தெளிந்து விட்டது...''

''என் பெண்ணுக்கு ஒரு குறையும் வராது தம்பி..''

''பட்.. திரும்பவும் அவர்கள் வந்து விடுவாங்களோன்னு பயம். பிகாஸ்... எங்கள் கார் போன வழியில் அந்த ரோக்ஸ் ஒரு பத்து இருபது ஆள்கள் இருப்பார்கள்.



கரும்புக் காட்டிற்குள் யாரையோ தேடிக் கொண்டு இருந்தார்கள்...''

''வேறு யாரை..? என் பெண்ணைத்தான் தம்பி...''

''நான் வேறு காரை விட்டு இறங்கிப்போய் அவர்களிடம் வழி கேட்டேன்...''

''ஏன் தம்பி.. உங்களுக்கு வழி தெரியாதா?''

''ரோட்டில் கலாட்டா என்பதால் சார்ட்வேயில் வந்தேன் அங்கிள்...''

''தம்பி குறுக்கு வழியில் போச்சாம்...''

''அதனால் அப்போதே உங்கள் வீட்டிற்கு உங்கள் டாட்டரை கொண்டு வந்து விடுவது ரிஸ்க்குன்னு பயந்தோம்...''

''என் மகளை அப்பவே கொண்டு வந்து விடறது ஆபத்துன்னு தம்பி நினைச்சுச்சாம்...''

''ஸோ.. நாங்கள் மூணாறுக்கு போய் கொண்டு இருந்ததால் எங்களோடு பாதுகாப்பாய் உங்கள் பெண் இருக்கட்டும் என்று அழைத்துக் கொண்டு போய் விட்டோம்...''

''மூணாறு தான் உங்கள் சொந்த ஊரா தம்பி...''

''நோ அங்கிள்... அங்கே எங்கள் சொந்தக்காரர்களின் எஸ்டேட் இருக்கிறது. அங்கே போய் கொண்டிருந்தோம்...''

''எஸ்டேட்டா.. தம்பி பெரிய பணக்காரர் போல.. தம்பி எங்கே வேலை பார்க்கறீங்க...''

''ஆயிரக்கணக்கான ஆள்களுக்கு வேலை கொடுத்து கொண்டு இருக்கிறேன் அங்கிள். எனக்கு பாண்டி சேரியில் கிரானைட் பிஸினெஸ்ஸும்... சென்னையில் இம்போர்ட் அண்ட் எக்ஸ்போர்ட் கம்பெனியும் உண்டு



'ஆ'வென்று வாய் பிளந்த வீராச்சாமி....

''அது சரி.. தம்பி பேச்சிலேயே பெரிய இடத்துப் பிள்ளைன்னு தெரியுதே...'' என்றார்.

''அங்கிள்.. நேற்றுக் காலையிலேயே என் செல்போனை வாங்கி சுமித்ரா உங்களுக்குப் போன் பண்ணினாள். பட் நோ ரெஸ்பான்ஸ்... இதோ பாருங்கள்...''

ஹரிஹரன் தன் செல்போனை எடுத்து டயல் பண்ணிய போன்களின் நம்பர் வரிசையில் அவர்கள் வீட்டு நம்பர் இருந்ததைக் காண்பித்தான். போன் நம்பரும், தேதியும், நேரமும் அதில் பதிவாகி இருக்க வீராச்சாமி பல்லைக் கடித்தார்.

''டேய் ராமசாமி. உன் தங்கச்சி நேத்திக்கு காலம்பரமே நம்ம வீட்டு நம்பருக்கு போன் பண்ணியிருக்காடா.. நம்ம வீட்டு போன் எங்கே... முதலில் உங்க ரெண்டு பயலுக போனையும் எங்கிட்ட கொடுங்கடா...''

தன் மகன்களின் செல்போன்களை வாங்கிய வீராச்சாமி... ''பரமா.. இந்த போன்களில் தம்பியோட நம்பர் வந்திருக்கான்னு பாருடா...'' என்றார்.

பரமன் முதலில் ஹரிஹரனின் நம்பரைக் கேட்டான். வெள்ளைச்சாமி, ராமசாமி இருவரின் போன்களிலும் வந்து எடுத்துப் பேசப்பட்ட போன் அழைப்புகளில் ஒன்றாய் ஹரிஹரனின் நம்பரும் இருந்தது.

''ரெண்டு போனிலும் இவரோட போன் நம்பர் இருக்கு மாமா. எடுத்துப் பேசியிருக்காங்க. ஏண்டா வெள்ளை.. ராமசாமி.. இரண்டு பேரும் ஒத்தை வார்த்தை சொல்லியிருந்தால் உங்க அப்பனும், ஆத்தாளும் நேத்து குறைப் பொழுதும் கஞ்சி குடிக்காமல் கிடந்தாங்கள்ள... அது இல்லாம போயிருக்கும்ல்ல... இந்தப் புள்ள என்ன



ஆச்சோ ஏதோச்சோன்னு பதறிக்கிட்டு கிடந்தோம்ல்ல.. அந்தப் பதட்டம் இல்லாமப் போயிருக்கும்ல்ல.. அறிவு கெட்டவன்களே...''

''ஏண்டா மாப்பிள்ளை.. நீ வேற எரியற வயித்திலே இன்னும் கங்கை அள்ளிப் போடறே.. இந்த எடுபட்ட சிறுக்கி என் போனை எடுத்து வைச்சிருந்தாடா... உன் கண் முன்னாலதானே நான் வாங்கிக் கொடுத்தேன்? இவளை...'' வெள்ளைச்சாமி மனைவியை மிதிக்கப் போனான்.

''ஏண்டி.. என் தங்கச்சி போன் பண்ணியிருக்கா.. அதை எங்ககிட்ட மறைச்சிட்டு வீட்டுக்குள்ள குத்த வைச்சிருக்க... போடி உங்க அப்பன் வீட்டுக்கு...'' ராமசாமி செல்வியை கழுத்தைப் பிடித்தே வெளியே தள்ளினான். பரமன் இருவரையும் பிடித்து நிறுத்தி அதட்டினான்.

''ஏய்ய்.. விடுங்கப்பா... ஆன்னா ஊன்னா.. வீட்டுப் பொம்பளைகளை பத்துப் பேர் பார்க்க போட்டு மிதிப்பீங்க... இதானே அண்ணன் தம்பி இரண்டு பேருக்கும் வழக்கமா போச்சு. போங்கப்பா.. உங்க அப்பன் இந்தாம் பெரிய காரை வீட்டை கட்டி போட்டிருக்காரில்ல... அதுக்குள்ள ஒரு ரூமுக்குள்ள புகுந்து வெட்டுவியோ.. குத்துவியோ.. வெளியே தெரியாமல் செய்ங்க.''

'பெண்டாஸ்டிக்.. ரியலி ஹி இஸ் எ கரெக்ட் மேன்...' ஹரிஹரன் பரமனை மனதிற்குள் பாராட்டினான்.

கனகவள்ளி மச்சு வீட்டிற்குள் இருந்த தங்கள் வீட்டுப் போனை எடுத்து வந்தாள்.

''இந்த எடுபட்ட சிறுக்கிக போனைத் தூக்கி மச்சு வீட்டில் ஒளிச்சு வச்சிருக்காளுகடா... கதவை இறுக்கிப் பூட்டிட்டாளுக... சத்தம் வரலை..''

வீராச்சாமி கண் சிவக்க தன் மருமகள்களை உறுத்துப் பார்த்தார். பின் பரமனிடம் கூறினார்.

"அந்த கரிமேட்டு கருவாயனும் வழுக்கைத் தலை குரங்குப் பயலும் நம்மகிட்ட தானடா இருக்கானுங்க...?"

"ஆமாம் மாமா.. ராத்திரி பஞ்சாயத்து கூடுது. அவனுக வீட்டுக்கு தாக்கல் போயிருச்சு."

"அப்படியே இவளுக அப்பன் ஆத்தாளுக்கும் தாக்கல் சொல்லிவிடு. பஞ்சாயத்தில் இவளுகளையும் நிப்பாட்டு..."

"மாமா..."

"வீராச்சாமி மருமகள்கள்ங்கிறதுக்காக இவளுக செஞ்ச குற்றத்தையெல்லாம் மன்னிச்சா ஊருல நாயம் செத்துப் போகும்டா மருமகனே. என் பொண்ணுக்கு இப்படி நடந்திருச்சுங்கிறதுக்காக நான் இதைச் செய்யலை.. ஒரு வயசுக்கு வந்த பொண்ணை நடுக்காட்டில் ராத்திரி நேரத்தில் பத்து இருபது பேர் சேர்ந்து துரத்தியிருக்கானுக... தடுக்க வந்த அண்ணன்காரனை வெட்டியிருக்கானுக... அதுக்கு நம்ம வீட்டுக்கு வாக்கப்பட்டு வந்த மருமகள்களே துணை போயிருக்காளுக... இதை சும்மா விடக் கூடாது..." அங்கே நிசப்தம் நிலவியது.

## 30



அகன்று விரிந்திருந்த ஆலமரம். அதன் அடியினில்



ஊர் மக்களின் நீதிமன்றம். தலைக்கட்டு என்று சொல்லப்படும் கிராமப் பெரிய மனிதர்கள் ஆறுபேர் அதில் வந்து அமர்ந்தனர். அவர்களில் ஒருவர் அடுத்தவரிடம் வினவினார்.

"ஏன்ப்பா... சாமிதுரை.. தலைக்கட்டு ஏழுபேரில் ஒரு ஆள் குறையுதே..."

"வீராச்சாமி எப்படிப்பா பஞ்சாயத்து மேடையில உட்கார முடியும்? பஞ்சாயத்தை அவன் வீட்டுப் பிரச்சனைக்காகத்தானே கூடியிருக்கு?"

வீராச்சாமி ஊர் பெரிய மனிதர் பஞ்சாயத்துத் தீர்ப்பு சொல்லும் 'தலைக்கட்டு'க்களில் அவரும் ஒருவர். இன்று அவர் பஞ்சாயத்து மேடையில் அமர முடியாது.

பஞ்சாயத்து தீர்ப்பு சொல்லும் ஏழு பேரில் யார் ஒருவர் குடும்பத்துப் பிரச்சனை பஞ்சாயத்துக்கு வருகிறதோ.. அவர்களது தீர்ப்பு அவர்கள் குடும்பத்துக்கு சாதகமாக இருக்கும் என்பதால் வழி வழியாய் கையாளும் நடைமுறைகளில் இதுவும் ஒன்று.

அன்றைய பஞ்சாயத்தில் வீராச்சாமிக்குப் பதிலாக தற்காலிகமாக அவரது பங்காளிகளில் ஒருவர் வந்து அமர்ந்தார்.

"யாரு மேலப்பா பிராது..."

பரந்தாமனும், கார்மேகவண்ணனும், மல்லிகாவும், செல்வியும் முன்னே நகர்ந்து வந்து நின்றனர்.

"இவங்க குடும்பத்து ஆளுக வந்திருக்கீகளாப்பா..."

அவர்கள் முன்னே வந்து தலைகுனிந்து நின்றனர்.

... ஒரு கட்டை வண்டியின் மேலமர்ந்து நடப்ப... கொண்டிருந்த ஹரிஹர



னுக்கு எல்லாமே ஆச்சர்யமாகவும் வியப்பாகவும் இருந்தது.

அது இரவு நேரம். எல்லோரும் சாப்பிட்டுவிட்டு வந்து அமர்ந்திருந்தனர். விவசாயம் சார்ந்த கிராமப் புறங்கள் கடைபிடிக்கும் வழக்கம் இது.

பகல் பொழுதெல்லாம் பாடுபடும் விவசாயப் பெரு மக்களின் வேலை கெடாமல்.. பகல் பூராவும் பாடுபட்டவர்கள் வீடு வந்து வெந்நீர் வைத்துக் குளித்து பசிக்கு உணவு உண்டு... அதன் பின்னர் நிச்சிந்தையாய் வந்து பஞ்சாயத்துக் கூட்டத்தில் அமர்வார்கள். சிறுவர் முதல் பெண்கள் வரை அனைவரும் வந்து கலந்து கொள்வது இதன் மற்றொரு சிறப்பு.

ஆண்கள் மட்டும் முடிவு செய்யாமல் பெண்களின் கருத்தையும் கேட்டு முடிவு செய்வது கிராமத்து பஞ்சாயத்தின் தலையாய அம்சம்.

இப்படியோர் நிகழ்ச்சியைப் பார்க்க தனக்கு வாய்ப்புக் கிடைத்ததை நினைத்து ஹரிஹரனுக்கு பரம சந்தோசம்.

காலையில் வீராச்சாமி உறுதியாய் கூறியதும் அவர் வீடே அமைதியாகிவிட்டது.

"வீட்டுக்கு வாழ வரும் பொம்பளைக அந்த வீட்டில் பொறந்த பொம்பளைகளுக்கு பெத்த தாயாய் இருக்கணும். அதை விட்டுவிட்டு அவங்களே எதிரி கையிலே பிடிச்சுக் கொடுக்கத் துணிஞ்சா வீடு விளங்குமா? இல்லை இந்த நாடுதான் விளங்குமா? இன்னைக்கு வீட்டு விசயம் வெளியே வரக்கூடாது.. வீட்டுக் பொம்பளைக பஞ்சாயத்தில் நிற்கக் கூடாதுன்னு நான் மறைச்சேன்னா... நாளைக்கு.. இந்தக் கதை அடுத்தவன்



...டிலயும் நடக்கும்.. தலை...
...பஞ்சாயத்து தீர்ப்பு சொல்ற ஒரு...
...யும் ஒருத்தனா இருந்துக்கிட்டு இந்தக்...
...ண்ண மாட்டேன்."

மல்லிகாவும், செல்வியும் உறைந்து போனார்கள். மற்றவர்களும் உடன்பிறந்தவர்களும் இதைக் கேள்விப் ...ட்டால் அடித்தே கொன்று விடுவார்கள் என்பது ...ரிந்தவர்களாய் திகிலடைந்தார்கள்.

...உப்பைத் தின்றவர்கள் தண்ணீர் குடித்துத்தானே ஆக வேண்டும்?

ஹரிஹரன் எழுந்து கை குவித்து விடைபெறப் போனான். வீராச்சாமி அவனைத் தடுத்தார்.

"என்ன தம்பி..?"

"நான் வந்த வேலை முடிந்துவிட்டது. உங்கள் பெண்ணை பத்திரமாய் உங்களிடம் கொண்டு வந்து சேர்த்துவிட்டேன்.. போய் வருகிறேன்..."

"நல்லாயிருக்கு தம்பி உங்க நாயம். வீட்டுக்கு வந்த ...ள விருந்து சாப்பிடாமல் போறதா? அதுக்கு நாங்க ...ட்டுருவோமா. நீங்க இன்னைக்கு இங்க தங்கியிருந்து விருந்து சாப்பிட்டுட்டு நாளைக்குப் போகலாம்."

"நாளைக்கா..?"

"ஆமாம் தம்பி. ராத்திரி பஞ்சாயத்து கூடுது. அதில நீங்களும் சாட்சி சொல்ல வரணுமில்ல..."

'அதுசரி.. ஆதாயமில்லாமல் செட்டியார் ஆத்தில் இறங்குவாரா என்ன? என் மாமனுக்கு என்னை மாட்டி வைக்க பலமான சாட்சி வேணுமில்ல...' செல்வி மனதிற்குள் மாமனாரை திட்டித் தீர்த்தாள்.

"பரமா.. நீ இங்கேயே இருடா... தம்பி கிளம்புற வரைக்கும் தம்பிக்கு நீதான் சேக்காளி. தம்பிக்கு உன் மேலதான் ரொம்பப் பிரியம் போல.. கூட்டிக்கிட்டுப் போயி நம்ம மெத்தை ரூமில தங்க வை. அங்கே குளிக்கிற ரூமிருக்கு. வெந்நித் தண்ணிய அங்கேயே கொண்டு வரச் சொல்றேன். தம்பி குளிச்சுட்டு கீழே இறங்கி காலப் பலகாரம் சாப்பிட வரட்டும்.. ஏ புள்ள கனகம்.. காதில விழுந்ததா..."

"நான் பார்த்துக்கிறேன் மச்சான்..." மகள் வந்துவிட்ட நிம்மதியில் கனகவள்ளி 'மச்சான்' என்று அழைத்து விட வீராச்சாமி புளகாங்கிதமடைந்தார்.

தன் மீசையைத் தடவிக் கொண்டே மனைவியை ஒரு பார்வை பார்த்து வைத்தார்.

'இந்த மனுசனுக்கு காலநேரம் தெரியாது. நாந்தான் ஒரு கூதரை.. வாய் தவறி ஒரு வார்த்தை 'மச்சான்'னு சொல்லி வைச்சேன்னா நாலும் தெரிஞ்ச பெரிய மனுசன் இந்தப் பார்வையா பார்த்துத் தொலைக்கணும்... கண்றாவி...'

கனகவள்ளி வேலையிருப்பது போல் சமையலறைக்குச் சென்றுவிட்டாள்.

பரமன் ஹரிஹரனை மாடிக்கு அழைத்துச் சென்றான். முற்றத்தின் பின்பக்க வராண்டாவில் வீட்டுக்குள் மாடி செல்ல படிக்கட்டுக்கள் இருந்தன. மாடியில் நீண்ட ஹால். அதன் கடைசியில் ஒரு பெரிய அறை. அதில் கட்டில் மெத்தையெல்லாம் இருந்தது. அந்த ஹாலின் மையத்தில் ஒரு கதவு. திறந்தால் மிகப் பெரிய பரந்து விரிந்த மொட்டைமாடி. அதன் சுவரோரமாய் வரிசையாய் வைக்கப்பட்டிருந்த தொட்டி பூஞ்செடிகள்.



மொட்டை மாடியின் கடைசியில் பாத்ரூம் கட்டப்பட்டிருந்தது.

"இங்கே நான் வந்து ரொம்ப வருசமாச்சு..." என்றான் பரமன்.

"வொய்..."

"இது சுமித்ராவோட ரூம்.. அவ வந்தால் தங்குவா.. மத்த நாள்ல மூடியிருக்கும். இந்தக் குளிக்கிற ரூம் கூட அவளுக்காக கட்டினதுதான். இந்த ரோஜாச் செடிகளையெல்லாம் அவள்தான் வளர்க்கிறாள் போல..."

"ஓ.. ஐ ஸீ..."

ஹரிஹரன் ஆசையுடன் அந்த ரோஜாச் செடிகளைப் பார்த்தான். அதன் ஒவ்வொரு பூவிலும் சுமித்ராவின் முகம் தெரிந்தது.

வன்மையான மனிதர் மத்தியில் பிறந்த மென்மையான பூ....

ஹரிஹரன் பாத்ரூமைத் திறந்து பார்த்தான். அட்டாச் சுடு லெட்டின் வசதியுடன் இருந்தது. குழாயைத் திறந்து பார்த்தான். தண்ணீர் கொட்டியது.

"மாமா வீட்டில் போர் போட்டிருக்கு. குழாயில் தண்ணீர் வரும். எங்க வீட்டிலும் இது போலதான்... வீட்டுக்குள்ளேயே எல்லாமிருக்கும். நாளைக்கு சுமித்ரா வந்து வாழப்போற வீடில்ல..."

'ஆமாம். சுமித்ரா பரமனின் வீட்டில் போய்த்தான் வாழ்வாள். இந்த ஹரிஹரனுடன் வந்து அவன் வீட்டிலா வாழ்வாள்.. அதுதான் கனவாகிப் போய்விட்டதே...'

"எனக்கு குளிர்ந்த தண்ணீரே போதும்... எதற்கு வெந்நீர்?"



"அதுசரி.. எங்க வீட்டுக்கு விருந்தாளி வந்த புள்ள.. புதுத்தண்ணி ஒத்துக்காம காய்ச்சலில் விழுந்தா என் வீட்டு மனுசனுக்கு யாரு பதில் சொல்றது..."

குரல் கேட்டுத் திரும்பினார்கள். இடுப்பில் தண்ணீர் பானையுடன் வந்து கொண்டிருந்தாள் கனகவள்ளி.

"வாட் இஸ் திஸ்...?"

"சுடுதண்ணி.. இப்படி இறக்கி வைத்தே..."

பரமன் ஒரு கை கொடுத்து இறக்கி வைத்தான். ஹரிஹரன் பானை நீரைத் தொட்டுப் பார்த்தான்.

'ஸ்ஸ்..." என்று கையை உதறிக் கொண்டான். நீர் கொதித்தது.

"ஏன் தம்பி சுடுதண்ணின்னு சொன்ன பின்னாலும் தொட்டுப் பார்த்தீங்க. கை தாங்குமா?"

"பட்.. உங்கள் இடுப்பு எப்படித் தாங்கியது?"

"எங்களுக்கு இது பழக்கம் தம்பி..." அவள் இலகுவாய் கூறினாள்.

அதிசயப் பட்டுப் போனான் ஹரிஹரன். கனகவள்ளி கீழே இறங்கிப் போய் விட்டாள். ஹரிஹரன் கீழே இறங்கப் போனான்.

"என்ன வேணும்...?" பரமன் வினவினான்.

"என் டிரெஸ்..."

"எங்கேயிருக்குன்னு சொல்லுங்க.. நான் போய் எடுத்தாரேன்.."

"காரில் பின்சீட்டில் இருக்கு.."

ஹரிஹரன் கார்சாவியைக் கொடுத்தான். பரமன் வாங்கிக் கொண்டு கீழே இறங்கினான்.



கார் கதவைத் திறந்து ஹரிஹரனின் பேக்கை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் வந்தவனிடம் ஒரு ஆள் ஓடி வந்தான்.

"அண்ணே.. ரைஸ்மில்லுக்கு நெல்லு மூட்டை லாரியில் வந்து இறங்கிக்கிட்டு இருக்குண்ணே..."

"பொறுடா.. வர்றேன்..."

பரமன் சுற்று முற்றும் பார்த்தான். தலைப்பின்னலை பிரித்து விட்டுக் கொண்டு குளிப்பதற்காக வீட்டின் பின் பக்கம் சென்று கொண்டிருந்த சுமித்ரா அவன் கண்ணில் பட்டாள்.

"சுமித்ரா..."

"என்ன மாமா..."

"மெத்தை ரூமில் உன் சிநேகிதப் புள்ளையோட அண்ணன் இருக்காரு. அவருகிட்ட இந்தப் பேக்கை கொடுத்துரு... நான் அவசரமாய் ரைஸ்மில் வரைக்கும் போகணும். மாமன் கேட்டா வந்துருவேன்னு சொல்லு..."

அவள் பதிலுக்காக காத்திராமல் பையை அவள் கையில் கொடுத்துவிட்டு அவன் வாசலில் இறங்கி மறைந்தான்.

சுமித்ரா மனதில் படபடப்பை உணர்ந்தாள். நேற்றுத் தோட்டத்தில் சந்தித்த தனிமை மீண்டும் வாய்த்திருக்கிறது. அவளே எதிர்பாராமல் அவனுடன் தனியே பேச சில நிமிடங்கள். அவள் படியேறினாள்.

மொட்டைமாடியில் நின்று கொண்டு ஒரு ரோஜாவைப் பறித்து முகர்ந்து கொண்டிருந்த ஹரிஹரன் கொலுசு சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

சுமித்ரா வந்து கொண்டிருந்தாள். விரித்து விட்டிருந்த முடியை அவசரமாய் கொண்டையிட்டிருந்தாள். அது அவிழ்ந்து தொங்கியது. நீண்ட கருங்கூந்தலுடன் அவனருகே வந்து நின்றவளை ஆழ்ந்து பார்த்தான்.

அவள் முகம் வாடியிருந்தது. அவன் பார்வையை தயங்காமல் எதிர்கொண்டது அவள் பார்வை. 'இனி எப்போது பார்க்க முடியுமோ?' என்ற தவிப்போடு அவன் விழியோடு விழி உறவாட அசையாமல் நின்றாள் அவள். ஹரிஹரன் தன் கையிலிருந்த ரோஜாவை அவளிடம் நீட்டினான். அவள் தயங்காமல் வாங்கிக் கொண்டாள். அவன் பார்வை அவளைத் துளைத்தது. அவளருகே நெருங்கினான் அவன். அவள் மெதுவாய் பின்னால் நகர்ந்தாள். இருவரும் மாடி ஹாலுக்குள் வந்துவிட்டனர்.

''என்மேல் இரக்கமா?'' ஹரிஹரன் வினவினான்.

''என் மேல்தான் இரக்கம்...'' அவள் கண்களில் கண்ணீர் தழும்பியது.

''ஏன் நான் உன்னை என்ன கொடுமை செய்தேன்?''

''நிம்மதியாய் வாழ்ந்து கொண்டிருந்தவளின் வாழ் நாள்களில் ஒரு நாளை உங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்டீர்கள்...''

''அந்த ஓர் நாளில் உன்னிடம் ஓர் விநாடியாவது எல்லை மீறினேனா..? உன்னோடு கழித்த அந்த ஒரு நாளே எனக்குப் போதும்... நான் என் வழியில் போய் விடுகிறேன். அதன்பின் உன் வழியில் குறுக்கிடவே மாட்டேன்.''

''நான் எப்படிப் போனாலென்ன என்று நினைத்து விட்டீர்கள்.... இல்லையா...''



''என் முகம் பார்த்துச் சொல். என்னால் அப்படி நினைக்க முடியுமா? நான் சந்தித்த பெண்களில் முதல் சந்திப்பிலேயே என் மனதை திருடிவிட்டவள் நீ. உன்னைச் சந்தித்த விநாடியிலிருந்து.. நான்.. நானாக இல்லை. இப்போது ஓர் வார்த்தை சொல்.. உன்னை நான் உன் தாய், தந்தையரின் சம்மதத்தோடு திருமணம் செய்து கொள்கிறேன். சொல்... நான் உன் அப்பாவிடம் உன்னைப் பெண் கேட்கவா.. சொல்.. சுமி.. சொல்...''

## 31



சுமித்ரா உடைந்தாள். அவள் கையிலிருந்த பேக் நழுவியது. அவனை ஏக்கத்துடன் நிமிர்ந்து பார்த்தாள். அவள் விழிகளில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

''சுமி..'' அவன் தாங்க மாட்டாமல் அவளை இழுத்து அணைத்தான்.

விலகாமல் அவன் மார்பில் முகம் புதைத்து விம்மிய சுமித்ராவின் நெஞ்சம் உருகியது. காதலில் மனம் கனத்தது.

'உன்னோடு ஒரு நாள் எனக்குக் கிடைத்ததே பெரும் வரம்.. என் பெற்றவர்களிடம் வாய் திறந்து எப்படி நான் இதைச் சொல்வேன்.. நீ கேட்கும் சொல் என் இதயத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இதழ்களில் அது உதிக்காது. நான் என்ன செய்வேன்? என் காதலை எப்படி வாய் திறந்து சொல்வேன்.'

'சொன்னால்தானா...' ஹரிஹரனின் முகம் அவள் கூந்தலில் புதைந்தது.



'என் மார்பில் முகம் புதைத்து நீ விடும் கண்ணீர் துளி ஒவ்வொன்றும் உன் காதலை எனக்குச் சொல்கிறதே.. நீ வாய் திறந்து எதைச் சொல்ல வேண்டும். எதற்கு சொல்ல வேண்டும்... விரும்பாத ஆண்மகனின் விரல் நகம் கூட நீ தொட மாட்டாய்.. இத்தனைக் கட்டுக் காவல் கொண்ட இந்த வீட்டின் மாடியறையிலேயே என் அணைப்பில் நீ அடங்கி நிற்கும் இந்த நிலை ஒன்று போதுமே.. நீ என்னுடையவள் என்பதை அது சொல்லுமே.. ஐ லவ் யு.. சுமி.. ஐ லவ் யு...'

சுமித்ரா விலக முயன்றாள்.

''ஏன்..?'' ஹரிஹரன் அதட்டினான்.

''இது என் வீடு...''

''இருக்கட்டும்...''

''ப்ளீஸ்.. டிரை டு அன்டர்ஸ்டாண்ட் மீ...''

''பர்ஸ்ட் யு டு இட். என்னால் உன்னை என்னை விட்டு விலக அனுமதிக்க முடியாது...'' அவன் கரங்கள் அவளை இறுக்கின.

''வேண்டாம்.. விட்டு விடுங்கள்...'' அவள் விலக முயற்சிக்காமல் பலவீனமாய் கூறினாள்.

அவன் கரங்கள் அவளை இறுக்க விருப்பத்துடன் உடன்பட்டாள். ஹரிஹரன் சூழ்நிலையை மறந்தான். அவள் முகம் நிமிர்த்தி அவள் இதழோடு இதழ் பதித்தான். எவ்வளவு நேரம் தன்னிலை மறந்து அவர்கள் இருவரும் நின்றிருந்தார்கள் என்பதை அவர்கள் அறியவில்லை.

மாடிப்படியில் ஏதோ சத்தம் கேட்டது. தந்நிலைக்கு வந்தனர் அவர்கள் இருவரும். ஹரிஹரன் அவள் இதழ் களை விடுவித்தான். ஆனால் அவளை தன் அணைப்பி



லிருந்து விடுவிக்காமல் மாடிப்படியைப் பார்த்தான். யாரோ வரும் அரவம் கேட்டது.

வேறு வழியின்றி சுமித்ராவை விட்டு விட்டு மொட்டை மாடிக்குப் போய் நின்று கொண்டான்.

சுமித்ரா பதறிப்போய் மாடிப்படியருகே ஓடினாள். எதிரே பரமன் வந்து கொண்டிருந்தான்.

'சற்று முன் இவன் வந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்?' சுமித்ராவின் உடல் நடுங்கியது. அவன் முகம் பார்க்க முடியாமல் தலைகுனிந்தாள் அவள்.

''என்ன சுமித்ரா...'' பரமன் அவளை ஊடுருவிப் பார்த்தான்.

''ஒன்னுமில்லை... மாமா...''

''சரி.. போ...''

அவள் கீழே மடமடவென்று இறங்கிப் போய்விட்டாள். பரமன் மொட்டை மாடிக்கு வந்தான். காலை வெயிலில் வானத்தைப் பார்த்துக் கொண்டு ஹரிஹரன் நின்று கொண்டிருந்தான்.

''வெயிலில் நிற்காதீங்க... அப்புறம் என்னைப் போல் கருத்திரப் போறீங்க.'' ஹரிஹரன் திரும்பி பரமனைப் பார்த்துச் சிரித்தான்.

''நீங்கள் கருப்பா?''

''உங்களைவிடக் கருப்புத்தானே...?''

''கருப்புத்தான் அழகு...''

''அப்படியா சொல்றீங்க...''

''ஆமாம்.. கண்ணனின் நிறம் கருப்புத்தானே.. அவன் காதல் மன்னன் தெரியும்தானே உங்களுக்கு...''

வரிசைப் பற்கள் தெரிய சிரித்தான் ஹரிஹரன். பரமன் கூடச் சேர்ந்து சிரித்தான். ஹரிஹரனின் மனம் பாரம் குறைந்து லேசாய் இருந்தது. அது சுமித்ராவின் மனதில் தான் இருக்கிறோம் என்பதை அறிந்து கொண்டதால் வந்த நிம்மதி. தான் நேசித்தவள் தன்னை நேசிக்கிறாள் என்பதை அறிந்ததால் வந்த சந்தோசம். தன் மேலிருந்த காதலால் தன் அணைப்பில் அவள் கட்டுண்டு நின்றாள் என்ற உல்லாசம்.

உலகெல்லாம் சுற்றி வியாபாரத்தில் தன் வெற்றிக் கொடியை நாட்டிய அந்த இளம் தொழிலதிபன் தான் எந்த வெற்றியிலும் இந்த அளவு பெருமை கொண்டதில்லை. ஒரு பெண்ணின் மனதை வென்றதில் அவ்வளவு மமதை கொண்டான்.

குளித்துவிட்டு ஹரிஹரன் வந்த போது பரமன் மாடி ஹாலின் ஜன்னல் வழி தெருவை வெறித்துக் கொண்டிருந்தான். காலடியோசை கேட்டுத் திரும்பியவன் சிரித்தான்.

''குளிச்சிட்டிங்களா.. வாங்க சாப்பிடப் போகலாம்..''

பரமனுடன் கீழே இறங்கி வந்தபோது முற்றத்தில் குழுமியிருந்தவர்களின் மத்தியில் சுமித்ராவை ஹரிஹரனின் விழிகள் தேடின. அவர்கள் மத்தியில் அவளில்லை. ஹரிஹரனைக் கண்டதும் வீராச்சாமி குரல் கொடுத்தார்.

''கனகம்... தம்பி வந்திருச்சு.. இலையை போடு.. வாங்க தம்பி...''

சமையலறையை ஒட்டிய வராண்டாவில் நீண்ட பந்திப் பாய் விரிக்கப்பட்டு அதன் முன்னால் வரிசையாய் இலைகள் போடப்பட்டிருந்தன.



''உட்காருங்க தம்பி...''

''தரையிலா... டைனிங்டேபிள் இல்லையா?''

ஹரிஹரன் தரையில் உட்கார்ந்ததில்லை. எப்படி உட்காருவது என்று தெரியாமல் விழித்தான். பரமன் கால் மடக்கி சம்மணம் போட்டு அமர்ந்து காட்டினான்.

''இப்படி உட்காருங்க சார்.''

''ஓ.கே.... ஓ.கே...''

சிரமப்பட்டு தரையில் அவன் கால் மடக்கி உட்கார்ந்து விட்டு மிகப்பெரிய சாதனை செய்தது போல் பரமனைப் பார்க்கையில்,

'களுக்'கென்ற கிரிப்புச் சத்தம் கேட்டது. அது சுமித்ராவின் சிரிப்பு. ஹரிஹரன் ஆவலுடன் சத்தம் வந்த திக்கில் பார்த்தான். சமையலறை ஜன்னலில் இருந்து பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள் சுமித்ரா. ஹரிஹரனின் மனம் மலர்ந்தது. புருவங்களை உயர்த்தினான். அவள் சுட்டு விரலையும் பெருவிரலையும் இணைத்து 'பிரமாதம்' என்று முத்திரை காட்டினாள். இளநகையுடன் இலையைப் பார்த்துச் சாப்பிட ஆரம்பித்தான் ஹரிஹரன்.

பச்சைப் பசேலென்ற வாழை இலையில் இட்லிகள் போடப்பட்டு நீண்ட சதைப்பற்றுடன் இருந்த மீன்களை அள்ளிப் போட்டு மீன் குழம்பு ஊற்றப்பட்டது.

ஹரிஹரன் சுவைத்துச் சாப்பிட்டான். கிராமத்துக் குழம்பின் காரமும் சுவையும் அவனுக்கு பிடித்துப் போய்விட்டது.

''பெண்டாஸ்டிக் ஆன்ட்டி... இது என்ன மீன்?'' நாக்கை சப்புக் கொட்டிக் கொண்டு கேட்டான் அவன்.



''கெழுத்தி மீன் தம்பி. நம்ம கண்மாயில் பிடிச்சது'' கனகவள்ளி பெருமையுடன் கூறினாள்.

''இட்லிக்கு மீன் குழம்பு... வாட் எ காம்பினேஷன்.''

'இவனுக்கு நீளமான நாக்கு..' சுமித்ரா ரசித்துச் சிரித்தாள்.

''நீங்கள் கொடுத்து வைத்தவர் பரமன்...''

''எத வைச்சு சொல்றீங்க..''

''பிரஷ் வெஜிடபிள்... பிரஷ் பிஷ்... காரசாரமாய் சமையல்... எனக்கு உங்களைப் பார்த்தால் பொறாமையாய் இருக்கு...''

''நீங்கள் பொறாமைப்படும்படி நான் கொடுத்து வைத்தவனில்ல...''

''வாட்...''

''ஒன்னுமில்ல... வாங்க... நம்ம ரைஸ்மில்லை சுற்றிக் காட்டறேன்.''

பரமனுடன் சேர்ந்து அவனது ரைஸ்மில், டெண்ட் சினிமா கொட்டகைகளைப் பார்த்துவிட்டு மீண்டும் வீராச்சாமியின் வீட்டிற்கு மதிய உணவுக்கு வந்திருந்தனர்.

''பாருடி.. நாம நம்ம அண்ணன் தம்பிகளுக்கு ஆக்கிப் போட்டதுக்கு அன்னைக்கு வானத்துக்கும் பூமிக்குமா குதிச்சுச்சுக... இன்னைக்கோ எவனோ ஒரு ஊர் பேர் தெரியாதவன் காரில் வந்து இறங்கினதும் காலையில் மீன் குழம்பு.... மதியானம் கோழிக் குழம்புன்னு விருந்து தூள் பறக்குது...'' மல்லிகா செல்வியிடம் ஆற்றாமையுடன் புலம்பினாள்.

''கிழவர் பலே கைகாரர்க்கா. நாம அடக்கி வாசிக்கணும். இன்னைக்கு ராத்திரி பஞ்சாயத்து கூடுது ஞாபகம் இருக்கில்ல..''



''அதுதான் நெஞ்சைப் போட்டு வதக்வதக்குன்னு பிசையுதே...''

''வந்தது வந்துருச்சு... ஆனா.. பஞ்சாயத்தில் நம்மை நிற்க வைச்ச இந்த வீட்டுப் பெரிய மனுசனை சும்மா விடக்கூடாது.''

''நீயென்னடி ஆத்தா.. நீ பாட்டுக்கு சொல்லிப்புட்டு போயிடுவ. உன் புருசன் உன்னை அப்பன் வீட்டுக்குப் போடின்னு தான் சொல்வாரு. என் புருசன் குரவளையில் மிதிச்சு கொன்னே போடுவாரு...''

''நீ பயந்துகிட்டு கிடக்கத்தான் லாயக்கு...''

''அப்படியே இருந்துட்டுப் போறேன். நீ ஆளைவிடு தாயி. உன்னைப் பார்த்து திட்டம் போட்டு நான் ஒய்ஞ்சு போய் கிடக்கிறது போதும். இனியும் ரங்கராட்டினம் ஆட என் உடம்பில் தெம்பில்லை... தாயி.''

மல்லிகா அவசரமாய் அந்த இடத்தை விட்டு அகன்றாள். செல்வி ஆங்காரத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தாள். கை கழுவ ஹரிஹரன் வெளியே வர குரோதமாய் அவனை முறைத்தாள்.

'இந்த மெட்ராஸ்காரன் வந்துதான் போட்டுக் கொடுத்து விட்டான். மகள் கிடைத்த சந்தோசத்தில் ஆத்தாகாரியும் அப்பன்காரனும் சந்தோசமா இருந்துச்சுக... சரி கவலை விட்டதுன்னு இருக்கிற சமயத்தில் இவனில்ல என் தலையில் இடியை இறக்கிட்டான்.. இவனை சும்மா விடக்கூடாது...'

செல்வி பல்லைக் கடித்துக் கொண்டாள்.

மாலையில் மல்லிகாவின் குடும்பமும், செல்வியின் குடும்பமும் வந்து இறங்கிவிட்டது.

''மச்சான்... நானும் பொம்பளைப் புள்ளைகளைப் பெத்தவன்தான். நல்லவார்த்தை சொலித்தான் உங்க வீட்டில் கட்டிக் கொடுத்தேன். இந்த நாசகாரி வீட்டையே நாசமாக்க துணிவாள்ன்னு நினைக்கலை மச்சான். நீங்க பெரிய மனுசன். உங்க வார்த்தையை மதிக்கிறேன். உங்க ஊர் பஞ்சாயத்துக்கு நான் கட்டுப்படறேன்...'' மல்லிகாவின் தந்தை துண்டை எடுத்து முகம் துடைத்துக் கொண்டு வீராச்சாமியின் முகம் பார்க்காமல் வேறு திசையில் பார்த்துக் கொண்டே கூறினார்.

''பாதகத்தி... வாக்கப்பட்டு வந்த வீட்டில் வன் கொடுமை பண்ணத்துணிஞ்சிட்டயே... சித்தப்பன் மகன், சித்தப்பன் மகன்னு அவனுக்கு துணை போனயே... மாட்டிக்கிட்டதும் உன்னை முதல் வேலையா காட்டிக் கொடுத்துட்டான் பாரு.. உன் சித்தப்பன் குடும்பத்து சகவாசம் வேணாம்ன்னு நாங்களே ஒதுங்கி நிற்கிறோம்.. உனக்கு என்ன சொந்தம் வேண்டி கிடக்கு...'' மல்லிகாவின் தாய் அவள் கன்னத்தில் இடித்தாள்.

''தங்கச்சி... இப்படி ஒரு காரியத்தை இவள் செஞ்சது சத்தியமா எங்க குடும்பத்துக்குத் தெரியாது. நாங்க தூண்டிவிட்டு இவ ஆடினாள்ன்னு எங்களைத் தப்பா நினைச்சிராதேம்மா..'' கனகவள்ளியைப் பார்த்து கை எடுத்துக் கும்பிட்டார் செல்வியின் தந்தை.

''அண்ணே... உங்க முன்னால நிக்கக் கூட எங்களுக்கு யோக்கியதை இல்லாமச் செய்துட்டா இந்தச் சிறுக்கி. நாங்க என்னத்தைச் சொல்லி மன்னிப்பு கேட்கிறது...'' செல்வியின் அன்னை முந்தானையில் வாய் பொத்திக் கொண்டாள்.

இரவு பஞ்சாயத்து கூடியது. பஞ்சாயத்து தலைவர்கள் பேச ஆரம்பித்தார்கள்.



''வீராச்சாமி நீ சொல்லுப்பா...''

''இந்தா நிற்கிற என் மருமகள்களுக்கு சித்தப்பன் மகனும், பெரியப்பன் மகனும் என் மகளை தூக்கிட்டுப் போக பார்த்திருக்கானுக. தடுக்கப் போன என் மகனை பத்துப்பேர் ஒன்னு கூடி மண்டையில் அடிச்சு நடுரோட்டில் போட்டிருக்கானுக. என் மகள் அர்த்த ராத்திரியில் தப்பிச்சு ஓடி கரும்புக் காட்டில் ஒளிஞ்சருக்கா.. இவனுக துரத்திப் போய் தேடியிருக்கானுக. என் மகளை அவ சிநேகிதி வீட்டில் காப்பாத்தி கூட்டிப் போயிருக்காங்க. என் மகள் அவ இருக்கிற இடத்தை போனில் சொல்ல வந்தப்போ போனை ஒளிச்சு வைச்சு.. என் மகன்களோட செல்போனை ஆப் பண்ணி போட்டிருக்காளுக என் வீட்டு மருமகள்க.. அவ திரும்பி வந்து சொல்ற வரைக்கும் அவ எங்கே இருந்தான்னு எனக்குத் தெரிய விடாம பண்ணிட்டாளுக இந்த ரெண்டு பொம்பளைகளும்.. இதுக்கெல்லாம் ஒரு நல்ல தீர்ப்பை இந்தப் பஞ்சாயத்து தான் எனக்குச் சொல்லணும்.''

பஞ்சாயத்தார் கார்மேகவண்ணனைப் பார்த்தார்கள்...

''நீ சொல்லுப்பா...''

''ஐயா.. நான் இவரு மக மேல ஆசைப்பட்டதெல்லாம் உண்மைதாங்க. பொண்ணைத் தூக்கிப் போய் தாலி கட்டி விட்டால் எல்லாம் சரியாகிரும்னு ஆசைப்பட்டேங்க. என் தங்கச்சி.. அவளோட நாத்தனார் காலையில மதுரை பஸ்ஸுக்கு போறாள்ன்னு முத நாள் நைட்டே தகவல் சொல்லிருச்சு. நானும் அதே பஸ்ஸில் அடுத்த கிராமத்தில் ஏறினேங்க. ஆனால்.. என்னால் அந்தப் பெண்ணுக்கு ஒரு கெடுதலும் இல்லைங்க. என்னையும் அடிச்சுப் போட்டுட்டு.. பரந்தாமனும் அவனோட



ஆள்களும் சுமித்ராவை துரத்திக்கிட்டுப் போயிட்டாங்க...''

பஞ்சாயத்தின் விசாரணையை ஆர்வமாய் கவனித்துக் கொண்டிருந்தான் ஹரிஹரன். இப்படியும் ஓர் நீதிமன்றமா?

வேடிக்கை பார்த்தவனுக்கு வியப்பு காத்திருந்தது. அதன் முடிவு.. அவனுக்கு சாதகமாய் அமையுமா? பாதகமாய் அமையுமா? அவனே மலைத்து விட்டான்.

## 32



''இப்ப என்னப்பா நடந்திருச்சு. கலவரம் நடந்திருக்கு. என் மகன் வேலையைப் பார்க்கப் போனான். கலவரத்தில் யாரோ.. யாரையோ அடிச்சால் அதுக்கு என் மகன் பிணையா...?'' பரந்தாமனின் தந்தை கத்தினார்.

''பெரிசு.. அடங்கு. உன் மகனே எல்லாத்தையும் ஒத்துக்கிட்டான். இப்ப நீ எதுக்கு சலம்பல் பண்றே...'' பரமன் சண்டைக்குப் போனான்.

''ஏய்ய்... அவன் கவர்மென்ட் சர்வென்டுடா...''

''இவன் பண்ணின வேலை கவர்ன்மென்ட்டுக்கு தெரிஞ்சுச்சுன்னா.. அவன் வேலை நிலைக்காது.. தெரியுமில்ல... காவல் காக்கிறவனே பொண்ணைத் துரத்தினா நாடு உருப்பட்டாப்புலதான்...''

பரந்தாமனின் குடும்பம் அடங்கிவிட்டது. பஞ்சாய்த்து தீர்ப்பு சொல்லப்பட்டது.



''பரந்தாமனும், கார்மேகவண்ணனும் திட்டம் போட்டு பெண்ணைக் கடத்தப் பார்த்திருக்காங்க. அதை அவங்க வாயால் அவங்களே ஒத்துக்கிறாங்க.. இரண்டு குடும்பமும் கோவிலுக்கு அபராதத் தொகையா ஆளுக்கு பத்தாயிரம் கட்டிரணும். இரண்டு பேரும் பாதிக்கப்பட்ட பெண்ணோட குடும்பத்தின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கணும். இந்த ஊரு பெண்ணை துரத்திப் போனதினால இவங்க ரெண்டு குடும்பத்திலயும் நம்ம ஊரு ஆளுக இனிப் பொண்ணு கொடுக்கிறது, எடுக்கிறதை வைச்சுக்கக் கூடாது...''

நாட்டுப்புற கிராம பஞ்சாயத்துகளில் கொடுக்கப் படும் அதிகப்படி தண்டனை இது.

ஒரு கிராமமே பெண் கொடுக்க எடுக்க மாட்டோமென்று இரு வீடுகளை ஒதுக்கி வைத்தால் மற்ற கிராமங்களில் எப்படி அதைச் செய்வார்கள்? இதை விட பெரிய அவமானம் அந்த வீடுகளுக்குக் கிடையாது.

பரந்தாமன், கார்மேகவண்ணனின் முகங்களும் இருண்டு போனது. அவர்களைப் பெற்றவர்களின் தலை கவிழ்ந்தது.

பஞ்சாயத்தார் தொடர்ந்தனர்.

''வீட்டுக்கு வாழ வந்த பொண்ணுக வீட்டுப் பொண்ணையே தூக்கிட்டுப் போகச் சொல்றது நல்ல விசயம் இல்ல. பொண்ணுக்கு பொண்ணே கெடுதல் பண்ணினா வீடு எப்படித் தாங்கும்? பொண்ணைப் பெத்தவங்க சரியா பொண்ணை வளர்க்கலைன்னு அர்த்தமாகுது.. அதனால வீராச்சாமியோட மருமகள்க ரெண்டு பேரையும் ஆறு மாசத்திற்கு அவங்கவங்க ஆத்தா அப்பன் வீட்டுக்கு அனுப்பி வச்சிரணும். கல்யாணம் ஆன பொண்ணு

வாக்கப்பட்ட வீட்டில் இல்லாம பொறந்த வீட்டில் இருந்தாத்தான் வாக்கப்பட்ட வீட்டோட அருமை அதுகளுக்குத் தெரியும். எப்பேர்ப்பட்ட வாழ்க்கை நமக்கு கிடைச்சிருந்துச்சு... நாம எப்படி அதை நாசம் பண்ணினோம்ன்னு உணர்ந்துக்கிட்ட பின்னால அதுக் குடும்பம் நடத்த இந்த ஊருக்கு வரட்டும். ஆறு மாசம் முடியற வரைக்கும் அவக வீட்டுக்கும் வீராச்சாமி வீட்டுக்கும் போக்குவரத்து இருக்கக்கூடாது. வீராச்சாமியோட மகன்களும் அவன்க பிள்ளைகளும் வீராச்சாமி மருமகள்களை போய் பார்க்கக் கூடாது...''

மல்லிகாவின் பெற்றோர்கள் விசனமாய் நிற்க மல்லிகா வாய் விட்டு அழுதாள். பெற்ற பிள்ளைகளைப் பார்க்கக் கூடாது என்ற தீர்ப்பு அவளைச் சுட்டது.

பஞ்சாயத்து முடிந்தது என்று எல்லோரும் கலைய முற்பட்ட போது செல்வி குண்டைத் தூக்கிப் போட்டாள்.

''அதுசரி.. பேசுறதையெல்லாம் பேசியாச்சு. சொல்றதையெல்லாம் சொல்லியாச்சுன்னு பஞ்சாயத்து பண்ணின பெரிய மனுசங்களெல்லாம் எழுந்திருச்சுப் போயிட்டா எப்படி..? நானும் கொஞ்சம் பேச வேண்டியிருக்கு... என் நாயத்தையும் கேட்கிறது...''

எல்லோரும் அவரவர் இடத்தில் அமர்ந்தனர்.

''வாழ வந்த வீட்டுக்கு நான் என்ன அப்படி அநியாயம் பண்ணிட்டேன்? சித்தப்பன் மகன்... பெரியப்பன் மகனுக்கு நாத்தனாரை கட்டி வைச்சா பிறந்து வீட்டுச் சொந்தம் இறுகுமுன்னு எல்லாப் பொம்பளைகளும் தப்புக் கணக்கு போடுவது போலதான் நானும் போட்டேன். என் அண்ணனை கூப்பிட்டு நான் கோழியடிச்சு குழம்பு வச்சுப் போட்டா அது தப்பு...எவனோ ஊர் பேர்



தெரியாதவன் காரைப் போட்டு கிட்டு வந்தா.. அவனை வீட்டுக்குள்ள விட்டு சீராட்டி காலையில மீன் குழம்பு, மத்தியானம் கோழி வறுவல்ன்னு விருந்து ஆக்கிப்போடறது மட்டும் சரி. எந்த ஊரு நியாயம் இது...?''

''ஏம்மா வீட்டுக்கு வந்த விருந்தாளிக்கு இதைச் செய்ய மாட்டாங்களா?''

''அதைத்தானே நானும் செஞ்சேன். அதில என்ன தப்புக் கண்டு பிடிச்சீங்க? எங்க அண்ணன் புல்லட்டில் வந்துச்சு... அது பொண்ணு கேட்டால் தப்பு.. வெளிநாட்டுக் காரை ஓட்டிக்கிட்டு தஸ்ஸு புஸ்ஸுன்னு இங்கிலீஷ் பேசிக்கிட்டு வெள்ளையும், சொள்ளையுமாய் வந்தால் சரியா?''

''ஏம்மா.. அந்தப் பையன் என்ன பொண்ணு கேட்கவா வந்துச்சு?''

''கேட்கச் சொல்லுங்க பார்ப்போம். அதுக்கெல்லாம் இளிச்சவாயன் எங்க அண்ணன்தானே சிக்குவான். ராத்திரி நேரத்தில் கரும்புக் காட்டுப் பக்கம் தூக்கிக்கிட்டுப் போனது தப்பாம்.. எவன் கூடவோ ஒரு நாள் பூராவும் சுத்திட்டு உத்தமிபோல் வேசம் போடுறது மட்டும் சரியாம்...''

''ஏய்ய்...'' சுட்டுவிரலை நீட்டி ஆத்திரமாய் எழுந்தான் பரமன்.

''எதை வேணும்னாலும் பேசிப்புடலாம்ன்னு பேசாதே.. வாயிருந்தால் என்ன வார்த்தை வேண்டும்னாலும் பேசுவையா? என் மாமன் மகள் உத்தமியில்லாம வேறு யாரு..? இப்ப என்ன சொல்ல வர்றே.. ஒரு நாள் பூரா இவர்கூட ஊர் சுற்றினாளே... இவர் கட்டிக்கிறேன்னு பொண்ணு கேட்டாரான்னு தான கேட்கிற? சார்... நீங்க பொண்ணு கேளுங்க...''





பரமன் ஹரிஹரனின் கைபிடித்து எழுப்பினான்.

ஹரிஹரன் திகைத்தான். வீட்டுக்குள் பேசும் பேச்சை ஊர் நடுவில் பேசுவதா? அவனுக்கு இது பழக்கமில்லையே.

''மிஸ்டர் பரமன்..'' ஹரிஹரன் மறுக்க முற்படும்போது பரமன் குனிந்து ஹரிஹரனின் காதுகளில் அவனுக்கு மட்டும் கேட்கும்படி பேசினான்.

''காலையில நான் ரைஸ்மில்லுக்குப் போறேன்னு சுமித்ராகிட்ட உங்க பேக்கை கொடுத்துட்டு போனப்போ ராமசாமி எதிர்க்க வந்தான். அவனை ரைஸ்மில்லுக்கு அனுப்பிட்டு உடனே மாடிக்கு சுமித்ராவின் பின்னாடியே வந்துவிட்டேன்...''

''பரமன்...'' ஹரிஹரன் அதிர்ந்துவிட்டான்.

'வாய்க்கு வாய் 'என் மாமன் மகள்' 'நான் கட்டிக்கப் போறவள்' என்று சொன்னவன் சுமித்ரா என் அணைப்பிலிருந்ததை நேரில் பார்த்து விட்டானா?'

நேசித்தவனின் நெஞ்சம் எப்படி உடைந்து சிதறியிருக்கும் என்பதை ஹரிஹரனால் புரிந்து கொள்ள முடிந்தது.

''சுமித்ராவின் மேலும் குற்றமில்லை... உங்கள் மேலும் இல்லை... ஆனா அவ மனசு உங்க மேல இருக்கே.. அது தெரிஞ்ச பின்னால என்னால் எப்படி அவ கழுத்தில் தாலி கட்ட முடியும்? உங்க மனசும் அவமேல இருக்கு. முறையா பெண் கேட்டா.. நீங்க எவ்வளவு பெரிய ஆளா இருந்தாலும் ஜாதி அது இதுன்னு பேசிக்கிட்டு என் மாமன் உங்களுக்குப் பொண்ணு கொடுக்க மாட்டார். சுமித்ராவும் குடும்பத்தை மீறி உங்க பின்னால் வர மாட்டாள். அதிரடியாய் ஏதாவது பண்ணுங்க.''

ஹரிஹரனின் முகம் தெளிந்தது. கூட்டத்திரைப் பார்த்துக் கரம் குவித்தான்.



''பாருங்க.. எனக்கு உங்க வில்லேஜ் பழக்கமெல்லாம் தெரியாது. நடுரோட்டில் ஒரு பெண் மயங்கிக் கிடந்தால் அவளைக் காப்பாற்றினால்தான் அவள் உத்தமியாக இருக்க முடியும். 'எனக்கென்ன' என்று அப்படியே விட்டு விட்டுப் போய் விட்டால் அவள் கதி என்ன ஆகும்?''

''அப்படிச் சொல்லு ராசா..'' கூட்டத்திலிருந்து ஒரு கிழவி கூறினாள்.

''சுமித்ரா என்னுடன்தான் ஒரு நாள் முழுவதும் இருந்தாள். தனியாக இல்லை... என் குடும்பத்துடன் இருந்தாள். என் மேலும் அவள் மீதும் தவறு இருந்தால் நான் எப்படி தைரியமாக அவர்கள் வீட்டிற்கே காரில் வருவேன்... என்னுடன் ஊர் சுற்ற நினைக்கிறவள் தான் இருக்கும் இடத்தை தெரிவிக்க ஏன் போன் மேல் போன் அவள் வீட்டிற்கு என் செல்போன் மூலம் போட்டாள். ஒளிவு, மறைவு எங்களிடம் இல்லை. பட் பிராப்ளம் கிரியேட் ஆகிவிட்டது. நான் என் பெற்றவர்களுக்கு ஒரே பிள்ளை. எங்களுக்கு பாண்டிச்சேரியிலும், சென்னையிலும் பிஸினெஸ் இருக்கிறது. வெளிநாட்டில் படித்திருக்கிறேன். கெட்ட பழக்கமென்று நீங்கள் நினைக்கும் எதுவும் எனக்குக் கிடையாது. இங்கே ஊருக்கு முன்னால் வீராச்சாமி அங்கிள்கிட்ட கேட்கிறேன். அங்கிள்.. உங்கள் பெண்ணை எனக்கு மேரேஜ் பண்ணிக் கொடுப்பீர்களா?''

வீராச்சாமி திகைத்துப் போனார். சுமித்ரா நம்ப மாட்டாமல் ஹரிஹரனின் முகத்தைப் பார்த்தாள். செல்வி பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்து விட்டதேயென்று தன்னையே நொந்து கொண்டாள். கனகவள்ளி கை பிசைந்தாள். வெள்ளைச்சாமியும், ராமசாமியும் வீராச்சாமியின் முகத்தைப் பார்த்தார்கள். அவரோ பரமனின் முகம் பார்த்தார்.

''என்னடா பரமா... இப்படி நடக்குது.. நீயே ஆதரிக்கிறயே?''

''மாமா.. அன்னைக்கே ஒன்கிட்ட நான் என்ன சொன்னேன். என்னை விட படிச்சவனா, ஒழுக்கமானவனா... பெரிய தொழில் செய்கிறவனா ஒருவன் வரட்டும் நான் என் மாமன் மகளை விட்டுக் கொடுக்கிறேன்னு சொன்னேனா இல்லையா.. இன்னைக்கு சார் வந்திருக்கிறார்.. இவர்தான் என்னை மிஞ்சினவர்... ஜெயித்தவர், இவருக்கு உன் மகளை விட்டுக் கொடுக்கிறேன்...''

''ஏண்டா... நம்ம ஜாதிசனம்...''

''மாமா.. நம்ம பொண்ணைக் கட்டிக்கிட்டா அவரும் நம்ம ஜாதிதான்... ஒரு வார்த்தை வந்திருச்சு.. அவரும் பொண்ணு கேட்கிறாரு.. எட்டு ஜில்லாவில் தேடினாலும் இப்படி ஒரு மாப்பிள்ளை கிடைக்காது... பொண்ணைக் கட்டிக்குடு...''

''அப்போ பஞ்சாயத்தில் சொல்கிறேன்... இந்தத் தம்பிக்கு என் மகளைக் கட்டிக் கொடுக்க எனக்குச் சம்மதம்...''

பஞ்சாயத்தார் ஒருவருடன் ஒருவர் கலந்து பேசினர். இறுதியில் நடுவில் அமர்ந்திருந்தவர் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். பேச ஆரம்பித்தார்.

''ரொம்பப் புதுமையா இன்னைக்கு பஞ்சாயத்தில் நின்னு பொண்ணு கேட்கிறது நடந்திருக்கு. கேட்டு வந்த தம்பி நேர்மையானவரு. முறைமாமன் விட்டுக் கொடுத்துட்டான். பெத்தவரு சம்மதம் சொல்லிட்டாரு. நாம ஜாதிக்கட்டுப்பாட்டை பார்க்கிறப்போ... இந்தப் பொண்ணு ஊரை விட்டு ஓடி இந்தத் தம்பியை பார்க்கிறதுக்கு நம்ம ஜாதிப் பயலுகளே காரணமாயிட்டாங்க...



இவங்க திட்டம் போட்டு சந்திக்கக்கலே.. ஆனாலும் இந்த பெண்ணோட மதினியே நாக்குமேல பல்லைப் போட்டு ஒரு வார்த்தை இடக்கு முடக்காய் சொல்லிருச்சு...''

பஞ்சாயத்தார் சொல்லிக் கொண்டிருக்க ஹரிஹரன் பரமனிடம் வினவியது சுமித்ராவின் காதுகளில் விழுந்தது.

''வாட் இஸ் தி மீனிங் ஆப் இடக்கு முடக்கு?''

'ஆரம்பித்து விட்டானா?' என்று நினைக்கும்போது பதில் சொல்லத் தெரியாமல் பரமன் விழிப்பது தெரிந்தது.

'ஏன் சார்.. இப்ப அதுவா முக்கியம்.. பஞ்சாயத்து முடிவு என்னன்னு கேப்போம்...'' பரமன் கழன்று கொண்டான்.

பஞ்சாயத்தார் தொடர்ந்தார்கள்.

''அதனால இந்தத் தம்பிக்கே வீராச்சாமியின் பெண்ணைக் கட்டிக் குடுத்துடலாம்ன்னு இந்தப் பஞ்சாயத்து முடிவு பண்ணியிருக்கு. பஞ்சாயத்தில் முடிவான பின்னால நாள் கடத்தறது உசிதமில்லைன்னு பஞ்சாயத்தார் நினைக்கும் காரணத்தால் இங்கேயே.. இப்பவே அந்தத் தம்பி வீராச்சாமியின் மகள் கழுத்தில் தாலியைக் கட்டணும்ன்னு இந்தப் பஞ்சாயத்து தீர்ப்பு சொல்லுது...''

அடுத்து வந்த நிமிடங்களில் அந்த ஊர் மக்களை சாட்சியாக வைத்து ஹரிஹரன் சுமித்ராவின் கழுத்தில் தாலிகட்டிவிட்டான். தாலி கட்டி வீட்டுக்கு வந்தவுடன் சுமித்ராவை அழைத்துக் கொண்டு மதுரைக்கும் கிளம்பி விட்டான்.

''அங்கிள்... இன்றைக்கு வெள்ளிக்கிழமை... சமிங் மன்டே சுமித்ராவுக்கு எக்ஸாம் ஸ்டார்ட் ஆகுது.. நாங்கள் மதுரையில் பாண்டியன் ஹோட்டலில் ரும் போட்டுத்



தங்கப்போகிறோம். என் மேரேஜை என் பேரண்ட்ஸிற்கு இன்பர்ம் பண்ணி விடுகிறேன். சுமி எக்ஸாம் முடிந்ததும்... நாங்கள் பாண்டிச்சேரி போக வேண்டும்.''

அவர்கள் மதுரைக்கு கிளம்பிச் சென்றனர்.

## 33



எள் விழுந்தால் கூடக் கேட்கும் நிசப்தம். அந்த நீண்ட பெரிய ஹாலில் வரிசையாக சேர்களும் டேபிள்களும் போடப்பட்டிருக்க மாணவிகள் குனிந்த தலை நிமிராமல் விறுவிறுவென தேர்வு எழுதிக் கொண்டிருந்தனர். மீனாட்சி காலேஜின் வாசலில் காரில் ஹரிஹரன் சுமித்ராவிற்காக காத்திருந்தான். தேர்வை எழுதி முடித்த சுமித்ரா தன் தோழிகளுடன் பேசியபடியே வெளியே வந்தாள்.

''சுமித்ரா... ஏன் ஹாஸ்டலுக்கு வரலே...''

''இல்லைடி... எனக்கு மேரேஜ் ஆயிடுச்சு...''

அப்போதுதான் அவள் கழுத்தில் மிளிர்ந்த புதிய மஞ்சள் கயிறைக் கண்டவர்கள் ஆர்ப்பரித்தனர்.

''யாருடி மாப்பிள்ளை.. பெயர் என்ன...?''

''அவர் பெயர் ஹரிஹரன்.. ஊர் பாண்டிச்சேரியும், சென்னையும்...''

''இரண்டு ஊரா... எப்படிடீ..?''

''பாண்டிச்சேரியில் அவரோட பேரண்ட்ஸ் இருக்காங்க... சென்னையில் இன்னொரு வீடு இருக்கு. இவர் அங்கே இருக்கிறார்...''



''கொடுத்து வச்சவடி நீ இப்பவே தனிக் குடித்தனம் இருக்கிற ஆளைப் பார்த்து கல்யாணம் பண்ணியிருக்கிற. உன் ஆள் என்ன பண்றார்?''

''இம்போர்ட் அண்ட் எக்ஸ்போர்ட் பிஸினெஸ் பண்ணாரு...''

''பாருப்பா.. பெரிய ஆளாயிட்டே...''

சொன்னவளின் விழிகளில் பொறாமை தெரிந்தது. அதைக் கவனியாதவள் பேசிக் கொண்டே காரின் அருகே வந்தவள் ஹரிஹரனிடம்,

''இவங்கள்லாம் என் பிரண்ட்ஸ்...'' என்று அறிமுகப் படுத்தினாள்.

''வாவ்... இவரா உன் ஹஸ்பெண்ட்.. நான் யாரோ சினிமா ஹீரோன்னு இல்ல நினைச்சேன்...'' பொறாமைப் பட்ட அந்தப் பெண் இப்போது ஹரிஹரனைப் பாராட்டிப் பேசினாள்.

''ஹாய்... எவ்ரிபடி.. சுமித்ரா.. ஐ ஹேவ் சம் அர்ஜண்ட் வொர்க். லெட் அஸ் கோ...'' என்றபடி ஹரிஹரன் காரில் ஏறிவிட்டான்.

அந்தப் பெண்ணுக்கு முகம் சுருங்கிவிட்டது. சுமித்ராவின் மனமோ நிறைந்துவிட்டது.

காலேஜிலேயே அந்தப் பெண்தான் அழகு என்று எல்லோரும் சொல்லுவார்கள். அவள் கணவன் அந்தப் பெண்ணை ஏறெடுத்துக் கூட.....

''என்ன யோசனை...?''

''நேற்று உங்க அம்மாகிட்ட போனில் பேசினீங்களே.. அவங்க என்ன சொன்னாங்க?'' சுமித்ரா கவலையுடன் கேட்டாள்.

''அதைக் கேட்க இவ்வளவு தயக்கமும் கவலையும் எதற்கு? ஐ ஆம் யுவர்ஸ். என்னிடம் நீ உரிமையாய் எதை வேண்டுமானாலும் கொஸ்டின் பண்ணலாம். ஆன்ஸர் பண்ண நான் கடமைப்பட்டவன். அம்மாவிடம் நம் மேரேஜ் பற்றி சொல்லிவிட்டேன். டாடிகிட்ட பேசு கிறேன் என்று சொன்னாங்க. அவங்க பார்த்துக் கொள் வாங்க...''

''உங்க அப்பா கோபப்பட்டால் என்ன செய்வது?''

''நாம் சென்னையில் தனிக்குடித்தனம் பண்ண வேண்டியதுதான்.''

''எவ்வளவு ஈஸியாகப் பேசுகிறீர்கள்.''

''இதோபார்... இந்த அழகிய தலைக்குள் பாடங்களை மட்டும் ஏற்று. இது எல்லாம் என்னுடைய கவலை. அன்டர்ஸ்டாண்ட்?''

மதிய உணவை ரெஸ்ட்டாரெண்டிலேயே முடித்து விட்டு அறைக்குச் சென்றார்கள். ஏஸி டபுள் பெட்ரூம். அதைப் போன்ற அறையை மூணாறில் விஷாலின் வீட்டில் பார்த்திருந்தாலும் உரிமையுடன் தங்கும்போது சுமித்ராவிற்கு பிரமிப்பாய் இருந்தது.

''என்ன பார்க்கிறாய்? கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு...''

''வேண்டாம்.. நாளைய எக்ஸாமிற்கு படிக்க வேண்டும்...''

சற்று நேரத்தில் ஹரிஹரன் விழித்துப் பார்த்தபோது சுமித்ரா பாடப்புத்தகத்தில் முகத்தை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். எழுந்து அவள் அமர்ந்திருந்த சோபாவை அணுகி புத்தகத்தை எடுத்து வைத்துவிட்டு அவளைக் கைகளில் ஏந்திக் கொண்டு வந்து கட்டிலில் படுக்க வைத்தான் ஹரிஹரன். தூக்கத்தில் அவள் முகம் களைத்து சோர்ந்திருக்க,



'பாவம்' என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

இரண்டு நாள்களுக்குள் எவ்வளவு மாற்றங்கள். ஒரு நாளில் அவளோடு உரையாடிப் பழகிப் பிரிந்து.. அவள் வீட்டில் ஒப்படைக்கப் போய் அங்கு விருந்து கொண் டாடி பஞ்சாயத்தை வேடிக்கை பார்க்கப் போய் அந்தக் கூட்டத்திலேயே மனதுக்கு பிடித்தவளை மனைவி யாக்கி கொண்டு அன்று இரவே அவளுடன் ஊரை விட்டுக் கிளம்பி விடியலுக்கு முன் மதுரை வந்து பாண்டியன் ஹோட்டலில் தங்கி...

நினைக்கும்போதே மூச்சு வாங்குகிறதே.. அதை அனு பவித்தவளுக்கு எப்படியிருக்கும்? இரண்டு நாள்களும் அவள் படிப்பில் மூழ்கிவிட ஹரிஹரன் அவளைத் தொந்தரவு பண்ணவேயில்லை.

ஞாயிறு அன்று மட்டும் மீனாட்சி அம்மன் கோவிலுக் குக் கூட்டிச் சென்றான். அம்பிகையை வணங்கி விட்டு ரூமிற்கு திரும்பியதும் அவள் அவன் பாதம் பணிந்து எழுந்தாள்.

''ஏய்ய்... இது என்ன முட்டாள்தனம்?''

''எதுவோ.. எனக்கு நீங்கள்தான் தெய்வம்...''

''பேத்தாதே.. நான் சாதாரண மனிதன்.. உன் கணவன்...''

''இந்த உறவு நீங்கள் கொடுத்தது. அதை மட்டும் நீங்கள் கொடுக்காமலிருந்தால் நான் என்னவாகியிருப் பேன் தெரியுமா? உங்களோடு கழித்த ஒரு நாளை நினைத்து நினைத்து பைத்தியமாகி இருப்பேன்...''

''நான் மட்டும் என்னவாம்?''

ஹரிஹரன் அவளை இழுத்து அணைத்தான். பயமில் லாமல் நடுக்கமில்லாமல் உரிமையுடன் தழுவிய



சுமித்ரா அவன் அணைப்பில் கிறங்கினாள். வாய் மட்டும் முணுமுணுத்தது.

''நாளைக்கு எக்ஸாம் எழுத வேண்டும்...''

''இப்போது இந்த எக்ஸாமை முடி.. நாளையை நாளை பார்க்கலாம்...''

மடை திறந்த வெள்ளமாய் ஹரிஹரன் அவளை ஆக்ரமித்தான். அவனின் வேகம் தாளாமல் சுமித்ரா திணறினாள். அவள் அறியாத புதிய கதைகளை அவளுக்கு அறிமுகப்படுத்தி முடித்த பின்னால் அவன் விலகி அமைதியாய் தூங்க ஆரம்பித்தான். தூக்கத்தில் அவன் முகத்தில் தெரிந்த எல்லையில்லாத அமைதியையும் திருப்தியையும் கண்ட நெகிழ்ந்து அவன் முடி கோதி னாள். அவளின் ஸ்பரிசத்தில் கண் விழித்தவன் அவளை இழுத்து மார்பில் போட்டுக் கொண்டான்.

''என்னடி...?''

''என்னது... 'டீ' போடுகிறீர்கள்?''

''ஆமாம்டி.. அப்படித்தான்டி... டீ போடுவேன்டி... இது உன் அப்பாவின் டியுசன்டீ...''

''அப்பா என்ன சொன்னாராம்?''

''வார்த்தைக்கு வார்த்தை உன் அம்மாவை டீ போட வில்லை?''

சுமித்ராவின் முகம் சிவந்தது. அவன் முகத்தில் விர லால் கோலம் போட்டபடி இருந்தாள். அவள் விரலைப் பிடித்து கடித்தவன் அவள்,

''ஆ'' என்று அலறவும்,

''ஸாரி... ஸாரி...'' என்று சிரித்தான்.



''உங்ககிட்ட ஒன்னு கேட்கவா...''

''கோடி கூடக் கேட்கலாம்...''

''என்னை ஏன் உங்களுக்குப் பிடித்தது...?''

''இது என்னடி கேள்வி?''

''சொல்லுங்களேன்...''

''உனக்கு என்னை ஏன் பிடித்தது?''

''சொல்லத் தெரியவில்லையே...''

''அதுபோல்தான் எனக்கும், சுமி... ஆறு நாள்களுக்கு முன் நான் பாண்டிச்சேரியை விட்டுக் கிளம்பும் போது இருந்த மனநிலையே வேறு. நிம்மதியைத் தேடி வந்தேன். 'இதோ உன் நிம்மதி' என்று எதிரே நீ வந்து நின்றாய். நீ கை நழுவிப் போய் விடுவாயோ என்று தவித்தேன். உன் மாமா பரமனின் புண்ணியத்தால் நீ என் மனைவி யாகவே ஆகிவிட்டாய். போன வாரம் இதே நாள் இதே நேரத்தில்தான் பிடிக்காத திருமண எங்கேஜ்மென்டை வெறுத்து ஊரைவிட்டுக் கிளம்பினேன். இந்த வாரம் இதே நாள்.. இதே நேரத்தில்.. உன்னோடு வாழ்ந்தே விட் டேன். நம்பத்தான் முடியவில்லை. ஆனால் நம் வாழ் வில் எங்கே எந்த வினாடியில் இனிமையான திருப்பம் நிகழும் என்று யாரால் சொல்ல முடியும்? அந்த இனிய திருப்பம் உன்னை நான் சந்தித்தது... என் வாழ்வில் மறக்க முடியாத ஒருநாள் உன்னோடு ஒருநாள் தான்... உன்னைத் தொட்டு ஆண்டு முடித்த இந்த செகண்டில் என் மனதில் தோன்றும் நிறைவிற்கு எல்லையே இல்லை சுமி. ஐ லவ் யு... ஐ லவ் ஒன்லி யு.''

ஹரிஹரன் சுமித்ராவை கட்டி அணைத்து முத்தமிட் டான். அவன் கைகளுக்குள் அடங்கி அவன் மார்பில்

முகம் புதைத்துக் கொண்ட சுமித்ரா மனதிற்குள் கூறிக் கொண்டாள்.

'உன்னோடு ஒரு நாள்... உனக்கு மட்டுமா விழா நாள்... எனக்கும் அது ஒன்றுதான் திருநாள்...'

ராமநாதன் கோபமாய் கத்திக் கொண்டிருந்தார். அவர் கோபத்தை லட்சியம் செய்யாமல் சுகன்யா அறையின் ஜன்னல் வழி தெரிந்த கடலை வெறித்துக் கொண்டிருந் தாள்.

''சுகன்யா.. நான் இவ்வளவு கத்திக் கொண்டிருக் கிறேன். நீ காதில் வாங்காமல் நின்றிருப்பது உனக்கே சரியென்று படுகிறதா?''

''உங்களுக்கு பிடிக்காத என் செய்கை உங்களைப் பாதிக்காத போதும் கோபப்படுத்துகிறது இல்லையா? இது போல்தானே உங்கள் மகனும் நினைப்பான்?''

''முட்டாள்தனமாய் பேசாதே சுகன்யா... மும்பை தீபா இல்லாவிட்டால் டெல்லி ஷோபா... நம் ஸ்டேடஸி லேயே ஆயிரம் பெண்கள் கிடைப்பார்கள்.. போயும் போயும் ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணைத் திருமணமே செய்து கொண்டிருக்கிறானே.. என் கௌரவம் என்ன ஆகிறது?''

''அவன் வாழ்க்கை அவனுக்கு. அவனுக்கு பிடிக்கா ததை செய்தீர்கள். அவன் வீட்டை விட்டு வெளியேறி விட்டான். இந்த ஒரு வாரமும் வீடு வீடாக இல்லை. என் பிள்ளையில்லாத வீட்டைப் பார்க்கக்கூட எனக்குப் பிடிக்க வில்லை. திரும்பவும் அவனிடம் சண்டை போட்டீர்கள் என்றால் அவன் சென்னைக்கு தனிக்குடித்தனம் போய் விடுவான். என்னால் என் மகனையும் மருமகளையும்



விட்டுவிட்டு இருக்க முடியாது. நானும் அவர்களுடன் போய் விடுவேன். சொல்லிவிட்டேன்.''

ராமநாதன் நடுங்கிப் போய்விட்டார். மனைவியை விட்டும் மகனை விட்டும் பிரிந்து வாழ்வதா... 'நெவர்...'

''இப்போது என்னை என்ன பண்ணச் சொல்கிறாய்?''

''ஹரியிடம் போன் போட்டுப் பேசுங்கள்.''

''என்ன பேச..?''

''இந்த மாதத்தில் நல்ல நாள் இருக்கிறது. நம் ஊரில் உன் திருமணத்தை பதிவு பண்ணிவிட்டு மணக்குள விநாயகர் கோவிலில் அர்ச்சனை பண்ணிவிட்டு நேரு வீதியில் இருக்கும் வெங்கடாசலபதி பெருமாளையும் வணங்கிவிட்டு வரலாம் என்று சொல்லுங்கள். அதற்கு அடுத்த நாள் கிரண்டாய் ரிசப்சன் வைத்து விடலாம் என்று சொல்லுங்கள்...''

சுகன்யா சொன்னதை ஹரிஹரனிடம் சொன்னார் ராமநாதன்.

வண்ண விளக்குகளால் குரோட்டன்ஸ் செடிகள் மின்னிக் கொண்டிருந்தன. அதே வீடு... அதே தோட் டம்.. அதே ராமநாதன் சுகன்யா தம்பதிகள் அழகாய் அலங்கரித்துக் கொண்டு, வந்து கொண்டிருந்த விருந் தினரை வரவேற்றுக் கொண்டிருந்தார்கள்.

தேனி சுப்புலாபுரத்திலிருந்து வீராச்சாமி தம்பதிகளும், பரமனும் வந்திருந்தனர். பரமன் நிற்காமல் சுழன்றாடி விழா ஏற்பாடுகளைக் கவனிப்பதைக் கண்ட சுகன்யா ராமநாதனிடம் கூறினாள்.

''பாருங்கள். இதுதான் கிராமத்துக் கலாச்சாரம். அன்று தீபா வீட்டில் கரெக்ட் டயத்துக்கு வந்து பொம்மை





போல நின்று விட்டுப் போனார்கள். இவர்களைப் பார்த்தீர்களா? இழுத்துப் போட்டுக் கொண்டு உதவி செய்கிறார்கள். ஒரு மனிதருக்கு பணக்கட்டும் வேண் டும். அத்தோடு ஜனக்கட்டும் வேண்டும். நம்மிடம் பணம் நிறைய உள்ளது. ஜனம்..? அது ஹரிஹரன் பெண் எடுத்த வகையில் கிடைத்துவிட்டது...''

வீராச்சாமி மனைவியிடம் கூறினார்.

''அடியேய்.. கனகம்... நான் சொல்லலை... என் மக ஊராளும் ராணி ஆவாள்ன்னு.. குணத்தில் தங்கக் கம்பி... நம்ம மருமகன். நம்ம பொண்ணோட மாமியார் மகா லட்சுமி மாதிரி என்ன களையாய் இருக்கிறாங்க பார்த் தியா...''

''அப்போ.. நான் மட்டும் களையில்லையா?''

''யாருடி இவ.. சமபந்தகாரம்மாளைப் பத்திக் கூட பேச விட மாட்டேன் என்கிறாள். இவகிட்ட இது ஒரு குணம் இருக்கு...''

பரமனிடம் ஹரிஹரன் வந்தான்.

''தேங்க்ஸ் பார் எவரிதிங் பரமன்...''

''இது என் கடமை சார்...''

எல்லோரும் மனம் மகிழ்ந்து ஒன்று கூடி மகிழ்ந்த அந்த ஒரு நாளை சுமித்ராவும் ஹரிஹரனும் முதன் முதலாய் சந்தித்த அந்த ஒரு நாள் தான் கொடுத்தது.

எல்லோருடைய வாழ்விலும் இனிமையான திருப்பம் கொடுக்கும் ஒரு நாள் வந்தே தீரும்.